DODDRIDGE'S

# RISE AND PROGRESS OF RELIGION.

(ABRIDGED AND ADAPTED.)

---

# மெய்ஞ்ஞானோதய விருத்தி.

691
230

FIRST EDITION, 1,000 COPIES.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS, MADRAS.
18 MAY. 93

MADRAS:
THE RELIGIOUS TRACT AND BOOK SOCIETY.
S. P. C. K. PRESS, VEPERY.

1893.

125356

# நான்முகம்.

இப்புஸ்தகம் அநேக வருடங்களுக்கு முன் யாழ்ப்பாணத்தில் தமிழிலே மொழிபெயர்க்கப்பட்டிருந்தது. அது எல்லாருக்கும் விளங்கக்கூடாமையாயிருந்ததால், இப்போது அதை யாவரும் சாதாரணமாய் வாசித்தறிந்து பிரயோசனமடையும்படி லேசான நடையில் திருப்பியிருக்கிறது. இப்புத்தகத்தை இங்கிலீசு பாஷையில் உண்டுபண்ணின ஆக்கியோன் மகா பரிசுத்தவான். அவர் தமது கிறிஸ்தவ அனுபவத்தைப் பின்சந்ததிக்குப் பிரயோசனமாக எழுதிவைத்திருக்கிறார். இதைக் கவனமாய் வாசிக்கிறவர்கள் இதால் தங்கள் ஆத்துமாவுக்கு நன்மையடையும்படி சர்வவல்லவர் அருள்புரிவாராக.

# பொருள் அட்டவணை.


| | பக்கம். |
|---|---|
| 1. ஆத்தும விசாரமில்லாத பாவிக்குச் சொல்லிய போதனை .... .... .... .... .... .... .... | 1 |
| 2. பாவி தான் செய்யும் பாவங்களுக்காகச் சொல்லும் வீண்போக்குகளுக்கு இடமில்லை .... .... .... | 8 |
| 3. பாவதோஷத்தை உணர்ந்து தண்டனைக்கு அஞ்சும் பாவிக்குக் கிறிஸ்துவினால் அருளப்படும் ஆத்துமரட்சிப்பைத் தெரிவிக்கும் நற்செய்தி.... .... | 14 |
| 4. ஆத்தும இரட்சிப்பைப்பெறும் விதம் இன்னதென்று விளக்குதல் .... .... .... .... .... | 19 |
| 5. சுவிசேஷத்தை அங்கீகரியாதவர்களுக்குச் சொல்லும் போதனை.... .... .... .... .... .... | 25 |
| 6. தன் பாவத்தின் மிகுதியினால் இரட்சிப்பைப் பெறும்படி கிறிஸ்துவைச் சேருவதற்கு அஞ்சிநிற்கும் ஆத்துமாவுக்குச் சொல்லும் போதனை .... .... | 29 |
| 7. மெய்மனஸ்தாபமும் மெய்விசுவாசமும் உண்டோ இல்லையோ என்று விசாரப்படும் ஆத்துமாவின் சமுசயத்தை நீக்கும் போதனை ... .... .... | 32 |
| 8. தன்னையும், தானடையவேண்டிய தேர்ச்சியையும் அறியும்பொருட்டு, மெய்க்கிறிஸ்தவனுக்குரிய பற்பல லக்ஷணங்களை காட்டுகிற போதனை .... | 36 |
| 9. மேற்சொல்லிய குணத்தை அடைவதற்கு தேவஆவியானவரின் சகாயம் மகா அவசியம் என்பதைத் தெரிவிக்கும் போதனை ... ... .... .... | 47 |

பக்கம்.

10. மெய்ப்பக்தர்கள் தாங்கள் செல்லும் நெறியிலே விக்கினங்கள் வந்தாலும், அவைகளால் தளர்ந்துபோகாமல் தேறி திடன்கொள்ளும்படி சொல்லும் போதனை .... .... .... .... .... .... 51

11. கிறிஸ்தவன் தன்னைப் பூரணமாய்த் தேவனுக்குப் பிரதிஷ்டை செய்யும்படி சொல்லும் போதனை. 55

12. சபையில் சோம்பு கர்த்தருடைய ராப்போசனத்தை அனுசரிப்பதைப்பற்றிச் சொல்லிய போதனை. 58

13. தேவனோடே இடைவிடாமல் ஐக்கியப்பட்டிருந்து, அவருக்கு முன்பாகப் பயபக்தியோடே நடக்கும்படி சொல்லிய போதனை .... .... .... .... 61

14. முந்திய அதிகாரத்தில் சொல்லியிருக்கிறபடி நம்முடைய நாட்களைச் செலவிடுகிறதற்கேற்ற போதனை .... .... .... .... .... .... .... 68

15. கிறிஸ்தவன் தனக்கு நேரிடும் சோதனையில் அகப்படாதபடி அவனுக்குச் சொல்லத்தகும் போதனை. 73

16. உத்தம பக்திமான்கள் தளர்ச்சியடைதல் .... .... 79

17. கர்த்தருக்குத் தன்னை ஒப்புக்கொடுத்துப் பக்தியில் வளர்ந்துவந்தும் திரும்பவும் துணிகரமான பாவத்தில் அமிழ்ந்துகிறவனின் பரிதாபமான காரியம். 85

18. தேவன் தம்முடைய முகத்தை மறைத்துக்கொண்ட கிறிஸ்தவனுடைய காரியம் .... .... .... 93

19. பாரியான துக்கத்தில் அமிழ்ந்திய கிறிஸ்தவனின் காரியம் .... .... .... .... .... .... 103

20. கிறிஸ்தவன் தன் உள்ளத்தில் மெய்த்தேவபக்தி வளர்ந்து வருகிறதென்பதைப் பரிசோதிக்கும் முறைமை .... .... .... .... .... .... .... 110



பக்கம்.

21. தேர்ச்சியடைந்த கிறிஸ்தவன் தனக்கு தேவன் அருளிய கிருபைகளை நினைத்து அனுதினமும் அவர்மேல் அன்புவைத்து, அவரால் ஆனந்தம் கொள்ளும்படி சொல்லப்படும் போதனை .... .... 117

22. பக்குவப்பட்டுள்ள திடமடைந்த கிறிஸ்தவன் பிறருக்கு நன்மைசெய்யும் முயற்சியாயிருக்கும்படி அவனுக்கு உணர்த்தும் போதனை .... .... .... 125

23. கிறிஸ்தவன் மரணத்தையும், நியாயத்தீர்வை தினத்தையும் எதிர்பார்த்து ஆனந்தங்கொள்ளுதல் .... .... 132

24. கிறிஸ்தவன் தன் மரணத்தில் தேவனை மகிமைப்படுத்துவது .... .... .... .... .... .... 139

DODDRIDGES RISE AND PROGRESS OF RELIGION.

# மெய்ஞ்ஞானோதய விருத்தி.

## 1-ம் அதிகாரம்.

### ஆத்தும விசாரமில்லாத பாவிக்குச் சொல்லிய போதனை.

இவ்வுலகத்தை நாம் கவனித்துப்பார்க்கையில், மனுஷன் வைதீகத்துக்குரியவன் என்று விளங்கும். ஆனால் திரளான பேர், அறியாமையினால் மனம் மயங்கி, நாசமோசத்தை விளைவிக்கும் துன்மார்க்கத்தில் பிறவிக் குருடன்போல் அலைந்து திரிவதை நான் கண்டு, மிகவும் பரிதாபங்கொண்டு, என்னால் இயன்றமட்டும் ரட்சண்யத்தைப்பற்றிய மெய்வழியில், அவர்களை நடத்தும்படி அபேட்சையுள்ளவனாய் இருக்கிறேன். இதை வாசிக்கிறவனே! அப்படிப்பட்டவர்களில் நீயும் ஒருவனாய் இருக்கலாம். தேவபக்திக்குரிய அறிவு அடைவதற்கும், அதினால் வரும் பலனை அநுபவிப்பதற்கும், நீ தேவனுக்கு விரோதமான பாவியென்று அறிவதே முதற்படியாயிருக்கிறது. ஆதலால், அவ்வித அறிவுக்குக் காரணராகிய தேவன், நன்மையை உனக்குத் தரும்படி, நான் அவரை அடிபணிந்து பிரார்த்தித்துப் பின்வரும் போதனைகளை உனக்குச் சொல்லப்போகிறேன். அந்தப் போதனைகளை, நீ கவனமாய் வாசித்து உணரும்படி உன்னை வேண்டிக்கொள்ளுகிறேன்.

இவ்வுலகத்தைச் சிருஷ்டித்து, ஆதரித்து, அதற்கு நன்மைகளை அருளிச்செய்கிற காரணகடவுள் ஒருவர் உண்டென்று உனக்குத் தெரியுமாதலால், நான் அதுவிஷயத்தைப்பற்றி

உனக்கு விளக்கவேண்டியதில்லை. ஏனெனில், மண்ணால் செய்யப்பட்ட பாத்திரங்களை நாம் காண்கையில், அவைகளை வனைந்த குயவன் ஒருவன் உண்டென்று அறிவோமே; அப்படியே நாம் மிதிக்கும் மண்ணையும், மதிக்கும் விண்ணையும், நமது தேகவுருக்களையும் பார்க்கும்போது, இவைகளுக்குக் காரணரான சருவவல்லமையுள்ள கர்த்தர் ஒருவர் உண்டென்று நிச்சயித்துக்கொள்ளலாம். அந்த மகிமையுள்ள கடவுள் ரூபமின்றி, அரூபியாய் இருக்கிறார். அவருக்கு ஆதியும் இல்லை, அந்தமும் இல்லை; அவர் சர்வவல்லவர், சருவ வியாபகர், சருவ ஞானமுள்ளவர். அவர் இயற்கையாகவே தாபமில்லாதவர், நிர்மலர், சம்பூரணர், பரிசுத்தமுள்ளவர்; அவரே உன்னையும் மற்றனைவரையும் சிருஷ்டித்த கர்த்தாவாயிருக்கிறார். அவரில் நீ பிழைக்கிறாய், அசைகிறாய், நீ எப்பொழுதும் அவரிடத்திலிருந்து சகல நன்மைகளையும் பெற்றனுபவிக்கிறாய். எங்ஙனம் தன் பிள்ளைகளைப் பராமரித்துவரும் தகப்பனைப்போல, அவரும் உன்மேல் எப்போதும் கண்வைத்து, உன் ஜென்மகாலம் தொடுத்து உன்னைப் பாதுகாத்துவருகிறார்.

தேவன் சர்வலோகாதிபதியாயும் திவ்விய பரிபூரண லட்சணமுடையவராயும் இருப்பதால், அவர் தமக்கு ஓரிணையுமில்லாதவர். ஆதலால், அவர் தமது சுயாதிபத்தியத்தையும் ராஜரீகத்தையும் மற்றொருவருக்கும் ஈவதில்லை. பூலோகத்திலுள்ள ராஜாக்களுக்குச் சர்வ வியாபகம் இல்லாமையால், தங்கள் ஆளுகைக்குட்பட்ட தேசங்களில் அதிகாரிகளை ஏற்படுத்தி ராஜரீகம் பண்ணிவருகிறார்கள். தேவனோ சர்வ வியாபகமுள்ளவராதலால், சிருஷ்டிகளுக்கான காரியங்களை நடத்தும்படி வேறொரு உதவி அவருக்கு வேண்டியதில்லை; அவருடைய அநுமதியின்றி, ஒரு அடைக்கலான்குருவிதானும் பூமியிலே விழமாட்டாது.

பூமியின் ராஜாக்கள், சிட்டரைப் பரிபாலனம்பண்ணவும் துட்டரை நிக்கிரகம்பண்ணவும் சட்டங்களை விதித்திருப்பதுபோல, தேவனும் தமது கற்பனைக்கு அமைந்துநடக்கும் தாசருக்கு, அவருடைய தயவையும் ஆசீர்வாதங்களையும் இம்மையில் அநுக்கிரகித்து, மறுமையிலே மோட்சானந்தங்களைக் கட்டளையிடுகிறார். ஆனால், அவருடைய கற்பனைகளுக்குக் கீழ்ப்படியாதவர்கள்மேல் அவர் விசனங்கொண்டு, நரகாக்கினை அடையும்படி அவர்களைத் தமது சமுகத்தைவிட்டு என்றைக்கும் அகற்றிப்போடுவார். ஆகவே, அவரைப்பற்றிய அறிவைத் தேடி, மனோவாக்குக்காயங்களில் ஒத்து, அல்லும்பகலும்



அவரைச் சேவிப்பதே மகா அவசியமாய் இருக்கிறது. ஏனெனில், அவர் சிருஷ்டிகர், நீ சிருஷ்டி; அவர் ராஜா, நீ பிரஜை; அவர் பிதா, நீ பிள்ளை. ஆதலால், நீ அன்போடும் அமைவோடும் அவருக்கு இணங்கி நடப்பதே உத்தமம்.

பரிசுத்தஆவியின் ஏவுதலால் எழுதப்பட்ட வேதத்தைத் தேவன் மனுஷபுத்திரருக்குக் கொடுத்திருக்கிறார். அதிலே பிரதானமாகப் பத்துக்கற்பனைகள் உண்டு. அவற்றுள்: 1. என்னைத் தவிர உனக்கு வேறே தேவர்கள் உண்டாயிருக்கவேண்டாம். இதின் பொருள் ஜீவனுள்ள ஒன்றான மெய்த்தேவனைப் பூரண நேசத்தோடே பணிவுடன் ஆராதிக்கவேண்டுமென்பதே. 2. விக்கிரகங்களை வைத்து வணங்கக்கூடாது. 3. தேவனுடைய நாமத்தை வீணிலே வழங்கக்கூடாது. 4. ஓய்வுநாளைப் பரிசுத்தமாய் ஆசரிக்கவேண்டும்; இதின் பொருள் கர்த்தருடைய நாளாகிய ஞாயிற்றுக்கிழமையில், லௌகிக வேலைகளை விட்டு ஓய்ந்து; அவர் அருளிய வேதத்தை வாசித்தும், [illegible]டும், அவரை ஆராதித்தும், அந்தத் தினத்தைப் பின்னி[illegible] வேண்டுமென்பதே. 5. பிதா மாதாவைக் கனம்பண்ணவேண்டும். 6. கொலைசெய்யப்படாது. 7. விபசாரம் பண்ணப்படாது. 8. களவு செய்யப்படாது. 9. பிறனுக்கு விரோதமாய்ப் பொய்ச்சாட்சி சொல்லப்படாது. 10. பிறனுடைய பொருளை இச்சிக்கப்படாது. இந்தக் கற்பனைகள், துர்க்கருமங்களைச் செய்யவும்படாது; அவைகளை மனதிலே நினைக்கவும்படாதென்று வற்புறுத்துகின்றன. துர்க்கிரியைகளைச் செய்வதும், அவைகளை மனதிலே ஆசிப்பதும், தேவனுக்கு முன்பாகப் பாவமென்றெண்ணப்படும். பத்துக்கற்பனைகள் ஒவ்வொன்றும் பேதமின்றி, சமமாக இருக்கின்றன. அவைகளின் சாரம் தேவனை முழு இருதயத்தோடும் நேசிக்கவும், நாம் நம்மைப்போலப் பிறனை நேசிக்கவும் வேண்டுமென்பதாம்.

உன்னை உண்டாக்கி, இரட்சித்து, ஆசீர்வதிக்கும் தேவன் உனக்கு விதித்தருளிய கற்பனைகள் இப்படிப்பட்டவைகளே. அவைகள் எல்லாவற்றிற்கும், நீ கீழ்ப்படிந்து நடக்கிறாயோ, அல்லவோ என்று உன்னைக் கேட்கிறேன். இதற்கு நீ உண்மையாகப் பதில் சொல்வாயானால், ஐயோ! நான் தேவனுக்கு என் இருதயத்தை ஒப்புக்கொடாமலும், அவரைக் கதியென்று பிரார்த்தியாமலும், லௌகீக காரியங்களிலே அமிழ்ந்தி வீணாய் என் நாட்களைக் கழித்தேன் என்றும்; நான் வைதீக காரியங்களை முற்றும் வெறுக்காதிருந்தும், மெய்த்தேவனை வணங்காமல் பற்பல பொய்த்தேவர்களை மோசமாய் வணங்கினேனென்

றும் உரைப்பாய். இப்படி நீ முதலாம் கற்பனையை மீறினதுமின்றி, நீ இந்த மகத்தானாகில், சிறு பிராயந்தொடங்கி விக்கிரகங்களை வணங்கி, இரண்டாங்கற்பனையை மீறினேனென்றும் சொல்வாய் என்பது உண்மை. இப்படியே மற்றும் கற்பனைகளையும் தனித்தனியே ஆராய்கையில், அவைகளில் ஒன்றையும் நீ கைக்கொண்டதில்லையென்றும், உன் ஆயுசு முழுவதும் ரகசியமாயும் வெளியரங்கமாயும் பாவங்களையே நடப்பித்தாய் என்றும் தெரியவருமே. ஆதலால் தேவனுடைய சமுகத்தில் நீ பாவியாய் இருக்கிறாய் என்பதற்கு, இந்தப் பத்துக் கற்பனைகளுமே சாட்சி.

மேலும், நீ செய்த விரோதம் யாருக்கு என்று சிந்தித்துப் பார். பூமியில் ராஜாவுக்கு விரோதமாய்க் குற்றஞ்செய்தவனுக்குப் பிராணதண்டனை செலுத்தப்படும்; அதற்கு மேற்பட்ட தண்டனை இல்லை. நியாயாதிபதி பிராணதண்டனையைக் கூறுகையில் குற்றவாளிகள் உச்சிமுதல் உள்ளங்கால்வரைக்கும் நடுங்குவார்களே. அப்படிப்பட்ட தீர்ப்புக்கூறும் நியாயாதிபதி, ஒரு மனுஷன். அவன் விதிக்கும் தண்டனை இவ்வளவு பயங்கரமானதாய் இருந்தால், உன்னைக் கொல்லமாத்திரமல்ல; ஓர் நிமிஷத்தில் உன் ஆத்துமாவையும் சரீரத்தையும் நித்திய நரகத்திலே தள்ள வல்லவராகிய மேலான தெய்வ நியாயாதிபதிக்கு விரோதமாய் நீ பாவங்களை நடப்பித்துவந்திருப்பதால் அவரிடும் தண்டனை எத்தனைக்கதிகமான பயங்கரங்களை உண்டுபண்ணும். ஐயையோ! நிர்ப்பந்தமுள்ள மனுஷனே! நித்திய நாசமோசத்துக்கு விரைந்தோடும்படி, பாவமானது உன்னை எவ்வளவுதூரம் மயக்குகிறது என்பதைச் சிந்தித்துப் பார். ஆயிரம் பதினாயிரமான வெள்ளி பொன். உனக்குக் கொடுக்கப்பட்டாலும், பூமியின் ராஜாவுக்கு விரோதமாய்க் குற்றஞ்செய்ய நினைப்பாயா? மாட்டாயே. அப்படியிருக்க, பூலோகத்தார் அனைவருக்கும், அவரவர் கிரியைகளுக்குத் தக்க தான பலனைக்கொடுக்கும் கடவுளை நீ அவமதித்து, அவருக்கு விரோதமாகத் துணிகரமாய்ப் பாவங்களை நடப்பித்திருக்கிறாயே. இது எவ்வளவு பயங்கரத்தையும் திகிலையும் பிறப்பிக்கத்தக்கதாய் இருக்கிறது.

"நான் கர்த்தர்; என்னைத்தவிர வேறே தேவன் இல்லை; என் மகிமையை வேறொருவனுக்கும், என் துதியை விக்கிரகங்களுக்கும் கொடேன்" என்று அவர் திருவுளம் பற்றியிருக்கிறார். விக்கிரகங்கள் மனுஷருடைய கைகளின் கிரியைகள். அவர் அவைகளை அருவருக்கிறார். இப்படி இருந்தும், நீ அவ



ரைத் தக்கபடி மகிமைப்படுத்தாமல், புத்தி சித்தமற்ற விக்கிரகங்களை மகிமைப்படுத்துகிறாய். வெயில் எரிக்கவும், மழை பெய்யவும் பண்ணி, தேவன் மனிதருக்காக விளைவித்த விளைவுகளை நீ எடுத்து விக்கிரகங்களுக்குச் செலுத்தி, துரோகம் பண்ணியிருக்கிறாய். ஸ்துதிக்குப் பாத்திரரான தேவனை, நீ மதியாமற்போனாய். இதினாலே, தன் சுயநாயகன் தந்த பொருள்களை எடுத்து, சோரநாயகனுக்குக் கொடுக்கும் உண்மையற்ற அயோக்கியமான ஸ்திரீக்கு நீ சமானமானாய்; ஐயோ! நீ எவ்வளவு நன்றிகெட்டவனாய் இருக்கிறாய்.

மேலும், நீ செய்த குற்றங்கள் மி[illegible]; ஏனெனில், நீ செய்வது தீமை என்று அறிந்தும், செய்தாய். மனிதன் பகுத்தறிவுள்ளவன்; இன்னது நன்மை, இன்னது தீமை, இன்னது தக்கது, இன்னது தகாதது, இன்னது உபகாரமுள்ளது, இன்னது அபகாரமுள்ளது என்று பகுத்தறியும் மனதை உடையவனாய் இருக்கிறான். உன்னைச் சூழ்ந்திருக்கும் சிருஷ்டிப்புகளை நீ பார்க்கையில், தேவன் விக்கிரகங்களைப்போல் உறுப்புகளும், துராசைகளும் உடையவராய் இராமல், அளவற்ற வல்லமையும், ஞானமும், பரிசுத்தமும், உள்ளவராய் பாவத்தை வெறுத்து, குற்றவாளிகளைத் தண்டிக்கும் வஸ்துவாய் இருக்கிறார் என்று அறிந்துகொள்ளலாம். களவு, மதுபானம், வேசித்தனம் முதலிய பாதகங்களைச் செய்பவர்கள் இம்மையிலும் தண்டிக்கப்படுவதைப் பிரத்தியட்சமாய்க் கண்டிருக்கிறோம். அந்தத் துஷ்டர்களும், சிலவேளைகளில் தாங்கள் செய்த பாதகங்களை உணர்ந்து, ஐயோ! நாங்கள் பாவம் செய்தோமென்று சொல்வதுண்டு; நீயோவெனில் பாவஞ் செய்தபோது, அது தகாததென்று அறிந்துசெய்தது மாத்திரமல்ல, மறுமையிலே பாவிகளை நித்தியமாய்த் தண்டிப்பேனென்று தேவன் தமது வேதத்தில் விளம்பியிருப்பதைப் பிரத்தியட்சமாய் அறிந்தும், அதை நடப்பித்தாய் என்று அஞ்சுகிறேன். அப்படியானால், நீ தேவனுடைய சந்நிதானத்தில் எவ்வளவோ பெரும்பாவியாய் இருக்கிறாய்.

மேலும் தேவன் உனக்கு அளவற்ற தயவுகளைப் பாராட்டி, உன் ஜென்மகாலம் தொடங்கி உனக்கு நன்மைகளை அருளியிருக்க, அப்படிப்பட்ட தயாபரருக்கு விரோதமாய்ப் பாவங்களை நடப்பித்திருப்பதால்; உன் குற்றங்கள் மிகப் பாரியாய் இருக்கின்றன. ஒருவன் தன் சத்துருவுக்குத் தீங்கு செய்தால், அது அற்பமாய் எண்ணப்படும்; ஆனால், அவன் தன் சிநேகிதனுக்கும் உபகாரிக்கும் விரோதமாய்க் குற்றஞ்செய்தால், யாவ

ரும் அவனை மகா நன்றிகெட்டவன் என்பார்கள். ஒரு பிரஜையானவன், தயவுள்ள தன் ராஜாவுக்குத் துரோகம் செய்தால்; ஒரு ஊழியக்காரன் நேசமுள்ள தன் எஜமானுக்கு விரோதமாய்க் குற்றஞ்செய்தால்; ஒரு பிள்ளை அன்புள்ள தன் பிதாவுக்குக் கீழ்ப்படியாமையைக் காட்டினால்; அப்பேர்ப்பட்டவர்களைப்பற்றி என்ன நினைப்பாய்? நன்றிகெட்டவர்களென்று சொல்வாயல்லவா? அவர்களுக்கு மனச்சாட்சி யுண்டானால், தாங்கள் குற்றஞ்செய்தவர்களுக்கு முன்பாக சற்றும் வெட்கமின்றி நிற்கக்கூடுமோ? கூடாதே. மகா மகிமைபொருந்திய தேவன் [illegible]ாயும், அன்புள்ள பிதாவாயுமிருக்கிறார். அவர் நேசமுள்ள தகப்பனைப்போல, உன் ஜென்மகாலம் தொடுத்து உன்னை ஆதரித்து, அநேகாயிரம் மோசங்களுக்கு உன்னை விலக்கிக் காத்து, இந்நாள் பரியந்தம் உனக்கு நன்மைகளைச் சொரிந்து வருகிறார். சிலவேளைகளில் அவர் உனக்கு உபத்திரவங்களை அனுப்பினதுண்டு. நீ உன் பாவங்களை [illegible]ர்ந்து தம்மிடத்திற்குத் திரும்பவும், மோசமான பாவவழிகளினின்று உன்னை விலக்கிக்காக்கவுமே அப்படிச் செய்தார். அப்படியே பெற்றோரும் தங்கள் பிள்ளைகளைச் சீர்ப்படுத்தும்படி பல முயற்சிகளைச் செய்வதுண்டு. தேவன் உனக்குப் பற்பல தயவுகளைச் செய்ததுமன்றி, தமது வசனத்தால் நீ அவரண்டைக்குத் திரும்பும்படி உன்னை அழைத்துமிருக்கிறார். நீயோ, அதை மதியாமல் மூர்க்கங்கொண்டு, நன்றிகெட்டவனாய் மாறினாய். ஐயையோ! உன்னுடைய நடக்கை எவ்வளவு நிர்ப்பந்தமாய் இருக்கிறது. மிருகத்தைப்பார்க்கிலும் நன்றிகெட்டவனாய் இருக்கிறாயே. மாடு தன் எஜமானையும், கழுதை தன் ஆண்டவனையும் அறிகிறது; நீயோ உன்னை சிருஷ்டித்த தேவனை அறியாமலும், அறிய விரும்பாமலும், மதியீனனும் நீசனுமானாய்.

ஆதலால் பிரியமானவனே, துன்மார்க்கனாகிய நீ இன்னம் இவ்வுலகில் ஜீவித்திருக்க, தேவன் இடம் கொடுத்திருப்பது; உனக்கு ஆச்சரியமாய் இருக்கவில்லையா? நீ செய்திருக்கிற துரோகம்போல, ஒரு பிரஜை தன் ராஜாவுக்குச் செய்தால்; அவன் அதைப் பொறுப்பானா? உடனே அவனைக் கொல்லும்படி தீர்ப்புச்செய்யமாட்டானா? ஒரு எஜமான் அப்படிப்பட்ட வேலைக்காரனைத் தன் ஊழியத்தில் வைத்துக்கொள்வானா? ஒரு தகப்பன் அப்படிப்பட்ட பிள்ளையை தன் வீட்டில் வாசம்பண்ண விடுவானா? ஒருபொழுதும் இல்லை. பின்னை தேவன் இவ்வளவுகாலம் உன் கலகக் குணத்தைப் பொறுத்து, உன்னைச் சங்க



ரியாமலும், அகோர நரகத்தில் உன்னைத் தள்ளாமலும் வைத்திருப்பது, பேராச்சரியமே. நீ நடப்பித்த குற்றங்களிலும், அற்பமான குற்றங்களைச் செ[illegible]பேர் பயங்கரமான நரகத்திலே முடிவில்லாத தண்டனையை அனுபவிக்கிறார்கள். நீ இன்னும் உயிரோடிருப்பதினால், நான் சொல்வதைக் கேட்டு நடந்தால், நீ தப்பிக்கொள்வாய். ஆதலால், நீ பாவமான வழியை விட்டுச் சாக்கிரதையாய் விழித்துக்கொண்டு, தேவன் உன்னை ரட்சிக்கும்பொருட்டு பின் சொல்லியபிரகாரம் அவரை நோக்கி வேண்டிக்கொள்வாயாக.

## தன் குற்றத்தை அற்பமேனும் சிந்திக்கும் பாவி ஜெபிக்க வேண்டிய பிரார்த்தனை.

எல்லாவற்றையும் சோதித்தறிகிற சர்வவல்லமையுள்ள தேவனே, வானத்துக்கும் பூமிக்கும் மேலான சுயாதிபதியே, நான் உமது சமுகத்திலே கீழ்ப்படியாமையென்ற குற்றஞ்சாட்டப்பட்டவனாய் நிற்கிறேன். நீர் சகல காரியங்களையும் அறிகிறவராய் இருக்கிறீர். எனக்கு விரோதமாய்ச் சாட்டப்பட்டிருக்கிற குற்றங்களை நான் மறுப்பதெப்படி? என் பாவங்களை உமக்கு முன்பாக மறுப்பேனானால் அதிகக் குற்றவாளியாவதுமன்றி, உம்முடைய கோபம் என்மேல் அதிகத் தீவிரமாய்ப் பற்றியெரியுமென்று என் மனச்சாட்சியே சொல்லுகின்றது. நான் குற்றமற்றவனென்று சொல்வேனாகில், என் வாயே என்னைக் குற்றப்படுத்தும். தேவனே நான் செய்த பொல்லாங்குகள் என்மேல் எண்ணிறந்த தீமைகளை வருவித்திருக்கின்றன. என் பாவங்கள் என் தலையின் ரோமங்களிலும் அதிகமாய் இருப்பதால், நான் வானத்திற்கு நேராக என் கண்களை ஏறெடுக்கக் கூடாதவனாய் இருக்கிறேன். ஒருவராலும் எண்ணக்கூடாத குற்றங்களை நான் உமக்கு விரோதமாய்ச் செய்திருக்கிறேன். அவைகள் என் இருதயத்துக்கும் சகலத்தையுமறிகிற உமக்கும் தெரியும். கர்த்தாவே நீர் என்னை நரகத்தில் அமிழ்த்தாதில், நான் இவ்வளவுகாலம் ஜீவித்திருக்கும்படி பொறுமையைப் பாராட்டி என்னைத் தற்காத்திருப்பதற்காக, மிகவும் ஆச்சரியப்படுகிறேன். நீர் இரக்கத்தில் ஐசுவரியமுள்ளவராய் இருப்பதினால், நான் சுகமாய் இருக்கிறேன். நான் உம்மை விரோதித்ததுபோல பூலோக ராஜனை விரோதித்தேனேயானால், முன்னமே ஆக்கினைக்குட்பட்டிருப்பேனே. கர்த்தாவே, என்னைப்போல இப்படிப்பட்ட நீசன் தப்ப வழியுண்டானால், என்

மேலிரக்கம்வைத்து அதை வெளிப்படுத்தியருளும். இரட்சிப்பைப் பெறவேண்டுமென்ற ஆசை எனக்குள் அதிகரிக்கும் பொருட்டு பயங்கரமான விருப்பங்களை உண்டாக்க உமக்குச் சித்தமானால், நான் அவைகளைத் தாங்கும்படி செய்து, பின்பு நொறுங்குண்ட என் இருதயத்தை சொஸ்தப்படுத்தியருள வேண்டுமென்று இயேசுகிறிஸ்துவின் நாமத்தை முன்னிட்டு உம்மைப் பிரார்த்தித்துக்கொள்ளுகிறேன். ஆமென்.

## 2-ம் அதிகாரம்.

### பாவி தான் செய்யும் பாவங்களுக்காகச் சொல்லும் வீண்போக்குகளுக்கு இடமில்லை.

முந்தின அதிகாரத்திலே தேவனுக்குக் கீழ்ப்படியாமையினால், மற்றும் பாவிகளைப்போலவே, நீயும் அவருடைய கோபத்துக்கும் தண்டனைக்கும் ஏதுவாகி, மகா பயங்கரமான நிலைமைக்குட்பட்டிருக்கிறாய் என்று ரூபிக்கப்பட்டிருக்கிறது. மனிதர் தாங்கள் தப்பிக்கொள்ளும்படி ஒருவருக்கொருவர் சொல்லும் வீண் முகாந்தரங்களைப்போல, தேவனுக்கு முன்பாகச் சொல்லமுடியாததால், அவருடைய சந்நிதானத்திலே நீ எப்படி நீதிமானாக நிற்கக்கூடியது?

நன்மையானாலும் தீமையானாலும், தேவன் ஏவினபடி நான் செய்தேனேயொழிய, நானாக ஒன்றும் செய்யவில்லை என்றும்; குயவன் தன் கையிலிருக்கிற மண்ணை அவன் விரும்பிய ரூபம் எதுவோ அதுவாகச் செய்கிறதுபோல, நானும் தேவனுடைய கரத்திலிருக்கிறேனென்றும்; புத்தியீனமாய் அநேகர் சொல்லுவதுபோல நீயும் சொல்லத் துணிந்தால்; பாவம் செய்வதற்கு அது நியாயமில்லை என்றும், அப்படிச் சொல்வது தேவனைக் கனவீனப்படுத்துகிறதென்றும், நீ அறியவேண்டும். இதைக் குறித்து நீ அற்பமேனும் சிந்தித்தாயானால் நீ சொல்லும் போக்கு வீணென்று அறிந்துகொள்வாய். ஒரு தகப்பன், தன் குமாரன் தனக்குக் கீழ்ப்படியவேண்டியதில்லையென்று சொல்லுவானா? ஒரு எஜமான், தன் பொருளைச் சேதப்படுத்தும்படி தன் பணிவிடைக்காரனுக்குக் கற்பிப்பானா? ஒரு ராஜா, தன் இராச்சியத்தை நிர்மூலம்பண்ண தன் பிரஜைகளுக்குக் கட்டளையிடுவானா? சூரியனானது வெளிச்சத்தையன்றி இருளைக்கொடுக்க முடியுமா? இவையெல்லாம் சம்பவித்தாலும், பாவத்தை முழுவதுமாய் வெறுத்து, அதைச் செய்கிறவர்களைத் தண்டிக்கும் தேவன், தமது சிருஷ்டிகள் தமக்கு விரோதமாய்ப் பாவஞ்செய்யஒருபோதும் ஏவவேமாட்டார். இந்த நியாயத்தை நீ ஒப்புக்கொண்டபோதிலும், நான் என் முன்னோர்கள் செய்தபடி செய்தேனானால், அதிலே குற்றமில்லையே என்று சொல்வாய். இதுவும் முந்திய நியாயம்போல விருதாவென்று அறிந்துகொள். எப்படியெனில் ஒரு கைதியானவன், தான் செய்த குற்றம் பெரிதல்லவென்று காட்டுவதற்கு, நியாயாதிபதிக்கு முன்பாக நின்று: என் முன்னோர்களெல்லாரும் அயோக்கியமானவர்கள், அவர்கள் செய்த குற்றங்களுக்காக மரணதண்டனை பெற்றார்கள், நான் அவர்களுடைய தீமையான வழிகளைப் பின்பற்றினதால், தண்டிக்கப்படவேண்டியதில்லையென்று சொல்வானா? அப்படிச் சொன்னால் அதிகத்தண்டனைக்கேதுவாவானல்லவா? பின்னும், நீ என்னுடைய விதி விதிக்கப்பட்டிருக்கிறது, அதை மாற்றுவது கூடாதகாரியம்; என் அயலகத்தார்போல நான் செய்வது போதுமென்று சொல்லத்துணிந்தால், நீ இப்படி புத்திமான்களுக்கு முன்பாகக் கூச்சமின்றிப் பிதற்றவேண்டாமென்று உனக்குப் புத்திசொல்லுகிறேன். இவ்வகையான பிதற்றுதல்களை மனிதர் ஒப்புக்கொள்ளாதிருக்கையில், தேவனுக்கு முன்பாக இந்தப் போக்கைச் சொல்லித் தப்பித்துக்கொள்ள அவர் இடங்கொடார்.



அன்றியும், நான் பாவஞ்செய்திருப்பது மெய்யாயினும், என் ஜீவகாலத்தில் அநேக புண்ணிய கிரியைகள் செய்திருப்பதால், நான் செய்த பாவத்துக்கு அது சரிக்கட்டுமே என்று நீ சொல்லலாம். நீ அநேக புண்ணியங்களைச் செய்திருந்தாலும், ஒரு பாவத்தைமாத்திரம் செய்தால், அந்தப் புண்ணியங்களெல்லாம் உதவாமல் அவமாய் முடியும். ஒரு சங்கிலியில் ஒரு வளையம் முறிந்தால், அது முழுவதும் உதவாது; வெள்ளை அங்கியில் ஒரு கறைமாத்திரம் இருந்தால் அதின் அழகைக் கெடுக்கும். அதுபோல் ஒருவன் முன்னே அநேக புண்ணியங்களைச் செய்திருந்தாலும், பின்பு அவன் தேவன் விதித்திருக்கிற கற்பனைகளிலொன்றை மீறினால், நரகாக்கினைக்கு ஏதுவாவான். அதற்குத் திருஷ்டாந்தம். ஒரு கொலைபாதகன் நியாயாதிபதிக்கு முன்பாக நிற்கும்போது: நான் ஒருவனைக் கொன்றது மெய்யாயினும், அநேகருடைய உயிரை இரட்சித்திருப்பதைத் தாங்கள் நினைக்கவேண்டுமென்று சொன்னால்; அந்த நியாயாதிபதி அந்தக் கொலைபாதகனை மன்னித்து விடுவானா? மாட்டானே.

அப்படியே, நீயும், நான் ஆயிரம், பதினாயிரம் புண்ணியங்க
ளைச் செய்தேனென்று பூரித்து மன்றாடினாலும், தேவன் உனக்கு
மன்னிப்பைத் தரமாட்டார். உள்ளபடி சொல்லவேண்டுமா
இல், உனக்கு நீதியே இல்லை; வேதவாக்கியத்தின்படி "நீதிமான்
ஒருவருமில்லை; நாங்கள் அனைவரும் தீட்டானவர்கள்போலி
ருக்கிறோம், எங்களுடைய நீதிகளெல்லாம் அழுக்கான கந்தை
யைப்போலிருக்கிறது." பாவமுள்ள மனிதன் தேவனுடைய
நியாயப்பிரமாணத்தைச் சம்பூரணமாய் நிறைவேற்ற முடியாது.
அவனுடைய மனம் சீர்கெட்டிருக்கிறது; ஆகவே அவன்
செய்யும் எந்தக் கிரியையும் தீங்குள்ளதாய் இருக்கிறது. கெட்
டமரம் நல்ல கனிகளையும், உவர்க்கிணறு நல்ல தண்ணீரையும்
கொடுக்கக்கூடாததுபோல், பாவமுள்ள இருதயம் தேவனுக்
கேற்ற கிரியைகளைச் செய்யவும் ஏலாது. ஆதலால் இவைகளி
னாலே நீ நித்திய அழிவுக்கு ஏதுவாயிருக்கிறாய் என்று விளங்
குகின்றது. ஆகிலும் இன்னமும் நீ ஏதாவது நியாயங்களைச்
சொல்லக்கூடுமானால் சொல்லு.

நான் தீமைசெய்ததினால் நித்திய நிர்ப்பந்தத்துக்கு ஏதுவாய்
இருக்கிறேன். ஆனால் இம்மைக்குரியவைகளைத் தேடினதில்
முயற்சியாய் இருந்ததால், மறுமைக்குரியவைகளை விசாரிக்க
எனக்குச் சமயம் இல்லாதிருந்தது; அவைகளைக் கவனியா
மல் விட்டதினால், இவ்வளவு பெரியமோசம் வருமென்பது
முன் எனக்கு விளங்கவில்லையென்று சொல்லலாம். அப்படிச்
சொல்வதினால், உனக்கு வரும் பலன் என்ன? நீ தேவனுடைய
கற்பனைகளை மீறினபோது, அவருக்குக் கண் இருந்தும் காண
வும், காது இருந்தும் கேட்கவும் இயலாதவர் என்றும், அவரும்
உன்னைப்போலொத்தவர் என்றும் எண்ணினாயோ? அவர் உன்
பாவங்களைக் கவனியாரென்றும்; கவனித்தாலும், அவருக்குத்
தப்பி ஒளித்துக்கொள்ளலாமென்றும், நீ அவருடைய கற்பனை
களை நிறைவேற்ற விருப்பமில்லாமல், அவைகளை முழுதுமாய்
விட்டுவிடுவதற்கு முகாந்தரமாமே என்றும் எண்ணினாயோ? எப்
படியாயினும், தேவன் தம்மை ஒருவரும் அவமதிக்க இடம்கொ
டுக்கவேமாட்டார். அவருடைய வார்த்தை எப்படியோ, அப்
படியே அவருடைய செய்கையும் இருக்கிறது. அவர் தாம்
பயமுறுத்துவதை, அல்லது வாக்குத்தத்தம் செய்வதை நிறை
வேற்றி முடிப்பார். உன் காரியம் பின்வரும் திருஷ்டாந்தத்
தினாலே விளங்கும். ஒருவன் தன் வீட்டில் இருக்கும்போது,
அயலகத்தார் வந்து: உன் வீடு நெருப்புப்பற்றி விட்டபடியால்,
நீ சேதப்படாதபடி தப்பிக்கொள்ள வெளியே வாவென்று கெ



ருக்கிக் கூப்பிட்டும், அவன் அதைக் கவனியாமல், அசமந்த
மாய் இருப்பானாகில், அவன் வெந்துபோகமாட்டானோ? அந்
தப்படியே நீயும் நெருப்புப்பற்றின அந்த வீட்டுக்காரனைப்
போல, அடிக்கடி பாவத்தினாலுண்டாகும் பயங்கரமான முடிவு
இன்னதென்று உன் மனச்சாட்சியினாலும், பிறராலும் எச்சரிக்
கப்பட்டும், சற்றேனும் அந்த எச்சரிப்பைக் கவனிக்கவில்லை.
ஆனபடியால், குற்றம் உன்னிடத்தில் இருக்கிறதேயன்றி, பிற
ரிடத்தில் இல்லையே. ஐயோ, பிசாசின் வழியை விட்டுத் தேவ
னுடைய வழியிலே நடக்க சற்றும் உனக்கு விருப்பமில்லை.
அப்படியல்லவென்று நீ சொன்னாலும், அதை நம்பக்கூடாதே.
ஏனெனில், உனக்கு விருப்பம் இருந்தால், லௌகீக காரியங்
கள் அவசியமாய் இருந்தாலும், நீ நடக்கும் வழி மோட்சவழியோ,
நரகவழியோ என்று விசாரிக்கவாயினும் உனக்கு நேரம் இருக்
குமே. நீ விரும்பினாலும், விரும்பாவிட்டாலும், உனக்குச்
சாவுவருவது நிச்சயமே; நீ நியாயத்தீர்ப்புக்கு ஆயத்தமாய்
இருந்தாலும், இராவிட்டாலும் சீக்கிரத்துக்குள்ளாகத் தேவனு
டைய நியாயாசனத்துக்குமுன்பாக நிற்பாயே. அங்கே இப்படி
நீ வீண்போக்குச் சொன்னாலும், ஒப்புக்கொள்ளப்படமாட்
டாது.

ஆதலால், பாவிக்குண்டாகும் நித்திய நிலைமையைக்குறித்து
தேவன் வெளிப்படுத்தினதை உனக்குத் தெரிவிக்கிறேன். பா
வத்தின் சம்பளம் மரணம்; அதாவது, நியாயத்தீர்ப்புநாளிலே
பாவிகள் நித்திய நரகாக்கினையை அநுபவித்துத், தங்கள் அக்கிர
மங்களுக்குத் தக்கதாக நீதியுள்ள தீர்ப்பைப் பெறுவார்கள்.
மத்தேயு சுவிசேஷம் 25-ம் அதிகாரத்தில் நடுத்தீர்வைநாளைப்
பற்றிய சில முக்கியமான விசேஷங்களைக் கண்டுகொள்ளலாம்.
நடுத்தீர்வைநாளாகிய கடைசிநாளிலே தேவனுடைய கட்ட
ளைப்படி சூரியன், சந்திரன், நக்ஷத்திரங்கள் அகன்றுபோம்;
பூமியும் அதிலுள்ள யாவும் வெந்து அழிந்துபோம்; அப்பொ
ழுது பலத்த ஒரு தூதன் வானத்திலிருந்து இறங்கி எக்காளம்
ஊதவே, அந்தச் சத்தத்தினால் எல்லாக்காலத்திலும் மரித்துப்
போன அனைவரும், உயிர்த்தெழுந்து, கிறிஸ்துவின் நியாயாசனத்
துக்கு முன்பாக வந்து நிற்பார்கள்; ஒவ்வொரு பாவியும் செய்த
கிரியைகள் திட்பநுட்பமாய்ச் சோதிக்கப்பட்டபின்பு, அவன
வன் செய்த கிரியைகளுக்குத் தக்கதாய்ப் பலனைப் பெறுவான்.
பூலோகத்திலே தேவனைச் சேவித்த பக்தர்கள் அவருடன் வாழ்ந்
திருக்க மோட்சத்துக்கு ஏகுவார்கள். ஆனால் அவரை அசட்
டைசெய்து, பாவத்துக்கும் சாத்தானுக்கும் ஊழியஞ்செய்யும்

படி தங்களை ஒப்புவித்தவர்கள் பிசாசோடும், அவன் தூதரோடும் அழுகையும், வியாகுலமும், பற்கடிப்புமுள்ள பயங்கரமான இடத்திலே என்றென்றைக்கும் வேதனையை அநுபவிக்கும்படி துரத்தப்படுவார்கள்.

நியாயாதிபதிகள், குற்றம் பாரிக்கப்பட்டவர்கள் [illegible]ன்னகாலத்திலே தங்களுக்குமுன் ஆஜராய் இருக்கவேண்டுமென்று கட்டளை கொடுப்பதுபோல, தேவனும் நாம் அனைவரும் மரணகாலத்திலே தமது சந்நிதானத்தில் நிற்கவேண்டுமென்று அவருடைய வேதத்தில் விதித்திருக்கிறார். ஆதலால் பாவி! நீ பெற்ற கட்டளையின்படி மரணம் அடைந்தவுடனே, தேவனுடைய பயங்கரமான சந்நிதானத்தில் நிற்கவேண்டும். அப்போது, நடுநடுங்கும் உன் ஆத்துமா எங்கும் வியாபித்து, எல்லாவற்றையும் அறியும் சர்வவல்லவருக்கு விலகி ஒளித்துக்கொள்ளக் கூடுமென்று நினையாதே. நீ எங்கிருந்தாலும், அவர் உன்னைக் கண்டுபிடித்து, தமக்கு முன்பாக நிறுத்துவார். கர்த்தராகிய இயேசு சொல்வதற்கரிய மகிமையுள்ளவராய், கோடாகோடிகளான பரிசுத்த தூதருடன் நியாயத்தீர்ப்புச்செய்ய வெளிப்பட்டு, உன்னைக் குற்றவாளியென்று தீர்த்து: சபிக்கப்பட்டவனே, என்னை விட்டு நித்திய அக்கினியிலே போ என்று தீர்ப்புச் சொல்லுங்காலத்தில், உனக்கு உதவிக்காக யாரை நோக்குவாய்? யார் உன்னை ரட்சிக்கக்கூடும்? யார் அந்தத் தீர்ப்பை மாற்றக்கூடும்? ஐயையோ அப்போது உன் நிலைமை எவ்வளவு மோசமுள்ளதாய் இருக்கும்; தப்பவும் வழிவகை இராது. உதவி கிடையாத கடன்காரன் கடனிமித்தம் மறியல் வீட்டில் அடைபட்டிருப்பதுபோல, நீயும் என்றென்றைக்கும் அடைபட்டிருக்கும்படி நரகத்தில் தள்ளப்படுவாய் என்பதற்குச் சந்தேகமில்லை.

## சீர்கேடும் நிர்ப்பந்தமுமுள்ள பாவி தன் நிலைமையை உணர்ந்து புலம்பல்.

ஐயையோ என் நிலைமை எவ்வளவு பரிதாபமாய் இருக்கிறது. நான் எவ்வளவு புத்தியீனமாய் என்னைக் கெடுத்துக்கொண்டேன். நித்திய இகழ்ச்சிக்குப் பாத்திரனானேனே; எப்பொழுதும் என்னைத் தற்காத்து எனக்கு நன்மைசெய்த காருண்ணியரை நான் அவமதித்து, வீணும் வியர்த்தமும், ஒன்றும் செய்யலாதவைகளாகிய விக்கிரகங்களை நேசித்துச் சேவித்தேன். ஐயோ! என்னென்ன பொல்லாப்புக்களைச் செய்திருக்கிறேன்,



இப்பொழுது நான் அதற்கு என்ன செய்யலாம்? எங்கே போகலாம்? நிர்ப்பந்தமான என்னை யார் ரட்சிப்பார்? நான் என்றைக்கும் கெட்டுப்போனேனே. ஆ! என் சிநேகிதரே என் பிரலாபத்தைப் பார்த்து, என்பேரில் இரங்குங்கள். நீங்கள் என்னை இரட்சிக்கக் கூடாதிருந்தாலும் என்னை இரட்சிக்கத் தக்க வல்லவர் ஒருவர் உண்டென்று உங்களுக்குத் தெரிந்தால், நான் அவரைக் கண்டுபிடிக்கும்படி தயவாய் என்னை அவரண்டைக்கு நடத்துங்கள். சத்தியமும் சமாதானமுமுள்ள வழியைப் பிரலாபிக்கும் பாவிகளுக்குக்காட்டி வேதத்தைப் போதிக்கும் குருக்கள்மாரே, கிலேசமுள்ள என் ஆத்துமாவின்மேல் பரிதபித்து இரங்குங்கள். நான் மனிதரை நேசிக்கவேண்டியதென்ன? துரோகம்செய்த என் ஆத்துமாவுக்குத் தேவனேயன்றி வேறே யார் உதவி செய்யக்கூடும்.

வானத்துக்கும் பூமிக்கும் தேவனாகிய கர்த்தாவே! நான் வெகு வாஞ்சையோடும், மிகுந்த வியாகுலத்தோடும் உமக்கு முன்பாக என் கண்களை ஏறெடுத்து, உமது நாமத்தை நோக்கிக் கூப்பிடுகிறேன்; உம்மைத்தவிர, வேதனை நிறைந்த என் நிர்ப்பந்த ஆத்துமாவுக்கு வேறே தாரகமில்லை; கர்த்தாவே, தேவரீர் என் விண்ணப்பத்தைக் கேளாமல், என் துர்க்கிரியைகளினிமித்தம், என்னை நரகத்திலே அமிழ்த்தினாலும் நீதியே. உம்முடைய நித்திய கோபத்துக்கும் சினத்துக்கும் பாத்திரனாய் இருக்கிறேன். ஆனால் நீர் இரக்கமுள்ளவராக, திக்கற்றவர்களுக்கு உபகாரியாய் இருப்பதால், என் நிர்ப்பந்தத்தைப் பார்த்து, என்னை ரட்சிப்பீர் என்று நான் நம்புகிறேன். உம்மிலன்றி எனக்கு வேறே நம்பிக்கை இல்லை; நீர் கை தூக்காவிட்டால் நான் கெட்டுப்போவேன். கர்த்தாவே, பூமியைப்பார்க்கிலும் வானங்கள் எப்படி உயர்ந்திருக்கிறதோ, அப்படியே என் வழிகளைப்பார்க்கிலும் உம்முடைய வழிகளும்; என் சிந்தனைகளைப்பார்க்கிலும், உம்முடைய சிந்தனைகளும் உயர்ந்திருக்கிறதே. ஆதலால் தேவரீர் உமது மிகுந்த கிருபையின்படியே, ஏழையின் பிரலாபத்துக்காகப் பரிதபித்து, அடியேன் பாவங்களை மன்னித்தருளும். அன்றியும் நான் இரட்சிப்பின் வழியைத் தேடுவதற்கேதுவாக இப்பொழுது என் மனதில் அழுந்திய திவ்விய காரியங்களை அதிகத் தெளிவாய் உணரும்படி எனக்குப் போதிக்கும் ஒரு போதகரை அனுப்பியருளும். இவ்வித இரக்கம் காண்பிக்கும்படி இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே உம்மை வேண்டிக்கொள்ளுகிறேன். ஆமென்.

# 3–ம் அதிகாரம்.

## பாவதோஷத்தை உணர்ந்து தண்டனைக்கு அஞ்சும் பாவிக்குக் கிறிஸ்துவினால் அருளப்படும் ஆத்துமரட்சிப்பைத் தெரிவிக்கும் நற்செய்தி.

கிறிஸ்துவானவருடைய சுவிசேஷத்தை அங்கீகரிக்கும் யாவரும் பூரண அன்பினால் ஏவப்பட்டு, கோபம், பகை முதலிய தீயகுணங்களை அகற்றி, எந்தச் சிருஷ்டிக்கும் நேரிடும் துன்பத்தில் மகிழாமல், இன்பத்தில் மகிழுவார்கள். இப்படிப்பட்ட நற்குணத்தைச் சகலரிடத்திலும் உண்டுபண்ணுவதே சுவிசேஷத்தின் முக்கிய நோக்கம். ஆதலால் அதை அங்கீகரிக்கிற யாவருக்குள்ளும், இந்த நற்குணம் விளங்கும். கிறிஸ்தவனெவனும் ஒரு அற்ப மிருகம் வேதனைப்படுவதைக் கண்டாலும் பரிதபிப்பான். ஆனபடியினால் உன்னில் ஆத்துமவிசாரம் உண்டாகும்படி முந்தின அதிகாரங்களில் சொல்லப்பட்ட காரியங்களை நான் உனக்கு விவரித்துக் காட்டும்பொருட்டு, அவைகளை அதிகக் கடினமும், பயங்கரமுமாக எடுத்துரைத்ததால் பலமுறையும் மனஸ்தாபம் அடைந்தேன். நான் இனி சொல்லும் காரியங்கள் எனக்கு மிகுந்த மனச்சந்தோஷத்தை உண்டாக்கத்தக்கது. நீ மனந்திரும்பாமல் பாவத்தில் நிலைநின்றாயாகில், தேவனுடைய நீதியுள்ள தண்டனைக்குட்பட்டு, நம்பிக்கைக்கு இடமில்லாமலும் தப்ப வகை இல்லாமலும் இருப்பாயென்று முன் உனக்குத் தெரியக்காட்டினேன். ஆயினும் நீ அவநம்பிக்கையில் அகப்பட்டுத் திகைத்து, கெட்டுப்போகாதபடி நீ கரையேறும் வழி வகையை உனக்குத் தெரிவிப்பேன்.

தேவனுடைய சந்நிதானத்தில் தூளிலே சாஷ்டாங்கமாய் விழுந்துகிடந்து, அவருடைய பயங்கரமான நியாயத்தீர்ப்பைக் கேட்டு, நடுநடுங்கிக் கலங்கும் பாவியே! எழுந்திரு: "நீ உனக்குக் கேடுண்டாக்கிக்கொண்டாய்; ஆனாலும் தேவனிடத்தில் உனக்குச் சகாயம் உண்டு" (ஓசி. 13.9.) என்று உனக்கு அறிவிக்கும்படி கட்டளை பெற்றேன். "மிகுந்த சந்தோஷத்தை உண்டாக்கும் நற்செய்தியை உனக்கு அறிவிக்கிறேன்" (லூக். 2. 10.). மீட்பருடைய இரத்தத்தினாலும் நீதியினாலும் சம்பாதிக்கப்பட்ட இரட்சிப்பை உனக்குத் தெரியக்காட்டுகிறேன். நீ சந்தேகமின்றி மனத்திடன்கொள்; உனக்கு மன்னிப்புத்தரச் சித்தமுள்ளவராகிய காருண்ணிய தேவன் அருளிய வேதவாக்கியத்தைக் கேள். "தேவன் உலகத்தாருடைய பாவங்களை எண்ணாமல், கிறிஸ்துவுக்குள் அவர்களைத் தமக்கு ஒப்புரவாக்கிக் கொண்டார்." (2 கொரி. 5. 19.)



இதற்குமுன் கேள்விப்பட்ட எல்லாச் செய்திகளிலும் மேலான சிறந்த சந்தோஷ செய்தி இதுவே. இதுதான் தேவன் தமது சிருஷ்டிகளுக்கு அருளின அதி விசேஷித்த நற்செய்தி. ஆதலால் இயேசுகிறிஸ்துவினால் உண்டான இரட்சிப்பு, இப்படிப்பட்டதென்று நீ தெளிவாய் உணரும்படி, அதை நான் உனக்கு உண்மையாகத் தெரிவிக்கிறேன். அந்த உபதேசத்தை அங்கீகரிப்பதினால் நித்தியஜீவன் கிடைக்கும். அதைப் புறக்கணிப்பதினால் நித்திய நாசமுண்டாகும். வானத்தையும் பூமியையும் பரிபாலிக்கும் பரிசுத்தரும் கிருபையுமுள்ள ராஜாவானவர், சர்வலோகத்தாரும் தமக்கு விரோதமாய்த் துரோகம்பண்ணிக் கலகஞ்செய்வதினால், சீர்கெட்டுப் போவார்களென்று அவர் ஏற்கனவே கண்டு; தமது நீதியின்படி அவர்களைத் தண்டித்து நித்திய ஆக்கினைக்கும் அழிவுக்கும் அவர்களை ஒப்புக்கொடாமல் தமது பரிசுத்தத்துக்கும் இராச்சிய பரிபாலன மகிமைக்கும் ஏற்ற தமது அனந்த ஞானத்தினால் தீர்மானித்தபடி, சுவிசேஷத்தைக் கேட்டு, அதை அங்கீகரிப்பவர்கள் யாவரும் ஆத்துமரட்சிப்பையும் மோட்ச மகிமையையும் அடைய சமாதான உடன்படிக்கை செய்தருளினார். இவ்வகையாய் அவர் செய்திருக்கிற ஏற்பாடானது மகா ஆச்சரியமானது. அவர் "தம்முடைய மகிமையின் பிரகாசமும் தன்மையின் சொரூபமும்" (எபி. 1. 3.) திவ்விய சம்பூரணமும் சங்கையும் பொருந்திய தமது ஒரே குமாரனை மனிதருடைய பாவங்களுக்காகப் பலியாக அனுப்பத் தீர்மானித்தார்.

மேற்சொல்லிய நியமத்தின்படி, தேவன் தமது அளவற்ற ஞானத்தினால் நிர்ணயித்திருந்தகாலத்தில் கர்த்தராகிய இயேசுகிறிஸ்து யூதேயா தேசத்தில் மனித அவதாரம்பண்ணி, நெடுநாட்களாக ஓய்வின்றி வருத்தங்களை அநுபவித்து, மனிதர் தங்கள் நன்றிகேட்டினாலும் பகை வர்மத்தினாலும் செய்த பற்பல துன்பங்களைச் சகித்து, மனப்பூர்வமாக மரணபரியந்தம் அதாவது சிலுவையின் மரணபரியந்தமும் கீழ்ப்படிந்தார் (பிலி. 2. 8.). "அவர் நம்முடைய பாவங்களுக்காக ஒப்புக்கொடுக்கப்பட்டும், நாம் நீதிமான்களாக்கப்படுவதற்காக எழுப்பப்பட்டு

மிருக்கிறார்" (ரோ. 4. 25.). தாம் உயிர்த்தெழுந்த சங்கதியைத் தம்மைப் பின்பற்றினவர்களுக்கு பலத்த திருஷ்டாந்தங்களால் ரூபித்து, அப்பால் அவர்கள் கண்களுக்கு முன்பாகப் பிரத்தியட்சமாய் பரமண்டலத்துக்கு எழுந்தருளி, சுவிசேஷத்தை விசுவாசிப்பவர்கள் யாவரும், அதின் சுகிர்தமுள்ள சக்தியினாலும், கர்த்தாவின் மாறுபடாத பராக்கிரமத்தினாலும், அருளினாலும், இரட்சிப்பைப்பெற்று வாழும்படி அதை யாவருக்கும் மிகுந்த நேசத்தோடும் அதிகாரத்தோடும் பிரசங்கிக்கும்படி தமது அப்போஸ்தலர்மேல் பரிசுத்த ஆவியைப் பரிபூரணமாக பொழிந்தருளினார்.

பிரிய சிநேகிதனே, இந்தச் சுவிசேஷத்தை நான் உனக்குத் தெரியப்படுத்துகிறேன். இன்றைக்கு உன் ஆத்துமா, அதினால் தெய்வ அருள்பெற்று இரட்சிப்படையவேண்டுமென்று மிகவும் அவாவுள்ளவனாய் இருக்கிறேன். இப்பொழுது நீ இந்தப் புஸ்தகத்தில் வாசிக்கிற சொற்கள், உன் கண்ணுக்கு நிச்சயமாய் இருக்கிறதுபோல, மனிதவதாரம் செய்த தேவகுமாரன் "உலகத்துக்கும், தூதருக்கும், மனுஷருக்கும், வேடிக்கையானார்" (1 கொரி. 4. 9.). அவர் முதுகு வாரினால் கிழியவும், அவர் சிரசு முண்முடி சூட்டப்படவும், அவருடைய அவயவங்கள் இழுக்கப்படவும், சபிக்கப்பட்ட சிலுவையில் அறையுண்டு கைகால் தொங்கவும், இப்படி அளவில்லாத வேதனைகளை அநுபவித்து, வெளியரங்கமாக யாவரும் இகழவும் தம்மை ஒப்புக்கொடுத்து, இப்படி அவருடைய இரத்தத்தைச் சிந்தும்படி மூர்க்கம்கொண்டிருந்த குரூர சத்துருக்கள் பரியாசம்பண்ணிப் பழிக்க, அவர் ஜீவனை விட்டார்.

நம்முடைய அருமையுள்ள மீட்பர், சரீரத்திலும் ஆத்துமத்திலும் அநுபவித்த வேதனையைப் பார்க்கும்போது, அது நம்முடைய மனதுக்குத் துக்கத்தையும் பயங்கரத்தையும் உண்டாக்கினாலும், அதுவே நமது ஆத்தும ஈடேற்றத்துக்குக் காரணமென்று விசுவாசத்தினால் நோக்குகிற பாவிகளுடைய இருதயத்துக்கு மிகுந்த ஆனந்தத்தை அளிக்கும் காட்சியாயிருக்கிறது. இதை நீ சிந்தித்து, இயேசு இவ்வளவாய்ப் பாடுபட்டு மரணமடைந்தார் என்பதை, உன் மனம் நம்புகிறதோவென்று, உன்னைச் சோதித்துப்பார். அவர் ஏன் இப்படி, அவஸ்தைகளை அநுபவித்து, மரணமடைந்தார்? தேவன் நமக்கு அருளிய வேதத்தில் அதற்கு உத்தரவைக் காணலாம்; "நம்முடைய மீறுதல்களின் நிமித்தம் அவர் காயப்பட்டு, நம்முடைய அக்கிரமங்களின் நிமித்தம் அவர் நொறுக்கப்பட்டார்; நமக்குச் சமாதானத்தை



உண்டுபண்ணும் ஆக்கினை அவர்மேல் வந்தது, அவருடைய தழும்புகளால் குணமாகிறோம்" (எசா. 53. 5.). அவர் மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுந்தபின்பு, "மனந்திரும்புதலும் பாவமன்னிப்பும் சகல தேசத்தாருக்கும் அவருடைய நாமத்தினாலே பிரசங்கிக்கப்படவேண்டியது" (லூக். 24. 47.) என்று கட்டளையிட்டிருப்பதால், அவர் நிறைவேற்றின நீதியையும் பாவப்பிராயச்சித்தத்தையும் நீ ஏற்றுக்கொண்டாயாகில், தேவன் உன்னை நீதிமானாக எண்ணி, உன் பாவங்களை உனக்கு மன்னித்து, தயவு பாராட்டுவாரென்று உனக்குச் சுவிசேஷமாகத் தெரிவிக்கிறேன். "குமாரனிடத்தில் விசுவாசமாய் இருக்கிறவன் நித்தியஜீவனை உடையவனாய் இருக்கிறான்" (யோவா. 3. 36). "அவன் ஆக்கினைத் தீர்ப்புக்குட்படான்" (யோவா. 5. 24.). "ஆனபடியால் கிறிஸ்து இயேசுவுக்குட்பட்டவர்களாயிருந்து, மாமிசத்தின்படி நடவாமல், ஆவியின்படியே நடக்கிறவர்களுக்கு ஆக்கினைத் தீர்ப்பில்லை." (ரோ. 8. 1.)

நீ உன் பாவத்தினின்று விடுவிக்கப்பட்டு, உன்னதமான பரிபூரண ஆனந்தத்தைப் பெற்றுக்கொள்ளக் கிறிஸ்துவானவரண்டைக்கு வரவும், அவர் உன்னை ஏற்றுக்கொள்ளவும் தக்கதாய் நீ முந்தி ஏதாவது நற்கிரியை செய்யவேண்டுமென்று நினையாதே. அப்படி நினைப்பது மகாபிசகு. கிறிஸ்துவண்டைக்கு நீ இருக்கிற பிரகாரமாக வரவேண்டும்; தந்திரமும், நிர்ப்பந்தமும், நிர்வாணமுமுள்ளவனாக வரவேண்டும். "தாகமாய் இருக்கிறவர்களே நீங்கள் எல்லாரும் தண்ணீரண்டைக்கு வாருங்கள், பணமில்லாதவர்களே நீங்கள் வந்து வாங்கிச் சாப்பிடுங்கள், பணமுமின்றி விலையுமின்றி திராட்சரசமும் பாலும் கொள்ளுங்கள்" (எசா. 55. 1.) என்று பரிசுத்தவேதம் சொல்லுகிறது. பாவிகளுக்கு எவ்வளவேனும் நீதியில்லை. அவர்கள் அளவிடப்படாத குற்றவாளிகளாய் இருக்கிறார்கள். ஆதலால் தாங்கள் செய்யும் கிரியையினால் இரட்சிப்பு அடையலாமென்று நம்பக்கூடாது. கிறிஸ்துவானவர் தமது அளவற்ற புண்ணியத்தினால் பாவிகளுக்காக ஓர் நீதியை ஏற்படுத்தி இருக்கிறார். அவரண்டைக்கு வந்து இரட்சிப்பைப் பெற்றுக்கொள்ளுங்கள். அவர் உன் ஆத்தும அவலட்சணத்தை மூடும்படி சறைப்படா சிறந்த ஆடையாகிய தமது நீதியை உனக்காக ஆயத்தப்படுத்தியிருக்கிறார். அவர் அதை ஆயத்தப்படுத்தும்படி, நம்முடைய பாவங்களுக்காகப் பிராயச்சித்தம் செய்ததுமல்லாமல், நாம் மீறின தேவனுடைய கற்பனைகளையும் நிறைவேற்றினார். நீ கிறிஸ்துவை விசுவாசிக்கையில், அவருடைய நீதி உனக்கு

எண்ணப்படுகிறது. அதை நீ தரித்துக்கொண்டு சற்றும் பய மின்றி தேவனுடைய சமுகத்தில் சேரலாம்.

---

## மேற்சொல்லிய நற்செய்தியைக் கேட்டு பாவி உணரும் ஞான உணர்ச்சித் தியானம்.

என் ஆத்துமாவே! இன்றைக்கு நீ கேட்ட நற்செய்தி எவ்வளவு ஆச்சரியமாயிருக்கிறது. என் மனதுசமே! இப்படிப்பட்ட நற்செய்தியை அநுக்கிரகித்த ரட்சகர், ஒப்பில்லாத சர்வ சம் பூரண வஸ்துவல்லோ.

இயேசுவே! நீசனான என்மேல் இரக்கம்வைத்து நீர் பரலோக மகிமையையும் ஆனந்தத்தையும் விட்டு, பூலோகத்துக்கு வந்ததினிமித்தம் உமது திருநாமத்தை துதிக்கிறேன். நீர் அடைந்திருக்கிற உன்னத மகத்துவத்திலும் ஆனந்தத்திலும் இன்று ஒரு நிமிஷம் என்பேரில் ... பார்த்து உமது தொண்டர்களில் மிகவும் அற்பமானவர்களைக்கொண்டு என்னை ஆற்றி நடத்தும்படி கிருபையுள்ள வாக்கருளினால், நான் நன்றியறிதலுடன் மனம்பூரித்தவனாய் ஆச்சரியத்துடனே சாஷ்டாங்கமாய் விழுந்து, இரட்சிப்பைப் பிரசித்தம்பண்ணும் அவர்களுடைய அடிச்சுவடுகளை முத்தஞ்செய்வதே நியாயம் (எசா. 52. 7.). ஆனால் தேவரீரோ இரக்கத்தைப் பிரசித்தப்படுத்தும் தூதனாய் இவ்வுலகத்துக்கு வந்து, நெடுங்காலமாய் நிர்ப்பந்த கூட்டத்தார் நடுவில் சஞ்சரித்து நிந்தைகளையும் குற்றங்களையும் சகித்தபின்பு, குற்றவாளியைப்போல சிலுவையிலும் அறையப்பட்டீர். இதை நான் சிந்திக்கையில், என் மனம் வருந்துகிறது; இப்படி தேவரீர் சருவலோகத்தாரும் அவமதித்த நீதியை நிறைவேற்றி, "என்னை தேவனுக்கென்று உம்முடைய இரத்தத்தினாலே மீட்டுக்கொண்டீர்." (வெளி. 5. 9.)

இனி நான் என்னசொல்லுவேன்? "ஆண்டவரே விசுவாசிக்கிறேன்; என் அவிசுவாசம் நீங்கும்படி உதவிசெய்யும்" (மாற். 9. 24.). அதிதீவிரபுத்திக்கும் எட்டாத பரம வெளிப்படுத்தலை நான் நம்பவேண்டியதே. கர்த்தாவே பதினாயிரம் உலகங்கள் கிடைத்தாலும் நான் உம்முடைய கிருபையை விருதாவாய்ப் பெறாதபடி (2 கொரி. 6. 1.) அருள் செய்யும். சர்வலோகத்தையும் நாம் சொந்தமாகப் பெற்றுக்கொண்டாலும் உமது கிருபையை இழந்தேனேயானால் எனக்கு லாபம் இல்லையே? உம்



முடைய சுவிசேஷம் காட்டும் இரட்சணியம் என் உள்ளம் எங்கும் வியாபித்து, அந்தகரணங்கள் யாவையும் வசப்படுத்தவும் என் ஆத்துமாவை உம்மோடே ஐக்கியமாக்கவும் அருள்செய்யும். இப்படி நான் அந்த வசனத்தை கேட்டு, மெய் என்று உணர்ந்து, அதின் வரப்பிரசாதங்களை அநுபவிக்கவும், அது என் நித்திய இரட்சிப்புக்கு தேவபலனாய் இருக்கவும் (ரோ. 1. 16.) கிருபை செய்தருளும்.

இந்த ... செய்திகளைக் கேட்க கேட்க, என் உள்ளத்திலே மிகுந்த ஆனந்தம் விளைந்து, பொங்குகின்றது. அது பானையின் கீழ் எரியும் முட்களின் படபடப்புப்போலாகாதபடி கிருபைசெய்தருளும். தேவரீருடைய நியமத்தின்படி, நான் இந்த ஆசீர்வாதங்களைத் தேடிப் பெற்றுக்கொள்ளும்பொருட்டு; அவைகளை எனக்கு உணர்த்தி, நான் கடைசியில் மோட்சம் சேருவேன் என்றும் நம்பிக்கைகொண்டு, எப்பொழுதும் உமது திருச்சித்தத்தின்படி நடக்கவும்; நான் இரட்சிப்பை பெறுவ தற்கு அதுவே சாட்சியாய் இருக்கவும்; எனக்கு அநுக்கிரகம் செய்தருளும். ஆமென்.

---

# 4-ம் அதிகாரம்.

---

## ஆத்தும இரட்சிப்பைப்பெறும் விதம் இன்னதென்று விளக்குதல்.

யூதஜனங்கள் கர்த்தராகிய இயேசுவிடத்திற்கு வந்து, "தேவனுக்கேற்ற கிரியைகளை நடப்பிக்கும்படி நாங்கள் என்ன செய்யவேண்டும்?" என்று கேட்டார்கள் (யோவா. 6. 28.). அப்படிப்போல நீயும் கிறிஸ்துநாதர் தமது ஜனங்களுக்கென்று சம்பாதித்த ரட்சிப்பை தவறாமல் அடைவதற்கு நான் என்ன செய்யவேண்டுமென்று என்னிடத்தில் கேட்கலாம். அதற்கு நான் என்னால் இயன்றமட்டும் பயபக்தியோடே உனக்கு உத்தரவு சொல்லுவேன். ஆதிகாலமுதல் உத்தமபோதகர்கள் காட்டிய முன்மாதிரியையே தொடர்ந்து நீ இரட்சிப்பைப் பெறும் பொருட்டு தேவனிடத்துக்கு மனந்திரும்புவதையும் குறித்தும், நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவை விசுவாசிப்

தைக் குறித்துமே (அப். 20. 21.) உனக்குத் தெரிவிக்கிறேன். இதுவே அப்போஸ்தலர் போதித்த புராதன போதனையாய் இருக்கிறது.

நீ குற்றவாளியென்றும், அதினால் தேவதண்டனைக்கு ஆளானாய் என்றும், அந்தத் தண்டனையினின்று விலகிக்கொள்ள உனக்குப் பெலனில்லை என்றும், நீ உணர்ந்து இருக்கிறாய் என்று எண்ணுகிறேன். நீ உனக்கு கேடுண்டாக்கிக் கொண்டபடியால் (ஓசி. 13. 9.). அற்பமேனும் உன்னால் உனக்கு இரட்சிப்பு கிடைப்பதற்கு இடமில்லை, என்பதைத் திரும்பவும் உனக்கு வற்புறுத்திச் சொல்லுகிறேன். உன்னுடைய செய்கையினாலே, உனக்கு இரட்சிப்புக் கிடைக்குமென்ற எண்ணத்தை ஒரே தீர்மானமாக முழுதுமாய் விட்டுவிடவேண்டும். அல்லாதிருந்தால், இடித்ததைத் திரும்பக் கட்டுவதுபோல, நீ விட்டுவிலகின பாவங்களைத் திரும்பவும் நடப்பிக்க இடம் பண்ணுவதாகும். இப்போது சொல்லப்பட்டவைகள், உன் மனதிலே நன்றாய்ப் பதிந்ததாகில், இனி நான் சொல்லும் போதனைகளை நீ அங்கீகரிப்பாய். நான் முதலாவதாகச் சொல்லவேண்டிய விசேஷித்த போதனை என்னவெனில், நீ கிறிஸ்துவை நோக்கி, அவரையே நம்பிப் பற்றிக்கொள்ளவேண்டும். நீ அவரண்டைக்கு வருகையில், உன் பாவங்களை வெறுத்து, அவருடைய கிருபையின் பலத்தைக்கொண்டு அவைகளை முற்றிலும் உன்னை விட்டு நீக்கிப்போடுவது மகா அவசியம். இவ்வகையாய், நீ கிறிஸ்துவிடத்தில் நம்பிக்கை வைப்பதினாலே, தேவன் உன்னை ஏற்றுக்கொள்ளுவது நிச்சயமே.

நீ இரட்சிப்பைப் பெறுவது அரிதென்று நினைத்துக் கிறிஸ்துவையென்னிடத்தில் இறங்கிவரப்பண்ணும்படி பரலோகத்துக்கு ஏறுகிறவன் யார்? (ரோ. 10. 6.) அல்லது அவருடைய சந்நிதானத்தில் நிறுத்துவதற்கு என்னை அவரிடத்துக்குக் கொண்டுபோகத்தக்கவன் யார்? என்று நீ எண்ணலாகாது. ஏனெனில், யாவராலும் போற்றப்படத்தக்க "இயேசுநாதருக்குள் சகலமும் நிலைநிற்கிறது" (கொலோ. 1. 17.). "அவர் சகலத்தையும் தாங்குகிறவர்;" அவர் "நம்மில் ஒருவருக்கும் தூரமானவரல்ல" (அப். 17. 27.); அவர் எங்கும் வியாபித்திருக்கிறார். பாவி! இரட்சிப்படைய உனக்கு விருப்பம் இருக்கிறதா? இரட்சகரண்டைக்கு ஓடிப்போ; நீ பாவத்தினாலும், வெட்கத்தினாலும், பயத்தினாலும், [illegible]லும், அமிழ்த்தப்பட்டு, அவரிடத்தில் [illegible]தியற்றவனாய் இருந்தாலும், மௌனத்தோடே அவர் பாதத்தண்டை விழுந்து, "இதோ உலகத்தின் பாவங்களைச்



சுமந்து தீர்க்கிற தேவ ஆட்டுக்குட்டி" (யோவா. 1. 29.) என்று அவரை நோக்குவாயாக.

இப்படி, நீ அவரை கருத்தோடே நோக்குவாயாகில், அந்தத் தரிசன மகிமையினாலே நீ பரவசமாகி உன் மனம் கசிந்து உருகும். சிற்றின்பத்துக்கடுத்த உலகப்பொருள்களை சம்பாதித்து, அநுபவிக்கும்பொருட்டு ஜீவாதிபதியைக் கொலைசெய்ததினால் (அப். 3. 15.) நான் நிர்ப்பந்தத்துக்கும் கேட்டுக்கும் உள்ளவனானேனே என்று நீ நினைக்கிறதில்லையா? உன்னிமித்தம், அவர் பட்ட பெருங்காயங்களைப் பார்; உன்னால் குத்துண்ட அவர் திருமேனியை நோக்கு (சகரி. 12. 10.). நீ கல்நெஞ்சன் அல்லாதிருந்தால், இதைக் கண்டவுடனே மெழுகுபோல உன் மனம் உருகி பிரலாபிக்கும். நீ செய்த பாவங்களில் ஒன்றை சுட்டிக்காட்டி, இந்தப் பாவத்துக்காக நான் என் இரட்சகராகிய தேவகுமாரனை அவமதித்து வேதனைப்படுத்தினது தகுமானதுஎன்று சொல்லக்கூடுமா? இனிமேலும் உனக்கு உண்டாகும் சோதனையில் இன்னதுக்காக நான் என் ஆண்டவரை மறுபடியும் சிலுவையில் அறைவது தகுமானது என்று நீ உரைக்கக் கூடுமானதா? பாவம் உனக்கு அத்தனை அருமையோ! பாவி, நீ இரட்சிப்படைய விரும்பினால், சிலுவையடியில் அடைக்கலம் புகுந்து, நீ செய்த ஒவ்வொரு பாவத்துக்காகவும் மனஸ்தாபப்பட்டு, அதை வெறுத்துத் தள்ளவேண்டும்; வலதுகையைப்போலவும், வலதுகண்ணைப்போலவும், உனக்கு அருமையாகத் தோன்றும் துர் இச்சைகளை நீ ஒழித்துவிடவேண்டும். நீ மரித்தோரிலிருந்து எழுந்தவனாக உன்னை நீயே தேவனுக்கு ஒப்புவிக்கவேண்டும் (ரோ. 6. 13.). அவர் விலைமதிக்கப்படாத கிரயம் கொடுத்து, உன்னை வாங்கினாரென்று உனக்கு விளக்கிக் காட்டியிருக்கிறேன். நீ "அழிவுள்ள வஸ்துக்களாகிய வெள்ளியினாலும் பொன்னினாலும் மீட்கப்படாமல், குற்றமில்லாத மாசற்ற ஆட்டுக்குட்டியாகிய கிறிஸ்துவின் விலையேறப்பெற்ற ரத்தத்தினாலே மீட்கப்பட்டிருக்கிறாய்" (1 பேது. 1. 18, 19.). இதைக்குறித்து உன் மனம் என்ன சொல்லுகிறது? தேவசன்னிதானத்தில் இருக்கிறவனாக உத்தரம் சொல்லு. நீ முன் செய்த பாவங்களை நினைத்துத் துக்கப்படுகிறாயா? உன் பாவங்களை வெறுத்துத்தள்ள உனக்கு மனம் இருக்கிறதா? உன்னைத் தமது ரத்தத்தினாலே மீட்டுக்கொண்ட இரட்சகருக்கு மனமகிழ்ச்சியோடும் நன்றியறிதலோடும் ஊழியஞ்செய்ய அபேட்சிக்கிறாயா?

இப்படிப்பட்ட வாஞ்சை உன் உள்ளத்திலே உண்டாயிருக்கிறதென்று எண்ணுகிறேன். ஆனால், நீ இரட்சிப்பைப் பெறுவதற்கு, இந்த வாஞ்சை மாத்திரம் போதாது. தேவன் உனக்கு அருளும் சமையத்துக்குத் தக்கதாகப் பாவத்தினால் உண்டாகிய கொடிய தீங்கை உணர்ந்து, பரிசுத்த ஜீவியஞ்செய்வதே, மகா அவசியமும் மேன்மையுமானதென்று எப்போதும் எண்ணி நடக்கவேண்டும். அப்படி நடக்க வல்லவனாகும்பொருட்டு; நீ தேவன் அனுப்பினவரை விசுவாசிக்கவேண்டும் (யோவா. 6. 29.). செடியைவிட்டு நறுக்கப்பட்ட கிளையானது, கனிகொடுக்கமாட்டாததுபோல, விசுவாசத்தினால் கிறிஸ்துவோடு ஐக்கியமாகாதிருந்தால், நீ தேவனுக்குப் பிரியமான ஒன்றையும் செய்ய ஏலாதவனாயிருப்பாய்.

ஆதலால் தம்மை விசுவாசிக்கிறவர்கள் யாவருக்கும், மாட்சிமையுள்ளவராயும் அன்பு நிறைந்தவராயும் காணப்படுகிறவரும் சிலுவையில் அறையுண்டு இரத்தஞ்சிந்திக் காயப்பட்டவருமாகிய மீட்பரை நீ சார்ந்துகொண்டு, அவரை நோக்கி ஓடு. இப்போதே உன் சகல பாவங்களோடும் அவரிடத்துக்குப் போ. நீ இருக்கிற பிரகாரமாகவே போ. முந்த நீ நீதியும் பரிசுத்தமுமுள்ளவனாகி, அப்புறம் அவரண்டை போவேன் என்பாயாகில், அப்படி நீ நீதியும் பரிசுத்தமுமுள்ளவனாவது உன்னால் ஒருக்காலும் கூடாதகாரியமே. நோயாளி ஒருவன், நான் சற்று சுகமானபின்பு வைத்தியனிடத்தில் போவேனென்று சொல்வானா? அப்படிச் சொன்னால் வியாதி நீங்குவதெப்படி? ஆதலால், நீ பாவியாயிருந்தாலும், சற்றுந் தாமதமின்றி நீ இருக்கிற பிரகாரமாய் இயேசுவினிடத்தில் சென்று துதிக்கப்படத்தக்க இயேசுவே! தேவரீருடைய பாதத்தில் சாஷ்டாங்கமாய் விழுந்துகிடக்கும் கோடாகோடி சனங்களுக்குள், நான் ஒரு மகா தோஷியும் நிர்ப்பந்த பாவியுமாயிருக்கிறேன். ஆனாலும், நீர் ஒருதரம், "வருத்தப்பட்டுப் பாரஞ்சுமக்கிறவர்களே! நீங்கள் எல்லாரும் என்னிடத்தில் வாருங்கள், நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன்" (மத். 11. 28.) என்றும், "என்னிடத்தில் வருகிறவனை நான் புறம்பே தள்ளுவதில்லை" (யோவா. 6. 37.) என்றும் திருவுளம்பற்றினீர் என்பதைக் கேள்விப்பட்டிருப்பதினாலே, அதை நம்பி உம்மண்டை வருகிறேன். சமாதான பிரபுவே! மகிமையின் இராஜாவே! நான் ஆக்கினைக்குட்பட்ட நிர்ப்பந்த பாவியாயிருக்கிறேன். நான் என் ஆத்துமாவைக் கெடுத்துப்போட்டேன். நீர் எனக்குத் துணைநின்று இரட்சியாதிருந்தால், நித்திய தண்டனைக்குட்



படுவேனே. நான் உமது கற்பனைகளை மீறி, உமது சினத்துக்கும் ஆக்கினைக்கும் உரியவனானேன். இந்த நேரத்திலும், எனக்கு நேரிடும் நித்திய ஆக்கினைத்தீர்ப்பை நினைக்க நினைக்க நடுக்கம் என்னைப் பிடிக்கின்றது. இப்போது நான் உமக்குத் தொண்டனாகும்படி விரும்பி, என் ஆத்துமாவை உமது திருக்கரத்தில் ஒப்புவிக்கவந்தேன். கர்த்தாவே உமது பாதமே கதியென்று கிடக்கிறேன். நான் பிழைக்கும்படி உமது பொற்செங்கோலை நீட்டவொண்ணாதா? ஐயோ, மதிகெட்ட என் இருதயத்தினால் ஏவப்பட்டு, உலகமாய்கையில் அமிழ்ந்தி, உமது அருளை அவமதித்தேனே. முன் என்னை ஆண்ட சகல தீமைகளையும் வெறுத்து, மனந்திரும்பி, உமக்கே அமைந்து நடக்கும்படி வருகிறேன். ஆகையால், கர்த்தாவே, தேவரீர் என் இருதயமாகிய ஆசனத்தில் நீர் எழுந்தருளி, தீமைசெய்ய ஏவுகிற என் கெட்ட சுபாவத்தை நீர் கீழ்ப்படுத்தி, என் ஜீவகாலமளவும் உமக்கு உண்மையுள்ள தொண்டனாய் ஒழுகும்படி, எனக்குக் கிருபைசெய்தருளும் என்று ஜெபிப்பாயாக.

பிரியசிநேகிதனே, இந்த விண்ணப்பம் சித்தியானால் உனக்கு மகா ஆனந்தமகிழ்ச்சி உண்டாகும். வானோர் யாவரும், அடிபணிந்து பயபக்தியுடனே வணங்கும் மகிமைதங்கிய பூலோக நியாயாதிபதியானவர், சாத்தானானவன் தன் உபாயதந்திரங்களால் உன்னைக் கிறிஸ்துவைவிட்டு நீக்கி, நீ பாவத்துக்கும் உலகத்துக்கும் திரும்பாதபடிக்குத் தமது திருவாக்கை; தமது அளவற்ற இரக்கத்தின்படியே உன் இருதயத்தில் பதிப்பாராக. சாத்தான் உன்னைக் கெடுத்துப்போடாதபடிக்கு, நீதேவனோடே ஒப்புரவாகவும், அவர் உனக்கு இலவசமாய் அருளிய பாவமன்னிப்பையும் இரட்சிப்பையும் அங்கீகரிக்கவும், உன்னை மறுபடியும் மன்றாடுகிறேன். மரணபரியந்தம் நம்மை நேசித்த இரட்சகருடைய திருநாமத்தையும் அன்பையும் முன்னிட்டு, இப்படி உன்னை வேண்டிக்கொள்ளுகிறேன். அவர் தம்மைத் தாமே தாழ்த்தி மனுடனானதையும், நீ நீடூழிகாலமாய் ஐசுவரியவானாயிருக்கும்பொருட்டு அவர் மனதார தரித்திரனானதையும் முன்னிட்டு, இப்படி உன்னை வேண்டிக்கொள்ளுகிறேன். அவர் உன்னிமித்தம் அநுபவித்த வேதனையையும், அவர் தரித்த சிவப்பங்கியையும், பிடித்த நாணல்கோலையும், நாம் மோட்சலோகப் பிரபுக்களோடே உட்காரும்படியாக இராசாதி இராசாவாகிய அவர் அணிந்த முண்முடியையும் முன்னிட்டு, இப்படி உன்னை வேண்டிக்கொள்ளுகிறேன். நம்முடைய பாவச்சுமையை நம்மைவிட்டு நீக்கும்படி வருந்தி இளைத்துச் சுமந்த

பாரச்சிலுவையை முன்னிட்டு இப்படி உன்னை வேண்டிக்கொள்ளுகிறேன். அவருடைய கைகால்களில் இரத்தஞ்சொரிய, நரம்புகள் நாளங்களின் தசைகளைப்பீறின ஆணிகளை நினைத்து, இப்படி உன்னை வேண்டிக்கொள்ளுகிறேன். அவர் சிலுவையில் அறையுண்டு ஆறுமணிநேரம் அநுபவித்த கொடிய மரணவேதனையை முன்னிட்டு, இப்படி உன்னை வேண்டிக்கொள்ளுகிறேன். உனக்காகவும் மற்றும் பாவிகளுக்காகவும், அவர் ஒப்பில்லாத இவ்வளவுபெரியவேதனைகளைச்சகிக்கும்படி திருவுள்ளங்கொண்ட காருண்ணியத்தை முன்னிட்டு, இப்படி உன்னை வேண்டிக்கொள்ளுகிறேன். நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் சுவிசேஷத்துக்குக் கீழ்ப்படியாதவர்களுக்கு நீதியுள்ள ஆக்கினையைச் செலுத்தும்படி வரும்" மகா பெரிய நாளின் சம்பவங்களை முன்னிட்டு, இப்படி உன்னை வேண்டிக்கொள்ளுகிறேன். உன் அருமையான அழிவில்லாத ஆத்துமாவையும் உனக்கு நிச்சயமாக வரும் மரணத்தையும் அல்லது சடுதியிலே மறுமையில் பிரவேசிக்கும் பிரவேசத்தையும் முன்னிட்டு, இப்படி உன்னை வேண்டிக்கொள்ளுகிறேன். மேற்கூறிய எல்லாக் காரியங்களையும் முன்னிட்டு நீ கிறிஸ்துவை நாடிப்பிடித்து, அவர் அருளிய இரட்சிப்பைப் பெற்றுக்கொள்ளும்படி மிகுந்த பிரியத்தோடும் வாஞ்சையோடும் மறுபடியும் உன்னை மன்றாடி வேண்டிக்கொள்ளுகிறேன்.

### மேற்சொல்லிய நியாயங்களை உணர்வோடே கேட்ட பாவி இரட்சிப்பைப் பெறும்படி கிறிஸ்துவை நோக்கிச் செய்யும் விண்ணப்பம்.

கிருபைநிறைந்த மீட்பரே! உம்மை நான் வெகுகாலம் புறக்கணித்திருந்தேனே. அடிக்கடி உமக்கு விரோதமாய்த் தீங்குகளை நடப்பித்தேனே. என் தோஷத்தினாலும் குணப்படாமையினாலும், உம்மை மறுபடி சிலுவையில் அறைந்து அவமானப்படுத்தினேன். ஆனால் இப்போது என் இருதயம் உம்மையே பற்றிக்கொண்டு, உண்மையோடு உமக்கு அடங்குகிறது. கர்த்தாவே! நான் உமக்கு அமைந்து உமது திருவுள்ளத்தை நிறைவேற்றும்படி அபேட்சைகொண்டிருப்பதால், நான் செய்யவேண்டியது இன்னதென்பதை எனக்குக் காண்பித்தருளும்.

துதிக்கப்படத்தக்க இயேசுவே! பாவியாகிய என்னை நீர் ஒரு பொருளாய்க் கருதவேண்டுமோ? உம்மாலன்றி வேறொருவராலும் இரட்சிப்பு கிடையாது என்று கண்டும், கேட்டும், உணர்ந்தும் இருக்கிற அடியேன் கெட்டுப்போன பாவியாயினும் இடைவிடாது உம்மை சேவிக்க உத்தரவு செய்தருளும். "கர்த்தருக்குக் காத்திருக்கிறேன், என் ஆத்துமா ஆண்டவருக்குக் காத்திருக்கிறது; அவருடைய வார்த்தையை நம்பியிருக்கிறேன்" (சங். 130. 5.). என் ஆத்துமா உமது அருளை நம்பி, உம்மைத் துதிக்கிறது. நீடியகாலமாய் என்னைத் தழுவி தாங்கிய சாந்தத்தையும், நான் உமது தாசனாக வாழும்படி அருளின கிருபையையும்நினைத்து, உம்மைஸ்தோத்திரிக்கிறேன். தேவரீர் என் அக்கிரமங்களுக்குத் தக்கதான பலனை நீர் கொடுக்க ஏற்பட்டிருந்தால், வெகுகாலத்துக்குமுன்னே நான் நித்தியவேதனைக்குட்பட்டிருப்பேன்; என் இருதயத்தின் கபடத்தை நீக்கி, என்னை உம்முடன் ஐக்கியமாக்கியருளும். மாமிசத்தினாலும் இரத்தத்தினாலும் உண்டாகும் இன்பங்களும், உலக கண்ணிகளாகிய மாய்கைகளும், கெட்ட தோழருடைய சோதனைகளும், என்னை உமது அன்பைவிட்டுப் பிரித்து, நவமான குற்றத்திலும் கேட்டிலும் அமிழ்த்தாதபடி என்றும் நீங்காக் கட்டினால் என்னை உம்மோடே ஐக்கியப்படுத்தியருளும். இனி நான் எப்பொழுதும் உம்மையே நம்பிப் பற்றி பிடித்துக் கொண்டு, நித்தியஜீவனைப் பெற்று, மோட்சானந்தத்தை அநுபவித்து, நீர் சம்பூரண இரட்சகரென்று உம்மைப் பூரணமாய் அறிந்து நித்திய அநுபோகத்திலே மகிழ்ந்து வாழும்படி உமது அடியானுக்கு நன்மையாகத் துணைநில்லும். ஆமென்.



## 5-ம் அதிகாரம்.

### சுவிசேஷத்தை அங்கீகரியாதவர்களுக்குச் சொல்லும் போதனை.

இந்தப் புஸ்தகத்தை வாசிக்கும் அநேகருடைய இருதயத்தில் கண்டிப்பான வார்த்தைகளாவது, அன்பான வசனமாவது; ஆழமாய்ப் பதியாமலும், பிரயோசனப்படாமலும் போகலாம். அப்படிப்பட்டவர்கள் முன் சொல்லப்பட்டிருக்கிறவைகளை அற்பமாய் எண்ணி, அலட்சியம்பண்ணுவதால், அவர்களை வெறுமையாய் விட்டுவிடுவதே நியாயமாயிருக்கும். ஆனால் அப்படிப்பட்டவர்களை, கைவிடுமுன் அவர்கள்

மனதில் பதியத்தக்கதாய்ச் சில வார்த்தைகளை ஏற்றவகையாய்ச் சொல்லக்கூடுமாகில் எவ்வளவு சந்தோஷமாயிருப்பேன். ஒரு வைத்தியன் தான் நேசிக்கிற ஒரு நோயாளியைச் சுகப்படுத்துவதற்கேற்ற வைத்தியங்களை செய்தும் பலிக்காமல், அவன் பிழைப்பது அரிது என்று திட்டமாய்க் கண்டாலும், பின்னும் கைவிடாமல் சுகமடைவதற்கு ஏதுவான குணம் சற்றேனும் உண்டோ என்று திரும்பத் திரும்பப் பார்ப்பதுபோலவே, நிர்ப்பாக்கியமுள்ள பாவி உன் நெஞ்சில் உறைக்கத்தக்க சில புத்திகளைச் சொல்ல விரும்புகிறேன். முந்தின அதிகாரங்களில் சொல்லப்பட்ட நியாயங்களே தகுமானது என்றிருக்க, அவைகளோடே இன்னமும் சொன்னால் பிரயோசனப்படும் என்று எண்ணுகிறதில்லை. கிறிஸ்துவானவர் தமது சுவிசேஷத்தைப் புறக்கணித்தவர்களைப் பார்த்து "நீங்கள் என்னையும் என் பிதாவையும் கண்டும் பகைத்தும் இருக்கிறீர்கள்" (யோவா. 15. 24.), என்று சொன்னதுபோலவே, உன்னைக்குறித்தும் சொல்ல நியாயமுண்டு. கிறிஸ்துவையும் பிதாவையும் குறித்தும், அவ்விருவருக்கும் நீ செய்யவேண்டிய கடமைகளைக்குறித்தும் உன் பாவதோஷத்தையும், அதினால் வரும் தண்டனையையும், அந்தத் தண்டனையை விலக்குவதற்குரிய வழியையும், ஆத்தும ரட்சிப்பைப் பெறும்படி கைக்கொள்ளவேண்டிய வகையையும் குறித்தும், உனக்குத் தெளிவாய் விவரித்துக் காட்டினேன். நான் பூமியிலே மிகப் பிரீதியாய் நேசிக்கிறவர்களுக்கு, எனது சிறந்த சினேகத்துக்கு அடையாளமாகவும், என் அன்புக்கு அத்தாட்சியாகவும், அவர்களுக்கு உணர்த்துவதுபோல உனக்கும் உணர்த்தினேன். நீயோ சுவிசேஷத்தை மெய்யென்று நம்பியும், அதைப் புறக்கணித்திருக்கிறாய். நான் உன்னிடத்தில் என்னத்தைச் சொல்லுவேன், உன் புத்திமோசத்தால் வரும் முடிவை நீதான் சகிக்கவேண்டும். பார்வோன் ராஜனுக்கு மோசே நியாயங்கள் சொல்லியும், அதைக் கேளாமல், தன் இருதயத்தை உரங்கொள்ளப் பண்ணினபோது, அவன் உள்ளத்திலே உத்தம பயமுண்டாக்கவேண்டும் என்ற நோக்கமாய்க் கடைசியாக அவனை விட்டுப் புறப்பட்டபோது, தேவன் எகிப்துதேசத்தைக் கடந்து தலைச்சன்கள் யாவரையும் கொன்றுபோடுவார் என்று சொன்னபடியே, பாவி நான் உன்னோடும் பேசுகிறேன், நீ கேட்டாலும் கேளாவிட்டாலும் இரண்டொரு காரியத்தை சொல்லவேண்டியவனாயிருக்கிறேன். நீ பாவத்தில் அமிழ்ந்தி சிற்றின்பத்தில் மயங்கி நித்திரைசெய்யாதபடி திகிலைக்கொடுக்கும் இடிமுழக்கம்போல் உன் காதில்



ஏறத்தக்கதாகப் பேசினேனேயானால் எவ்வளவு நன்மையாயிருக்கும். பாவியே உன் பெலன் கற்களின் பெலனோ? உன் மாம்சம் வெண்கலமோ? (யோபு. 6. 12.) மற்றவர்களைப்போல நீயும் வியாதிப்படுவாய், சாவின் மஞ்சத்தில் நீ புரண்டு புரண்டு விழுகையில் உன் ஆவி கலங்குமே. அந்த அவஸ்தையில் என்ன செய்யப்போகிறாய். கிறிஸ்துவையும் அவருடைய சுவிசேஷத்தையும் அவமதித்துப் புறக்கணித்த நீ, அப்போது மனம் பதைக்க அச்சங்கொண்டு இரட்சிப்பைப் பெறுவதற்கு என்ன செய்வேன் என்று அங்கலாய்ப்பாயே, அல்லது சீக்கிரம் சுகப்படுவேன்; சுகப்பட்டபின் புண்ணியங்களைச் செய்து, கரையேறுவேன் என்று வீணெண்ணங்கொண்டு, உன் உள்ளத்தை நீ வஞ்சித்துப்போடலாம். உன் பிரியமான சினேகிதர்களும் வைத்தியர்களும் உன் ஆத்துமாவுக்குக் கேட்டை விளைவிக்கும் பொருட்டு, சாத்தானோடு உடன்படிக்கை பண்ணினவர்களாய் உன் வீண் எண்ணத்திலே உன்னை உரங்கொள்ளப் பண்ணுவார்கள்.

எரிகிற அக்கினியினது ஒரு கொள்ளியை எடுக்கிறாப்போல, தேவன் தமது அற்புதகாருண்ணியத்தால் பாவத்தினின்று உன்னை மீட்டு ரட்சியாதிருந்தால், மேற்சொல்லிய பயங்கரமான சங்கதிகள் அனைத்தும் தப்பாமல் கடைசியில் உனக்கு நேரிட்டே தீரும். அப்போது உன் உள்ளத்தில் உண்டாகும் துக்கங்களை அளவிட்டுச்சொல்ல யாராலாகும். அல்லது அவைகள் இவ்வளவாயிருக்குமென்று கிரகிக்கத்தக்கவன் யார். அவைகள் மனிதத் தோற்றத்துக்கு மிஞ்சினவைகளாயிருக்குமே? பாதகா! நீ மரித்தபின், உன் சினேகிதர் உன் பிரேதத்தை அடக்கம்பண்ணும்போது, உன் ஆத்துமா யாருடைய கையில் விழும்? தேவன் தமது உருக்க இரக்கத்தினாலும் காருண்ணியத்தினாலும் அருளின சுவிசேஷத்தை நீ அங்கீகரியாமல் தள்ளினதினால், உன் ஆத்துமா அவரால் புறக்கணிக்கப்படும். நீ கிறிஸ்துவை அவமதித்து, அவரை ஏற்றுக்கொள்ளாததினால் கொடிய இருளிலே தள்ளப்பட்டு, கிடுகிடு நரகத்தில் விழுந்து, கன்னங்கறேரென பிசாசுகள் வசம் ஒப்புவிக்கப்பட்டு, நித்திய தண்டனையை அனுபவிப்பாய் என்பது உனக்கு விளங்கும். அன்றியும், நீ தேவன் அருளின ஆத்தும ரட்சிப்பை வேண்டாம் என்று, அவமதித்ததைக்கொண்டு, சகல ஆத்துமாக்களுக்கும் இயேசு மகத்துவமுள்ள நியாயாதிபதியாய் விளங்கும்நாளில் மகா மகிமையோடு நியாயாசனத்தில் வீற்றிருந்து, தமது நீதியுள்ள உக்கிரகோபத்திலே உன்னை நித்திய அக்கினியிலே போடும்படி தள்ளிவிடும்

போது, மனந்திரும்பாதவர்களுக்கு நேரிடும் வியாகுலம் இன்ன பிரகாரமாயிருக்குமென்று உனக்குத் தெரியவரும்.

கடைசியிலே, பாவிகளுக்கு நேரிடும் தண்டனை இதுவென்பது சத்தியமாயினும், அவன் உயிரோடிருக்கும்பொழுது, தப்ப வகைதேடிக்கொள்ளலாம். நான் உன் அருமையான ஆத்துமாவை நேசிக்கிறதினால், சடுதியாய் உன்னை விட்டுப்போக மனமற்றிருக்கிறேன். ஐயோ உன் மனம் பாவத்தினாலே இருண்டுபோயிருப்பதினால், என்னை உன் சத்துருவாக எண்ணுகிறாய். நானோ உன் மித்துருவாயிருக்கிறேன். ஆதலால், என்னால் இயன்றமட்டும், எவ்வகையிலும் உனக்கு நன்மை செய்யவேண்டும் என்று கருதி முயற்சி செய்யவேண்டியவனாயிருக்கிறேன். நீ செய்துவரும்படி ஒரு தியானத்தை அல்லது ஜெபத்தை உனக்குக் காட்டித் தரலாம். அதினாலும் ஒரு லாபமும் இல்லையே. ஏனெனில், நீ தியானிக்கவுமாட்டாய், செபிக்கவும்மாட்டாய், ஆகையால், உன்பேரில் பரிதாபங்கொண்டு கடவுளை நோக்கி நிர்ப்பந்த பாவியாகிய உன்னிமித்தம் ஒரு பிரார்த்தனையைச் செய்கிறேன்.

### மேற்சொல்லிய போதனையைக் கேட்டும் மனம் திரும்பாத பாவியினிமித்தம் செய்யும் பிரார்த்தனை.

சர்வவல்லமையுள்ள தேவனே, சகலமும் உம்மாலாகும்; நித்திய சுவிசேஷத்தை அங்கீகரியாமல், தன்னை இருதயக்கடினத்துக்கு ஒப்புக்கொடுத்துப் பாவத்தை மேன்மேலும் செய்து, கெட்டுக் கேதுவாயிருக்கிற இந்த ஆத்துமாவினிமித்தம் உம்மைப் பிரார்த்திக்கிறேன். துதிக்கப்படத்தக்க தேவனே, உமது திருவாக்கைப் பயபக்தியோடு தெளிவாய்த் தெரியக்காட்டினேன் என்பதற்கு நீரே சாட்சி. ஆதலால் துஷ்டனாகிய இவன் தன் பாவவழியை விட்டுத் திரும்பும்படி பரிதாபத்தோடு தெளிவாய் எச்சரிக்கப்பட்டும், தன் அக்கிரமத்தில் மரித்தானானால், அவன் இரத்தப்பழியை என்னிடத்தில் கேளாதிருக்கத்தக்கதாய் இதை உமது ஞாபக புஸ்தகத்தில் பதித்தருள உம்மை வேண்டுகிறேன்.

இரக்கம் நிறைந்த ஆண்டவரே, இவன் தன் இருதயத்தைக் கடினப்படுத்திக் குணப்படாதவனாயிருந்தாலும், இவனைப் பாவத்தினின்று விடுவித்து குணப்படுத்தும்படி, உமது சுயாதிபத்திய வல்லமையினால், உமது காருண்யத்தை இவனில்



விளக்கிப் பலிதப்படுத்தியருளும். உமது அளவற்ற ஞானத்தினாலும் அன்பினாலும், இப்பாவி நித்திய மரணத்தினின்று இரட்சிக்கப்படும்படி ஓர் வகையை இவனுக்குக் காட்டியருளும். அப்படி செய்ய உமது திருவுள்ளத்துக்குப் பிரியமானால், அதை உடனே செய்தருளும். மரணம் சமீபமாயிருப்பதால், இவனுக்கு ஏதாவது செய்யவேண்டுமென்றால், அதை உடனே செய்யவேண்டுமென்பதை நீர் அறிவீர். ஆதலால், உமக்குச் சித்தமானால், இந்த க்ஷணமே இவனை ஆசீர்வதித்தருளும். கர்த்தாவே உமது அளவற்ற ஞானத்தின்படியே, இவனை இரட்சித்து, அதினால் உமது நாமமும் காருண்ய மகிமையும் உலகத்தில் நிலை பெற்று விளங்கும்படி அருள் செய்யும். நான் உம்முடைய சித்தத்திற்கு இசைந்து, உம்மை வணங்கி, இந்தப் பாவியை இரட்சித்தருளவேண்டுமென்று உம்மை மன்றாடுகிறேன். நான் செய்யும் முயற்சியை, இவனும் இன்னும் சிலரும் புறக்கணித்துத் தள்ளித் தங்களுக்கு அதிக ஆக்கினையை வருவித்துக்கொண்டாலும் மற்றவர்கள் இதைக் கவனித்துப் பிழைக்கும்படி தயவு செய்தருளும். ஆமென்.

## 6-ம் அதிகாரம்.

### தன் பாவத்தின் மிகுதியினால் இரட்சிப்பைப் பெறும்படி கிறிஸ்துவைச் சேருவதற்கு அஞ்சிநிற்கும் ஆத்துமாவுக்குச் சொல்லும் போதனை.

இனி நான் சுவிசேஷத்தைப் புறக்கணிக்கும் மகா பாதகர்களை விட்டுவிட்டு, நான் சொல்லுவதை மனப்பூர்வமாய்க் கேட்க விரும்புகிறவர்களுக்குப் போதிக்க விரும்புகிறேன். தாங்கள் செய்த பாவத்தை உணர்ந்து, பரிதபிப்போர் "நான் கேட்டது போதும், மனவிசாரங்கள் என்னில் பெருகி, என்னை உபாதியாதபடி மேன்மேலும் எனக்குச் சொல்லவேண்டாம். என் அக்கிரமங்கள் வானபரியந்தம் எட்டியிருக்கிறது; என்னைப்போல பெரிய பாவியுண்டோ? நான் அநேக நன்மைகளைப் பெற்றும், பற்பல சலாக்கியங்களை அநுபவித்தும், சுவிசேஷத்தை அங்கீகரிக்கும்படி சொல்லப்பட்ட போதனை[illegible] கேட்டும், இன்னமும் மனந்திரும்பாமல் என் இரு[illegible] கடினப்படுத்தி தேவகோபத்தை மூட்டிவிட்டேன்.

கிருபை அடைவதெப்படி? சர்த்தருடைய சன்னிதானத்திலே நான் என் தலையை நிமிர்த்துவது எப்படி? நான் வெகுகாலம் பாவஞ்செய்தும், இன்னமும் என்னை நரகத்துக்குட்படுத்தாமல் என்னை ஆதரித்துவந்திருப்பது பெரிய ஆச்சரியமே; நான் அவருக்குச் செய்த துரோகத்தை நினைக்கும்போது, அவர் என் மேல் அன்புகூர்ந்து, என்னைத் தமக்கு அடியானாக்கிக்கொள்வார் என்று எண்ண நான் எம்மாத்திரம்? இப்படி அவர் எனக்குத் தயை செய்ய நான் யார்?" என்று இப்படிச் சொல்லவுங்கூடும்.

இதை வாசிக்கிறவனே! உன் சிந்தனையும் இப்படியிருக்குமாகில், நீ ஒன்றுக்கும் அஞ்சவேண்டியதில்லை. இப்படித் துக்கித்துப் பிரலாபித்தவர்கள் அநேகர், ஸ்திரமடைந்து ஆனந்தமும் பிரயோசனமுமுள்ள உத்தம கிறிஸ்தவர்களாகியிருக்கிறார்கள். தெய்வ கடாக்ஷத்தினாலே நீயும் அவர்களில் ஒருவனைப்போலாகி, கடைசியாய் நம்பிக்கையோடு அவருடைய பரிசுத்த ஆலயத்துக்கு நேராக உன் கண்களை ஏறெடுத்து, அவர் சமுகம் கண்டு பரவசம் கொள்ளலாம்.

நீ கிலேசப்பட்டவனாய் இருந்தாலும், கிறிஸ்துநாதர் உன்னை இரட்சிக்க வல்லவர் என்று எண்ணுகிறாயா? அவர் தமதுமூலமாய்த் தேவனண்டைக்கு வருகிறவர்களை முற்றுமுடிய இரட்சிக்க வல்லமையில் குன்றினவரா? அவர் வல்லவர், என்பது மெய்; ஆகிலும் என்னைப்போலுள்ள பாதகனை இரட்சிப்பாரென்று நான் நம்புவது எப்படி? என்று ஒருவேளை நீ சொல்லுவாய். அவர் உன்னை இரட்சியாரென்று உனக்கு எப்படித் தெரியும்; அவர் தம்மண்டைக்கு வந்த மகா பெரிய பாவிகளுக்கும் சகாயஞ்செய்து, அவர்களுக்குக் கிருபையையும் இரட்சிப்பையும் அநுக்கிரகித்திருக்கிறார். அவர் அவர்களைப் பார்த்து, "வருத்தப்பட்டுப் பாரஞ் சுமக்கிறவர்களே, நீங்கள் எல்லாரும் என்னிடத்தில் வாருங்கள்; நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன்" என்றும், "ஒருவன் தாகமாயிருந்தால், என்னிடத்தில் வந்து பானம்பண்ணக்கடவன்; விருப்பமுள்ளவன் ஜீவதண்ணீரை இலவசமாய் வாங்கிக்கொள்ளக்கடவன்" என்றும் யாவரையும் நேசபாசமாய் அழைக்கிறார்.

அப்படியிருக்க, நீ அவரண்டைக்குப் போக என் பயப்படவேண்டும்? நீ யாருக்கு அஞ்சவேண்டும்? யாரண்டைக்குச் செல்ல நீ நடுங்குகிறாய்? அவர் உன் பாவம் நிவாரணமாகும்படி வதைக்கப்பட்ட ஆட்டுக்குட்டியாகிய மீட்பர் அல்லவோ? அவர் உன்னை அழைக்கிறார். பாவச்சுமையினால் இளைத்துப்போன உன் ஆத்துமாவை அவர் திருவடியில் படைப்



பாயாகில், அதை அவர் தாம் இரத்தம் சிந்தி, பிராணத்தியாகம் பண்ணி, மீட்டுக்கொண்ட பொருளாக ஏற்றுக்கொள்ளுவார். நீ உடனே தீவரித்து, அவரே கதியென்று அடைந்து, அவர் பாதத்தில் வீழ்ந்து வணங்கி, உன் நிர்ப்பந்தத்தை எடுத்துச் சொல்லி, பாவம் பெருகின இடத்திலே கிருபை அதிகமாய்ப் பெருகியிருப்பதால் உனக்கு இரட்சிப்புக் கிடைக்கும் என்று உறுதியாய் நம்பி அவரை மன்றாடிக்கொள்ளலாம்.

---

## மேற்சொல்லிய ஆறுதலான போதனைகளைக் கேட்டு பாவமன்னிப்பைப் பெறும்படி கிறிஸ்துவைச் சேரும் ஆத்துமா தியானம்பண்ணிச் சொல்லும் ஜெபம்.

---

என் ஆத்துமாவே! நீ கேட்டவைகளைக்குறித்து என்ன நினைக்கிறாய்? கிறிஸ்து உன்னை இரட்சிப்பாரென்று சொல்ல இடமில்லையா? வேறெந்த வகையினாலும் உனக்கு சகாயம் கிடைக்குமா? நாம் இரட்சிக்கப்படுவதற்கு வானத்தின் கீழெங்கும் வேறே நாமம் கட்டளையிடப்பட்டிருக்கிறதா? அப்படிக் இல்லை. இஸ்ரவேலரிடத்திலுள்ள குஷ்டரோகிகள் சொன்னதுபோல நான் இங்கே இருந்தாலும் சாவேன். சுகப்படும்படி நான் செய்யும் விண்ணப்பம் வீணாய் முடிந்தாலும், நான் மடியவேண்டியதேயொழிய வேறல்ல. ஒருவேளை அவர் என் ஆத்துமாவை கரையேற்றும்படி அருள்செய்யவும் அவரால் ஆகும். நான் நிர்ப்பந்த பாவியாயிருந்தாலும், அவர் எங்கும் இருக்கிறவராகையால், இட்சணமே நான் அவர் சமுகத்தில் முகங்குப்புற விழுந்து விசுவாசத்தோடே விண்ணப்பம் பண்ணுவேன்.

துதிக்கப்படத்தக்க இயேசுவே, அடியேன் மகா நீசனானாலும் பாவிகளாகிய உலோகத்தார்மேலே தேவரீர் விளங்கிய கருணையை நினைத்துத் தைரியங்கொண்டு, உமது சமுகத்தை அண்டுகிறேன். நான் செய்திருக்கிற பாவத்திற்கும் மதியீனத்திற்கும் அளவில்லை. என்றாலும் அவைகள் உமது கிருபைக்கும், நீர் இரத்தம் சிந்தி சம்பாதித்த புண்ணியத்திற்கும் மிஞ்சினதல்லவே. ஆதலால், உம்மைக் கிட்டிச்சேர அச்ச[illegible]ரோசமும் உள்ளவனாயிருந்தாலும், உமது பாதமே கதி[illegible] அடைந்து உம்மை நமஸ்கரிக்கிறேன். [illegible] உமக்குச் சித்தமானால், என்னை இரட்சியும்; [illegible]இருந்தாலும்,

நான் உமது திருவடியில் விழுந்து, நீதியாய் நீர் செலுத்தும் தண்டனைக்குட்பட்டு மரிப்பேன். நான் செய்த சகல பாவங்களும் மதியீனமும் உமக்கு நன்றாய்த் தெரியும். அவைகளை உமக்கு முன்பாக மறைப்பதும் என்றால் கூடாதே. நான் குற்றவாளியே, என்னைப்போன்ற பாவிகள் அநேகர் சம்பூரண மன்னிப்படைந்து, தாங்கள் எண்ணினதற்கு அதிகமாய் உம்மிடத்தில் தயைபெற்றிருக்கிறார்களே. காருண்ணிய கடவுளே, என்பேரிலும் இரங்கும், என் ஜீவன் உமது பார்வைக்கு அருமையாயிருப்பதாக; என்மேல் இரக்கம் வையும்; என் ஆத்துமா நித்திய நரகவேதனையை அநுபவிக்க விடாதேயும். ஆண்டவரே, உமது ஆவியானவரைக்கொண்டு என்னோடே பேசும். என் பயங்களை என்னைவிட்டு அகற்றியருளும். நீர் பூமியிலே நடமாடினகாலத்தில், உம்மண்டைக்கு வந்த ஒரு பாவியைப் பார்த்து, "உன் பாவங்கள் மன்னிக்கப்பட்டது, சமாதானத்தோடே போ," என்று திருவாய் மலர்ந்தருளிச் செய்தீரே; எனக்கும் அப்படிப்பட்ட ஆசீர்வாதத்தை அருளிச்செய்யும். நாஜீவ காருண்ணியரே, தயாபரரே, என்னை இரக்கமாய்க் கடாட்சித்தருளும். ஆமென்.

## 7-ம் அதிகாரம்.

### மெய் மனஸ்தாபமும் மெய் விசுவாசமும் உண்டோ இல்லையோ என்று விசாரப்படும் ஆத்துமாவின் சமுசயத்தை நீக்கும் போதனை.

மேலே சொல்லப்பட்ட பயங்கரமான ஆத்தும விஷயங்களைக் கேட்ட நீ மனதிலே விசாரங்களை உடையவனாயிருக்கிறாய் என்று நம்புகிறேன். ஆனால் சிலர், அதினால் தாங்கள் மெய்க்கிறிஸ்தவர்களென்று எண்ணி மோசம்போவதுண்டு. நீயும் ஒருவேளை அப்படிப்பட்டவர்களில் ஒருவனாயிருக்கலாம். ஆதலால், நீ இப்படி மோசம்போகாதபடி உன் நிலைமையை நீ நன்றாய் ஆராய்ந்து சோதித்துப் பார்ப்பது நலம். [illegible] மகா அவசியமாய் இருக்கிறது. ஏனெனில், சிலர் மரணம் [illegible]பித்திருக்கிறதென்று அஞ்சி, பாவத்தைப்பற்றி மனதில் உண்டாகிய ஓர் எழுச்சியினாலே பாவத்தை வெறுத்துத் தாங்கள் உத்தம கிறிஸ்தவர்கள் என்று சொல்லி, கிறிஸ்து தங்



கள் பாகம் என்றும், தேவன் தங்களைத் தெரிந்துகொண்டிருக்கிறார் என்றும் எண்ணுவதுண்டு. ஆனால் கற்பாறையில் விழுந்த வித்து முளைத்தாலும் ஆழமான மண் இல்லாததால் வெயில் எறும்போது பட்டுப்போவதுபோல சிலர் சந்தோஷத்துடன் வேதவசனத்தை அங்கீகரித்தாலும், அவ்வசனத்தினிமித்தம் உபத்திரவமும் துன்பமும் உண்டாயிருக்கும்போது, அவர்கள் தவறிப்போவதுண்டு. ஆதலால் நீ உன்னையே வஞ்சியாதபடி உன் நிலைமையைப்பற்றி, நீ சரியான அறிவு உடையவனாய் இருக்கும்பொருட்டு, சில கேள்விகளை உன்னிடத்தில் கேட்கிறேன்; பாவத்தைப்பற்றியும் கிறிஸ்துவைப்பற்றியும் முன் உனக்கிருந்த எண்ணம் என்ன? இப்போதிருக்கிற எண்ணம் என்ன?

நீ செல்லுகிற வழி மோட்சத்தைப்பற்றியோ அல்லவோ என்றும் உன் மனநிலை இன்னதென்றும் அறியும்படி சில காரியங்களை உன்னிடத்தில் கேட்கிறேன்; பாவத்தைப்பற்றி உனக்கு முன் இருந்த எண்ணம் என்ன இப்போதிருக்கிற எண்ணம் என்ன? முன்னே நீ அதின்மேல் பிரியப்பட்டு அதை திருப்தியோடே நடப்பித்துவந்தாய்; இப்போது அந்தப் பாவம் கடிக்கிற பாம்பைப்போலவும், நீண்டுகிற விரியனைப் போலவும் இருக்கிறதென்பதை உணர்ந்திருக்கிறாயா? முன் பாவம் செய்ய ஆவாவுகொண்ட நீ, இப்போது அதை மிகவும் வெறுக்கிறாய்; அது நல்ல காரியம்; இந்த வெறுப்பு எப்படி உனக்கு உண்டாயிற்று. தூக்குமரத்துக்குத் தீர்ப்புப்பெற்ற குற்றவாளி தனக்கு வரும் மரணத்துக்கு அஞ்சி, தன் குற்றத்தை வெறுத்தாலும் அத்தண்டனைக்குத் தப்பினபின்பு, முந்தின பயமும் வெறுப்பும் இல்லாதபடி ஒழிந்துபோம். அதுபோலவா உன் பயமும் வெறுப்பும் இருக்கிறது? நீ தானே உன் ஆத்துமாவை ஆக்கினைக்கும் கேட்டுக்கும் ஏதுவாக்கினதை நினைத்து விசனப்படாயோ? நீ செய்த பாவம் தேவனுக்கு விரோதமான கொடிய துரோகம் என்று உணர்ந்தாயோ? இனி ஒருபோதும் அப்படிப்பட்ட துற்செய்கைகளைச் செய்யேன் என்று நீ பண்ணியிருக்கிற தீர்மானத்தை உன் சுயபலத்தை நம்பியோ, தெய்வபலத்தை நம்பியோ செய்திருக்கிறாய்; அத்தீர்மானம் உறுதியாய் நிலைகொண்டிருக்கிறதா? இனிப் பாவத்துக்கு விரோதமாய்ப் போராடுவேன் என்று நீ சொன்னபோது, ஒவ்வொரு பாவத்துக்கும் விரோதமாய் அப்படிச் செய்யப்போகிறாயா? பாவத்தை அடக்கி அழிக்கும்படி, முயற்சி செய்கிறாயா? மனந்திரும்புதலுக்கேற்ற கனிகளைக் கொடுக்கிறாயோ? [illegible] பாவத்தினிமித்தம் துக்கப்பட்டு, கண்ணீர் விட்டால் [illegible]

யோ? நீ தீமைசெய்வதை விட்டு நன்மை செய்ய படித்திருக்கிறாயோ? தங்களுக்குத் தீமையை விளைவிக்கும் காரியத்திற்கு எச்சரிக்கையாய் இருக்கிறதுபோல, நீயும் உன்னை மோசப்படுத்தின காரியங்களில் அகப்படாதபடி விழித்துக்கொண்டிருக்கிறாயோ? உன்னைச் சுற்றியிருக்கிறவர்களுக்கு நீ வெகு எச்சரிக்கையாய் இருக்கிறாயோ? கிறிஸ்தவர்களுக்கு முன் வைக்கப்பட்டிருக்கிற ஓட்டத்தில் ஓடும்படி பாவத்தைத் தள்ளி இனி அவைகளில் அகப்படாதபடி தீர்மானித்திருக்கிறாயோ?

"என்னை நோக்கிப்பாருங்கள், அப்பொழுது ரட்சிக்கப்படுவீர்கள்" என்றும்; "நான் பூமியிலிருந்து உயர்த்தப்பட்டிருக்கும்போது, எல்லாரையும் இழுத்துக்கொள்வேன்" என்றும் (யோவா. 12. 32.); நம்முடைய ஆண்டவர் சொல்லியிருக்கிறார். அவரே உன் ரட்சகர் என்று அவரை நோக்கியிருக்கிறாயோ? அவர் மரணமடைந்து வெளிப்படுத்தின அன்பினால், நீ அவரண்டைக்கு இழுக்கப்பட்டிருக்கிறாயா? நீ இளைப்பாறுதல் அடையும்படி; வருத்தப்பட்டு பாரம் சுமந்து தவித்தவனாய் அவரண்டைக்கு வருகிறது இன்னதென்று அறிந்திருக்கிறாயா? மனித குமாரனுடைய மாமிசத்தையும் ரத்தத்தையும் பானம் பண்ணுவது இன்னதென்று உனக்கு விளங்கியிருக்கிறதா? தேகத்தைப் பிழைப்பூட்டும்படி ஆகாரத்தை உட்கொள்ளுவது போல, ஆத்துமாவைப் பிழைப்பூட்டும்பொருட்டுச் சிலுவையில் அறையப்பட்ட இயேசுவை விசுவாசத்துடன் உட்கொண்டிருக்கிறாயா? அவர் தமது அன்பினால் ஓடி கண்டுபிடித்த பொருளாகிய உன் ஆத்துமாவை அவருக்கு மனப்பூர்வமாய் ஒப்படைத்திருக்கிறாயா? அழியாத உன் ஆத்துமாவை சுத்திகரிக்கவும் ரட்சிக்கவும் தக்கதாக அதை அவருக்கு ஒப்புக்கொடுத்திருக்கிறாயா? அப்படியாகில் நீ இருளின் அதிகாரத்தினின்று விடுதலையாகி, தேவனுடைய குமாரனின் ராஜ்யத்திற் குட்பட்டிருக்கிறாய் என்று உன்னை வாழ்த்துகிறேன். உன் பாவங்கள் மன்னிக்கப்பட்டன; நீ ஆறுதலடைந்து சமாதானத்துடன் போ, என்று உனக்குத் திருவுளம்பற்றிய கர்த்தாவின் நாமத்தினால் உனக்கு மங்கலமென்று சொல்லுகிறேன்.

மேற்சொல்லிய அநுபவமும் நற்குணமும் உனக்கு இல்லாதிருந்தால், நீ குணப்படாத அவிசுவாசியாய் இருக்கிறாய். தேவனுடைய கோபம் உன்மேல் நிலைத்திருக்கும் (யோவா. 3. 36.). இவ்வேளைகளில் மனம் திகைத்து அஞ்சி, இனி சன்மார்க்கனாய் நடப்பேன் என்று தீர்மானித்து, நற்காரியங்களைச் செய்து, நற்குணமுள்ளவனாய் நடந்தாலும், உனக்கு ஆறுதல்



கிடையாது. நீ செய்திருக்கிற பாவங்களினிமித்தம், தேவ சந்நிதானத்திலே உத்தமமனதோடு தாழ்ந்து பணிந்து, அவருடைய திருவுள்ளத்திற்கு இசையாத துர்க்கிரியைகளுக்கு விலகி, கிறிஸ்துவின்மூலமாய் ரட்சிப்பைப் பெற்றுக்கொள்ளாவிட்டால், கேடுதப்பாமல் வரும் என்று உணர்ந்துகொள். நீ அவனுடன் சிலுவையைச் சேர்ந்து அவருடைய வசத்தில் உன் ஆத்துமாவை விசுவாசத்தினால் ஒப்புக்கொடுத்து, ஒவ்வொருநாளும் ஒவ்வொருகாரியத்திலும் மெய்த்தொண்டனாய் நடந்து, உன்னை அப்பிரயோசனமான ஊழியக்காரன் என்று உணர்ந்தாலும், அவருடைய பிராயச்சித்த புண்ணியங்களினால் தேவகிருபையின் ஐசுவரியத்தினாலன்றி, வேறே எந்த வகையிலும் உனக்கு பாவ மன்னிப்புக் கிடையாது. உன் நம்பிக்கைகளெல்லாம் வீணாக முடியும்; நீ மணலின்மேல் வீடுகட்டும் புத்தியீனனுக்கு ஒப்பாயிருக்கிறாய். நீ கட்டின வீட்டை இடித்துப் புதிதாய் அஸ்திபாரம் போட்டு, அதன்மேல் கட்டாதிருப்பாயானால் வெள்ளத்தினாலே உன் வீடு மோதப்பட்டு விழ, நீ நித்தியநாசத்துக்குள்ளாவாய்.

---

### தனக்குக் குணப்படுதலும் விசுவாசமும் உண்டோ இல்லையோ என்று கர்த்தர் சோதிக்கும்படி அவரை நோக்கிப் பண்ணும் விண்ணப்பம்.

---

"கர்த்தராகிய தேவனே! நீர் மனுப்புத்திரருடைய இருதயத்தை ஆராய்கிறவரும், உள்ளிந்திரியங்களை சோதிக்கிறவருமாயிருக்கிறீர்." "தேவனே, என்னை ஆராய்ந்து என் இருதயத்தை அறிந்துகொள்ளும்; என்னைச் சோதித்து என் சிந்தனைகளை அறிந்துகொள்ளும்; வேதனை உண்டாக்கும்வழி என்னிடத்திலுண்டோ என்று பார்த்து, நித்தியவழியிலே என்னை நடத்தும்." கர்த்தாவே எனக்குக் குணப்படுதலும், விசுவாசமும் முன் சொல்லிய பிரகாரமாய் இருக்கும்படி அபேட்சிக்கிறேன் என்பதற்கு என துள்ளமே உமது சந்நிதானத்தில் சாட்சியிடுகிறது. ஆதலால் துதிக்கப்படத்தக்க பரிசுத்த ஆவியே, சகல கிருபைக்கும், ஆறுதலுக்கும் காரணரே, இவ்வித குணங்கள் என் ஆத்துமாவில் உண்டாயிருக்கும்படி பூரணமான கிரியையை நடப்பித்தருளும். நான் பாவத்தை முழுவதுமாய் வெறுக்கும்படி அதின் தோஷத்தை எனக்கு வெளிப்படுத்தியருளும். மகா தேவனுடைய மகத்துவத்தையும் இரக்கத்தையும் நான் கண்டு அஞ்சவும், மனம் உருகவும், அருள் செய்யும். [illegible]

பாவத்தையும் நீதியையும் நியாயத்தீர்ப்பையுங்குறித்து என்னைக் கண்டித்து, உணர்த்தியருளும். நான் எனக்கு மோசத்தை வருவித்துக் கொண்டேன் என்பதையும், எனக்குச் சகாயம்தேவனிடத்தில்மாத்திரம் உண்டு என்பதையும், எனக்குக் காட்டியருளும். பாவிகளுக்காகச் சிலுவையில் அறையப்பட்ட இயேசுவை நோக்கவும் அவரையே நம்பி பற்றிக்கொள்ளவும் கிருபைபுரியும். நான் பாவத்துக்குப் பயந்து இயேசுகிறிஸ்து ஒருவருக்கே பிழைத்திருக்கும்படி, என் இருதயம் அவருடைய அன்பினால் மேற்கொள்ளப்படவும்; அந்த அன்பை உணரவும் அருள் செய்யும். அவர் சாயலை என்னில் ஸ்தாபித்தருளும். நான் அவருடைய கட்டளை பிரமாணங்களின்படி நடக்கவும், அவருக்கே ஊழியஞ்செய்யவும் என்னை நடத்தியருளும். நான் இப்பொழுதும் எப்பொழுதும் சதாகாலத்திலும் அவர் கிருபை காட்டிய ஜெயஸ்தம்பமாய் இருக்க அநுக்கிரகஞ்செய்யும்.

சர்வஜீவ தயாபர கர்த்தாவே, நான் உத்தம கிறிஸ்தவனாகாதபடி என்னில் தடைகள் உண்டானால் அவைகளை எனக்குத் தெரியக்காட்டி, அந்தத் தடைகள் நீங்க என்னில் கிருபை செய்தருளும். பரமபிதாவே சுவிகாரத்தினால் என்னை உம்முடைய பிள்ளையாக்கி, உமது ஆவியின் வரங்களால் என்னை நிரப்பி, அலங்கரித்தருளும். உமது நேசகுமாரனின் பூரண சாயலை என்னில் உண்டுபண்ணி, நான் நித்திய மோட்ச மகிமையை அடைய பக்குவப்படும்படி உமது காருண்ணிய கிரியையை என்னில் நடப்பித்தருளும். ஆமென்.

## 8-ம் அதிகாரம்.

**தன்னையும், தானடையவேண்டிய தேர்ச்சியையும் அறியும்பொருட்டு, மெய்க்கிறிஸ்தவனுக்குரிய பற்பல லக்ஷணங்களை காட்டுகிற போதனை.**

இரட்சிப்பைப் பெறும்வழி இன்னதென்றும், மெய்க்கிறிஸ்தவனுக்குரிய இலக்ஷணம் இன்னதென்றும், என்னால் இயன்றமட்டும் தெரிவித்திருக்கிறேன். இப்போது நீ எப்படிப்பட்டவனாயிருக்கவேண்டியது என்பதை நிதானித்து அறியும்படி, பலகாரியங்களை உனக்கு விளக்கிக்காட்டுவேன். இன்னும் நீ குணப்படாதிருந்தால், நான் சொல்லும் போதனையி



னால் உணர்ச்சியடையவும்; தேவகிருபையினால் மெய்பக்திமானாயிருந்தால், நீ அதில் விருத்தியடையவும் உனக்குத் தெரிவிப்பேன். பரிசுத்தவான்களுக்குரிய நற்குண நல்லொழுக்கங்கள் இன்னவை என்று நான் காட்டுகையில், அந்த நற்குண நல்லொழுக்கம் உனக்குக் கிடைத்திருக்கிறதென்று சொல்லக்கூடுமாகில் நீ மகா பாக்கியவான்.

நீ உத்தம கிறிஸ்தவனாகில், உன் உள்ளத்தில் புதிதான ஆவியுள்ளவனாய் மறுபடியும் பிறந்திருப்பாய். ஏனென்றால், ஒருவன் மறுபடியும் பிறவாவிட்டால், தேவனுடைய ராஜ்யத்தைக் காணமாட்டான் (யோவா. 3. 3.) என்று எழுதியிருக்கிறது. சில துர்ச்செய்கைகளைமாத்திரம் விட்டுவிட்டு சில முக்கியமான நன்மைகளைமாத்திரம் செய்ய முயற்சிப்பது போதாது. உன் இருதயம் முழுவதும் இந்தவிதமாய் மாறுதலடையவேண்டும். கிறிஸ்துமார்க்கமானது வெறும் ஆசாரமல்ல. அதை அநுசரிக்கிறவர்கள் நீதியிலும், மெய்யான பரிசுத்தத்திலும் தேவனுடைய சாயலாகச் சிருஷ்டிக்கப்பட்ட நவமான மனிதனைத்தரித்துக்கொண்டவர்களாய் இருக்கவேண்டும். நீயும் பூரண சற்குணமும் பரிசுத்தமும், நீதியும், தயையும், உண்மையும் உள்ளவனாக கிறிஸ்துவின் சாயலை அணிந்துகொண்டால் கிருபாபாத்திரமாயிருப்பாய்.

இன்னும், சகல சற்குணங்களுக்கும் ஆதாரமும், தம்மைப் பின்பற்றுகிற யாவருக்கும் சிறந்த முன்மாதிரியுமாயிருக்கிற தேவகுமாரனான இயேசுவிலிருந்த சிந்தை உன்னிலும் உண்டோ என்பதைப் பரிசோதிப்பாயாக (பிலி. 2. 5.). சுவிசேஷங்களில் தெளிவாய்க் காட்டப்பட்டிருக்கிறபடி, கிறிஸ்துநாதருடைய ஜீவியத்தையும், குணத்தையும், பார்த்துணர்ந்து, அவைகள் உன்னிலே உண்டோ என்று பரீட்சிப்பாயாக. அவரைப்போல நீயும், தேவனுக்கு அமைந்து பத்தியோடு அவரை நேசித்துவருகிறாயா? அவரைப்போல நீயும் மனிதர் முன்பாக மனத்தாழ்மையும், சாந்தமும், தயவுமுள்ளவனாய் நடந்துவருகிறாயா? அவரிடத்திலுள்ள பரிசுத்தமும், விவேகமும், பிரபஞ்சவெறுப்பும், பொறுமையும், தைரியமும், பக்திவைராக்கியமும் உன்னிடத்தில் உண்டா? இவைகளில் ஏதேனும் உன்னிடத்தில் உண்டாயிருந்தால், அது மென்மேலும் வளர்ந்தேறிவரும்படி வகைதேடுகிறாயா? மாம்சசிந்தை மரணம்; ஆவியின் சிந்தையோ ஜீவனும், சமாதானமுமாம் (ரோ. 8. 6.) என்று எழுதப்பட்டிருப்பதால், நீ மெய்க்கிறிஸ்தவனாகில் எப்போதும் பரமகாரியங்களிலே, சிந்தைவைத்து நடப்பாய். நீ மாம்சத்தின்

படி நடக்கிறவனாயிருந்தும், மாம்சத்தின்படி போர்செய்கிறவனல்ல (2 கொரி. 10. 3.). நீ உன் குடும்பத்தையும், லௌகீக வியாபாரமுதலியவைகளையும் விட்டு விட்டு, வனவாசியாய் சஞ்சரிக்கவேண்டும் என்றல்ல; உலக காரியங்களையும் நீ நடப்பித்து, முக்கியமாய் அழியாத ஆத்துமவிஷயங்களுக்கு அடுத்தவைகளையே நாடித் தேட தேவன் சித்தமாயிருக்கிறார். ஒரே வார்த்தையாய்ச் சொல்லில், நீ தரிசித்து நடவாமல் விசுவாசித்து நடக்கவேண்டியது (2 கொரி. 5. 7.). புத்திக்கெட்டாத பரத்துக்குரிய மறைபொருளைத் தேடுகிறாயா? நீ தேவனையும், அவருடைய சம்பூரண லக்ஷணங்களையும், பராமரிப்புகளையும், பிரமாணங்களையும், கண்டிப்புகளையும், வாக்குத்தத்தங்களையும் எண்ணி, விசுவாசித்து நடக்கிறாயா? மேற்சொல்லியவைகள் கிறிஸ்தவர்களுக்குரிய சாதாரண லக்ஷணங்கள் என்று நீ அறிந்து; அவைகள் உன்னிடத்தில் உண்டோ என்று சோதித்துப்பார். இப்போது உன் ஆத்தும நிலைமையும், நீ செய்யவேண்டிய கடமையையும் உணரும்படி, தேவனுக்கும், பிறருக்கும், உனக்கும் நீ செய்யவேண்டிய கடமை இன்னதென்று உனக்குக் காட்டுவேன்.

நீ மகத்துவமான தேவன்மேல் வைத்திருக்கிற சிந்தனைகளைச் சோதித்துப்பார்க்க விரும்புகிறேன். அவரைப்பற்றிய பயபக்தி, அவருடைய ஒப்பற்ற மாட்சிமையைப்பற்றிய மேலான அன்பு, வணக்கம், அவர் சிறந்த தயாபரர் என்ற வாஞ்சை, சிறந்த உபகாரி என்ற நன்றி உனக்கு உண்டா? அவருடைய பராமரிப்பில் நம்பிக்கை வைத்திருக்கிறாயா? அவர் அருளிய வேத வாக்கை நீ அங்கீகரித்திருக்கிறாயா? அவர் ஏற்படுத்திய பிரமாணங்கள் எல்லாவற்றையும் கைக்கொண்டு, அவருடைய திருவுளத்துக்கு அமைந்து நடக்க உனக்குப் பிரியமிருக்கிறதா? அவருடைய மகிமையை விளக்கிக்காட்ட நோக்கமாக அவரால் ஒப்புக்கொள்ளப்படத்தக்கதாய் உன்ஜீவகாலத்தைச்செலவிட்டு வருகிறாயா? அவருடைய மாதிரியைப் பின்பற்றி நடக்கவும், ஆவியினாலும் உண்மையினாலும் அவரைத் தொழுதுகொள்ளவும், உனக்கு அபேட்சை உண்டா.

இனி பரிசுத்த ஆவியைக்குறித்து உனக்கு இருக்கவேண்டிய எண்ணத்தைப்பற்றிச் சொல்லுகிறேன். கிறிஸ்துவின் ஆவியில்லாதவன் அவருடையவனல்ல (ரோ. 8. 9.). யார் தேவனுடைய ஆவியினால் நடத்தப்படாதிருக்கிறார்களோ, அவர்கள் தேவனுடைய புத்திரரல்ல. நீ மெய்க்கிறிஸ்தவனானால் ஆவியினாலே நிறையப்படவும் (எபே. 5. 18.), உன் ஆத்தும தத்து



வங்கள் எல்லாம் அவருடைய அதிகாரத்துக்குள் அமையவும், நீ இடைவிடாமல் கிருபையில் வளரவும் விரும்புவாய். இவ்வித எண்ணங்கள் உன்னில் அதிகரிக்கும்படி பயபக்தியோடு தியானித்து, அவரை விசனப்படுத்தும் பாவங்களையும் விட்டு விலகி, இயேசுகிறிஸ்துவின்மூலமாய் இந்த ஆவியை உன்மேல் பொழிந்தருளும்படி தேவனைநோக்கி ஆவலோடே ஜெபித்திருப்பாய். நீ அன்புடன் அவருக்கு மனப்பூர்வமாய் ஆராதனை செய்யவும், உன் கீழ்ப்படிதல் பலமும், உன் நேசம் அனலுமாய் இருக்கும்படியாகவும், ஜீவியத்திலும், மரணத்திலும், வாழ்விலும், தாழ்விலும் பிதாவை நேசித்து, அவர் சித்தத்துக்கு அமைந்து நடக்கும் நல்ல பிள்ளைபோல உன்னை நடத்தும்படியாகவும், பரிசுத்த ஆவியானவரின் வரப்பிரசாதங்களைத் தேடுவாய். நீ மெய்க்கிறிஸ்தவனானால், மனோற்சாகமுள்ளவனுமாயிருப்பாய். மேலும் உன்னில் உண்டாகும் மனத்தாழ்மையினாலே, இருளின் அதிகாரத்தையும், சீர்கேடான குணத்தையும் எதிர்த்துக் கிறிஸ்து உனக்குத் தரும் பெலனைக்கொண்டு, அவைகளையெல்லாம் ஜெயித்து வெற்றி சிறந்தோங்குவாய்.

இனி நம்முடைய சுய ஆத்துமாவுக்குரிய குணவிசேஷம் இன்னதென்று காட்டுகிறேன். உத்தம கிறிஸ்தவர்கள் சரீரத்துக்கு அடுத்தவைகளைப்பார்க்கிலும், ஆத்துமவிஷயங்களையும், அநித்தியமானவைகளைப்பார்க்கிலும் நித்தியமானவைகளையும் நாடித்தேடுவார்கள். கிறிஸ்தவனானால்நீயும் அப்படிச் செய்வாய். உன் ஆத்துமாவின் மேன்மையையும் அருமையையும் உணர்ந்து, என்ன நேரிட்டாலும் என்னத்தை இழந்தாலும் அதின் நன்மைகளையே விடாப்பிடியாய்த்தேடுவாய். நீ மெய்க்கிறிஸ்தவனானால், மனத்தாழ்மையை அணிந்துகொள்வாய். (1 பே. 5. 5.). பத்தியிலும், புத்தியிலும், உன் குறைவுகளை அறிந்து விசனப்படுவாய். உன் அறிவு குறைவைக் கண்டு விசாரப்படுவாய். உன் குற்றத்தை நீ நினைக்கும்போது, அது மன்னிக்கப்பட்டதென்று நம்பினாலும், வெட்கமும் கலக்கமுமுள்ளவனாய் பிரலாபிப்பாய். பின்னும் நீ மெய்க்கிறிஸ்தவனானால், உன் ஆத்துமா பரிசுத்தமுள்ளதாகும்படி அபேட்சித்து, உன்னை நடத்துகிற தேவன் மகா பரிசுத்தரென்றும், நீ அங்கீகரித்திருக்கிற சுவிசேஷமார்க்கம், அப்படியே மிகப் பரிசுத்தமுள்ளதென்றும் அறிந்து, சகல சிற்றின்பங்களையும் வெறுத்து, உன் வார்த்தைகள், செய்கைகளை மாத்திரமல்ல உன் நினைவுகளையும், ஆசைகளையும், சாவதானத்துடன் காத்துக்கொள்ள எச்சரிக்கையாயிருப்பாய்.

மேலும், சரீரமானது உன் ஆத்துமாவுக்கு உபயோகமாயிருக்கும்படி போசனபான பிரியனாய் நடவாமல் மிதமாய் நடந்துகொள்வாய். அதுவுமல்லாமல், விலைமதிக்கப்படாத இரத்தினம்போன்ற உன் காலம் வீணாய்ப்போகாமலும், உன் வரவு, செலவு அதிகப்படாமலும், தேக அநுபோகங்களைக்குறித்து எச்சரிக்கையாயிருப்பாய். பின்னும் தேக இச்சைகள் விருத்தியடையாதிருக்க முயலுவாய். தேவனோடு ஆத்துமா, அன்பும், ஐக்கிய சம்பந்தமாயிருக்கவும் பக்தி வைராக்கியத்துடன், நீ அவரைச் சேவிக்கவும் முயற்சிப்பாய்.

அன்றியும், அருமை இயேசுவினிடம் உபதேசம்பெற்றவன் மனரம்மியமுள்ளவனாயிருப்பான். சிற்றின்பங்களுக்கு இடம் கொடுத்து அவைகளை மிகுதியாய் அநுசரித்தும் திருப்தியடையாதவர்களைப்போல நீ இராமல், லௌகீக நன்மைகளை மட்டாய் அநுபவித்துவருவாய். நீ செய்யும் ஏதேனும் ஓர் காரியம் வாய்க்காவிட்டாலும், தேவசித்தத்திற்கு அமைந்திருப்பாய். பிறர் அடையும் வாழ்விலே நீ பொறாமைகொள்ளாமல், நீ அநுபவிக்கும் நன்மைகளுக்கு மாத்திரமல்ல, பிறர் பெற்ற நன்மைகளையும் கண்டு, கர்த்தருக்கு நன்றி செலுத்துவாய். உன் ஸ்திதி சர்வஞானத்தினாலும், தயையினாலும், நியமிக்கப்பட்டிருக்கிறதென்றும், உனக்கு உண்டாயிருக்கிற குறைவுகளும், இடையூறுகளும் வரப்போகிற உன் மனப்பாக்கியத்தை பூரணப்படுத்துவதற்கு ஏதுவாயிருக்கக் கூடியதென்றும் நீ நினைத்தும், உன் ஸ்திதியை வேறுபடுத்த உபாய தந்திரங்களைத் தேடிக்கொள்ளமாட்டாய்.

நீ கிறிஸ்துவின் சீஷனாயிருக்கில், மனரம்மியமாயிருப்பதுடன், பொறுமையுள்ளவனுமாயிருந்து, அப்பொறுமையினாலே உன் ஆத்துமாவைக் காத்துக்கொள்வாய் (லூக். 21. 19.). உனக்கு நேரிடும் துன்பங்கள் சேதங்களை, நீ பொறுமையுடன் சகித்து, உன் கடமைகளை நிறைவேற்றுவாய். துன்பங்கள் உன்னை வருத்தினாலும், நீ நாடிய நன்மைகள் உனக்கு அநுகூலப்படாதிருந்தும், மனதைரியத்துடன் அவைகளை உத்தரிப்பாய். சகலத்திலும் நீ பொறுமையுள்ளவனாய் இருந்தால், உன் எண்ணங்கள் தவறாமலிருக்கும். உனக்கு வரும் தீமைகளை நீக்கும்படி, நீ ஆகாத உபாயங்களைச் செய்யமாட்டாய். கர்த்தர் சகலத்தையும், உனக்கு நன்மையாக முடியும்படி செய்வார் என்று நம்பி தளர்ச்சியடையாமல், பூரண கிரியையை நடப்பிக்கும்படி, நீ செய்யவேண்டிய கடமைகளை நிறைவேற்றிவருவாய். உனக்குத் தீமைகள் திரும்பத்திரும்ப நே



ரிட்டு, ஆழத்தை ஆழம் கூப்பிட்டு அலைதிரைகளெல்லாம் உன்மேல் புரளும்வேளையில், இன்னகாரணத்துக்காகத் தேவன் இவைகளை எல்லாம் வரவிடுகிறார் என்பதைத் தெளிவாய் அறியக்கூடாதிருப்பினும், நீ பரமபிதாவின் சித்தத்துக்குப் பயபக்தியுடன் அடங்கியிருப்பாய். அவைகளினின்று விடுதலையாகும்படி நீ தந்திரமான உபாயங்களைத் தேடாமல், கர்த்தர் ஏற்ற காலத்தில் விடுவிப்பார் என்று பொறுமையுடன் காத்திருப்பாய்.

கிறிஸ்தவன் தேவனுக்கும், தனக்கும் இன்னபடி நடந்துகொள்ளவேண்டுமென்பதைக் குறித்துச் சுருக்கமாய்த் தெரிவித்தேன். இப்போது அவன் பிறருக்குச் செய்யவேண்டியது இன்னதென்று காட்டுவேன். அவைகளெல்லாம் "உன்னிடத்தில் நீ அன்புகூருகிறதுபோல, பிறனிடத்திலும் அன்புகூருவாயாக என்கிற ஒரே வார்த்தையிலே தொகையாய் அடங்கியிருக்கிறது" (ரோ. 13. 9.). கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவைப் பற்றிய தேவபக்தி ஆத்துமாவில் செழித்தோங்கும்படி அது சுயநேசத்தை மேற்கொண்டு பிறனைத் தன்னைப்போல நேசிக்கும்படி ஏவிவிடும். நீ உன் சுயபொருளைப் பேணுவதுபோல பிறருடைய பொருளையும் பேணுவாய். உன் நடக்கையைப் பற்றிக் குறைவு வராதபடி பார்ப்பதுபோல், பிறனுடையதைப் பற்றியும் பார்த்துக்கொள்வாய். பிறனுடைய வாழ்வில் மகிழ்ச்சி அடைவதுமன்றி, அவனுடைய தாழ்வில் அவனுக்கு உதவிசெய்வாய். அவனுடைய அசாத்தியமான பேச்சுக்களையும், செய்கைகளையும் தீமையாக எண்ணாமல் அநுகூலமாக எண்ணி, அவன் அநுபவிக்கும் ஆனந்தத்திற்கும் அவன் படும் துக்கத்துக்கும் பங்காளியாயிருப்பாய். அற்பக்காரியத்திலும் பெரிய காரியத்திலும் இந்தத் தங்கப்பிரமாணத்தை உன் இருதயத்தில் எழுதப்பட்டதாகக் கவனித்து, இடைவிடாமல் அதின்படி நடப்பாயாகில், நீ மகா பாக்கியவானாயிருப்பாய். மேலும், நீ சாந்தகுணத்தைத் தரித்துக்கொள்ளவேண்டும் என்று சுவிசேஷம் உனக்குப் போதிக்கிறது (கொலோ. 3. 12.). இந்தச் சுகிர்தமான குணம் உன்னில் தலைப்பட்டால் நீ எந்தத் தீமைகளையும் கோபத்தையும் சகித்துக்கொள்வாய். அன்பினால் வசப்படுத்தி, உருக்கத்தினால் ஆற்றித் தேற்றுகிறவர்களை நீ விசனப்படுத்தாதபடி எண்ணிக்கையோடே உன்னுடைய வார்த்தைகளைப் பேசுவாய். நியாயமாயுள்ள உன் காரியத்தைப் பிடித்துப் பாராட்டுவதினாலே மற்றவர்களுக்கு ஏதேனும் ஒரு தீங்கு நேரிடுமாகில், அவர்கள் அதைத் தீங்குக்குள் அகப்படாதபடி உன் பாத்தியதையை விட்டுவிட சாந்தகுணம் உன்னை ஏவிவிடும்.

அன்றியும் நீ சாந்தகுணமுள்ளவனாகில், நீ நாணமுள்ளவனாக பெரியோர்களுக்கும், சிறியோர்களுக்கும் அவரவர் நிலைமைக்கேற்றபடி நடந்துகொள்வாய். பெரியோரைக் கனம் பண்ணுவாய்; சிறியோரை நெருக்காமல் தாங்குவாய்; அல்லாமலும் கிறிஸ்து மார்க்கத்துக்குக் கனக்குறைவு உண்டாகாதபடி பழிப்பானவைகளைப் பேசாமல், தேவனுடைய நீதியை நடப்பிக்கமாட்டாத கோபத்தை அடக்குவாய்.

மேலும் நீ கிறிஸ்தவனாகில் "உருக்கமான இரக்கத்தையும் உடையவனாயிருப்பாய் (கொலோ. 3. 12.). தேவன் உன்மேல் விளக்கிய இரக்கத்தாலே ஏவப்பட்டு, மற்றவர்களுக்கு உண்டாகும் குறைவுகளையும், துக்கங்களையும் கண்டு பரிதபித்து, உன்னால் இயன்ற அளவு ஆத்துமாவுக்கு நன்மைசெய்து, அன்பான கிரியைகளினாலே உன் உதாரகுணத்தைத் திருஷ்டாந்தப்படுத்துவாய்.

மேலும் நீ கிறிஸ்தவனாக உண்மையைப் பேசுவாய். நீதிஸ்தலங்களில் ஆணையிடும் சமையங்களில் மாத்திரமல்ல சாதாரண சம்பாஷணை செய்யும்காலத்திலும் அப்படிச் செய்வாய். நீ நியாயமான ஒருவாக்கைக் கொடுத்தால் அதைத்தவிர்க்காதபடி நிறைவேற்றப் பார்ப்பாய். நீ உண்மையுள்ள தேவனுடைய ஊழியக்காரனாக உன்வார்த்தைகளும் செய்கைகளும், தவறா திருக்கும்படி கவனமாயிருப்பாய்.

மேலும் நீ தேவகட்டளையின்படி நடக்க மிகுந்த மனவிருப்பமாய் முயற்சிகளைச் செய்தாலும், அதிலும் அதிகமான குறைவுகளை, நீ காணுவதால், தேவன் உன்னை நியாயந்தீர்க்கப் பிரவேசியாதபடி செபம்செய்வாய். மற்றவர்களைக் குற்றவாளியாகத் தீர்க்காமல் எந்தக்காரியத்திலும் அவர்களைத் தயவோடும் பொறுமையோடும் பார்த்து, அற்பகாரியங்களுக்காக அன்புக்கு மிஞ்சித் தண்டியாமல் மட்டாக நீதிநியாயம் செய்வாய்.

கிறிஸ்தவனுக்குரிய விசேஷித்த குணங்களையும், ஒழுக்கங்களையும் தெரிவித்திருக்கிறேன். இனி நீ அவசியமாய்ப் பெறவேண்டிய சிலசாதாரண லக்ஷணங்களை உனக்குக் காட்டுவேன். மெய்த் தேவபக்திக்குரிய முக்கியலட்சணம் உண்மையே. நாம் செய்யும் காரியங்களெல்லாம் தேவனுடைய சித்தத்துக்கு இசைந்திருக்கவேண்டுமென்ற நோக்கத்துடன் அவைகளை நிறைவேற்ற வேண்டும்.

நற்கிரியைகளுக்குக் காரணமாகிய இக்குணத்தினாலே ஏவப்பட்டு, நீ செய்ய நினைக்கும் ஒவ்வொரு காரியத்தையும் உண்



மையாய்ச் சீர்தூக்கிப்பார்த்துச் செய்ய தகுமோ என்பதை அறிந்து செய்வாய். நீ செய்வதையெல்லாம் மனப்பூர்வமாய்ச் செய்வாய். வெளியரங்கமாய் யாவருக்கும் முன்பாக நடப்பது போலவே, அந்தரங்கத்திலும் நடப்பாய். தேவன் சர்வத்துக்கும் மேலான அதிகாரியென்றுணர்ந்து, சகல காரியங்களையும் பற்றிய அவருடைய கட்டளை எல்லாம் செம்மையென்றெண்ணி, உலகத்திலே கபடமில்லாமல் திவ்விய உண்மையோடே நடப்பாய் (2 கொரி. 1. 12.). தேவபக்தியானது இடைவிடாமல் இருதயத்திலே நிலைநிற்கத்தக்கதேயன்றி நினைத்தவேளைகளில்மாத்திரம் அநுசரிக்கத்தக்கதல்ல. புத்திபூர்வமாய்ச் செய்யப்படும் எந்த துணிகரமான துரோகத்தையும் விட்டு விலகவேண்டும். இப்படி மரணபரியந்தம் நடந்து, வழி தூரமாயிருப்பதினாலாவது, வழி வருத்தமாயிருப்பதினாலாவது தொய்ந்துபோகாமல், உன்னைச் சுற்றிநிற்கும் சோதனைகளுக்கு இடங்கொடாமலும் சிற்றின்பங்களுக்கு உட்படாமலும் திடங்கொண்டு செல்லவேண்டும். மாறாத தேவன் அசைவில்லாத இராச்சியத்தை அருளுவார் என்று நம்பி, அதற்கு யோக்கியனாய் எப்பொழுதும், வழிப்பட்டு மோட்சம் சேரும்படி முயற்சிசெய்வாய்.

மேலும் சுவிசேஷம் உன் இருதயத்தில் வல்லமையாய்த் தலைப்பட்டால், கல்போன்ற உன் இருதயம் மாம்சத்தைப் போல மிருதுவாகும். அப்பொழுது மனவுருக்கத்தை உடையவனாயிருப்பாய், தெய்வீக அதிகாரத்துக்கு அடங்கி அவர் உன்னை நடத்தும் வழியிலே பிரியத்தோடே நடப்பாய். தேவனுடைய வசனத்துக்கு இணங்கி அதையே நேசிப்பாய். வாழ்விலே சோதனையில் சிக்காதபடிக்கும், தாழ்விலே தெய்வீக சிட்சைக்கும் அமைந்திருப்பாய். தேவனுக்குக் கனமுண்டாகத்தக்கதாய் நடப்பாய். தேவனுக்கு விரோதமும் அவருடைய மார்க்கத்துக்கு அபகீர்த்தியுமான எந்தக்காரியமும் உன்னிலாவது மற்றவர்களிலாவது காணப்படாதபடி பிரயாசப்படுவாய். மேலும் உன் மீட்பருடைய இராச்சியம் பூமியிலே ஸ்தாபிக்கப்பட்டு விருத்தியடையும்பொருட்டு நீ பக்திவைராக்கியத்துடன் அவருக்கு ஊழியக்காரனாகி, சுவிசேஷம் எங்கும் ஓடிப் பரம்பும்படி பிரயாசப்படுவாய். இப்படி நீ உன்னிலுள்ள குறைவுகளை நீக்கும்படி முயல்வதுமன்றி, மற்றவர்களிடத்தில் காணப்படும் குறைவுகளையும் அகற்றும்படி விரும்புவாய். மனுஷரைத் தீமையினின்று விடுவித்துச் சன்மார்க்கத்தில் நிலைநிற்கவும், அதில் அவர்கள் தேறிவரவும் பிரயத்தனம் செய்வாய்.

பின்னும் நன்மைசெய்யும்படி உனக்கு வாய்க்கும் நற்சமயங்களில், நீ செய்யும் நன்மைகளுக்கு நேரிடும் தடைகளை விவேகத்தோடே தீர்மானமாய் நீக்கி, இடைவிடாமல் நன்மை செய்தால் பாக்கியவானாயிருப்பாய். ஆகையால் கர்த்தர் உனக்கு அருளிய விவேகத்தைக்கொண்டு, அவருக்கும் மனுஷருக்கும் உனக்கும் செய்யவேண்டிய கடமைகள் இன்னதென்றுணர்ந்து அவைகளை நிறைவேற்ற விரும்புவாய்.

மேலே சொல்லப்பட்டிருக்கிற கிறிஸ்தவனுக்குரிய சற்குணங்கள் உனக்குண்டா? அல்லது அவைகளை அடைய விரும்புகிறாயா? உன் மனச்சாட்சியின்படி சொல்லு. நான் விவரித்திருக்கிற பிரதான காரியங்கள் உன் இருதயத்திலே பதியும்படி கிருபாசனத்தண்டையில் சேர்ந்து, அவைகளைத்தேவனிடத்தில் அறிவித்து பின்வருகிறவண்ணம் ஜெபம்பண்ணு.

## மேலே விவரிக்கப்பட்ட கிறிஸ்தவனுக்குரிய குணங்களைக் காட்டி ஜெபிக்கும் ஜெபம்.

துதிக்குப் பாத்திரரானதேவனே நன்மையானஎந்தஈவையும் பூரணமான எந்த வரத்தையும் தருகிற ஜோதிகளின் பிதாவாயிருக்கிறீர் என்றுஉம்மை வணங்கித் தோத்திரிக்கிறேன். நீர் மனுப்புத்திரருடைய இருதயத்தை ஆராய்கிறவரும் உள்ளிந்திரியங்களைச் சோதித்தறிகிறவருமாய் இருக்கிறீர் என்று உமக்கு முன்பாகப் பணிகிறேன். தேவனே என்னை ஆராய்ந்து என் இருதயத்தை அறிந்துகொள்ளும், என்னைச் சோதித்து என் சிந்தனைகளை அறிந்துகொள்ளும்; வேதனையுண்டாக்கும் வழி உண்டோ என்று பார்த்து நித்தியவழியிலே என்னை நடத்தும். கர்த்தாவே, நான் உள்ளத்திலே புதிதான ஆவியுள்ளவனாகும்படி செய்து, எனக்கு நவமான இருதயத்தைக் கொடுத்து, என் உள்ளத்திலே புதிதானஆவியைக்கட்டளையிடும். நான் திவ்வியசுபாவத்துக்குப் பங்குள்ளவனாகும்படி எனக்கு அருள்செய்யும். என்னை அழைத்தவர் பரிசுத்தராயிருக்கிறதுபோல, நானும் என் நடக்கைகளிலெல்லாவற்றிலேயும் பரிசுத்தனாயிருக்கும்படி கிருபை செய்யும். கிறிஸ்து இயேசுவிலிருந்த சிந்தையே என்னிலிருப்பதாக; அவர் நடந்தபடி நானும் நடப்பேனாக.

கர்த்தாவே சகல மனுஷருக்கும் மகிமையுடன் திருஷ்டாந்த சோதிமயமாய்ப் பிரசன்னமாகியிருக்கிற தேவகிருபையானது



நான் அவபக்தியையும் லௌகீக இச்சைகளையும் வெறுத்து, தெளிந்தபுத்தியும் நீதியும், தேவபக்தியும் உள்ளவனாய் ஜீவனம்பண்ணும்படி பலமாய் என்னில் கிரியையை நடப்பிப்பதாக. என் தேவனே உம்முடைய பரிசுத்த ஆவியினால் ஏவப்பட்டு, கர்த்தராகிய உம்மை நான் என் முழுஇருதயத்தோடும் என் முழுஆத்துமாவோடும், என் முழுபெலத்தோடும் அன்புகூரும்படி செய்தருளும். மரித்தோரிலிருந்து பிழைத்திருக்கிறவனாக என்னை உமக்கு ஒப்புக்கொடுத்து என் சரீரத்தைப் பரிசுத்தமும், உமக்கு பிரியமுமான ஜீவபலியாக ஒப்புக்கொடுக்க அருள்தாரும். மனுடவதாரம் செய்த உம்முடைய குமாரனை நான் நேசித்து அவருக்கு உண்மையாய் நடக்கும்படி என்னைப் பலப்படுத்தியருளும். நான் அவரைக் காணாமலிருந்தும் அவரிடத்தில் அன்புகூருவேனாக. நான் அவரைத் தரிசியாமலிருந்தும், அவரிடத்தில் விசுவாசம்வைத்துச் சொல்லிமுடியாததும், மகிமையால் நிறைந்ததுமாயிருக்கிற சந்தோஷமுள்ளவனாய்க் களிகூருவேனாக. நான் இப்பொழுது மாம்சத்தில் பிழைத்திருக்கிறதை தேவகுமாரனைப் பற்றும் விசுவாசத்தினாலே நாடோறும் பிழைக்கும்படி செய்தருளும். இரட்சணிய அதிபதியின் கொடியின்கீழ் நான் அமைந்தபோது எனக்கு முன்வைக்கப்பட்ட போராட்டத்தைச் செய்யும்படி நான் கிறிஸ்தவனாக வீரங்கொண்டு, திடமனதாயிருக்கத்தக்கதாக பலமும் அன்பும் தெளிந்தபுத்தியுமுள்ள ஆவியைக் கொடுத்தருளும். இப்படி நான் தேவனுக்குப் புத்திரனாகி மோட்சமகிமைக்குச் சுதந்தரவாளியாயிருக்கிறேனென்பதை நான் நிச்சயித்து அது எவர்களுக்கும் பிரத்தியட்சமாய் விளங்கும்படி நடக்கப்பண்ணியருளும். கர்த்தாவே என் ஆத்துமாவின் தன்மையை நான் அறிந்து, அதின் அருமையை உணர்ந்துகொள்ளும்படி போதித்தருளும். அழிந்துபோகிற போஜனத்திற்காக அல்ல, நித்தியஜீவன்வரைக்கும் நிலைநிற்கிற போஜனத்துக்காக முக்கியமாய்க் கிரியை நடப்பிக்கும்படி என்னை ஏவியருளும். நான் உம்முடைய பலத்த கைக்குள் அடங்கி மனத்தாழ்மையை அணிந்துகொள்வேனாக. நான் கடைசியிலே தேவனைத் தரிசிக்கும்படி இருதய சுத்தத்தை நாடித்தேடி பெற்றுக்கொள்ளும்படி செய்தருளும். துர்இச்சைகளை பூமியில் உண்டுபண்ணுகிற அவயவங்களை அழிக்க அருள்தாரும். என் வலதுகண் எனக்கு இடறலுண்டாக்கினால் அதைப்பிடுங்கி எறிந்துபோடவும், என் வலதுகை எனக்கு இடறலுண்டாக்கினால் அதைத் தரித்து எறிந்துபோடவும் என்னைப் பலப்படுத்தியருளும். நான் எல்லாவற்றி

லேயும் இச்சையடக்கமாயிருந்து, எனக்குண்டானவைகள் போதுமென்றெண்ணி, நான் எந்த நிலைமையிலிருந்தாலும், மனச்சந்தோஷமாயிருக்க அருள்புரியும். நான் ஒன்றிலும் குறைவுள்ளவனாயிராமல் நிறைவுள்ளவனாயும், தேறினவனாயும், இருக்கத்தக்கதாகப் பொறுமையானது பூரணகிரியையை என்னில் நடப்பிக்கும்படி தயவுசெய்தருளும்.

கர்த்தாவே நான் எல்லாருக்கு முன்பாக நற்குணசாலியாய் நடந்து, நான் என்னை நேசிப்பதுபோல பிறனையும் நேசிக்கவும், மற்றவர்கள் எனக்கு எவைகளைச் செய்யவேண்டுமென்றிருக்கிறேனோ அவைகளை நான் மற்றவர்களுக்குச் செய்யவும் கிருபைசெய்யும். எனக்கு வரும் தீங்குகளிலும், நான் குற்றவாளியென்று கண்டிப்பாய்த் தீர்க்கப்படாதபடி விரும்புவதுபோல, மற்றவர்களையும் குற்றவாளிகளென்று கண்டிப்பாய்த் தீர்க்கப்படாதபடி கோபதாபங்களிலும், தீமைக்குத் தீமையையும் செய்யாமல் சாந்தகுணத்தைத் தரித்துக்கொள்வேனாக, என் பரமபிதா இரக்கமுள்ளவராயிருப்பதுபோல நானும் இரக்கமுள்ளவனாயிருப்பேனாக.

கர்த்தாவே உமக்குப் பிரியமும், உலகிலுள்ள பக்தருக்கு ஆபரணமாயுமிருக்கிற கிறிஸ்துவுக்குரிய குணங்களில் என்னில் பலப்படும்படி செய்ய, உம்மை வேண்டிக்கொள்ளுகிறேன். சகலவித வஞ்சகத்தையும், கபடத்தையும் என்னைவிட்டு நீக்கி, கர்த்தருக்குள் நான் படும் பிரயாசம் கடைசியில் விருதாவாயிராதென்று அறிந்து, உறுதிப்பட்டவனாயும், அசையாதவனாயும், கர்த்தருடைய கிருபையில் எப்பொழுதும் பெருகுகிறவனாயும் இருக்க அநுக்கிரகம் செய்யும். நான் உமது வசனத்தினாலும், செயலினாலும், எளிதாய் உணர்த்தப்பட்டு, ஆவியானவருடைய ஒவ்வொரு கிரியையையும் தெளிவாய் அறியத்தக்கதாக, என் இருதயத்தை இளகச்செய்யும். நான் என் பெலனாகிய உம்மைக்குறித்து, அறிவுக்கேற்ற வைராக்கியமும், அன்புமுள்ளவனாய்ச் சர்ப்பத்தைப்போல வினாவும் சிங்கத்தைப்போல தைரியமும், புறாவைப்போல கபடமின்மையும் உள்ளவனாய் உமக்கு ஊழியம் செய்யும்படி என்னை நடத்தியருளும். இவ்வண்ணமாய், நான் தேவரீருடைய அருளைப் பெற்று, சோதித்தறிந்திருக்கிற மீட்பரின் சாயலை அணிந்து, அவர் வாழும் வானுலகில் சென்று, அவருக்கும், தேவரீருக்கும், பரிசுத்த ஆவிக்கும், துதிசெலுத்தும்படி இயேசுகிறிஸ்துவினிமித்தம் எனக்குத் தயைசெய்யவேண்டும் என்று உம்மை வேண்டிக்கொள்ளுகிறேன். ஆமென்.



## அதிகாரம்.

### மேற்சொல்லிய குணத்தை அடைவதற்கு தேவ ஆவியானவரின் சகாயம் மகா அவசியம் என்பதைத் தெரிவிக்கும் போதனை.

சுவிசேஷம் கற்பிப்பதும் கிறிஸ்தவனாகிய நீ விரும்பி நாடவேண்டியதுமான நற்குண நல்லொழுக்கங்கள் இன்னவையென்று உனக்கு விவரித்துக் காட்டியிருக்கிறேன். கர்த்தருக்குப் பயப்படுகிறவர்கள், நான் காட்டிய குணலட்சணங்கள் உத்தமருக்குரியதென்று அங்கீகரிப்பார்கள். நீயும் அவைகளை அப்படி ஏற்றுக்கொண்டாயாகில் அக்குணங்களை அடைய விரும்புவாய். அந்த நற்குணங்கள் உனக்குடையதாயிருந்தால், இம்மை மறுமைக்குரிய நன்மைகள் இன்னவென்று உணர்ந்து, மனப்பூர்வமாக அவைகளைப் பெற்றுக்கொள்ள நாடுவாய். அநேகருடைய பக்தி மாலையில்காணும் மேகத்தைப்போலவும், விடியற்காலையில் தோன்றும் பனியைப்போலவும் ஒழிந்துபோகிறதுண்டு (ஓசி. 6. 4.). உன்னுடைய பக்தியும் அப்படியாகாதபடி எச்சரிக்கையாயிருப்பாயாக. சாத்தான் அநேகரை வஞ்சித்துத் தன் வலையில் அகப்படுத்தினதுபோல, உன்னையும் பலத்த சோதனைகளினால் சோதிப்பான். மேலும் உன் சீர்கெட்ட சுபாவமும் திரும்ப உன்னை மேற்கொள்ளவும் கூடும். இப்போது தேவகாரியங்களிலே செல்லும் உன் சிந்தனைகள் நாளைக்கு அற்றுப்போனாலும் போகலாம். நித்திரை கொள்வதினாலே உன் பெலன் அதிகரிப்பதுபோல சிலநாள் உன்னில் ஒடுங்கி ஒதுங்கிக்கிடந்த துராசைகள் இன்னமும் தோன்றி புதுப்பலன்கொண்டு உன்னைத் தாக்கவும்கூடும்.

அப்படியானால் செய்யவேண்டியது என்ன, ஆத்துமலாபத்தைவிரும்பும் பாவி அவநம்பிக்கைச் சேற்றிலே விழுந்துகிடக்கவா? அப்படியல்ல கிறிஸ்துமார்க்க மேன்மையை உணர்ந்த நீ தேவனை நோக்கினால் அவர் உனக்கு உடனே சகாயம் செய்வாரென்று அறிவாயாக. "ஆவியினாலே சரீரத்தின் கிரியைகளை அழிக்கலாம்" என்றும் (ரோ. 8. 13.). "என்னைப் பலப்படுத்துகிற இயேசுவினாலே எல்லாவற்றையும், செய்ய எனக்குப் பெலன் உண்டு" என்றும் (பிலி. 4. 13.). வேதத்தில் வாசிக்கிறோமே.

ஆதலால் இது விசேஷித்த திவ்விய சத்தியம் என்பதைப் புத்தியூகமாய் உணர்ந்து அறிந்துகொள்ளவேண்டும்.

நம்முடைய உயிருக்கு ஆதாரமும் பூமிக்கு அலங்காரமுமாகிய தாபரவர்க்கங்கள் செழித்தோங்கி புஷ்பம் கனி தானியங்களைத் தரும்பொருட்டு நாடோறும் வெயிலும் மழையும் அவைகளுக்கு வேண்டியதுபோல, நீயும் உனக்கு முன்னமேயிருந்த துற்குணங்கள் துற்கிரியைகளைவிட்டு கிறிஸ்துவைத் தரித்துப் புதிதானபரிசுத்தஜீவியஞ்செய்யும்படி அவசியமாகப்பரிசுத்தஆவியின் வல்லபம் உனக்கு வேண்டும் என்பதை அறிந்துகொள்ள வேண்டியது. நீ செல்லும்வழியில் உனக்கு நேரிடும் கொடிய விரோதங்கள் என்னவைகள் என்று நீ அநுபோகத்தால் அறிந்துகொள்ளும்போது இதெல்லாம் உனக்கு விளங்கும். அப்படி இப்போது விளங்காவிடில் மார்க்கத்தைப்பற்றி இப்போதுதான் நீ புதிதாய் ஆராய ஆரம்பித்திருக்கிறாய் என்று அறியக்கடவாய்.

ஆதலால் கர்த்தருடைய பெலத்தைக்கொண்டு மனத்தாழ்மையோடே அவரைச் சேவித்து உன் ஆத்தும நன்மையை நாடு. ஏனெனில் இளைஞரும் இளைப்படைந்து சோர்ந்துபோவார்கள்; வாலிபரும் இடறிவிழுவார்கள்; கர்த்தருக்குக் காத்திருக்கிறவர்களோ புதுப்பெலன் அடைவார்கள் (எசா. 40. 30, 31.). தேவனுக்கு விரோதமாய் நான் முன் செய்தவைகளை இனி செய்யேன் என்றும், செய்யவேண்டிய கடமைகளை இடைவிடாமல் தைரியமாய்ச் செய்வேன் என்றும் சொல்வதற்கு அஞ்சி, தேவரீருடைய கிருபையினாலே நான் செய்யத்தகாதவைகளை வெறுத்துச் செய்யத்தக்கவைகளைச் செய்வேன் என்று மனத்தாழ்மையுடன் சொல்லுகிறவன், தனக்கு விரோதமாய் நேரிடும் சோதனைகளைக் கடந்து கர்த்தருடைய சித்தத்தை நிறைவேற்ற வல்லவனாவான்.

ஆயினும் நீ பெலவீனனாய் நற்கிரியைகளைச்செய்ய திராணியற்றவனாயிருப்பதினால் பரிசுத்தஆவியானவரின் வல்லபத்தினாலன்றி மற்றப்படி ஒரு நற்கிரியையும் செய்ய ஏலாதவன் என்று அறிந்து தாமதியாமல் தேவனுக்கு உன்னை ஒப்புவிக்கவேண்டும். உனக்கு வேண்டிய சகாயத்தை அவர் தரவே தருவார் என்பதை ரூபிக்க அநேக திருஷ்டாந்தங்கள் உண்டு. அயோக்கியர் அவபக்திக்காரர் முதலியவர்களுக்கு எண்ணிறந்த நன்மைகளை அருளும் நரஜீவ தயாபரர் தம்மை வணங்கி தமது கிருபையை நாடுகிறவர்களுடைய ஆத்துமாக்களைத் தெய்வீக சாயலுக்கு ஒப்பாக்கி நித்தியமோட்சத்தை அடையும்படி பக்குவப்படுத்துகிறார் என்று யுத்திபுத்தியினாலே அறிந்துகொள்ளலாம். இது



வேதவாக்கியங்களினாலும் உறுதிப்படுத்தப்பட்டிருக்கிறது. தெய்வகாரியங்களை அற்பமாய் எண்ணி புறக்கணிக்கிற பாவிகளைப் பார்த்து "என் கடிந்துகொள்ளுதலுக்குத் திரும்புங்கள், இதோ என் ஆவியை உங்கள்மேல் அருளுவேன்" என்று தேவஞானம் சொல்லுகிறது (நீதி. 1. 23.). "ஆதலால் நாம் இரக்கத்தைப் பெறவும் ஏற்றசமயத்தில் சகாயஞ்செய்யும் கிருபையை அடையவும் தைரியமாய்க் கிருபாசனத்தண்டையிலே சேரக்கடவோம்" என்று பவுல் அப்போஸ்தலனும் (எபி. 4. 16.), "பொல்லாதவர்களாகிய நீங்கள் உங்கள் பிள்ளைகளுக்கு நல்ல ஈவுகளைக் கொடுக்க அறிந்திருக்கும்பொழுது பரமபிதாவானவர் தம்மிடத்தில் வேண்டிக்கொள்ளுகிறவர்களுக்குப் பரிசுத்த ஆவியைக் கொடுப்பது அதிக நிச்சயமல்லவா" என்று நம்முடைய அருமையான கர்த்தரும் (லூக். 11. 13.) சொல்லியிருக்கிறார்கள். இந்த வரப்பிரசாதமாகிய ஈவைக் கிறிஸ்துநாதர் தம்முடைய உத்தம சீஷர்களுக்கு அநுக்கிரகிக்கும்படி அவர் உன்னதத்திற்கு எழுந்தருளினபோது பெற்றுக்கொண்டார். அந்த ஆவியின் ஈவை அடையும்படிக்கேற்ற விருப்பம் உன்னிடத்தில் உண்டாயிருந்தால் மன உற்சாகத்தோடே விலைமதிக்கப்படாத அந்த வரப்பிரசாதத்தைத் தேடுவது உசிதமாயிருக்கிறது. மேலும் இயேசுவானவர் தம்மண்டைக்கு வந்து பானம்பண்ணும்படி உன்னை அழைத்திருக்கிறார்.

ஆதலால் மன உற்சாகத்தோடே கிறிஸ்தவனுக்குரிய கடமைகளை நிறைவேற்ற தைரியங்கொண்டு கர்த்தராகிய ஆண்டவரின் வல்லமையை முன்னிட்டு அவைகளைச் செய்து சித்தியடைவாயாக. நீ அவசியமாய் அடையவேண்டிய ஆசீர்வாதங்களைப் பெறும்படி பரிசுத்த வாஞ்சையோடே உன் ஆத்துமாவைக் கர்த்தருக்கு முன்பாக ஜெபத்தில் ஊற்றுவாயாக.

## மெய்த் தேவபக்தி ஆத்துமாவில் விர்த்தியடையும்படி தேவகிருபைக்காகச் செய்யவேண்டிய ஜெபம்.

துதிக்குப் பாத்திரரான தேவனே! ஆவிக்குரிய எந்த நன்மையையும் செய்வதற்கு எனக்குப் பெலன் இல்லை. நான் மகா குறைவுள்ளவன்; நான் அதை ஆயிரம்முறை கண்டும் பின்னும் என் இருதயத்தை நம்பும் மூடனாயிருந்து (நீதி 28. 26.), சுய பெலத்தினால் தீர்மானங்களைச் செய்கிறவனாய் இருக்கிறேன்.

இனிமேல் நான் இப்படி நடவாமல் தினந்தினமும் உம்மைச் சார்ந்து நடக்கும்படி கிருபைவரங்களை அநுக்கிரகம் செய்யும்.

கர்த்தாவே நீர் உதாரமாயும் ஏராளமாயும் பரிபூரண செல்வத்தை எனக்கு அருள சித்தங்கொண்டிருக்கிறதை நம்பி இருதய பூரிப்புடன் உம்மை புகழுகிறேன். ஆதலால் எந்தச்சமயத்திலும் சகாயஞ்செய்யும் கிருபையை அடைய தைரியமாகக் கிருபாசனத்தண்டையில் சேருகிறேன். என் தேவனாகிய கர்த்தாவே உம்முடைய கிருபையை காமவிகாரத்துக்கு ஏதுவாக புரட்டி என் பெலவீனம் என்னுடைய அசட்டைக்கும் சோம்பலுக்கும் காரணம் என்று போக்குச்சொல்லத் துணியேன். நீர் எனக்கு அதிகமான கிருபையைத் தந்தீர்; ஆனால் நான் தேவபக்தியில் வளராதிருப்பது என் குற்றமேயன்றி வேறில்லை. நீர் ஏற்படுத்தியிருக்கிற கிருபையின் எத்தனங்களை இனி நான் சாக்கிரதையாய்க் கைக்கொள்ளும்படி விரும்புகிறேன். நான் அப்படிச் செய்யாதிருந்தால் என் விண்ணப்பங்களும் ஜெபங்களும் விருதாவாய் முடியுமே. நான் செய்யும் ஆவிக்குரிய தீர்மானங்களை என்னால் இயன்றமட்டும் நிறைவேற்றும்படி உமது கிருபையைத் தந்தருளவேண்டுமென்று உம்மை மன்றாடுகிறேன்.

கருணைநிறைந்த கர்த்தாவே நீர் விரும்பிய ஒவ்வொரு நற்கிரியையையும் நான் செய்யும்படி என் ஆத்துமாவைச் சுத்திகரிக்கும் உமது அருளை என் உள்ளத்தில் பொழிந்தருளும். இவ்வுலகில் நான் தங்குகையில் பற்பல பலவீனங்களுக்கு இனமான நான், எனக்கு உள்ளும் புறம்பும் நேரிடும் பலவித சோதனைகளில் நான் உத்தமனாய் நடக்கும்பொருட்டு உமது கிருபையும் சன்மார்க்க ஒழுக்கங்களும் என் இருதயத்தில் ஆழமாய்ப் பதிந்து நிலைநிற்கும்படி செய்தருளும். உம்மையும் மற்றெல்லாமனிதரையும் நான் நேசிக்கும்படி பூரண அன்பினால் என் உள்ளத்தை நிரப்பியருளும். நான் எப்போதும் உமது சமுகத்தில் இருக்கிறேன் என்றும், என் இருதயத்தின் அந்தரங்கங்கள் எல்லாம் உமக்கு முன்பாக மறைவின்றி வெளியரங்கமாய் இருக்கிறதென்றும் உணர்த்தியருளும். என் தேவனே சாத்தானால் உண்டாகும் தீமையான எண்ணங்களுக்கு இடங்கொடாதபடி என் உள்ளத்தில் முதலாவது நினைப்பும் பாவத்துக்கு எச்சரிக்கையாய் இருக்கும்படி காத்தருளும். தேவரீர் உமது ஆவியால் என் உள்ளத்தை நிரப்பி அதில் வாசம்பண்ணும். என் சரீரம் பரிசுத்த ஆவியின் ஆலயமாயிருக்கும்படி எனக்குள்ளே தங்கும்.



கிருபைநிறைந்த தேவனே [illegible]ானது மரத்தோடே இணைந்திருப்பதினால் சாரம்பெற்று பிழைப்பதுபோல் நான் என் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவோடே ஐக்கியமாகி "உம்மோடே ஒரே ஆவியாய் இருக்கும்படி" (1 கொரி. 6. 17.), அருள்செய்யும். இளைஞர் இளைப்படைந்து சோர்ந்து வாலிபர் இடறிவிழும்போது [illegible]யென்று இருக்கிற [illegible] புதுப்பெலன் அடைந்து இ[illegible] கிருபையை உணர்ந்து விசுவாசம் அன்பு பக்தி [illegible] அதிகமதிகமாய்த் தேறி பூரண[illegible] சதாகாலமாய் உம்மைத் துதிக்கும்படி உமக்கு முன்பாக நிற்க என் நீதியும் பெலனுமாகிய இயேசுகிறிஸ்துவின் நிமித்தம் எனக்கு அருள்செய்யும். ஆமென்.

## 10-ம் அதிகாரம்.

### மெய்ப்பக்தர்கள் தாங்கள் செல்லும் நெறியிலே விக்கினங்கள் வந்தாலும், அவைகளால் தளர்ந்துபோகாமல் தேறி திடன்கொள்ளும்படி சொல்லும் போதனை.

நமது பரம எஜமானனவர் "இடுக்கமான வாசல்வழியாய்ப் பிரவேசியுங்கள்" என்று (லூக். 13. 25.) சொல்லியிருக்கிறார். இதினால் வழி நெருக்கமாய் மாத்திரமல்ல வழியின் வலது இடது பக்கமாய்த் தந்திரமும் மகா பயங்கரமுமான சத்துருக்கள் இருக்கிறார்கள் என்பதை விளக்கியிருக்கிறார். அந்தச் சத்துருக்களை நீ எதிர்த்து ஜெயிக்காவிட்டால் ஒருபோதும் மோட்சம் அடையமாட்டாய்; இது நிச்சயம். தேவபக்தனைத் தொடரும் சத்துருக்களாகிய சேனைக்கு உலகம் மாம்சம் பிசாசு இம்மூன்றும் சேனாபதிகள்போலிருக்கின்றன. உனக்கு விரோதமாய் எதிர்த்து நிற்கிற சத்துருக்களின் வல்லமையை நீ கண்டு தேவனுடைய சர்வாயுத வர்க்கங்களைத் தரித்துத் தைரியமாய்க் கிறிஸ்தவனாய்ப் போர்புரிய வேண்டியவனாயிருக்கிறாய்.

உனக்குச் சீர்கெட்ட சுபாவம் இருக்கிறதென்பதை உன் மனச்சாட்சியே சொல்லும்; உன் மாம்சம் ஆவிக்கு விரோதமாய் இச்சிக்கிறபடியால் நீ செய்ய விரும்புவதைச் செய்யாதபடி

விட்டு விலகுவதுண்டு என்பதை அநுபோகத்தினாலே அறிந்திருக்கிறாய். நீ ஜென்மப்பாவ இச்சைகளுக்கு இணங்கி துர்க்கிரியைகளைச் செய்ய உன்னை ஒப்புக்கொடுத்து அவைகளில் பழக்கமுள்ளவனாயிருப்பதால் பாவம் உன்னிலே அதிகமாய் வல்லமைகொண்டிருக்கிறது. ஆதலால் இந்தத் துர்ப்பழக்கங்களை மிகுந்த வருத்தத்தின்பேரில் வெறுத்துத் தள்ளவேண்டியதாயிருக்கிறது. உன்னைப்போன்றவர்களுடைய துர்க்குணங்களை எடுத்துக்காட்டிய தீர்க்கதரிசி எத்தியோப்பியன் தன் தோலையும் சிவிங்கி தன் புள்ளிகளையும் மாற்றக்கூடுமோ? கூடுமானால் தீமைசெய்யப் பழகின நீங்களும் நன்மைசெய்யக் கூடுமென்று (எரே. 13. 23.) சொல்லிய வசனம் உனக்கும் ஒக்குமென்று அறிந்துகொள். சிலவேளைகளில் நீ நன்மைசெய்யத் தீவிரிக்கையில் இனி விக்கினமும் தவறும் வராதென்று நினைக்கவும் கூடும். ஆனால் உன் கால்களின் கீழாக மடங்கின சத்துருக்கள் சிலகாலத்துக்குள்ளே புதுப்பெலன் அடைந்து உன்னை எதிர்க்கவும்கூடும். மேலும் நீ நினையாத சத்துருக்களாலும் உனக்கு அதிகமான மோசம் நேரிடலாம். முக்கியமாய்ப் பெருமை சோம்பல் தேவனைவிட்டு இரகசியமாய்ப் பின்வாங்குதல் ஜெபம்பண்ண விருப்பமில்லாமை முதலியவைகள் உன்னைத் தாவிப்பிடித்து உனக்குத் தீங்கை உண்டுபண்ணும். இப்படிப்பட்ட திரளான காரியங்களை நீ பொறுக்கவேண்டும். மற்றப்படி நீ கிறிஸ்துவின் சீஷனாய் இருக்கமாட்டாய்.

மேலும் உலகத்தாருடைய ஒழுக்கம் வழக்கம் முன்மாதிரி முதலியவைகளால் பற்பல விக்கினங்கள் உனக்கு வரலாம். உலக காரியங்களினாலும் உலக மனிதராலும் இடையூறுகள் நேரிடலாம். சாத்தானும் தன்னால் இயன்றமட்டும், நீ அதைரியப் படத்தக்கதாக உன்னை வருத்தப்படுத்தலாம். நராஜீவ காருண்ய தேவன், கடினமான எஜமானென்றும், அவரைப் பிரியப்படுத்த உன்னால் மாளாதென்றும் சொல்லுவான். நீ கர்த்தாவினால் சுயாதீனனாக்கப்பட்டவனென்று அவன் அறிந்தாலும், நீ அவனுக்கு அடிமையென்று எண்ணும்படி உன்னைக் கொடிய பயங்கரங்களினால் நிரப்புவான். அதிக அநுபோகசாலியான அந்த வஞ்சகன் உன் பிரயாண முடிவுபரியந்தம், உன்னைப் பின்தொடர்ந்து நீ வியாகுலப்படும்படி வகைதேடி உன்னைச் சோதிப்பான். அந்தத் தீயன் நீ மோட்சத்தில் சேர உன்னைத் தடுக்க தன்னாலே முடியாது என்று அறிந்தாலும், நீ மனச்சமாதானமும் மற்றவர்களுக்குப் பிரயோஜனமுமில்லாதபடி தடைசெய்வான்.



மேற்சொல்லப்பட்ட காரியங்களைத் தேவனுடைய ஜனங்கள் அநுபோகத்தால் அறிந்திருக்கிறார்கள். நீயும் தேவனுடைய பிள்ளையாயிருந்தால், அந்தப்படியே உணர்ந்து அறிவாய்; ஆயினும் நீ அதைரியம் அடையாதே. கிறிஸ்து உனக்கு இரட்சண்ய அதிபதியாய் இருக்கிறார் (எபி. 2. 10.). அவர் அப்படியிருப்பது உனக்கு எவ்வளவோ ஆறுதல். நம்முடைய சத்துருக்களான திரள்சேனைகளை நாம் பார்க்கையில் நாம் நம்முடைய தலைகளை உயர்த்தி அவர்களோடே இருக்கிறவர்களைப்பார்க்கிலும் நம்மோடிருக்கிறவர்கள் அதிகம் என்று (2 இரா. 6. 16.) சொல்லலாம். ஆதலால் நீ கர்த்தாவை நம்பு; அப்போது நீ என்றைக்கும் அசையாத சீயோன் மலையைப்போலிருப்பாய். உன் சத்துருக்கள் உன்னை நெருக்குகையில் கர்த்தர் உன்னோடே இருக்கிறாரென்று அறிந்து, அவர் சமுகத்தில் தைரியமாய்ப் போராடு; விசுவாசத்தில் உறுதியாய் இருந்து அவனுக்கு எதிர்த்து நில் (1 பேது. 5. 9.). கர்த்தர் சோர்ந்துபோகிறவனுக்குப் பெலன்கொடுத்துச் சத்துவமில்லாதவனுக்குச் சத்துவத்தைப் பெருகப்பண்ணுகிறவர் என்பதை நினைத்துக்கொள் (எசா. 40. 29.). பெலவீன விசுவாசிகளில் எத்தனையோபேர் பலவீனத்தில் பலங்கொண்டு; இஸ்ரவேலின் தேவனுடைய நாமத்தினாலே சத்துருக்களுடைய படைகளைக் கால்களில் கீழாய் வைத்துக்கொண்டார்கள்.

உலகமும் நரகமும் உனக்கு விரோதமாய் எழும்பும் சமயத்திலே உயரநோக்கியும் எதிர்நோக்கியும் நீ பார்க்கும் காட்சியினால் உன் உள்ளம் தைரியங்கொள்ளும். உன் சேனாபதி சமீபத்தில் நிற்கிறார். உனக்கு உதவி செய்யவும், உனக்குப் பலன் அளிக்கவும், உன் கிட்ட இருக்கிறார். நீ சோதனையினாலே மிகவும் நெருக்கப்படுகையில் உன்னை விடுவிக்கும்படி சிலுவையில் மரணமடைந்தவரை நினைத்துக்கொள். உன் சேனாபதியின் தைரியத்தைப்பார்த்து அவர் அடிச்சுவடுகளின்படி நடந்துபோ. இதோ சீக்கிரமாய் வருகிறேன், அவனவனுடைய கிரியைகளின்படி அவனவனுக்கு நான் அளிக்கும் பலன் என்னோடேகூட வருகிறது (வெளி. 22. 12.) என்றும், மரணபரியந்தம் உண்மையாயிரு, அப்பொழுது ஜீவகிரீடத்தை உனக்குத் தருவேனென்றும் (வெளி. 2. 10.) அவர் சொல்லியிருப்பதைக் கவனித்துக் கேட்டுக்கொள்வாயாக.

## மோட்சவழியிலே செல்லும் ஆத்துமம் தனக்கு நேரிடும் விக்கினங்களைக் கண்டு திவ்விய ஆதரவுக்காகச் செய்யும் ஜெபம்.

---

துதிக்கப்படத்தக்க தேவனே, சர்வவல்லவரே, உம்மண்டைக்கு ஓடிவருகிறேன், யுத்தங்களாலும் மோசங்களாலும் சூழப்பட்டிருக்கிறேன்; உம்மை நம்புகிறவர்களை அவர்களுக்கு விரோதமாய் எழும்புகிறவர்களினின்று உமது வலதுகரத்தினால் தப்புவித்து இரட்சிக்கிறவரே, உமது பலத்த கையை நீட்டி என்னை இரட்சித்தருளும். நான் இன்றைக்குப் பயபக்தியுடனே உம்முடைய ஆதரவுக்கு என்னை ஒப்புவிக்கிறேன்; உமது வல்லமையை விளங்கப்பண்ணி, நான் உமது செட்டைகளின் நிழலிலே வந்து அடையும்படி செய்தருளும். உமது கிருபை எனக்குப் போதும், உமது வல்லமை என் பெலவீனத்தில் நிறைவாய்த் தோன்றும்படி செய்யும்; நான் உம்மை விடமாட்டேன், உம்மை மறுதலிக்கமாட்டேன் என்று சொல்லத் துணியேன். ஆனாலும் கர்த்தாவே நான் அப்படி உம்மைவிட்டு நீங்க விரும்புகிறதில்லை. மனதார ஏதேனும் ஒரு பாவத்தைச் செய்கிறதைவிட சாவதே எனக்கு நன்று. சோதனைகாலத்தில் என்னை மருளச்செய்து சத்துருக்கள் கையில் என்னை அகப்படுத்துவதற்கு ஏற்ற ஒவ்வொரு துர்க்குணத்தையும் என் நெஞ்சினின்று அகற்றியருளும். கர்த்தாவே என் விசுவாசத்தைப் பெலப்படுத்தி, என் நம்பிக்கையைத் தைரியப்படுத்தியருளும். பூமியிலும் நரகத்திலும் இருந்து உண்டாகும் சோதனைகளுக்கு எதிர்த்துநிற்க என் முகத்தைக் கற்பாறையைப்போலாக்க என்னைத் தைரியப்படுத்தும். பாவிகள் எனக்கு நயங்காட்டினால், நான் சம்மதியாதபடி செய்தருளும். அவர்கள் என்னை நிந்தித்தால், நான் அதை எண்ணாமலும் என்னைப் பயமுறுத்தினால் நான் அதற்கு அஞ்சாமலும் இருக்கும்படி எனக்கு அருள்செய்யும். அவர்கள் என்னைக் கெடுக்க வகைதேடுகையில் நான் பரிசுத்தமும் அன்பும் விவேகமுமான பக்திவைராக்கியத்தோடே அவர்களைச் சீர்ப்படுத்திக் குணப்படுத்துவதற்கு நான் முயற்சிபண்ண எனக்குக் கிருபைசெய்யும். உமது மார்க்கத்தை நிந்திப்பவர்களுக்கு முன்பாக நான் வெட்கப்படாமல், உம்முடைய காரியத்துக்காக நியாயஞ்சொல்ல அருள்தாரும். என் ஆத்துமாவிலே சந்தோஷமும் மகிழ்ச்சியும் கேட்கும்படி செய்யும். அப்போது பாதகருக்கு உமது வழிகளை உபதேசிப்பேன்; பாவிகள் உம்மிடத்தில் மனந்திரும்புவார்கள். கர்த்தாவே இப்பொழுதும் எல்லாக்காலங்களிலும்



என்னைக் காத்தருளும். நான் வயசில் முதிர்ந்து [illegible]யில் செழித்தோங்கினாலும், உம்மாலன்றி என் சுயபெலத்தினால் போராடி நிலைநிற்கக்கூடும் என்ற பெருமையை என்னிலிருந்து நீக்கியருளும். நான் தேவபக்தியிலே குழந்தையைப்போல் பெலவீனனாய் இருந்தாலும், நீர் என்னைத் தாங்கிக்கொள்ள முடியாதென்று நான் நினைக்கவொட்டாதிரும். தேவரீர் நீர் என்னை நடத்தும் வழியிலே நான் சென்று, நீர் என்னை வைக்கும் நிலைமையிலே என் கடமைகளை நிறைவேற்றி, என் இரட்சண்யத்துக்கு விரோதிகளான சத்துருக்களை எதிர்த்துப் போராட எனக்கு அருள்தாரும்.

மகத்துவமுள்ள மீட்பரே, என் இரட்சண்ய அதிபதியே, என் விசுவாசத்தைத் துவக்குகிறவரும் முடிக்கிறவருமாயிருக்கிற இயேசுவே, பேதுருவைப்போல நானும்மை மறுதலிக்க ஏதுவாயிருக்கையிலே உருக்க இரக்கங்களால் நிறைந்த மகத்துவமான உமது கண்களால் என்னை நோக்கிப்பார்த்து, நான் விழாதபடி என்னைக் காத்து நான் உமக்கு அமைந்து சீர்ப்படும்படி கிருபைசெய்யும்; நான் செய்திருக்கிற தவறுதல்கள்நிமித்தம் என்னை நானே தாழ்த்தி, இனி நான் மகா ஜாக்கிரதையும் சாவதானமுமாய் நடந்துகொள்ளும்படி என்னைப் போதித்தருளும். ஆமென்.

---

# 11-ம் அதிகாரம்.

---

## கிறிஸ்தவன் தன்னைப் பூரணமாய்த் தேவனுக்குப் பிரதிஷ்டை செய்யும்படி சொல்லும் போதனை.

நம்மைச் சிருஷ்டித்துப், பற்பல நன்மைகளால் நிறைந்த இந்த அலங்காரமான உலகத்தில் நம்மை வைத்து, நாம் பாலகராய் இருந்தபோது நம்மை ஆதரித்துப், பாலியராய் இருந்தபோது நம்மைக் காத்து, இதுபரியந்தம் நமக்கு இடைவிடாமல் சகாயஞ்செய்து தாங்கி காப்பாற்றின கர்த்தராகிய தேவனுக்கு நம்மை முழுவதுமாய் ஒப்புக்கொடுப்பதே உசிதமான கிரியை. தம்முடைய வல்லபத்தினால் நம்மை உருவாக்கித் தமது குமாரனுடைய இரத்தத்தினால் நம்மை மீட்டு இரட்சிக்கும் தேவனுக்கு நித்திய அடியாராய் இருப்பது மிகவும் நீதியல்லவோ. அப்படி நினைத்தாயாகில் காருணிய தேவனையும் அவருக்குச் செய்யும் ஊழியத்தையும் விட்டு நீ நீங்கினது எனக்கு மிகவும்

துக்கமாயிருக்கும். இனி ஒருநாள்முதலாய் அவரைவிட்டு அகன்றுபோக விரும்பாமல் நீ சந்தோஷத்தோடே அவர் பாதம் அண்டியிருந்தும் அவரைச் சேவிக்கும்படி நீ முயற்சி செய்வாய்; நீ உன் அவயவங்களை அநீதியின் ஆயுதங்களாகப் பாவத்துக்கு ஒப்புக்கொடாமல் உன்னை மரித்தோரிலிருந்து பிழைத்திருக்கிறவனாகத் தேவனுக்கு ஒப்புக்கொடுத்து உன் அவயவங்களை நீதிக்குரிய ஆயுதங்களாகத் தேவனுக்கு ஒப்புக்கொடுப்பாய். (ரோம. 6. 13.)

## தன்னைத்தானே தேவனுக்கு முழுவதுமாய்ப் பிரதிஷ்டைசெய்து அவரோடு உடன்படிக்கைசெய்யும் பிரார்த்தனை.

மாறாத நித்தியதேவனே, பயங்கரமுள்ள உமது சந்நிதானத்தில் பணிவுடன் விழுந்து உம்மை நமஸ்கரிக்க விரும்புகிறேன். ராஜாதிராஜாவும் கர்த்தாதி கர்த்தருமாகிய உமது மகத்தான சந்நிதானத்தில் காணப்பட தலையை உயர்த்துகிற நீசப்புழுவாகிய என்னை நடுக்கம் பிடிப்பது சரியே. கர்த்தாவே உமது மகத்துவம் எவ்வளவு பெரிதோ, அவ்வளவாய் உம்முடைய இரக்கங்களும் பெரிதாகவே இருக்கிறது. தேவரீர் இயேசுகிறிஸ்துவின் மூலமாய் எங்களுக்கு அருளிச்செய்திருக்கிற வசனத்தினாலே ஏவப்பட்டு என்னை உமக்கு ஒப்புக்கொடுக்கும்பொருட்டு உமது சந்நிதானத்தில் வருகிறேன்.

உமது குமாரனுடைய நாமத்தினால் நான் அழைக்கப்பட்டு, அவருடைய நீதியையும் கிருபையையும் நம்பி உம்மண்டைக்கு வருகிறேன். நான் வெட்கமும் மனக்கலக்கமும் உடையவனாகத் தன்னுடைய மார்பில் அடித்துக்கொண்டு தன்னைத் தாழ்த்தின ஆயக்காரன் சொன்னதுபோல, நானும் "தேவனே பாவியாகிய என்மேல் கிருபையாயிரும்" என்று பிரார்த்திக்கிறேன். பிதாவே நான் மகாபாதகனென்று அறிக்கை பண்ணுகிறேன். நான் பிறந்ததுமுதல் உம்மைவிட்டு வழிதப்பினவன்; ஆயினும் உமது மட்டில்லாத கிருபையினால், நான் உணர்வடைந்து உம்மண்டைக்குத் திரும்பி, நீர் என் ராஜாவென்று உம்மைப் போற்றுகிறேன். கர்த்தாவே என்னை ஏற்றுக்கொள்ளும், நான் என்றும் உம்முடையவனாயிருக்க விரும்புகிறேன்.

கருணைநிறைந்த தேவனே, மிகுந்த பயபக்தியோடு என்னை உமக்கு ஒப்புவிக்கிறேன். என்னை ஆண்ட ஆண்டவமார்



களை நான் இதுமுதல் முழுவதுமாய் அகற்றி, நீர் மாத்திரமே என் ஆண்டவர் என்று அறிக்கைபண்ணி, முழுவதுமாய் உமக்கு ஊழியஞ்செய்ய என்னை ஒப்புக்கொடுக்கிறேன். என் தேகம் முழுவதையும், என் தத்துவங்களையும், என் ஆத்துமாவையும் இன்றைக்கு உமக்கு ஒப்புவிக்கிறேன். இவைகளை ஏற்றுக்கொள்ளும். நான் உம்முடைய சித்தத்தை நிறைவேற்றி, உம்முடைய மகிமைப் பிரஸ்தாபத்துக்காகப் பிரயாசத்தைச் செலுத்தும்படி பெலனையும் தைரியத்தையும் அநுக்கிரகித்தருளும். நரஜீவதயாபரரே, இவ்வண்ணமாக நான் என் ஜீவகாலபரியந்தம் நேர்மையாய் நடந்து, எக்காலமும் பிரியத்தோடே உமது திருவுள்ள சித்தத்துக்கு அமைந்து செல்ல விரும்புகிறேன்.

என் சரீரத்தையும் ஆத்துமாவையும் உமக்கு ஒப்புக்கொடுப்பதுமன்றி, தேவரீர் எனக்கு அருளியிருக்கிற பொருளையும் உமக்குப் பிரதிஷ்டையாக்குகிறேன். இவைகள் அனைத்தையும் உமது சித்தத்துக்கு அமைத்து, உமது இஷ்டப்படி நடத்தியருளும். எனக்குள்ளவைகள் எல்லாவற்றையும் உமது வசம் ஒப்புவிக்கிறேன். நீர் சகல மனிதஜாதியாருக்கும் தந்தையாயும் ஆண்டவராயும் இருக்கிறீர் என்று எண்ணி, சகலமும் உமது திருவுள்ளத்துக்குப் பிரியமானபடி நடக்குமென்று உணர்ந்து, உமது ராஜ்யபரிபாலனம் மனிதர் யாவருக்கும் மகிழ்ச்சியைக் கொடுக்கத்தக்கதென்று அறிந்து, இவ்வுலக நன்மைகளை நீர் தந்தாலும் தராவிட்டாலும் உமது சித்தத்துக்கே அமைந்து நடக்கக் கிருபை அளியும்.

கர்த்தாவே உமக்கு ஊழியஞ்செய்ய என்னைக் கருவியாகப் பிரயோகித்தருளும். உம்முடைய சொந்த ஜனங்களோடே என்னையும் சேர்த்துக்கொள்ளும். உம்முடைய நேசகுமாரனுடைய இரத்தத்தினால் என்னைக் கழுவியருளும். நான் அவருடைய நீதியினால் உடுத்தப்படுவேனாக. அவருடைய ஆவியானவரால் பரிசுத்தமாக்கப்படுவேனாக. நான் அவருடைய சாயலுக்கு ஒப்பாகும்படி மறுரூபப்படுத்தியருளும். அவர்மூலமாய்ச் சுத்திகரிப்புக்கும் மனமகிழ்ச்சிக்கும் ஆறுதலுக்கும் வேண்டிய வரப்பிரசாதங்களைக் கொடுத்தருளும். என் தகப்பனும் தேவனுமான உம்முடைய திருமுகப் பிரகாசத்தில் என் ஜீவகாலம் எல்லாம் நடக்க என்மேல் கடாட்சம்வையும்.

பயபக்தியான என் மரணவேளையில் இவ்வுலக பற்றுகள் என்னைவிட்டு ஒழியும்போது, நித்திய ரட்சிப்பைப் பெறுவேன் என்ற நம்பிக்கையினாலே என்னைப் பலப்படுத்தியருளும். ஆமென்.

# 12-ம் அதிகாரம்.

## சபையில் சேர்ந்து கர்த்தருடைய ராப்போசனத்தை அனுசரிப்பதைப்பற்றிச் சொல்லிய போதனை.

இந்த அதிகாரத்திலே நீ உன் பூரண சம்மதத்தின்பேரில் தேவனுடைய உடன்படிக்கை சனங்களில் ஒருவனாய் இருக்கிறாயென்றும், பயபக்தியோடும் மனோற்சாகத்தோடும் தேவனுக்குத் தொண்டுசெய்ய உன்னை ஒப்புக்கொடுத்திருக்கிறாய் என்றும், நீ மோட்சவழியிலே ஒழுகத் தீர்மானித்திருக்கிறாய் என்றும் காட்டியிருப்பதை நீ அறிந்துகொள்ளலாம். நீ பூலோகத்தில் செய்திருக்கிற உடன்படிக்கை பரலோகத்திலே உறுதிப்படவேண்டுமென்பது என்னுடைய விண்ணப்பமாயிருக்கிறது. கிறிஸ்துவானவரைப்பற்றி நாம் மதிப்பாய் எண்ணவும், நாம் அவரோடே பண்ணிய உடன்படிக்கையைப் புதிப்பிக்கவும் தக்கதாய், அவர் இந்தக் கிருபையின் எத்தனத்தை ஏற்படுத்தியிருக்கிறார். அவர் தமது மரணத்தினாலே வெளிப்படுத்திய ஒப்பில்லாத அன்பையும், நாம் நம்மைக் கர்த்தருக்கு முழுவதுமாய் பயபக்தியுடன் ஒப்புவிப்பதையும், ஒருவரிடத்தில் ஒருவர் உண்மையாய் அன்புகூருவதையும் விளக்கும்படி கிறிஸ்தவர்கள் ஆராதனைவேளையில் ஒன்றுகூடி, ஒரே அப்பத்தைப் புசித்து, ஒரேபாத்திரத்தில் பானம்பண்ணவேண்டியவர்களாயிருக்கிறார்கள். இதுவே கர்த்தருடைய இராப்போசனம் ஏற்படுத்தப்பட்ட முக்கியநோக்கம். நாம் கர்த்தருடைய ராப்போசனத்தில் சேரும்போதெல்லாம், அவருடைய மரணத்தைத் தெரிவிக்கிறவர்களாயிருக்கிறோம் (1 கொரி. 11.). 26. பாத்திரமானது அவருடைய இரத்தத்தினாலாகிய புதுஉடன்படிக்கையாயிருக்கிறது. அதாவது தம்முடைய இரத்தத்தினாலே உறுதிப்படுத்தப்பட்ட உடன்படிக்கைக்கு முத்திரையாயிருக்கிறது. இதினால் நாம் உடன்படிக்கையின் ஆசீர்வாதத்தை ஆசித்துத் தேவகிருபையினாலே அதின் போதனைக்கு அமைந்து நடக்கத் தீர்மானமுள்ளவர்களாய் அந்த நியமத்தை அநுசரிக்கவேண்டும். இப்படிச் செய்தால் நாம் கிறிஸ்துவின் சரீரத்துக்கும் இரத்தத்துக்கும் ஐக்கியமுள்ளவர்களாய் இருப்போம்.



நீ இப்போது … …யிலே ஒழுகத் தீர்மானித்திருக்கி
றாய். இதற்கு … …ம் என்று உனக்கு முன்னமே
தெரிவித்திருக்கிறேன் … …நெருக்கி எவும் கிறிஸ்துவின்
அன்பினால், நீ தைரி… …டு அந்த விரோதங்களை மேற்
கொண்டு வெற்றிசிற… …டுவாய். ஆகையால் எப்பொழு
தும் அவருடைய அன்பை உன் சிந்தையில் வைத்து, அவரைத்
தியானிக்கவேண்டும். கர்த்தருடைய ராப்போசனம் என்னும்
தெய்வீக நி…மமானது, கிறிஸ்துவின் மரணத்தைத் திருஷ்டாந்
தா… …க்காட்டும்படி ஆசரிக்கப்படும் ஏற்பாடானதால்,
…ரணத்தை நினைப்பூட்டுவதற்கு உபயோகமாயி
…ருடைய அப்பம் பிட்கப்பட்டு திராட்சர
ரு… …ளையில் இயேசுநாதருடைய திருமேனி
சப… …வதையுண்டதையும், அவருடைய திரு
கரு… …போல சிந்தப்பட்டதையும் யார் உணரா
இரத்… …ட மீட்புக்காகவும் ரட்சண்ணியத்திற்கா
திருப… …த்தக்கதான பாடுகளைத் …குமாரன்
கவும் … …நினைக்கையில் மனங்கசந்து உருகாதவர்
பட்டு ப…
கள் யார்? …டு உடன்படிக்கையின் ஆசீர்வாதங்கள் தேவ
னுடைய …குமாரனுடைய இரத்தத்தினாலே …றுதியாக்கப்பட்டிருப்பது எவ்வளவு மேன்மையாகத் தோ…கிறது. நம்முடைய பரமபிதாவாகிய தேவனண்டைக்கு நாம் சமீபித்துக் கனபத்தியுடன் அவரைச் சேவிக்கும்படி நம்மை அவருக்கு ஒப்புக்கொடுக்கையில், நாம் நம்முடையவர்களல்ல, மிகுந்த கிரயத்தினாலே, கொள்ளப்பட்டவர்களாயிருக்கிறோம் என்ற சிந்தனை மனதில் ஆழமாய்ப் பதியுமே. நாம் பயபக்தியோடே வெறுத்துத்தள்ளின பாவங்களை இனிச் செய்யும்படி தூண்டிவிடப்படும்போது எவ்வளவு எச்சரிக்கையாயிருக்க நம்மை ஏவுகிறது. நாம் கிறிஸ்துவுக்குள் ஒன்றாயிருக்கிறோமென்று நினைக்கையில், நம்மொவ்வொருவருடைய இருதயமும் அன்பினால் இணைக்கப்படுவதற்கேதுவாகும். நாம் ஒருவரோடொருவர் மாத்திரமல்ல எங்கும் கர்த்தராகிய இயேசுவின் நாமத்தைத் தொழுதுகொள்ளுகிற அனைவரையும் ஆவியில் அந்நியோன்னியமாயிருக்கும்படி அவருடைய திருரத்தம் பசைபோலிருக்கிறது. இந்த ஐக்கியத்தினால் திருச்சபைப் பூரணப்படும்போது நாம் கர்த்தரோடு வாழும்நாள் வருமென்று நம்பி எதிர்பார்த்திருக்கிறோம். இவ்வித எண்ணமாய் நாம் நம்மை வெறுத்து நமது சிலுவையை எடுத்து நம்முடைய எஜமானைப் பின்பற்ற எழுப்பிவிடுகிறதாயிருக்கிறது. அதுவுமல்லாமல் ஜெப

த்தினாலும் மற்றப் பிரயத்தனங்களினாலும் நித்தியானந்த மகி
மையிலே அவருக்கும் நமக்கும் கூட்டாளிகளாயிருக்க, இப்
போது அவரைப் பின்பற்றி அவ ருக்குச் சிநேகிதராயிருப்பவர்
களுக்கும் அவருடைய திருரத்தத்தால் மீட்கப்பட்டவர்களுக்
கும் நாம் தொண்டுசெய்ய வேண்டியவர்களாயிருக்கிறோம்."

## கர்த்தருடைய ராப்போசனத்தைச் சேர ஆவலாய் விரும்புகிறவர்கள் தங்களுக்குச் சந்தேகங்கள் இருக்கையில் செய்யவேண்டிய ஜெபம்.

சர்வகாருண்ணிய கர்த்தாவே! உம்முடைய ப பரிசுத்
தத்திலும் அன்பிலும் எறக் கட்டப்படும்படி ணமும் கிரு
பையுமாய் ஏற்படுத்தின நியமங்களுக்காக உம துதி செலுத்
துகிறேன். கிருபையுள்ள ரட்சகரே, நீர் உட டைய மரணத்
தினால் வெ ரிப்படுத்திய ஒப்பில்லாத அன் காலத்திலு
முள்ள உம்முடைய ஜனங்கள் அன்பின் ல்கைகட்டப்
பட்டவர்களாய் அநுசரிக்கும்படி நியமித்திரு ரே. கர்த்தா
வே நான் உத்தமத்தோடே என்னை உமக்கு ஒப்புக்கொடுக்க
விரும்புகிறேன் என்பதை நீர் அறிந்திருக்கிறீர். உம்முடைய
பரிசுத்த நியமத்தை ஆசரிப்பதற்கு என்னில் உண்டாகும் தாம
தம் அபாத்திரமாய் அதில் சேர்வேனோ என்கிற பயத்தினால்
உண்டாயிருக்கிறது. ஆனாலும் தேவரீர் உம்முடைய கட்டளை
களைப்பற்றி எனக்குப் பயபக்தியான எண்ணங்களைத் தந்திருப்
பதால் நீர் என் நன்மைக்கென்றே நியமங்களை ஏற்படுத்தியிருக்
கிறீர் என்பதை அறிவேன். கர்த்தாவே இன்று செய்யவேண்டிய
காரியத்துக்கு எனக்குப் போதனைதாரும். என்னைப் பரீட்சித்
துச் சோதித்துப்பாரும், என் உள்ளிந்திரியங்களையும் என் இரு
தயத்தையும் புடமிட்டுப்பாரும். முகாந்தரமில்லாமல் நான்
உம்முடைய பரிசுத்த பந்தியில் சேராதிருக்கப் போக்குச்
சொல்ல இடங்கொடாதேயும். நிராதாரமான என் சந்தேகங்
களைச் சுத்தம்பண்ணும். என் இருதயத்தை விசுவாசத்தினா
லும் அன்பினாலும் நிரப்பியருளும், நான் உமக்குப் பிரியமில்
லாத எல்லாவற்றையும் வெறுத்து, நீர் விரும்புகிறதெல்லாம்
செய்ய என்னை நடத்தியருளும். என் ஆண்டவர் சிலுவையில்
அறையுண்டதைப்பற்றி எப்போதும் என் மனதில் தியானம்
பண்ணி, அவர் தமது மரணத்தினாலே வெளிப்படுத்திய அன்
பை என் ஆத்துமாவில் சிந்தனைசெய்து, இந்த அன்பின் விருந்



தில் பங்குபெறுகிறவர்களில் நானும் ஒருவனாயிருக்க தயை
செய்யும்.

கர்த்தாவே, நான் உமது சபையில் சேர்ந்தவனாய் உமது ஜன
ங்கள் எல்லாருக்காகவும் வேண்டிக்கொள்ளுகிறேன். நீர் உம்
முடைய சுதந்தரத்தைப் போஷித்து, அவர்களை என்றென்றைக்
கும் உயர்த்தியருளும். கிறிஸ்தவர்கள் அறிவிலும், பரிசுத்தத்
திலும், அன்பிலும் செழித்தோங்குவார்களாக. உம்முடைய
ஆசாரியருக்கு இரட்சிப்பை உடுத்தி, நீர் தெரிந்துகொண்ட
ஜனங்களை அவர்கள் மூலமாய்ச் சந்தோஷப்படுத்தியருளும்.
உமது பந்தியைச் சுற்றிஉட்கார்ந்து, உம்முடைய இரட்சணியத
தை விரும்புகிறவர்கள், தம்முடைய ஊழியக்காரருடைய சுகத்
தை விரும்புகிற கர்த்தருக்கு மகிமையுண்டாவதாக என்று
சொல்லக்கடவார்களாக. கர்த்தராகிய கிறிஸ்துவை ஏற்றுக்
கொண்டவர்கள் எல்லாரும், அவருக்குள் உண்மையாய் நடந்து
கொள்வார்களாக. நாங்களெல்லாரும் முதற்பேறான சங்கத்
தார் கூடும் இடத்திலே கூடவும், அடையாளங்களும் நிழலாட்
டங்களும் ஓய்ந்து நித்தியஜீவியாகிய மீட்பரைத் தரிசித்துவாழு
உலகத்திலே சிறந்த ஆராதனைசெய்யவும் அருள்புரிந்தருளும்.
ஆமென்.

# 13-ம் அதிகாரம்.

## தேவனோடே இடைவிடாமல் ஐக்கியப்பட்டிருந்து, அவருக்கு முன்பாகப் பயபக்தியோடே நடக்கும்படி சொல்லிய போதனை.

நீ உன்னைப் பரிசோதித்து, உனக்கு வேண்டிய சகாயத்துக்
காகச் செபித்து, கர்த்தருடைய பந்தியைச் சேர்ந்து, உன்பே
ரிலிருக்கிற அவருடைய பொருத்தனையை எப்படி நிறைவேற்
றலாமென்று சிந்தனை செய்கிறவனாய் இருக்கலாம். நீ நாடோ
றும் தேவனோடே சேர்ந்து, அவருக்கு முன்பாகத் தினமும்
பயபக்தியாய் ஜீவனஞ்செய்யும்படி உனக்குச் சில நெறிகளை
இங்ஙனம் தெரியக்காட்டுவேன். அதைக்கேட்டு அதன்படி
நடந்துகொள்.

இப்போது, நான் உனக்குச் சொல்லும் நெறிகள் காலை, மத்தியானம், மாலை என்ற மூன்று பொழுதுக்கும் உபயோகமாயிருக்கும். உன் காரியத்துக்கும் சமையத்துக்கும் தக்கதாய் மூன்று பொழுதிலும் தேவனுக்கு முன்பாக நடந்துகொள்ளவேண்டிய பிரகாரம் இன்னதென்று, நீ அதினால் அறிந்துகொள்ளலாம்.

காலையிலே நித்திரையை விட்டெழுந்தவுடனே, தேவனுக்கு நேராக உன் இருதயத்தை ஏறெடுத்து, முழு உள்ளத்தோடே தனித்தியானஞ் செய்யவேண்டும். பக்திமான்கள் யாவரும் தேவன் செய்த அநந்த நன்மைகளை நன்றியோடே நினைத்து, உத்தமமாய் அவரைத் தியானியாதபடி இரார்கள். காலையில் எழும்பினபோது, உனக்குச் சுகமும் மனமகிழ்ச்சியும், நித்திரை செய்ததினாலுண்டாகிய பெலனும், விக்கினங்களில் நின்று விலக்கிக் காக்கப்பட்டு சூரிய பிரகாசத்தைப் பார்க்கும்படியான சலாக்கியமும், பந்துக்கள் சிநேகிதர்களைக் காணும்படியான இன்பமும், கர்த்தருக்குத் தொண்டுசெய்யும் உன்னுடைய மனந்தேர்ச்சியடையவும் இன்னொருநாளைச் செலவிடவும், நித்திய சுகபாக்கியங்களும், மகிமையும் பெற்றுக்கொள்ளும்படி மரித்தோரிலிருந்து உயிர்த்தெழும்புவோம் என்ற நம்பிக்கையுமாகிய இவைகளையெல்லாம், தியானிக்கையிலே, மனம் பூரித்துச் செழித்தோங்குமே. மேற்சொல்லிய காரியங்களில் ஒன்றைச் சிந்தித்தாலும், நாம் மனமகிழ்ச்சியோடு கர்த்தரைப் பயபக்தியாய் ஆராதிப்பதற்கு உபயோகமாயிருக்கும்.

தனித்தியானஞ் செய்யும்படி இரண்டொரு நாழிகைநேரம் கிடைக்கக்கூடியவர்கள், பின்சொல்லிய பிரகாரம் செய்வதே உசிதம். அது எப்படியெனில் முழங்காலில் நின்று, தேவன் அருளிய இரக்கங்களைச் சிந்தித்து, அவருக்கு நன்றியறிதலைக் காட்டும்படி கனபக்தியோடு அவருக்குத் தோத்திரம் செலுத்தி, நாம் அநுபவிக்கிற இகபர நன்மைகள் யாவுக்கும் கிறிஸ்துவே மூலமென்றும், நமக்குண்டாயிருக்கிற ஞானஉணர்ச்சி தேவஆவியானவரால் நடத்தப்பட்டிருக்கிறதென்றும், அவைகளுக்காகக் கர்த்தரைத் துதிக்கவேண்டும்.

பின்பு அன்றையத்தினம் செய்யவேண்டிய காரியங்கள் இவைகளென்று அறிந்து, "இன்றைக்கு நான் கர்த்தருடைய மகிமைக்காக என்னசெய்யவேண்டியதென்றும் நன்மை செய்யவும் நன்மையைப் பெறவும் நற்சமையம் எது" என்றும்; நாம் செல்லும் இடங்களில் நம்மைச் சந்திக்கும் ஜனங்களாலும் நமக்கு நேரிடும் சம்பவங்களாலும் என்னென்ன சோதனைகள்



நேரிடுமோவென்றும் சிந்தித்துக்கொள்ளவேண்டும். இதன்மேல் நாம் செய்யவேண்டிய கடமைகளை நிறைவேற்றும்படி தேவன் நம்மைத் திடப்படுத்தி, நமக்கு நேரிடும் மோசங்களினின்று நம்மை விலக்கிக் காத்து, தமது மகிமையை விளக்கும்படி நாம் கையிட்டுச்செய்யுங் காரியங்கள் சித்தியாகும்படி அநுக்கிரகிக்கவும், நாம் நினையாதவண்ணம் நமக்கு நேரிடும் சோதனைகளை மேற்கொள்ள சகாயஞ்செய்யவும் இந்தநாளில் வரும் துக்கங்களைப் பொறுமையோடும் பயபக்தியோடும் சகிக்கவும் அருள்செய்யும்படி அவரைப் பிரார்த்திக்கவும் வேண்டும்.

அதற்குப்பின் உனக்கு இருக்கும் சாவகாசத்துக்குத் தக்கதாக, வேதத்திலே பத்துப்பன்னிரண்டு வசனம் வாசிக்கலாம். விளங்காமல் அதிகம் வாசிப்பதைப்பார்க்கிலும், தெரிய விளங்கும்படி கொஞ்சம் வாசிப்பது நலம். போஜனம் ஜீரணியாதிருந்தால், அது சரீரத்துக்குப் பிரயோஜனமாயிராது, வேதத்தை வாசிக்கத் தொடங்கும்போது, அதில் அடங்கியபொருளைத் தெளிவாய் அறியும்படி பரிசுத்தஆவியின் அருளை நாடிக்கொள். வாசித்து முடிந்தபின், நீ கற்றுக்கொண்ட போதனையைச் சிந்தித்து, அதின்படி நடக்கத் தீர்மானிக்கவேண்டும்.

நீ இந்த நாளைப் பயபக்தியுடன் செலவிடும்படி பின் சொல்லப்படும் நெறிகளைச் சிந்தித்துக்கொள். பெலவீனமான ஒரு குழந்தை நடக்கப் பயிலும்போது, பயந்து தான் விழாதபடி தன் அருமைத்தகப்பன் கையைப் பிடிப்பதுபோல், நாம் ஒவ்வொருநாளும் நிறைவேற்றவேண்டிய கடமைகளைச் செய்வதற்குப் பெலனற்றவர்களாயிருக்கிறோமென்பதையறிந்து, தேவனுடைய வல்லமையின்பேரில் விசுவாசம் வைக்கவேண்டும். ஆதலால், நீ எந்த நிலைமையில் வைக்கப்பட்டிருந்தாலும், உன்னை நம்பாமல் தேவனுடைய சகாயத்தையே நம்பிக்கொள். நீ எந்தக் காரியத்தையாவதுசெய்ய முயலும்போது, தேவனை உன் அதிகாரியென்று உணர்ந்து, அவருடைய மகிமையை நாடிக்கொண்டு, கவலையீனம் சோம்பல் முதலியவைகளை அகற்றி, உன்னால் இயன்றமட்டும் அதைச் சமையத்திலே பிரயாசத்தோடு நிறைவேற்றிக்கொள்ளவேண்டியது.

மேலும் நீ ஒரு கூட்டத்திலிருக்கையில் நீ நடக்கவேண்டிய முறைகளைச் சொல்லுகிறேன். உன்னையும் நீ அநுசரித்து வரும் கிறிஸ்துமார்க்கத்தையும் நினைத்து, இகழத்தக்கதாக யாதொன்றும் பேசாமல் எச்சரிக்கையாயிரு. யாரைக்குறித்தாவது புறத்தியில் பின்புறணியும் சமுகத்தில் இகழ்ச்சியும் சொல்

லாதிரு; மேலும், உண்மைத்தப்பும், சீர்கேடும், கோபமூட்டுதலும், கபடமும் உண்டாக்கத்தக்கவைகளை உரைக்காதிரு.

நீ பேசுகிறதெல்லாவற்றிலும் குற்றமில்லாம லிருப்பதுமாத்திரமல்ல, உனக்கும் மற்றவர்களுக்கும் அது ஆத்துமப்பிரயோசனம் உண்டாவதற்கு ஏதுவாயுமிருக்கவேண்டும். இப்படி யாவரிடத்திலும் பேசத்தக்கதாக ஏற்கனவே திவ்விய காரியங்களில் சிலவற்றை ஆயத்தம்பண்ணிக்கொள்வது நன்மை. காலையில் வாசித்த வேதவாக்கியங்களிலொன்றைத் தெரிந்து, அதைத் தியானித்து, மனதில் வைத்துவைப்பது உசிதமாயிருக்கும். அப்போது அவ்வசனம் இன்பமும், பிரயோஜனமுமான நீரூற்றைப்போல உன் உள்ளத்திலிருந்து புறப்பட்டுச் சுகிர்த நன்மைகளை உண்டுபண்ணும்.

பின்னும் பற்பல இடங்களில் நீ செல்லும்போதும், வெவ்வேறுதொழிலை நீ நடப்பிக்கும்போதும், பலவித சோதனைகள் உனக்கு நேரிடும். அப்படி நேரிடுகையில் எனக்கு என்ன மோசம் வருமோவென்று எச்சரிக்கையுடன் யோசித்து, அந்தச் சோதனைகள் உன்னை நெருக்கும்போது நீ செய்வதெல்லாவற்றையும் கர்த்தர் பார்த்துக்கொண்டிருக்கிறாரென்று நினைத்துக்கொள்.

இப்படித் தப்ப வகைதேடும்படி நெடுங்காலம் பற்பல வகையாய் ஆலோசனை செய்வதைப்பார்க்கிலும், கடவுளை நோக்கி ஆவலோடே கொஞ்சநேரம் ஜெபிக்கிறதே மிகவும் உத்தமம். நீ தேவனை நோக்கி ஜெபம்பண்ணத் தொடங்கும்போது, கர்த்தாவே கிருபையின் ஆவியையும் விண்ணப்பத்தின் ஆவியையும் என்மேல் பொழிந்தருளுமென்றும், தேவவசனத்தை வாசிக்க எடுக்கும்போது, கர்த்தாவே வேதத்திலுள்ள அதிசயங்களை நான் காணும்படி என் கண்களைத் திறந்தருளும் என்றும்; லௌகீக காரியத்தைச் செய்ய எத்தனிக்கும்போது, கர்த்தாவே நான் நன்மை செய்யவும், நன்மை பெறவும் எனக்குக் கிருபை செய்யும் என்றும்; துக்கங்கள் நேரிடும்போது, கர்த்தாவே நான் அநுகூலமாய் நடந்துகொள்ளவதற்கு ஞானத்தைக் கட்டளையிட்டருளுமென்றும் ஜெபம் பண்ணுவாயாக.

சகல சிருஷ்டிகளும் சகல சம்பவங்களும் தேவனுடைய மேலான ஆளுகைக்குள் இருக்கின்றன. ஆதலால், நீ அநுபவிக்கும் நன்மை தீமைகளில் அதை நினைத்து, அவருக்கு அமைந்து பொறுமையாய் நடக்கவேண்டும். நீ பெற்றிருக்கிற ஒவ்வொரு நன்மையும், அவருடைய தயவினாலே உனக்



குக் கிடைத்திருக்கிறதென்று உணர்ந்துகொள்ளவேண்டும். அன்றியும் உனக்கு உண்டாகும் விக்கினங்கள், கஷ்டங்கள், துன்பங்கள் தெய்வீக கரத்திலிருந்து வருபவைகளென்று எண்ணி, பொறுமையுடன் உன் ஆத்துமாவைக் காத்துக்கொள்.

மாலையிலே நீ தனித்தியானஞ் செய்யும்போது வேதத்தில் ஒரு பாகத்தை வாசித்து, அதைச் சிந்தித்து ஜெபம்செய். பின்பு ஒரு ஞானப்பாட்டையாவது ஒரு சங்கீதத்தையாவது வாசித்து, உன் உள்ளத்தைப் பரிசோதி; எப்படியெனில், இன்று நான் தேவனுக்குத் தொண்டுசெய்தவிஷயத்தில் அசட்டையாயிருந்தேனா? காலையில் நான் எழுந்திருக்கும்போது தேவன் எனக்குச் செய்த நன்மைகளை நன்றியறிதலோடே உணர்ந்தேனா? அவரைத் துதித்து, நான் என்னை அவருக்குப் பிரதிஷ்டையாக்கினதைத் திரும்பப் புதுப்பித்தேனா? நான் எவ்வித சிந்தையுடன் வேதத்தை வாசித்தேன், என் ஆத்தும பிரயோஜனத்துக்காக அதை வாசித்தேனா? அல்லது ஒரு விநோதத்துக்காக வாசித்தேனா? இன்று நான் என் சாதாரண வேலைகளைச் சாக்கிரதையோடும் ஞானஉணர்ச்சியோடும் செய்தேனா? ஒவ்வொரு கிரியையும் அததற்கேற்றகாலத்தில் விரைவுடன் கர்த்தருக்கென்று நிறைவேற்றினேனா? என்று வினாவி உன் உள்ளத்தைச் சோதித்துப்பார்.

மேலும் நீ இன்றையத்தினத்தை என்னபிரகாரமாய்ப் போக்கினாயென்பதையும் சிந்தித்துப் பார்ப்பாய். எனக்குக் கிடைத்த தயவுகளாகிய சுகம், மனமகிழ்ச்சி, உணவு, உடை, வாசிப்பு, தொழில்சித்தி, சம்பாஷணை, சிநேகிதரின் அன்பு இவைகளெல்லாம் கர்த்தரால்கிடைத்தனவென்று நினைத்து நடந்தேனா? எனக்கு நேரிட்ட துக்கங்களிலும் மனச்சஞ்சலத்துக்கும், விசாரத்துக்கும் ஏதுவாகச் சம்பவித்த அற்பகாரியங்களிலும் கர்த்தரை பயபக்தியுடன் நினைத்து நடந்தேனா? இந்நாளில் நேரிட்ட சோதனைகளுக்கு எச்சரிக்கையாயிருந்து, விசேஷமாய் எனக்கு வருமென்று நான் காலமே எண்ணின சோதனைகளுக்கு விலகி என்னைப் பேணிக்கொண்டேனா? தெய்வ அருளின்பேரில் நான் முழுவதும் சார்ந்துகொண்டிருந்தேனா? தேவனுடைய குமாரனைப்பற்றும் விசுவாசத்தினாலே பிழைத்திருக்கிறேனா? (கலா. 2. 20.) நான் இன்று அவரை என் சற்குருவாகவும், எனக்காகப் பிராயச்சித்தம் செய்தவராகவும், பரிந்து பேசுகிறவராகவும் எண்ணி நடந்தேனா? இன்று நான் என் மனத்தையும் நித்தியத்துக்கடுத்தவைகளையும் சிந்தித்து,

இனிவரும் மோட்ச பாக்கியத்துக்குப் பங்குள்ளவனாயிருப்பேனென்று அபேட்சைகொண்டிருந்தேனா? மற்றவர்களோடே நான் செய்த சம்பாஷணை பிரயோஜனமாயிருக்கும்படிப் பார்த்துக்கொண்டேனா? நான் இன்று கோபமும், தீமையும், புறணியும், அவிவேகமும், ஒவ்வாமையுமான காரியத்தைப் பேசவில்லையோ? நான் இன்று தேவனிடத்திலும் மனிதரிடத்திலும் பூரண அன்புவைத்து, என்னால் இயன்றமட்டும் யாவருக்கும் நன்மைசெய்யப் பிரயாசப்பட்டேனா? இப்படி வினாவி உன் உள்ளத்தைச் சோதிக்கும்போது, உன்னில் குறைவுண்டென்று கண்டால், நீ படுக்குமுன் செய்யும் தனிஜெபத்தில் மனத்தாழ்மையோடு உன் பெலவீனங்களைக் கர்த்தரிடத்தில் அறிக்கைசெய்து மன்னிப்புக் கிடைக்கும்படி விண்ணப்பஞ்செய்யவேண்டும்.

## நாம் படுத்திருக்கையிலே மரணத்தைப்பற்றிப் பயபக்தியாய்ச் செய்யும் தியானம்.

என் ஆத்துமாவே! பயபக்தியோடும் கவலையோடும் உன் முடிவில் உனக்கு நேரிடும் காரியம் இன்னதென்று ஆலோசித்துத் தெளிந்துகொள் (உபா. 32. 29.). இவ்வுலகத்திலே உனக்குள்ள ஆயுசுநாட்களில் ஒருநாள் சென்றுபோயிற்றே; நான் என் வஸ்திரத்தை உரிந்துபோட்டு, இவ்விரவிலே படுத்துக்கொள்வதுபோல, என் ஜீவியநாள் கடைசியில் ஆத்துமா தேகத்தைவிட்டு நீங்கும்போது, தேகம் மண்ணிலே படுத்துக்கொள்ளும். அது நான் உரிந்துவைத்த வஸ்திரம்போல அப்படியே இருக்கும். நான் சிந்திக்கவேண்டிய ஒரு பிரதான காரியம் உண்டு. என் ஆத்துமாவே, மரணத்துக்குப்பின் நீ மோட்சத்திலாவது நரகத்திலாவது நித்தியமாய் நிலைகொள்ளவேண்டும். அப்பொழுது இச்சீவியத்துக்குரிய ஆலோசனைகள், கவலைகள், நயம் பயங்கள், இன்ப துன்பங்கள் எல்லாம் முடியவே ஆவிகள் வாசம்பண்ணும் உலகம் உனக்கு வெளிப்படும். அது உனக்கு வெகு சீக்கிரமாயும் காணப்படலாம். சூரியோதயத்துக்கு முன்னே, நீ அதில் பிரவேசிக்கவுங்கூடும். அநேகர் புஷ்பம்போல தங்கள் நடுவயசில் மரணம் அடைவதுண்டே. நான் தீர்க்காயுசு அடைவேன் என்று எண்ணாமல், கர்த்தர் இவ்வளவுகாலம் என்னைத் தாங்கி காப்பாற்றினதைப்பற்றிப் பிரமிப்பேனாக.



இப்போதும் என் ஆத்துமாவே! தேவனுக்கு முன்பாகச் சொல்லு. நீ சாக ஆயத்தமாயிருக்கிறாயா? நீ இன்னும் விட்டுவிடாத பாவம் உன்னில் இல்லையா? சாகும்போது உனக்கு விசாரத்தை உண்டாக்கும் பாவம் உன்னில் இல்லையா? நித்திய கரையில் நீ நிற்கையில் உனக்கு நடுநடுக்கத்தைக் கொடுக்கும் பாவம் உன்னில் இல்லையா? அப்படிப்பட்ட பாவம் உன்னை அமிழ்த்திப்போடாமல் அதினின்று விடுதலையாகும்படி இச்சணமே தேவனுடைய இரக்கத்தையும் மீட்பர் சிந்தின ரத்தத்தினால் சம்பாதிக்கப்பட்ட பலனையும் தேடிக்கொள்.

திரளான உன் பாவங்களுக்காக நீ மனஸ்தாபமடைந்து குணப்பட்டு, விசுவாசத்தினாலே உன் ஆத்துமாவை அன்புள்ள இயேசுவின் கரத்தில் ஒப்புவித்து, அவருடன் நீ செய்த உடம்படிக்கையை விடாதிருப்பாயாகில்; நீ திடுக்கிட்டுப் பயப்படவேண்டியதில்லை. கர்த்தருக்கு முன்பாகப் பயபக்தியாய்ச் சீவனம்பண்ணி, மீட்பரோடு ஐக்கியமாய் இருக்கும் ஆத்துமாவை மரணமானது சேதப்படுத்த முடியாது. மரணம் உலக நன்மைகளினின்று உன்னை நீக்கலாம்; உலகத்தில் நீ உன் ஊழியத்தைச் செய்யாதபடி தடுக்கலாம்; உன் ஆலோசனைகள் கிரியைகளுக்கு முடிவுண்டாக்கலாம்; ஆனால் உனக்கு ஒரு கேட்டையும் உண்டாக்கமாட்டாது. என் ஆத்துமாவே நீ பரத்தில் சேர்ந்தபின் திவ்விய அநுபவங்களை அடையவும் மகத்துவமான ஊழியங்களைச் செய்யவும் யோக்கியமாவாய். என்னை ஆற்றித் தேற்றி தைரியப்படுத்தும் நற்செய்திக்காகத் துதிக்குப் பாத்திரரான தேவனுடைய நாமத்துக்கும், இயேசுவின் அன்புக்கும் நித்திய ஸ்துதியுண்டாவதாக. இப்போது நான் சமாதானத்தோடு படுத்து நித்திரைசெய்வேன். நான் இவ்விரவில் மரித்தாலும் உயிர்த்தாலும் தேவன் நியமித்ததெல்லாம் நலமென்று எண்ணி விசாரமின்றி என் பிதாவின் கையில் என் ஆத்துமாவை ஒப்புவிக்கிறேன். ஆமென்.

# 14-ம் அதிகாரம்.

## முந்திய அதிகாரத்தில் சொல்லியிருக்கிறபடி நம்முடைய் நாட்களைச் செலவிடுவதற்கேற்ற போதனை.

மெய்க் கிறிஸ்தவர்கள் இன்னின்ன பிரகாரமாய் நாளைச் செலவிடவேண்டுமென்று முந்திய அதிகாரத்தில் சொல்லியிருக்கிறேன். நான் காட்டியிருக்கிற ஜீவியமார்க்கம் சிறந்தவண்ணம் நியாயமானதென்று உன் மனச்சாட்சியே சொல்லும். கிறிஸ்தவனே நீ தேவனால் சிருஷ்டிக்கப்பட்டவனென்றும், இயேசுவின் இரத்தத்தால்மீட்கப்பட்டவனென்றும் நினைத்தாயாகில், நான் உனக்கு உணர்த்தியபடி பக்தி வைராக்கியத்துடன் ஆத்துமலாபத்தைத் தேடுகிறதே நியாயம் என்று தீர்ப்பாய். நீ அனுதினமும் அந்தி சந்திகளில் தனித்துப் பக்தியோடே கர்த்தரை வேண்டிக்கொண்டு, அவருடன் ஐக்கியப்பட்டு, உன் இருதயத்தைப் பரிசோதிப்பாய். நீ செய்யும் ஆராதனைகள் கிரியைகள் முதலியவற்றிலும் பக்திமானாய் கர்த்தரை நேசித்து, அவருடைய மகிமைக்காக வைராக்கியம் பாராட்டி, தெய்வீக பரிபாலனத்தின்பேரில் நம்பிக்கைவைத்து, உனக்கு நேரிடும் சோதனைகளுக்கு விலகி, தேவானுக்கிரக பெலத்தில் சார்ந்து, தனிமையாயும் வெளிப்படையாயும் மனதை அடக்கிக்கொள்வாய். இப்படி இரண்டொருநாள் அல்லது ஒரு கிழமைமாத்திரமல்ல, உன் ஆயுசுபரியந்தம் முன்சொல்லியபிரகாரம் பயபக்தியோடே நாட்களைப் பின்னிட்டு, அதிக பக்திமானாய் நடந்துகொண்டாலும்; உன்னைப்படைத்தவருக்குச் செய்யவேண்டியபடி செய்தாயென்று சொல்ல ஏதுவிராது. உன்னை மீட்கும்படி மீட்பர் சிந்தின ரத்தத்துக்கு ஈடாக மிகுந்த சாக்கிரதையும் உண்மையும் பக்திவைராக்கியமுமாய் நடந்துவந்திருக்கிறேன் என்று விளம்பத் துணியவும் ஏதுவிராது. தமது ரத்தத்தைச் சிந்தி, உன்னை நரகத்தினின்று விடுவித்து, நித்திய மோட்சநகரத்தை உனக்குத் தந்தருளியதற்குப் பதில் செலுத்தும்பொருட்டு, நீ சிலசில வேளைமாத்திரம் தெய்வகாரியத்தைச் சிந்தித்துப்பார்த்தால் போதுமென்று சொல்லத்துணிவது துரோகமே; நான் முன்சொல்லியிருப்பதெல்லாம் நியாயமானது. அவைகளை நீ நன்றியறிதலோடே ஏற்றுக்கொண்டு, உன் கடமைகளை நிறைவேற்றுவாயாக.



எப்படியும் மரணம் வருவது நிச்சயம். தேவபக்தியை அற்பமாய் எண்ணிப் புறக்கணித்த கோடாகோடிப்பேர் மரித்துப்போனார்கள். அவர்களில் ஒருவனாவது தன் ஜீவகாலத்தை எல்லாம் அவபக்தியிலே போக்கினது நலமென்று சொல்வானா? மெய்க் கிறிஸ்தவர்களுக்குள் ஒருவனாவது தான் கர்த்தருக்குப் பயந்து, அவரிடத்தில் அன்புவைத்து, தன் நாட்களைக் கழித்ததையிட்டு, சங்கடப்படுவானா? இதைக்குறித்து நீ என்ன நினைக்கிறாய்? மறுமைக்குள் மறைந்தவர்களில் ஒருவன்தான் திரும்பவும் இம்மைக்கு வரக்கூடியதாயிருந்தால், அவன் இவ்வுலக சிற்றின்பங்களின்மேல் நாட்டம்வைத்து, அவைகளை அனுசரிக்க விரும்புவானா? நீ மரிக்கும்போது, உன் அருமையான சிநேகிதராவது, பிள்ளையாவது உனக்கு அருகிலே இருக்கக் கண்டால், வேதமார்க்கத்தின்படி நடக்கவேண்டாம் என்று சொல்லுவாயா? இப்படிப்பட்ட கேள்விகளுக்கு விடை சொல்லுவது அறிதானதல்ல. நீ எப்படிப்பட்டவனாக மரிக்க விரும்புகிறாயோ, அப்படிப்பட்டவனாக நீ ஜீவனம் செய்யவும் வேண்டும். சடிதியிலே நீ மரிக்க நேரிட்டால், இப்போது நான் உனக்கு உரைத்தருளிய பிரகாரம் நீ தெய்வீக உணர்ச்சியோடிருப்பதும், தெய்வீக காரியங்களைச் செய்வதும் நலமென்று எண்ணாயோ? இந்தக் கேள்வியைமாத்திரம் சற்றே ஊன்றி யோசித்துப்பார். நான் சொல்லியிருக்கிறபடி, நாளைக்கழித்தாலல்லவோ, இகத்தைவிட்டுப் பரத்துக்குப்போவது இன்பமாயிருக்கும். மேலும் மரணம் படிப்படியாய் உனக்குக் கிட்டிவந்தால், பக்திமானாய் நடந்தேன் என்ற எண்ணம் உன் மனதுக்கு ஆறுதலைக் கொடுக்கமாட்டாதோ? உன் சுயபுண்ணியத்தை நம்பிக்கொண்டிருப்பது நல்லதல்ல; மரணத்தறுவாயில் அது உனக்கு ஆறுதலைக் கொடுக்கமாட்டாது. நீ உன் குறைவுகளை உணர்ந்து, கர்த்தரிடம் சேரத்தக்கதாய்க் கிறிஸ்துவின் நீதியைத்தரித்து, அவருடைய ரத்தத்தினால் உன் பாவங்களெல்லாம் அறக்கழுவி சுத்திகரிக்கப்படும்படி, அவருடைய திருவடியே கதியென்று இருப்பாயாக. அன்றியும் உன்னிடத்தில் காணப்படும் நற்குணங்களும் நற்செய்கைகளும் அவருடைய அருளினால் உண்டானதென்று உணர்ந்து, அறிக்கை செய்வாய். இதையல்லாமல் பயங்கரமான அந்த மரணவேளையிலே, நான் பூலோகத்தில் என் பரமபிதாவின் மகிமையைப் பிரகாசிப்பித்து, அநேக வருஷங்களாய் மோட்சத்தை நாடி அந்தத் திவ்வியமான ஸ்தலத்தில் வாசஞ்செய்வோமானால் நற்குணங்களையும் ஒழுக்கங்களையும் உடையவனாயிருக்கும்பொருட்டு அபேட்சித்து

நடந்துவந்ததினால் எனக்குக் கிடைத்த கிருபை விருதாவாய்ப் போனதில்லையென்று உணரும் உணர்ச்சி எனக்குப் பதினாயிரம் உலகங்கள் கிடைப்பதிலும் அதிக அருமையாயிருக்குமல்லவோ?

இன்னும் நீ இப்போது செல்லும் வழியிலே சாக்கிரதையாயிருப்பது மகிமையுள்ள பரலோகத்தை அடைவதற்கு உபயோகமாயிருக்கும். ஆதலால் இப்போது நீ உன் முழு இருதயத்தோடே கர்த்தரைச் சேவிக்கும்படி உனக்குப் புத்திசொல்லி உன்னை வேண்டிக்கொள்ளுகிறேன். காருண்ணிய இயேசு தமது தொண்டருக்குள்ளே நீ அதிக வைராக்கியங்கொண்டு நடந்தாயோ சோம்பேறியாயிருந்தாயோ என்று விசாரியாதிருப்பாரோ? நீ பேரின்ப நிலைமையில் பிரவேசிக்கையிலே அதை மட்டுக்குமிஞ்சி நாடுகிறாய் என்று சொல்வாயோ, அப்படி எண்ணுவதற்குப் பதிலாக நீ மேலான சுதந்தரத்தைப் பெற்றபின் அதின் மாட்சிமையைக் கண்டு, அந்தச் சுகானந்தத்தை மந்தமாய்த் தேடினேனே என்று புலம்பக்கூடுமானால் புலம்புவாய்.

மெய்த்தேவபக்தியின் விர்த்தியில் தேறாமல் உள்ளது போதுமென்றிருந்தால், நீ இதுவரைக்கும் மெய்த்தேவபக்தியின் உற்பத்தியை முதலாய் அறியாதவனாய்ப் பயங்கரமான நிலைமையிலே இருக்கிறாயென்று நினைத்துக்கொள். ஆதலால் நீ உன் ஆத்தும நிலைமையைப்பற்றி நன்றாய் ஆராய்ந்து பார்ப்பாயாக.

## மெய்ப்பக்திமானாய் நடந்துகொள்ள அபேட்சிக்கும் ஆத்துமா பண்ணத்தக்க ஜெபம்.

ஸ்தோத்திரிக்கப்படத்தக்க தேவனே! எனக்குச் சொல்லப்பட்டிருக்கிற நியாயங்களின் வல்லமையை நான் தடுக்கமுடியாதே; அவைகளை நான் உணரும்படி செய்தருளும். தேவரீர் சகலத்துக்கும் ஆதிகாரணராயிருக்கிறீர்; நான் உம்மால் உருவாக்கப்பட்டிருப்பதால் உம்மிடத்திலிருக்கிற மனோபாக்கியத்தைப் பெறவேண்டும். கிருபாநதியாகிய உம்மில் நான் மூழ்கினேனானால், ஆனந்த சந்தோஷம் அடைவேன். நான் உம்மோடே என்றும் தங்க அபேட்சிக்கிறேன். அங்கே எனக்குக் கிடைக்கும் ஆனந்தத்தை இங்கேயும் அனுபவிக்கச் செய்யும். கர்த்தருக்குப் பயந்து, அவருடைய கட்டளைகளில் மிகவும் பிரியமாயிருக்கிற மனுஷனுக்குரிய பாக்கியத்தை



அநுபவிக்கக் கர்த்தரைப்பற்றிய பயத்தோடே அநுதினமும் நடக்கும்படி உமது கிருபையினால் என் இருதயத்தைப் புதுப்பித்தருளும்.

என் தேவனே! காலையில் நான் நித்திரை தெளிந்து எழும்பும்போது வெளிச்சத்தைக் காண்பதுபோல், உம்முடைய முகத்தின் ஒளியை என்மேல் பிரகாசிக்கப்பண்ணும். நான் விழிப்புடன் சாக்கிரதையாய் நடக்கும்படி என்னைப் பெலப்படுத்தியருளும். சாவுபோன்ற நிலைமையைவிட்டு உயிர்த்தெழுந்திருக்கும்போது, உமது வெளிச்சத்தைப் பிரகாசிப்பிக்கப்பண்ணும். என் தேவனாகிய உமக்கு என் உடல், பொருள், ஆவியை ஒப்புவித்து, நான் புத்திதெளிந்து, புது ஜீவமார்க்கத்தானாய் விவேகத்துடன் என் நாட்களைக் கழிக்கும்படி எனக்கு அருள்செய்யும். நான் உம்முடைய பிள்ளையாக என் இருதயத்தை உமக்கு ஒப்படைத்து, உம்மை நேசித்து, வணங்கும்படி என்னைப் பெலப்படுத்தியருளும். நீர் அருளியிருக்கிற வேதத்தை நான் மனோவாஞ்சையுடன் வாசித்துச் சிந்திக்கும்படி எனக்குக் கிருபை தாரும். என் ஆத்துமா உமது வசனத்துக்கு இணங்கி, அந்த வசனத்தால் ஏவப்பட்டு, காலைதோறும் உமது பிரிய குமாரனாகிய இயேசுவின்மூலமாய் உமக்கே என்னை ஒப்புவித்து, ஆத்துமாவுக்குச் சீவனைத்தரும் பரிசுத்தஆவியின் வரப்பிரசாதங்களைப் பெற்றுக்கொள்ளும்படி அருள்செய்யும்.

கர்த்தாவே! இப்படி ஆயத்தப்பட்டவனாய் தேவரீர் என்னை நடத்தி அநுதினமும் நான் செய்யவேண்டிய கடமைகளைச் செய்யவும்; நான் அநுபவிக்கவேண்டிய துன்பங்களைச் சகிக்கவும் எனக்குக் கிருபைதாரும். தேவரீர் நீர் என்னை வைத்திருக்கிற நிலைமையிலே நிலைகொண்டு, அலுவலில் அசதியாயிராமல் ஆவியிலே தீபவளர்ச்சியைப்போலிருந்து, உமக்கு ஊழியஞ்செய்யப் பெலன் தந்தருளும். காலத்தின் அருமையை நான் எண்ணி, அதை ஆதாயப்படுத்திக்கொள்ளவும், நான் நிறைவேற்றும்படி நீர் எனக்குக் கட்டளையிட்டிருக்கிற கடமைகளைச் சாக்கிரதையாய் நிறைவேற்றவும்; நான் புசித்தாலும், பானம்பண்ணினாலும், எதைச் செய்தாலும், அவை எல்லாவற்றையும் உமக்குக் கனமுண்டாகச் செய்து, உம்மைப் பிரியப்படுத்தும்படி அநுக்கிரகஞ்செய்தருளும்.

தேவரீர் எனக்கு அருளும் நன்மைகளை நான் எண்ணி எண்ணி, தேவரீருக்கு நன்றியறிதலைச் செலுத்தி, அதின் இன்பத்தை உணரும்படி செய்யும். சஞ்சலம் நிறைந்த இவ்வுலகில்

நான் படும்துன்பங்களெல்லாம் நாடோறும் எனக்கு ஆகாரத
தைத் தருகிற கர்த்தரால் வருகிறதென்று உணர்ந்து, என் சிலு
வையை எடுத்துக்கொண்டு என் நேச கர்த்தரைப் பின்தொட
ரும்படி செய்தருளும். என் இரட்சகர் கல்வாரி மலையிலே
மரித்தபோது காட்டின குணத்தைப்போன்ற குணமுடையவ
னாய் நானும் பிதா எனக்குக் கொடுத்த பாத்திரத்தில் நான் பா
னம் பண்ணாமலிருப்பேனோ என்று சொல்லி நடக்கும்படி
அருள்புரியும். நான் சோதிக்கப்படும் சமயத்தில் தேவரீர்
என்னைத் தீமையினின்று விடுவித்தருளும். என் பெலவீனங்
களை நான் உணர்ந்து, எனக்குவேண்டிய பெலனைப் பெறும்
படி உம்மைநோக்கி வேண்டிக்கொள்ள அருள்புரியும். நான்
மற்ற மனிதரோடிருக்கையில் நன்மை செய்யவும் நன்மையைப்
பெறவும் விருப்பந்தாரும். இவ்வண்ணமாய் நான் ஜீவித்து,
உம்மைக் கனம்பண்ணி, யாவருக்கும் உபயோகமான அறிவை
யும் பாக்கியத்தையும் விளைவிக்க அநுக்கிரகஞ்செய்யும். நான்
தனித்திருக்கும்போது, என் பரமபிதா என்னோடே இருக்கிறு
ரென்று உணர்ந்து, உமது சமுகத்திலிருக்கிறவனாக எண்ணிக்,
கிரியைகளை நடப்பிக்கும்படி தயைபுரியும்.

பிதாவே! இவ்வண்ணமாய் நான் என் நாட்களைக் கழித்து,
உமக்கு முன்பாகப் பயபக்தியாயிருந்து, உமது சமுகத்தில்
உத்தமத்தோடே நடந்து, இரவில் படுக்கைக்குப் போகும்படி
அருள்செய்யும். கர்த்தாவே இரவில் நான் தனித்திருக்கும்
போது என்னைச் சந்தித்தருளும். நான் உமது வசனத்தை ஜாக்
கிரதையாய் வாசித்து செபிக்கவும், என் நடக்கையைப் பரீட்
சிக்கவும் எனக்கு அருள்செய்யும். நான் சுயநேசத்தினாலே
என் குறைகளை மறைக்காமல், உம்மாலே சோதிக்கப்படுவேனெ
ன்றும், சகல இருதயங்களையும் ஆராயும் உமக்குப் பிரியமாய்
நடக்கவும் வேண்டுமென்று நினைத்து, நானே என்னைப் பரி
சோதிக்கக் கிருபைதாரும். நான் இந்த நாளைக் கர்த்தருக்
கென்று கழித்திருக்கிறேனென்றும், என் கர்த்தராகிய இயேசு
கிறிஸ்துமூலமாய் உம்மால் அங்கீகரிக்கப்பட்டேன் என்றும்
நிச்சயித்து, அமைதியாய்ப் படுத்துக்கொள்ள கிருபைபுரியும்.
மரணம் முந்திவந்தாலும் பிந்திவந்தாலும் சரி, நான் உத்தம வழி
யில் நடந்து, சஞ்சலம் நிறைந்த இவ்வுலகத்தைவிட்டு சுக
மாய்ப் பரத்தில்சேர்ந்து, நித்திய மகிமைபொருந்திய தெய்வ
சந்நிதியில் ஆராதனைசெய்து, என்றும் வாழும்படி தேவரீர்
அருள்புரியும். இந்த நன்மைகளை எல்லாம் தரும்படி, பூலோ
கத்தில் வசித்த காலத்தில் சகல சன்மார்க்கத்துக்கும் கிருபை



களுக்கும் பூரணமாகிறியை வைத்து, இப்போது உம்மோடு
ஜீவித்து ஆண்டு முற்றும் முடிய இரட்சிக்க வல்லவராயிருக்கிற
இயேசுவின் மூலமாய் வேண்டிக்கொள்ளுகிறேன். அவருக்கு
இப்போதும் எப்போதும் மகிமையுண்டாவதாக. ஆமென்.

# 15-ம் அதிகாரம்.

## கிறிஸ்தவன் தனக்கு நேரிடும் சோதனையில் அகப்படாதபடி அவனுக்குச் சொல்லத்தகும் போதனை.

நான் முன் காட்டியிருக்கிறபிரகாரம், நீ கர்த்தருடன்
ஐக்கியமாகிப் பக்திமானாய் நடந்துவந்தால், உனக்கு ஆனந்தம்
உண்டாகுமென்று உணர்ந்து, அப்படியே நடக்க முயலுவாய்
என்று நம்புகிறேன். நீ பக்திமானாய் நடக்கத் தொடங்கின
போது, உனக்கு உண்டான விரோதங்களை நீ மேற்கொண்ட
தின் பின்பும், நீ பக்தியில் அதிகமதிகமாய் தேறிவருகையில்
உனக்கு பற்பல தடைகள் உண்டாகும். முந்தி உன்னை
எதிர்த்த சத்துருக்களை மேற்கொண்டாலும், நீ நடக்கும் வழி
யிலே அடிக்கடி சத்துருக்கள் உன்னைத் தாக்கும்படி விழிப்பா
யிருப்பதால், நீ அவைகளை எதிர்த்துப் போராடவேண்டிய
வனாயிருக்கிறாய். அந்தச் சத்துருக்களுக்குள்ளே விசேஷித்த
வைகளில் சிலவற்றைச் சொல்லுகிறேன். அவையாவன,
சோம்பல், சிற்றின்பம், துர்ச்சனவாசம், லௌகீகக்கவலை
இவைகள் இளைஞர் முதலியவர்களுக்கு தீங்கை விளைவிக்கு
மென்று அறிந்து சில புத்திகளைச் சொல்லுகிறேன்.

முதலாவது, நீ சோம்பலைப்பற்றி எச்சரிக்கையா யிருக்க
வேண்டும். சோம்பல் பலவித உபாய தந்திரத்தினால் இருத
யத்திலே நுழைந்து தலைப்படும். சிலவேளை நாம் அறியாதவண்
ணம் அது நம்மை மேற்கொள்ளும். ஞானிகளும், நல்லவர்க
ளுங்கூட கொஞ்சநேரத்தை வீணாகப் போக்கி, அதை அற்ப
மாக நினைத்தாலும், சிலவேளை அது அவர்களுடைய காரியத்
துக்கு மெத்த தடையை யுண்டுபண்ணிப்போடுவதுண்டு. தேவ
வணக்கம் செய்வதற்குரியகாலத்தில் அதைச் செய்யாதபடிக்
கும், உடனே செய்து முடிக்கவேண்டிய லௌகீகவேலையைச்
செய்யாமல் பின்னுக்கு நிறுத்திவைப்பதற்கும் ஏதுவாகிறது.
இப்படி நாளுக்குநாள் நிறுத்திவைக்கும்போது காரியம் நிறை

வேறாமல் நின்றுபோம். ஆத்துமாவானது வேலைசெய்துகொண்டு இராதிருக்கையில் பற்பல சோதனைகளுக்கு உட்படவேதுவுண்டாகும். ஆதலால் சோம்பலுக்கு மிகவும் எச்சரிக்கையாயிருக்கவேண்டும். ஆத்துமாவானது இயற்கையிலே சுறுசுறுப்புள்ளது. அது சுறுசுறுப்பாய் காரியங்களைச் செய்கையில், இன்பங் கொண்டாடும். ஆகையால் உன் மனதின் அரைகளைக் கட்டிக்கொண்டு, விழிப்பாயிரு. எப்பொழுதும், ஏதேனும் ஒரு உபயோகமான காரியத்தை நடப்பிப்பாயாக. நீ தேவனுக்குச் செய்யவேண்டிய ஆராதனைகளைக் காலத்திட்டத்தின்படி நிறைவேற்றி, உன் வேலைகளையும் அப்படியே நடப்பித்துவருவாயாக. சிநேகிதருடன் சம்பாஷிக்கவும், முகசுப்பாற்றவும், விவேகத்துடன் கொஞ்சநேரத்தைச் செலவிடு. அந்தக்காலம் கழிந்தவுடனே, உன் வேலைகளைச் செய்யத் திரும்புவாயாக. ஏற்றவேளையிலே செய்யவேண்டிய கடமைகளைச் செய்யாமல் விட்டுவிட்டால், குற்றம் விளைவதுமன்றி அதிகமான குற்றங்களைப் பிறப்பிக்கும் துர்பழக்கங்களும் உன்னைப் பிடித்துக்கொள்ளும். ஆதலால் இன்னின்ன வேளையிலே இன்னின்ன காரியத்தைச் செய்யவேண்டுமென்று ஏற்கனவே நிதானித்து, அந்த நிதானம் தவறாமல் நடந்துகொள். இன்று செய்யவேண்டிய காரியத்தை நிறைவேற்றி முடிக்காதபடி ஏதாவது தடை நேரிட்டால், அந்தக் காரியத்தை அடுத்தநாளிலாவது அவசியமாய் நிறைவேற்றவேண்டும். நீ செய்யும்படி தீர்மானித்த காரியத்தை முடிக்குமுன் புதிதாய் வேறொரு காரியத்தையும் தொடங்கலாகாது. கிறிஸ்துவின் தொண்டன் தன் எஜமான் சமுகத்தில் தன் காரியத்தைத் தீர்மானித்து நடக்கிறவனாக எண்ணி நடக்கவேண்டும்.

மேலும் சிற்றின்பம் மெய்தேவபக்திக்குப் பெரிய தடையாயிருப்பதினால், நீ அதைக்குறித்து மிகவும் எச்சரிக்கையாயிருக்கவேண்டும். ஒருவன் கிறிஸ்துவுக்கு சீஷனாயிருக்க விரும்பினால், அவன் தன்னைத்தான் வெறுத்து தன் சிலுவையை எடுத்துக்கொண்டு, அவரை பின்பற்றவேண்டும் என்று அவர் சொல்லியிருக்கிறார். சகலத்தையும் படைத்தவரும், தாம் படைத்த எல்லாவற்றிற்கும் சுதந்தரவாளியுமான இயேசு தமக்குப் பிரியமாய் நடவாமல் (ரோ. 15. 3.), தேவனுடைய மகிமை விளங்கவும், மனிதருடைய இரட்சிப்பு நிறைவேறவுமாகக் குறைவுகளையும் வருத்தங்களையும் அனுபவித்தார். நாமும் அவரைப் பின்சென்று பாவத்திற்கு விரோதமாய்ப் போராடுவதில் இரத்தம் சிந்தப்பட எதிர்த்து நிற்கக் காலம்வந்தாலும் அப்படியே



இரத்தம் சிந்தவும் பொறுமையுடன் துன்பங்களைச் சகிக்கவும் பயிலவேண்டும். இயேசுகிறிஸ்து ஒரு நல்ல போர்ச்சேவகனாய்த் தீங்கையனுபவிக்க வழக்கப்பட்டிருக்கிறவன். சரீர அனுபவங்களைச் செருக்காய் ஆசரிக்க விரும்பினால், எளிதாய் மேற்கொள்ளக்கூடிய சோதிகளிலும் அகப்பட்டுக்கொள்ளுவான். அன்றியும் இப்படிப்பட்ட குணம் இவ்வுலகத்தின்மேல் நாட்டம் வைக்கவும், இவ்வுலகத்தைவிட்டு நீங்க பிரியமில்லாமையையும் உண்டுபண்ணும். மேலும் அந்தக் குணம் பூமியிலே அன்னியரும் வழிப்போக்கருமாயினும் மேன்மையான பரமதேசத்தை விரும்பி சீக்கிரம் அதற்குள் பிரவேசிப்போமென்று எண்ணுகிறவர்களுக்குத் தகுமானதாயிருக்கிறதில்லை. அல்லாமலும் சிற்றின்பங்களை அனுபவிப்பதற்கு அதிகச்செலவு செல்லுமாகையால் நமக்கு வரும் வரவைக் கடந்து, நாம் வறியவர்களாவதற்கு ஏதுவையும் உண்டுபண்ணும். அப்படியே ஒருகாலத்தில் சன்மார்க்கத்தில் பெயர்பெற்றவர்களான அநேகர் கடன்வாங்கி மற்றவர்களுடைய பொருளை யனுபவித்தபின் தாங்கள் பட்ட கடன் இறுக்க முடியாமல் மிகுந்த அவதிக்குட்பட்டிருக்கிறார்கள். இப்படிப்பட்ட செய்கை மெய்தேவபக்திக்கு பெரிய நிந்தையாயிருக்கிறது. பக்திமான் கடன்படுவதைப்பார்க்கிலும், அப்பமும் தண்ணீரும் சாப்பிடுவான்; அல்லது பட்டினியாயிருந்து மரணம் வந்தாலும் சகித்துக்கொள்ளுவான். உன்னுடைய எல்லாக்காரியங்களிலும் ஜாக்கிரதையாயிருந்து விவேகத்துடனே மட்டாகச் செலவிட்டால், கர்த்தர் உன்னை ஆசீர்வதித்து, உன் காரியங்களை வாய்க்கப்பண்ணி மனக்கலக்கமில்லாமல் உன் நாட்களைப் பின்னிடும்படி செய்வார். ஆதலால் இந்த பிரதான காரியத்தைக்குறித்து எச்சரிக்கையாயிரு. மேலும் தேவபக்தியில்லாத மனிதருடைய கண்ணிகளில் நீ சிக்கிக்கொள்ளாதபடிக்கு அவர்களைச் சேராமலும், அவர்களோடே இணங்காமலுமிருக்க உனக்கு அன்பாய் புத்திசொல்லி, உன்னை எச்சரிக்கிறேன். காமகாரிகள் அவபக்தர் முதலியவர்களை நான் சுட்டிக் குறிக்கிறதில்லை. அப்பேர்ப்பட்டவர்களுடன் நீ சேராமல், அவர்களுடைய குணங்களைப் பார்த்து அவைகளை வெறுத்துத் தள்ளுவாய். ஆனால் மற்றும் அநேகர் குணம் நடக்கைகளிலே தாழ்ச்சியில்லாதவர்களாயிருந்தாலும், உன்னை வெகுதூரம் மோசப்படுத்தவுங்கூடும். அவர்களுடன் நீ சேர்ந்து உன் காரியாதிகளை நடப்பிக்கும்படி அவசியம் நேரிடுவதுண்டு. அப்போது அவர்களை நீ மரியாதையாய் நடத்திவரவேண்டியதுதான். ஆனால் அவர்களோடே நெருங்கிய சிநேகம் பண்ணுவா

யாகில், உன் ஆத்துமா கர்த்தரைவிட்டு விலகுவதற்கும், அவருடன் அந்நியோந்நியமாயிருப்பதற்கும் ஏதுவிருக்கமாட்டாது. அவர்களுடன் நீ கலந்திருந்தகாலத்திலே சம்பவித்த காரியங்களைக் குறித்து நீயே ஆலோசித்துத் தியானிப்பாயானால் அது உனக்குத் தெளிவாகும். ஆதலால் நீ தேவபக்தியில் வளரும்படி கர்த்தருடைய பரிசுத்தவான்களை உனக்குத் தோழராகத் தெரிந்துகொள். எப்படியும் நீ கண்ணியில் சிக்காதபடி துன்மார்க்கரோடே இணங்காதிருக்கும்படி விழிப்பாயிரு. கர்த்தருக்குப் பயந்து அவருடைய கட்டளைகளைக் கைக்கொள்ளுகிற யாவருக்கும் தோழனாயிரு (சங். 119. 63.). அவர்களோ பூலோகத்திலுள்ள மேன்மக்கள். அவர்களோடே சேர்ந்திருப்பதினால் உனக்கு ஆத்தும நன்மைகள் கிடைக்கும்.

பக்திமான்களுடன் பழகுவதினால் சோம்பலுக்கும் சுகபோக வாழ்வுக்கும் தப்பி சகல துன்னெறிகளுக்கும் விலகிக்கொள்வாய். வாலிபர் முயற்சியுள்ளவர்களாயிருந்தாலும், போதுமான அநுபவம் அவர்களுக்கில்லாததால் தாங்கள் நினைக்கும் எந்தக் காரியத்தையும் வாய்க்கச்செய்யலாம் என்றெண்ணி, தங்களுக்கு நேரிடும் ஒவ்வொரு விக்கினத்தையும் மேற்கொள்ளலாம் என்று துணிகரங்கொள்வதுண்டு. ஆனால் அவர்கள் வீரியத்தோடே தொடங்குவதெல்லாம் காரியமாய் முடிகிறதில்லை. ஆதலால் நீ நிறைவேற்றி முடிக்கக்கூடாத காரியத்தைச் செய்யத் துணியாமல் ஆத்தும நன்மைக்கு அநுகூலமாக நீ தேவனைச் சேவித்து உன் காரியங்கள் அதற்கு இசைவாயிருக்கும்படி நடந்துகொள். அநேகர், தாங்கள் நிறைவேற்றிக்கொள்ள முடியாத காரியங்களில் தலையிட்டுக்கொண்டதினால் முழுவதும் கெட்டுப்போகிறார்கள். அவர்கள் வியாபாரத்தில் அற்பலாபம் மாத்திரம் கிடைத்தாலும், போதுமென்றெண்ணி மட்டாக ஜீவனம் பண்ணிவந்தார்களானால் தேவனால் ஆசீர்வதிக்கப்பட்டு வரவர விருத்தியடைந்து பெருகிப்போகிறார்கள். அதிகமாய் ஆஸ்தி சேர்த்துக்கொள்ளலாமென்று உனக்கு நிச்சயமிருந்தாலும், உலக வாழ்வு நிலைநிற்குமென்ற நிச்சயமுண்டோ? இல்லையே. அநேகருக்கு அறுசுவை நிறைந்த போஜனபந்தி கண்ணியும், அவர்கள் செல்வம் அவர்களுக்கு வலையுமாயிருக்கிறதுண்டு (சங். 69. 22.). "தேவையானது ஒன்றே" என்னும் வாக்கியத்தில் அடங்கிய உன்னத ஞானபோதகத்தை மறவாதே. ஆத்துமாவானது தேகத்தைவிட்டு நீங்கி பரத்துக்குத் தன்னுடன் கொண்டுபோகும் செல்வம் ஒன்றைத்தவிர மற்றவைகளையெல்லாம் மரணம் உன்னைவிட்டு அகற்றிப்போடும். மரணம் உனக்குச் சீக்



கிரமாய் வருமென்பதை அநுதினமும் சிந்தையில் வைத்துக்கொள்.

நீ தெய்வ அநுக்கிரகம் பெற்று, நாளுக்குநாள் இவ்வுலகத்துக்கு மரிப்பாயாக. இவ்வுலகத்தை தேவன் தமது பிள்ளைகளுக்குப் பூரண ஆனந்தத்தைக் கொடுப்பதற்கேற்ற இடமாக வைக்காததால், அதை அற்பமாய் மதிப்பாயாக. இங்கே நீ பெற்றநுபவிக்கும் அநுபவங்களைப்பார்க்கிலும் தேவதயையே முக்கியம் என்றும், நீ படும் துன்பங்களையெல்லாம் பொறுமையுடன் சகிக்கவேண்டுமென்றும், கிறிஸ்தவனாக நீ செய்யவேண்டிய கடமைகளை நிறைவேற்றிக்கொண்டு, பரலோகத்தில் செல்லத்தக்க உத்தமகுணத்தை அணிந்துகொள்வது பெரிதென்றும், கர்த்தர் குறிக்கும் காலத்தில் பரலோகத்தில் செல்லக்கூடியதென்றும் உணர்ந்து, தேவன் உனக்கடுத்த லௌகிக காரியங்களையெல்லாம் தமது திருவுளம்போல நடப்பித்துவரக்கடவர் என்று எண்ணி மனவிசாரப்படாமல் நாட்களைக் கழிப்பாயாக. ஆதலால் இப்பிரபஞ்ச நயம், பயம், சுகதுக்கம் இவைகளைப்பற்றி உன் மனதை அடக்கித் தேவனைப் பிரியப்படுத்தவும் மகிமைப்படுத்தவும் நீ அநுதினமும் நடந்துகொள்ளவேண்டும்.

## கிறிஸ்தவன் தனக்கு நேரிடும் விக்கினங்களினின்று தப்பும்படி சொல்லத்தகும் பிரார்த்தனை.

தோத்திரிக்கப்படத்தக்க தேவனே! உள்ளும் புறம்புமாக நெருக்கும் ஆயிரம் பதினாயிரங்களான கண்ணிகளுக்கும், மோசங்களுக்கும் என்னை விலக்கி, எனக்கு விரோதமாய் எழும்புகிறவனுக்கு என்னை விடுவித்து, எனக்கு நன்மையுண்டாக என்மேல் கடாக்ஷம் வைக்க உம்மைப் பிரார்த்திக்கிறேன். அசதியும் சோம்பலும் என்னைப் பட்சிக்கும் நேரத்தில், நான் மயங்காதபடி என்னைக் காத்து, நான் நாடிச் செல்லுகிற அதரிசனமான நித்திய உலகத்தை ஓர் காட்சிபோல காணும்படி விசுவாசக்கண்ணை எனக்கு அருளும். அதிலே நடந்து செல்வதற்குவேண்டிய ஆயத்தத்தை நான் பெறுவதற்கு, ஒவ்வொரு நிமிஷத்தையும் நான் அருமையாக ஆதாயப்படுத்தும்படி அநுக்கிரகம் செய்தருளும்.

பாவிகள் எனக்கு நயம் காட்டும்போது, நான் அவர்களுக்கு இணங்காதிருப்பேனாக. தேவனாகிய உம்மோடே

நான் சஞ்சரித்து ஐக்கியமாயிருந்து, இனிமையான சம்பாஷணைகளைச் செய்ய அநுக்கிரகஞ்செய்யும். உம்மை அறியாதவர்களையும், என்னை உம்மைவிட்டு விலக்க வகைபார்க்கிறவர்களையும், நான் நெருங்கிய தோழராகப் பாவித்து நடவாதிருப்பேனாக. கர்த்தருக்குப் பயப்படுகிறவர்களை நான் சுயம்பண்ணுவேனாக. அப்படிப்பட்ட ஞானிகளும், பரிசுத்தருமானவர்களுடன் நானும் பழகி, அநுதினமும் ஞானத்திலும் பரிசுத்தத்திலும் விர்த்தியடைய அருள்செய்யும். அவர்கள் மூலமாய் என்னை எவி எழும்பியருளும். அப்போது உமது கையில் மற்றவர்களை எழுப்பிவிடும் கருவியாயிருப்பேன். அவர்கள் இருதயத்திலே தேவ நேசமாகிய சுவாலை சுவாலித்து எரிந்துகொண்டிருக்கும்படி என்னைக் கருவியாகக் கொண்டருளும். அந்தச் சுவாலை மற்றவர்கள் உள்ளத்திலும் பற்றி வளர்ந்தோங்கும்படி நான் முயற்சிக்க அருள்செய்யும்.

கர்த்தாவே! சிற்றின்ப ஆசைகளுக்கு என்னை விலக்கிக்காரும், "மாம்சத்துக்கேற்ற சிந்தை மரணம்" என்பதை உணர்த்தியருளும். பாவத்துக்கடுத்த ஆசைகள் என்னில் பெருகாமல், நான் அவைகளுக்கு விலகி நிற்கவும், சுபாபத்தின்படி பாவமில்லாமல் அநுபவிக்கத்தக்க அநுபவங்களை மட்டுத்திட்டமாய் அநுபவிக்கவும், உமது பரிசுத்த ஆவியினாலே என் ஆத்துமாவை சுத்தம்பண்ணியருளும். என் வைதீகதன்மையின் மாட்சிமையை உணர்ந்து, கிறிஸ்தவனுக்குரிய மேலான சிறந்த பாக்கியத்தை நாடித் தேடுவேனாக. என் ஆத்துமா தியானம் என்ற செட்டைகளின்மேல் ஏறி, அதரிசனமான சோதி பூமியில் சென்று, அங்குள்ள சுத்த ஆவிகளுடனே உம்முடைய சந்நிதியில் வாழும்படி பக்குவப்படுவதாக.

கர்த்தாவே தேவரீர் நீர் எனக்கு [illegible] னதென்று' உணர்ந்து, அதில் செய்யவேண்டிய கடமைகளை நிறைவேற்ற அருள்புரியும். "தேவையானது ஒன்றே" அதை நான் படிக்கும்படி என் சிந்தனைகளை சுத்தம்பண்ணும். உலகக் கவலைகளுக்கு என்னை விலக்கித் தற்காத்தருளும். உலகப் பற்றாசைகள் அநித்தியமுள்ளவைகளும் திர்ப்தி உண்டுபண்ணக் கூடாதவைகளுமாயிருக்கிறதென்பதை உணர்ந்து, நான் தேவனுக்குமுன்பாக ஐசுவரியவானாகும்படி செய்யும். தெய்வீக காரியத்தைப் பார்க்கக்கூடாதபடி லௌகீக காரியம் என்னில் மிஞ்சி வல்லமைகொள்ளாதபடி தடுத்தருளும். நான் இவ்வுலகத்தைக் கடந்து செல்கையில், என் இருதயமும் நம்பிக்கையும் பரலோகத்தின்மேல் ஆசைவைத்து, நாளுக்குநாள்



நான் அதில் பழப்பட்டு இவ்வுலக தீங்குகளை விட்டு விலகி, தேவலோகத்தில் பிரவேசிக்கும்படி அநுக்கிரகம் செய்தருளும்.

# 16—ம் அதிகாரம்.

## உத்தம பக்திமான்கள் தளர்ச்சி[illegible]ண்டதல்.

நான் சொல்லிய புத்திமதிகளுக்கும் எச்சரிப்புகளுக்கும் இணங்கி நடப்பாயாகில், நீ ஆநந்த சந்தோஷத்தோடே மெய்த் தேவபக்தியிலே தேறிவருவாய்; அப்போது உன் பாதை "நடுப்பகல்வரைக்கும் அதிகமதிகமாய்ப் பிரகாசிக்கிற சூரிய பிரகாசம்போலிருக்கும்." (நீதி. 4. 18.)

ஆயினும் நான் இப்போது சொல்லிய போதனையை நீ அமைதலோடு கேட்டு அதின்படி செய்தாலும், இனிமேல் அந்தக் குணம் மாறிப்போனால் தளர்ச்சியடைவாய். நீ இப்போது சோதனைகளை உள்ளபடி பொறுத்தாலும், இனிமேல் அதில் அகப்பட்டு வருத்தப்படவுங்கூடும். அப்படியாகில், தேவன் தமது சமுகத்தை உனக்கு மறைத்து, உன்னைச் சிட்சிக்க தமது கரத்தை நீட்டுவார். அப்போது நீ பிரலாபிப்பாய்; நீ சோர்ந்துபோகாமல் தற்காக்கப்படும்படி உனக்குச் சில ஆலோசனை சொல்லுகிறேன்.

முதலாது, பக்தியில் தளர்ந்துபோவது இன்னதென்றுஉனக்கு விளக்குகிறேன். நீ மெய்த்தேவபக்தியில் தளர்ந்துபோகக் கூடிய நிலைமையிலிருக்கிறாய். கர்த்தருடைய சித்தத்திற்கு இணங்கி [illegible] அவருக்குக் கீழ்ப்படிந்து, அவர் விலக்கினவைகளை வெறுத்துத்தள்ளி, அவர் விதித்திருக்கிறவைகளைக் கைக்கொண்டு நடப்பதுமெய்த்தேவபக்தியாயிருக்கிறது. இதற்குப் பின்னமாக நடப்பது, அவபக்திக்குரிய குறிப்பு. இதைச் சற்று விளக்கிக்காட்டுகிறேன்; அதென்னவென்றால், தெய்வீககாரியங்களை நினையாமல் அவைகளை மறப்பதும், கர்த்தருக்கு உன்னை ஒப்புக்கொடுத்தபோது நிறைவேற்றுவேன் என்று நீ வாக்கருளிய கடமைகளை நிறைவேற்றாமல் விட்டுவிடுவதுமே. இந்தக் குறைவுகள் பலரிடத்தில் பற்பல குறிப்புகளினால் துலங்கும். அந்தக் குறிப்புகள் இன்னவையென்று உனக்குக் காட்டுவேன். நீ தனித்தியானம் செய்கிறதிலே, இந்தக் குறைவு முதலாவது காணப்படும்; தனிச்செபம் செய்யும்வேளை

வந்து விட்டதென்று அறிந்தும், சோம்பல் மிகுதியினாலே காலையில் படுக்கையைவிட்டு எழுந்திருக்கப் பிரியமற்றுச் செபத்தை நிறுத்திப்போடுவதுண்டு. மாலையிலே சிநேகிதருடன் சம்பாஷணை செய்வதினாலும் அலுவலாயிருப்பதினாலும் தியானம் பண்ணச் சாவகாசம் இல்லையென்று விட்டுவிடுவதுண்டு. நீ தனித்தியானம் செய்ய அறையில் பிரவேசித்தாலும், உனக்குப் பிரியமான இன்ன புஸ்தகத்தை வாசிக்கவேண்டுமென்றிருப்பதினாலும், அல்லது இன்னாருக்கு காகிதம் எழுதவேண்டிய அவசியமிருப்பதினாலும், அல்லது இன்ன இன்பசந்தோஷத்தைக் கொண்டாடவேண்டுமென்ற அவாவிருப்பதினாலும் தனித்தியானத்தைப் பின்னுக்குச் செய்யலாமென்று நகட்டுவதுண்டு. அப்படி நகட்டிவைப்பதினால், பிந்தி சரியான சாவகாசம் கிடைக்கமாட்டாமையால், வேதம் வாசிப்பதை நிறுத்தி செபத்தைத் துரிதமாய் செய்து முடிப்பாய். இப்படிச் செய்வதினாலே, தேவன் உன்னால் அவமதிக்கப்படுகிறார். உன் ஆத்துமா ஞான போஜனமில்லாமற்போகிறது. உன் இருதயம் தனிஆராய்ச்சி செய்யாதபடி போகிறது. உன் ஜெபம் உனக்குப் பாரச்சுமையாகிறது. இப்படிப்பட்ட கேட்டினின்று விடுவிக்கப்படவகைதேடாவிட்டால், குடும்பத்திலும் கோவிலிலும் நீ செய்யும் ஆராதனையிலும் அது சீக்கிரமாய்ப் பரம்ப சீர்கேடு வரவர உன்னில் அதிகப்படும். பற்பல லௌகீக சிந்தனைகள் உன்னில் தலைப்படுவதினால் உன் ஆராதனைகள் எல்லாம் விருதாவாய்ப் போம். வேண்டாத்தன்மையோடே நீ நிறைவேற்றின கடமைகள் உனக்குப் பிரயோஜனப்படமாட்டாது. ஏனென்றால், நீ தேவனை அற்பமாய் எண்ணி, தெய்வீக அநுபவத்தை இழந்துபோனாய். கர்த்தருடைய ஞானப்போஜன முறைமை ஆத்தும சிந்தனைகளை வசப்படுத்துவதற்கும், [illegible] தெய்வ நேசத்தை வர்த்திப்பதற்கும் உபயோகமாய் இருப்பதினால் பக்திக்குறைவு அதிலே முதல்முதல் தோன்றாதிருக்கலாம் என்றாலும், கடைசியில் அதிலேயும் வெளிப்படும். பக்திக்குறைவு அந்தத் திருமேடையண்டை வராதென்று சொல்ல ஏதுவில்லை. தெய்வீக உணர்ச்சி உன்னில் குறைவடைய, நீ செய்யவேண்டிய வைதிக கடமைகளையும் தேவாலயத்தையும் புறக்கணிக்கும் வெறுப்புண்டாகும். படிப்படியாய் உன் ஆத்தும சத்துருக்கள் உன்னை மேற்கொண்டபின், அவைகளை நீ ஜெயிப்பது உன்னால் கூடாதகாரியமாகும்.

பிதாவாகிய தேவனையும் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவையும்பற்றிய அன்பு உன்னில் குறையும்போது, சகோதரராகிய



உத்தம கிறிஸ்தவர்களைப்பற்றிய அன்பும் குன்றிப்போம். மேலும், பிறருடைய ஆத்தும வாழ்வுக்கடுத்த பிரயத்தனங்களையும், செய்ய விரும்பாவிட்டால், உன் அயலாரிடத்திலும், கிறிஸ்தவ சிநேகிதரிடத்திலும், உன் சுயகுடும்பத்தாரிடத்திலும், முன்போல தெய்வகாரியத்தை எடுத்துப்பேச பற்பல வீண்போக்குகளைச் சொல்லுவாய்.

இப்படித் தெய்வீக உணர்ச்சிகள் உன்னிடத்தில் குறையக் குறைய, சிற்றின்ப ஆசையும் லௌகீக வாஞ்சையும் உன் உள்ளத்தில் வரவர விர்த்தியடையும். ஏனென்றால், உன் ஆத்துமா நன்மையாவது தீமையாவது செய்யாமல் இருக்கமாட்டாது. அது உனக்குப் பிரியமுண்டாகத்தக்கதாக யாதேனும் ஒருவிஷயத்தில் முயற்சி செய்துகொண்டேயிருக்கும். சிலவேளை கூட்டமாய்க்கூடி விருந்துகொண்டாடுவதினாலும், இச்சை மிஞ்சிப்போக உன் ஜீவனார்த்தங்களுக்குரிய காரியங்களைக் கவனித்துப் பாராமல் மோசமடைவாய். மற்றும் வேளைகளிலே பிறருடைய விஷயங்களில் தலையிட்டு, வீண்வாக்குவாதம் செய்து, மனச்சமாதானத்தைக் கெடுத்துப்போடுவாய். நீ வெகுதூரம் தவறிப்போனாய் என்று குருக்களும் பக்தியுள்ள சிநேகிதரும் கண்டு, உன்னைத் திருத்துவதற்குப் பிரயத்தனம்பண்ணி புத்தி சொன்னாலும், நீ அவர்களுக்கு விசனத்தைக் காட்டி, சற்றும் நன்றியறிதலில்லாமல் இருப்பாய்.

மேலும், நீ அதிகமாய்ச் சீர்கெட்டுப்போனபடியால், உன்னைக் குணப்படுத்துவதற்கேதுவான சுவிசேஷ சத்தாங்க உபதேசங்களை அற்பமாய் எண்ணி, வரவர அவைகளை வெறுத்துத் தள்ளத் துணிவுகொள்ளுவாய். இப்படி உன் ஆத்தும நிலைமையை [illegible] அன்பு பிரமாணத்தைப் புறக்கணித்ததினால், உன் திருவாகம் இன்னதென்று அறியாமல், உனக்கு ஒரு தாழ்ச்சியும் இல்லை என்று எண்ண ஏவப்படுவாய். தேவபக்திக்குரிய வழிகளில் பிரவேசித்தபோது, நீ அடைந்த ஆத்தும ஆனந்தம் வீணான எண்ணத்தினால் உண்டான ஓர்வித உணர்ச்சியேயன்றி வேறல்ல, என்று எண்ணுவாய். இதுவுமல்லாமல், நீ நடப்பித்த பரிசுத்த ஜீவியம் அவசியமில்லாத ஓர் பக்திவைராக்கியம் என்றும், முன் நடந்ததுபோல அவ்வளவு பரிசுத்தமாய் நடக்கவேண்டியதில்லையென்றும் அப்படி நடக்கக் கர்த்தர் கற்பிக்கவில்லையென்றும் நீ கருதிக்கொள்ளலாம். ஒருவன் செபவாஞ்சை இல்லாதவனாயிருந்தும் தன் அயலாருக்கு நன்மைசெய்து நற்குணசாலியாய் நடந்து சன்

மார்க்கமாய் நாள்கழித்தால், அதுவே போதும் என்றும் நீ எண்ணிக்கொள்ளுவாய். சத்துரு இப்படி உன் மனதை மருட்டி, உன்னை வஞ்சித்துக் கெடுத்துப்போடுவான்.

நீ தேவபக்தியில் குன்றிப்போயிருப்பதற்கு இது சடைசி யான அடையாளம். இந்த எல்லையட்டும் வந்திருக்கிறவன், முழுமையும் கர்த்தரை விட்டு பின்வாங்கவும், துணிகரமான பாவங்களைச் செய்யவும் எதுவாவான். இப்படிப்பட்டவன் தன்னில் அற்பமேனும் குறைவில்லையென்று எண்ணி, தன்னைச் சீர்ப்படுத்த யாதொரு எத்தனமும் வேண்டுவதில்லை என்பான். அவனைச் சீர்ப்படுத்துவதற்கு நாம் என்னபிரயாசத்தைச் செலுத்தினாலும் அது விருதாவாய் முடியும்.

பக்தி குன்றுவதற்கேதுவான அடையாளங்கள் முதலாவது உன்னில் தோன்றும்போது, சற்றும் தாமதமில்லாமல் உடனே சீர்திருந்துவதற்கு வகைதேடும்படி உனக்கு ஆலோசனை சொல்லுகிறேன். நீ தனித்தியானம் செய்யும்இடத்தில் இந்தக் குறைவு உன்னில் முதலாவது துவக்கினதால், நீ குணமாவதற்கு அங்கேயே முதலாவதாக ஏதுக்களைத் தேடவேண்டும். உன் ஆத்துமநிலைமை கர்த்தருடைய சந்நிதானத்துக்கு முன்பாக எப்படியிருக்கிறதென்பதைச் சீர்தூக்கிப்பார். நீ விரும்புகிறபடி அது நன்றாயிருக்கிறதா? முன்னிருந்ததுபோல, அது செழிப்பாயிருக்கிறதா? சடிதியாய்த் தேகத்தைவிட்டுநீங்கி நித்தியநிலைமைக் குட்பிரவேசிக்க ஆயத்தமாயிருக்கிறாயா? நித்தியத்தைப்பற்றிய உணர்வு உண்டாகும்போது அநேகாயிரமான போக்குகள் வியர்த்தமாய்ப்போகும். நித்தியத்தைக் குறித்துத் தியானியாமல் மறந்துபோவதால், ஆத்துமா வஞ்சிக்கப்பட்டுப்போவதுண்டு. அந்த நிலை தவறியிருப்பதை நீ காண்கையில், உன்னைத்தானே நீ தாழ்த்தி, கர்த்தரிடத்தில் விண்ணப்பங்களைச் செய்து, ஆவியானவருடைய வுதவியால் நீ புதுப்பிக்கப்படும்படி வகைதேடுவாயாக. குறிக்கப்பட்ட காலத்தில் தனித் தியானம் சுயபரீட்சை முதலியவற்றைச் செய்யும்படி திரும்பவும் முயற்சிசெய்து, தேவவசனத்தை முன்னைவிட அதிக ஜாக்கிரதையாய் வாசித்துவருவாயாக. திவ்விய வசனத்தை வாசிக்கும்போதெல்லாம், அதை எழுதினவர்கள் இன்னவித சிந்தனையோடே எழுதினார்கள் என்பதைச் சிந்தித்து உணர்ந்துகொள்ளப் பார்.

நீ வாசிக்கும் திவ்விய போதனைகளுக்கு உன் மனதை முழுவதுமாய் இணங்கப்பண்ணு. மெய்த்தேவபக்திக்கடுத்த காரியங்



களில் உன் இருதயத்தைச் செலுத்து. தேவபக்தியில் தேர்ச்சியடைந்து, தங்கள் நடக்கையிலே அதை அலங்கரிக்கிறவர்களுடன் சம்பாஷணைசெய்து, அவர்களில் சிறந்தோங்கிய குணங்களை அடையும்படி பிரயாசப்படு. உனக்குச் சாவகாசம் நேரிடும்போது, தேவபக்தியின் வளர்ச்சிக்கேற்றபடி எழுதப்பட்டிருக்கிற தியானப்போக்கான புத்தகங்களை வாசித்துவா. கூடிய சீக்கிரத்தில் கர்த்தருடைய இராப்போசன பந்தியில் சேர்ந்து, நவமாய்த் தேவனோடே, உடன்படிக்கை பண்ணி, மரணபரியந்தம் கிறிஸ்து உன்னை நேசித்த நேசத்தைத் தியானித்து, உன்னை முழுவதுமாய் அவருக்குப் பிரதிஷ்டையாக்கி, அவருடைய அன்பிலே சுடர்களைப்போல கொழுந்துவிட்டெரியும்படி பிரயாசப்பட்டு, இப்படி உனக்காக மரித்த அவருக்கென்று ஜீவனம் பண்ணிவருவாயாக. உன் உள்ளத்தில் பதிந்திருக்கும் நற்சிந்தனைகள் நீங்கிப்போகாதபடி காத்துக்கொள். நீ முன் அநுபவித்த மனோற்சாகத்தைத் திரும்பவும் அடையும்படி முயல்வது மன்றி, இன்னும் மெய்ப்பக்தி உன்னில் வளர்ந்து அதிகரித்துக்கொண்டிருக்கும்படி சாக்கிரதையாயிரு. நீ பின்வாங்காதபடி பக்திவைராக்கியத்துடன் முன்னுக்குச்செல்ல நாடு.

நான் சொல்லிய எச்சரிப்பான போதனைகளுக்கு உடனே இணங்கி நடக்காவிடில், நீ சீக்கிரத்துக்குள்ளாக நிலைதவறி நாசவழியில் நடந்து, கொடிய மோசத்துக்கும் வேதனைக்கும் உள்ளாவாய்.

## பக்திக்கேட்டை உணர்ந்தவன் சொல்லத்தகும் ஜெபம்.

நித்தியரான யேகோவாவே! நீ எப்படி மாறாதவராயிருக்கிறீரோ, அப்படியே உம்முடைய சம்பூரண லட்சணங்களும் மகத்துவங்களும் மாறாதவைகளாயிருக்கின்றன. உம்முடைய குமாரனாகிய இயேசுகிறிஸ்து நேற்றும் இன்றும் என்றும் மாறாதவராயிருக்கிறார். என் எண்ணங்களும் விருப்பங்களும் தீர்மானங்களுமோ, அநேகதரம் மாறுதலுக் குட்படுகின்றன. ஐயையோ என் தேவனே, என்னிலே தலைப்பட்டிருக்கிற குணபேதம் எதினாலே உண்டாயிற்று. நான் உம்மைவிட்டு வழிவிலகிப் போனதற்குக் காரணம் என்ன? உம்மை நோக்கி என் பிதாவே என்று சொல்லி முன் நான் காட்டிய புத்திரசுவிகார அன்பு எங்கே. உம்மைப் பிரார்த்திக்கத் துணிந்தாலும், உம்மை ஆராதிக்காமலிருக்கிறதென்ன? என் தேவனே, கொஞ்சக்காலத்துக்கு

முன்னே என் ஆத்துமா இன்பத்தோடே உம்மை நோக்கிப் பிரார்த்தனை செய்ததே. இப்போது ஏன்? அது எனக்குப் பாரமாய்க் காணப்படுகிறது. முன் என் இருதயம் பூரித்து உம்மைத் தியானித்துக்கொண்டிருந்ததே இப்போது அந்த ஆனந்தம் எங்கே.

ஐயையோ கர்த்தாவே, நான் தவறி விழுந்துவிட்டேன், நான் கெட்டுப்போகாதபடி தேவரீர் என்பேரில் இரக்கம் வைத்திருக்கிறது பெரிய அற்புதமே. இன்னும் நீர் என்னைக் கடாக்ஷிக்கிறீர்; இரக்கமுள்ள தேவனே, நான் முன் அநுபவித்த ஆத்தும ஆனந்தம் என்னைவிட்டு நீங்கினதால், என்னிடத்தில் எவ்வளவோ மாறுதல் உண்டாயிருக்கிறது; இதை நினைத்து நான் வெட்கப்படுகிறேன். நான் உம்முடையபேரில் முன் கொண்ட மனோவாஞ்சையும் விருப்பமும் எங்கே? மோட்ச இளைப்பாறுதலுக்குச் சமீபித்திருக்கிறேனென்று எண்ணி, இனி உம்மைவிட்டுப் பிரியமாட்டேன் என்று சாதித்த மனத்திடன் எங்கே? கர்த்தாவே உம்முடைய பரிசுத்தநாளில் என்னை உம்முடைய ஆலயத்துக்கு அழைத்தும், என் நினைவுகளும் விருப்பங்களும் பல வேறான லௌகிககாரியங்களில் சென்றபடியால், நான் உம்மை மனதார உள்ளபடி வணங்கவில்லையே. உம்முடைய இராப்போஜன பந்திக்கு என்னை வரவழைத்தீர், என் இருதயம் மகா கடினமாயிருந்தபடியால் தெய்வீக உணர்வில்லாதவனாயிருந்தேன். சிலுவையின் அடியில் மனம் உருகாமலும் இயேசு சிந்தின இரத்தத்தின் பலனை அநுபவியாமலும் இருக்கிறேன். ஐயோ நான் நிர்ப்பந்தனான பாவியாயிருக்கிறேன். நான் உம்முடையவனென்று அழைக்கப்பட எவ்வளவேனும் பாத்திரனல்ல; உம்மால் புறக்கணிக்கப்படவும் கைவிடப்படவும் அதம்பண்ணப்படவும் ஏற்றவனாயிருக்கிறேனேயன்றி வேறல்ல.

கர்த்தாவே, நான் உமக்குச் செய்வேனென்று ஆயிரம்பதினாயிரந்தரம் வாக்குத்தத்தம் பண்ணின தொண்டு இதுவா? நீர் அநுதினமும் என்னைப் பாதுகாத்து என்னை மீட்கும்படி உமது குமாரனைப் பாவபலியாக ஒப்புக்கொடுத்துப் பரிசுத்தஆவியை அருளி, நான் துணிகரமாய்ச் செய்த எண்ணிறந்த பாவங்களை மன்னித்து, நான் அபாத்திரனாயிருந்தும் மோட்ச மகிமையைப் பெறுவேன் என்கிற நம்பிக்கையை என்னில் உண்டுபண்ணி, இவ்வண்ணமாக நீர் எனக்குச் செய்த எல்லா நன்மைகளுக்காகவும் நான் பதில்செலுத்தும் ஈடு இதுவா? கர்த்தாவே, நான் உமக்கு முன்பாக நிற்கவும் முழங்கால்படியிடவும் வெட்கப்



படுகிறேன். என் ஆத்துமா மண்ணோடு ஒட்டிக்கொண்டு உமக்கு முன்பாகத் தூளில் விழுந்துகிடப்பதால், தேவரீர் என்பேரில் இரக்கம்வைத்து, எனக்குச் சகாயஞ்செய்து, உமது வசனத்தின்படி என்னை உயிர்ப்பித்தருளும். நான் இனி காலதாமதம் பண்ணாமல், என் கால்களை உமது சாட்சிகளுக்கு நேராகத் திருப்பி, உமது கற்பனைகளைக் கைக்கொள்ளும்படி கிருபைசெய்யும்; தேவனே, என்னை ஆராய்ந்து என்னைச் சோதித்து என் சிந்தனையை அறிந்துகொள்ளும். என் ஆத்துமாவிலே தலைப்பட்டிருக்கிற பாவநோய் முழுவதையும் சோதித்து, அதை என்னைவிட்டு நீக்கிச் சொஸ்தப்படுத்தியருளும். கர்த்தாவே நான் பாவத்தை வெறுக்கும்படி, அதின் கொடுமையை எனக்குத் தெரியப்படுத்தியருளும்; நான் கர்த்தராகிய இயேசுவை நோக்கிப்பார்த்துப் புலம்பி, மனங்கசந்து துக்கிக்கும்படி அவரை எனக்கு வெளிப்படுத்தியருளும். அவரில் அன்புகூர அருள்தாரும். நான் அமிழ்ந்தியிருக்கிற சேறுகிய சோம்பலிலிருந்து எழுந்து நான் முன் பெற்றுக்கொண்டதிலும் அதிகமான திவ்விய ஜீவனையும் பக்தி வைராக்கியத்தையும் அநுக்கிரகித்தருளும். நான் இனி சகல நற்கிரியைகளிலும் ஜாக்கிரதையுள்ளவனாயிருக்கும்பொருட்டு என்னை ஏவியருளும். கர்த்தாவே தேவரீர், என்பேரில் பரிபூரணமாக உமது பரிசுத்தஆவியின் கிருபையைப் பொழிந்தருளும். அவர் என்னைத் தமக்கு ஆலயமாக்கிக்கொண்டு என்னில் வாசம்பண்ணுவாராக. என் இருதயமாகிய பீடத்திலிருந்து பரிசுத்தமும் பிரியமுமான பலி உமக்கு எந்நாளும் செலுத்தப்படுவதாக; இந்தத் தூபம் எப்போதும் காட்டப்படுவதாக. அது ஓயாமல் ஜொலித்தோங்கிக்கொண்டேயிருக்கும்படி அநுக்கிரகஞ் செய்தருளும். ஆமென்.

## 18-ம் அதிகாரம்.

### கர்த்தருக்குத் தன்னை ஒப்புக்கொடுத்துப் பக்தியில் வளர்ந்துவந்தும் திரும்பவும் துணிகரமான பாவத்தில் அமிழ்ந்துகிறவனின் பரிதாபமானகாரியம்.

முந்திய அதிகாரத்தில் காட்டப்பட்டிருக்கிற பக்திக்கேடு மகா பயங்கரமான காரியமாயிருக்கிறது. ஆனாலும், இதைப்

பார்க்கிலும் மிகவும் பரிதபிக்கப்படத்தக்க பயங்கரமான மோசத்தில் அகப்படாவிட்டால் நீ யோக்கியனாயிருப்பாய். தேவ ஆவி உன்னில் கிரியை நடப்பித்து வந்திருப்பதால், நீ ஆகாமியத்தைச் செய்யும்படி உன்னை வஞ்சிக்க ஒருவராலும் முடியாது என்று நீ நினைக்கலாம். அடாதகாரியத்தைச் செய்வதிலும் மரிப்பதே நலம் என்று மதிக்கலாம்; அப்படி நீ நினைப்பது சரி. பேதுருவும் அப்படியே நான் உம்மோடு மரிக்கவேண்டியதாயிருந்தாலும், உம்மை மறுதலிக்கமாட்டேனென்று கிறிஸ்துவைப்பார்த்துச் சொல்லியும் (மத். 26. 35.), திரும்ப மோசம்போனது உனக்குத் தெரியுமே. ஆதலால் நீயும் மேட்டிமை சிந்தையாயிராமல் பயந்திருப்பாயாக (ரோ. 11. 20.). நீ மிகவும் துக்கித்து மனஸ்தாபப்பட்டு, இனி ஒருபோதும் செய்யமாட்டேனென்று சொல்லிவிட்டு விலகின பாவத்திலே திரும்பவும் அகப்படக்கூடும்; நீ திரும்பத்திரும்ப அதில் விழவும்கூடும். நீ துணிகரமாய் யாதொரு பாவத்தை ஒருதரம்மாத்திரம் செய்தாலும், உன் இருதயம் எவ்வளவாய்த் துக்கத்தால் ஊடுருவப்படும். அப்போது நீ அநுபவித்த சிற்றின்பத்துக்குப் பதிலாக எவ்வளவாய்த் துக்கசாகரத்தில் அமிழ்ந்திப் பிரலாபிப்பாய். இப்படிச் செய்யும் பாவம் தேவனைவிட்டு உன்னை வெகுதூரம் இழுத்துக்கொண்டு போய்விடும். அது உன் ஆத்துமாவைப் பாழாக்கிவிடும். அதின் பயங்கரத்தை நினைக்க நினைக்க மனதில் மிகவும் துக்கிப்பும் கசப்பும் உண்டாகும். இவ்வித நிலைமையிலே அகப்பட்டால் முன்னே நீ உன் ஆத்துமதோஷத்தைக் கண்டு மனந்தெளிந்து பட்ட மனஸ்தாபத்தைப்பார்க்கிலும் மிஞ்சின விதமாய் மனவேதனைப்படுவாய். அப்போது உன் மனஆறுதல் நீங்கி, உன் நம்பிக்கை சோர்ந்து, உன் நற்குணங்கள் மாறி, இருண்ட அந்தகாரத்தில் அகப்பட்டுத் தியங்குவாய்: அப்போது ஆவிக்குரிய ஆறுதல் எடுபட்டுப்போகும். லௌகிக நன்மைகளையும் நீ அநுபவிக்கப் பிரியமற்றிருப்பாய். உன்னைச் சுகப்படுத்தும்பொருட்டு கர்த்தர் விதிக்கும் சரீர ஆத்தும துன்பங்கள் பாவதோஷத்தினால் அதிகரித்து, உன்னை வாதித்துக்கொண்டிருக்கும். அப்போது உன் ஆத்தும சத்துரு உன் விழுதலைப்பார்த்துத் தைரியங்கொண்டு, தன் உபாயதந்திரத்தினாலும் வல்லமையினாலும் உன்னை அவநம்பிக்கையில் விழத்தட்டி, தன் கால்களின் கீழாகப் போட்டு, இனிமேல் உனக்கு மீட்சியே இல்லையென்று எண்ணும்படி செய்யும். நீ எப்படிப் பிரயாசப்பட்டாலும், மனங்கசந்து அழுது புலம்பி மனஸ்தாபப்



பட்டாலும், அகோர நரகத்துக்கு இரையாகவே போவாயென்று உணரும்படி செய்யும்.

இப்படி அந்தச் சத்துரு உன்னைப் பயமுறுத்தி உனக்கேற்ற புகலிடத்தை நீ இனி நாடாதபடி உன்னை வஞ்சிக்கும். ஆனாலும் நீ அதற்குச் சற்றேனும் இடங்கொடாதே. உன் நிலைமை நான் சொல்லியிருக்கிறபடி இருக்குமானால், அது மிகவும் பரிதபிக்கப்படத்தக்கதா யிருக்கக்கூடும். இன்னும் நீ அந்தச் சத்துருவினால் மயக்கம் அடைவாயாகில், உன் நிலைமை பயங்கரமாயிருக்கக்கூடும். நீ அகப்பட்டிருக்கிற மோசத்[illegible] விடுவிக்கப்படாதிருந்தால், வரவர உன் இருதயம் உ[illegible] னும். அப்போது நீ சடுதியாய் சகாயமில்லாமல் அழிவு[illegible] கலாம். ஆனால் மீளாத நாசமோசத்தில் அகப்பட்டிரு[illegible] என்று நீ அவநம்பிக்கை கொள்ளாதே. உன் மதிகேட்[illegible] தம் புண்கள் அழுகியிருக்கிறது என்றாலும், அவைக[illegible] பட[illegible]தல்ல. கீலேயாத்திலே பிசின் தைலம் இ[illegible] அங்கே ரணவைத்தியனு மிருக்கிறார்; ஆதலால் உன் நம்பிக்கையற்றதா யிருக்கிறதென்று நினையாதே. ந[illegible] யில்லையென்று எண்ணுவாயாகில், சாத்தான் அதிகப்[illegible] மான பாவங்களில் அமிழ்த்திப்போடுவான். தேவன் தம்மைவிட்டுப் பின்வாங்கி சீர்கெட்டுப்போன ஜனங்களைப்பார்த்துச் சொன்னபடியே அவர் இப்போது உன்னைப் பார்த்தும், "நீ என்னிடத்தில் திரும்பிவா" என்கிறார் (எரே. 3. 1–13.). புதுப்பிக்கும் கிருபைக்காக மன்றாடு; அந்தக் கிருபையின் வல்லமையினாலே கர்த்தர் அண்டைக்குத் திரும்பவும் வரப் பிரயாசப்படு. தாவீதுராஜா பாவத்தில் அகப்பட்டபோது, காணாமற்போன ஆட்டைப்போல வழிதப்பிப்போனேன்; உமது அடியானைத் தேடுவீராக; உமது கற்பனையை நான் மறவேன் என்று செபித்ததுபோல் நீ ஜெபிப்பாயாக. நீ கர்த்தர் அண்டைக்குத் திரும்ப உனக்குப் பிரியமாயிருந்தால், உடனேதானே திரும்பவேண்டும். நீ வழிதப்பிப்போன பாதையில் அடுத்த கால் எடுத்துவையாதே. இன்னும் ஒரு பாவம் செய்து, அப்பால் குணப்படுவேனென்று எண்ணாதே. அப்படிச் செய்தால் முந்தின குற்றத்தைவிட பிந்தினது அதிகக் கேடாய் முடியும். ஆனபடியால் காலதாமதம் செய்யாமல் தப்பும்படி அதிசீக்கிரமாய் வழிதேடு. உன் ஜீவன் தப்ப ஓடிப்போ. உன் கண்ணுக்கு நித்திரையும் உன் கண்ணிமைக்குத் தூக்கமும் வரவிடாதிரு. தீங்கு உன்னைப் பின்தொடராதபடிக்கும் தேவநீதியின் கட்கம் உன்னை வெட்டாதபடிக்கும், நானேக்கென்று

காலத்தை நகட்டாமல், உடனே மன்னிப்புக்காக முயற்சிசெய். நீ நாளைக்கென்று உன் குணப்படுதலை நிறுத்திவைத்தால் இன்று இரவு நரகத்தைச் சுதந்தரிக்கப் போகலாமே.

காலதாமதம் செய்யாமல் உடனே மனந்திரும்பு. பயபக்தியோடே தேவனண்டைக்கு வர கிறிஸ்தவன் தவறிவிழுந்து மோசத்தில் அகப்பட்டால், தான் தவறிவிழுந்தவகை இன்னது என்பதைச் சிந்தித்துக்கொண்டிராமல் எழுந்து உடனே ஓட்டம்பிடிக்கவேண்டுமென்று சில வேதியர்கள் போதிப்பதுண்டு. ... பத்தவறிலே அகப்படும் காலத்தில் ஒருவேளை அப்படிச் ...வது நலம். ஆனால் ஒருவன் தன் மனச்சாட்சிக்கு விரோ...ன்று அறிந்தும், துணிகரமான பாவத்தைச் செய்தபின்பு, ...் அப்படிச் செய்வது தகுதியென்று தோன்றுகிறதில்லை. ...த்தவேதம் அதற்குச் சார்பாயிருக்கிறதுமில்லை. மேலே ...ா காட்டியிருக்கும் பக்திக்கேட்டில் நீ அகப்பட்டிருந்தால், ...ன் ஆத்துமாவின் அருமையை எண்ணி, கொஞ்ச நேரமென்கிலும் நீ தாமதியாமல் பயபக்தியோடே தனித்தியானம் பண்ண வகை தேடிக்கொள்வாயாக. இது தீராத அவசிய மானகையால், மற்றும் அலுவல்களை விட்டு, இதையே செய்ய முயற்சிப்பது நியாயம். கர்த்தருடைய சந்நிதானத்திலே உன் மனச்சாட்சி உன்னைக் கடிந்து உனக்குக் கண்டிப்பாய்ச் சொல்வதைக் கேட்டுக்கொள். தேவனைவிட்டு விலகுவது எத்தனைபொல்லாப்பும், கசப்புமான காரியம் (எரே. 2. 19.) என்று நினைக்கும்பொருட்டு உன் மனச்சாட்சியைக்கொண்டு உன்னோடு பேசும்படி ஊக்கத்தோடே அவரை நோக்கிச் செபி. பாவம் உன்னில் அதிகரிப்பதற்கு ஏதுவான காரியங்களைச் சிந்தித்துப்பார். விசேஷமாய் உன்பேரில் தேவன் விளக்கின இரக்கத்தையும் நன்மைகளையும், நீ அவரோடே பண்ணின உடன்படிக்கையையும், மீட்பர் இரத்தஞ்சிந்தி வெளிப்படுத்தின அன்பையும், அவமதித்ததை நினைப்பாயாக. கர்த்தர் உன்பேரில் பாராட்டின கிருபைகளுக்கும் மீட்பர் வெளிப்படுத்தின அன்புக்கும் இதுவா பதில்? கிறிஸ்து தமது சத்துருக்களினால் வேதனைப்படுவது போதாதா? அவர் தமது சிநேகிதர் வீட்டிலும் காயப்படவேண்டுமோ? (சங். 13. 6.) இந்த அருவருப்புகளையெல்லாம் செய்வதற்காக விடுதலைபெற்றிருக்கிறேனென்று சொல்லுவாயோ? (சகரி. 7. 10.) நீ துணிகரமாய்ப் பாவத்தை நடப்பிக்கும்படியாகவா காருணிய கர்த்தர் உனக்காகப் பெருமூச்செறிந்து மரணமடைந்தார்? நீ இப்படிச் செய்தால் தேவன் தமது சமூகத்தைவிட்டு உன்னை அகற்று



வதே நியாயம். ஐயோ! ... தேவசமூகத்திலிருந்து நீ துரத்தப்படுதல் உனக்கு எவ்வளவு பயங்கரமாகக் காணப்படும். இப்படிப்பட்ட சிந்தனைகள் உன்னில் வளரும்படி வகை தேடு. இவ்வித தியானத்தினால் நீ மனம் உருகி அவரண்டைக்குத் திரும்பலாம் (சகரி. 12. 10.). இயேசு தமது இரத்தத்தை உண்மையோடேயும் உன்னில் தெளித்து, உன் குற்றத்தை நீக்கி உன் ஆத்துமாவைச் சுத்திகரிப்பதற்கு அவரை மன்றாடு. இரட்சகர் நீ செய்யும் விண்ணப்பத்தைக் கண்டு கிருபைபொருந்தின சித்தத்தோடே உன்னை ஏற்றுக்கொள்வார். ... தேவனுடைய உடன்படிக்கையை இயேசுவின் மூலமாய்ப் புதுப்பித்துக்கொள். நீ கர்த்தருடைய ஆலயத்துக்குப் போகவும் இராப்போஜனம் சேரவும் நாணமல் சமையம் வாய்க்கும்போது அப்படிச் செய்ய ஜாக்கிரதையாயிரு. நீ பிதாவின் வீட்டிலும் கிறிஸ்து சிலுவையில் அறையப்பட்டவகை உன் கண்களுக்கு முன்பாகப் பிரத்தியட்சமாய் உனக்கு வெளிப்படுத்தப்படும் இடத்திலும், உன்னைத் தாழ்த்துவதும் தகுதியானது. தேவபக்தர்களும் தங்களைப் பாவிகளென்று உணர்ந்து கர்த்தருடைய பந்தியைச் சேருகிறவர்களாயிருக்கிறார்கள்.

இன்னம் ஒரு காரியத்தை உனக்குத் தெரியப்படுத்துகிறேன். உன் பாவத்தினாலே மற்றவர்களுக்கு இடறல் உண்டானால், அவர்களிடத்துக்குப் போக உன் மனசில் வெட்கமும் துக்கமும் உண்டாகுமென்று எண்ணி, அவர்களிடம் போகாதபடி பார்ப்பாய். அது சரியல்ல, அப்படிப்பட்ட காரியங்களில், நீ படும் மனத்துக்கத்தினால் நீ குணமாகும்படி தேவன் தமது மிகுந்த தயவினால் அதை ஒரு மருந்துபோல நியமித்திருக்கிறார் என்பதை எண்ணவேண்டும். ஆதலால் உன்னால் இடறல் உண்டாக்கப்பட்டவர்களிடத்தில் உன் குற்றத்தை உணர்வோடே அறிவித்து, அவர்கள் அதைப் பொறுத்துக்கொள்ளவும், உனக்காகச் செபம்பண்ணவும், அவர்களைக் கேட்டுக்கொள். அப்படிச் செய்வதினால், உன் மனதுக்கு ஆறுதல் உண்டாகும். உன் குற்றத்தை அற்பமென்று காட்ட வீண்போக்குச் சொல்வதினாலும், உன் குற்றத்துக்காக மற்றவர்கள் உனக்குச் செய்யும் கண்டிதம் அதிகக் கொடுமை என்று நீ சொல்வதினாலும், உன்னைச் சுத்தவானாக்கலாம் என்று எண்ணாதே. அப்படி நீ சொல்வதும் எண்ணுவதும் பெருமையிலுண்டாகிறது. தேகத்திற்பட்ட காயம் கடினமும் வீக்கமும் எரிபந்தமுமாயிருந்தால், அது ஆறும்படி முதல் முதல் அதைக் குளிரப்பண்ணி ஆற்றி

கொள்வதுபோல உன் மனமும் க... ...ருக்க. யிருக்கிறது. ஒருவனுக்கு முன்பாக ...ந்துருகி ஆறவேண்டியதா யிருக்கிறது. ஒருவனுக்கு முன்பாக ...ந்துருகி மனஸ் தாபப்படுகிறவன், மனுஷர் செய்யும் ... தன்னைத் தாழ்த்தி பொறுமை யோடே சகித்துக் கர்த்தரை மகிமை... ண்டிதத்தைப் பொறுமை தன்னைப்பற்றி நல்லெண்ணங் கொ...படுத்தி, அதினால் பிறர் அப்பேர்ப்பட்டவன் தேவகடாக்ஷத்தா...ளும்படிப்... ர்ப்பான். ...றவு டன் பிறர்க்கு நன்மைசெய்யத் ...ல் மனஅ... அன்றியும் ஒருவன் தான் செய்த ...ய...குதியுள்ள...னுமாவான் கைசெய்து, அதுநிமித்தம் தன்...ற்றத்தை உ...ணர்ந்து, அறிக் கண்டு அவன்மேல் நேசம் வைப்ப... தாழ்த்...வதைப் பிறர் குணத்தை உடையவனைக் கண்டால், பரி...த்து, அப்படிப்பட்ட ஆற்றித் தேற்றும்படி வகை தேடுவார்கள்.

---

## தேவபக்தியாய்ச் சீவனம்பண்ணத் தீர்...த்து நடப்பவன் துணிகரமான பாவத்தில் அகப்பட்டால் அவன் சொல்லக்கூடிய பிரார்த்தனை.

---

கர்த்தராகிய தேவனே நீரே மகா பரிசுத்தர், பரிசுத்தர், பரிசுத்தர்! நீர் களங்கமற்ற பரிசுத்தர். எல்லாவற்றையும் ஆண்டு நடத்தும் வல்லவர், பாரபட்சமில்லாதவர். நினைத்தமாத்திரத்திலே எல்லாவற்றையும் முடிக்கத்தக்க சர்வவல்லவர். இவைகளை நான் நினைக்கையில், இன்று நான் வெட்கத்தோடும் திகிலோடும், கலக்கமும் அச்சமுமுள்ளவனாய் உமது சந்நிதானத்துக்கு வருகிறேன். என் தேவனே, ஙப்பும் மந்தாரமுமுள்ள இந்நாளிலே எங்கள் பாவத்துக்கும் நிர்ப்பந்தத்துக்கும் காரணமாக எங்கள் ஆதித்தாய்தந்தை தவறிவிழுந்த மோசத்தை நினைத்து "இதோ நான் துர்க்குணத்தில் உருவானேன், என் தாய் என்னைப் பாவத்தில் கர்ப்பந்தரித்தாள்" என்று அறிக்கையிடுகிறேன் (சங். 51. 5.). பாவியானவர்களின் வம்சவழியாய் நான் உற்பத்தியாகிவந்ததினால் எனக்குண்டான மோசம் இன்னதென்று நான் சிந்திக்கையில், இன்று நான் புலம்பித் துக்கங் கொண்டாடுகிறேன். ஐயையோ எத்தனை மோசங்கள் என்னை நெருக்கி வதைக்கின்றன. நான் குணப்பட்டதற்குமுன் செய்த பாவங்களையும், குணப்பட்டபின் எனக்குள்ளிருக்கிற பெலவீனங்களையும் குறைவுகளையும் நினைக்கையில், நான் என்னிலே கலங்குகிறேன். "தேவனே என் புத்தியீனத்தை அறிந்திருக்கிறீர், என் குற்றங்கள் உமக்கு மறைவாயிருக்கவில்லை



(சங். 69. 5.). என் அலைச்சல்களையும் எண்ணியிருக்கிறீர் (சங். 56. 8.); உமக்கு விரோதமாய்ச் செய்த பாவத்தையும் துரோகத்...யும் பாராதிருக்கிறீர். என் பாவதோஷங்களை என்னிலும் அதி...ாய் நீர் அறிந்திருக்கிறீர். என் முகத்தை உமக்கு நேராக ...க்க வெட்கப்பட்டுக் கலங்குகிறேன்; ஆதலால் உம்ம... ...ாக்கி விண்ண...ப்பம்பண்ண அஞ்சுகிறேன். ஆனாலும் உம்மண்டைக்கு அல்லாமல் வேறே யாரண்டைக்குப் போவேன். என் ...வனும் என் மரணமும் உம்முடைய ஆதீனத்திலிருக்கிறது. ...சியிலே என்னை அமிழ்த்துகிற என் பாவச் சுமையை நீக்கவ... நீரே. நான் இழந்துபோன ஆத்தும ஆறுதலையும் ச...யும் திரும்பத் தர உம்மாலேயன்றி வேறே யாராலு... ...நான் நித்தியகாலமாய்க் கெட்டுப் போகப் பாத்தி... ...கிறேன்; ஆயினும் என்பேரில் கிருபையாயிரும்.

கர்த்தராகிய தேவனே, உமது பாதமே என் தஞ்சம் என்று வந்திருக்கிற என்மேல் கடாக்ஷம் வையும். குற்றவாளியென்று உணர்ந்து, உமது சந்நிதானத்திலே வந்து, என்னை முழுவதுமாய் ஒப்புக்கொடுக்கிற ஏழையேன் அடியேனைக் கண்ணோக்கிப்பாரும். நான் சுத்தன் என்று சொல்ல எனக்கு இடமில்லை. என் பாவதோஷம் இவ்வளவு என்று சொல்ல முடியாததாயிருக்க, நான் சுத்தவாளியென்று எப்படிச் சொல்லத் துணிவேன். கர்த்தாவே தேவரீர்மாத்திரம் என் பாவதோஷம் எவ்வளவு பாரமுள்ளதென்று அறிவீர். அளவுக்குள்ளடங்காத அதின் கொடுமை இன்னதென்பது, உமது சர்வஞானத்துக்கு மாத்திரம் விளங்கும். அதின் தோஷத்தை மட்டுக்கட்டக்கூடாது. நான் அவமதித்த உமது தூய மகத்துவத்தையும், நான் அலட்சியம்பண்ணின உமது நன்மைகளையும், நான் காலால் மிதித்து அற்பமாய் எண்ணின உமது நேசகுமாரனுடைய இரத்தத்தின் அருமையையும், நான் நன்றிகேடாய் மதித்த ஆவியானவரின் அருமையையும், சிந்திக்கையில் என் பாவதோஷம் எவ்வளவாய்ப் பெருகுகிறது என்று சொல்லமுடியாதிருக்கிறது. ஐயையோ! என் நடக்கையெல்லாம் எவ்வளவு மதியீனமும் சீர்கேடும் நிறைந்ததுமாயிருக்கிறது. என் கர்த்தராகிய இயேசு நிறைவேற்றின பாவப்பலியை முன்னிட்டு உம்முடனே நான் பண்ணின உடம்படிக்கையை மீறினதினால், அவருடைய திருச்சரீரத்துக்கும் இரத்தத்துக்கும் குற்றமுள்ளவனாயிருக்கிறேன். நான் செய்யத்தகாததைச் செய்ததினாலே உமது பரிசுத்தமார்க்கத்துக்குக் குறைச்சலுண்டுபண்ணி

யிருக்கிறேன். சிலர் தங்கள் நித்திய நாசமோசத்துக்கு ஏதுவாய் உம்முடைய இரட்சணியத்தைத் தூஷிக்கும்படி நான் காரணனாயிருந்தேன். ஆ! என் பாவதோஷங்கள் [illegible]த்தனை திரட்சியாயிருக்கிறது.

கர்த்தராகிய தேவனே! இவைகளையெல்லாம் [illegible]ந்தீ அறிக்கையிடும்படி நான் உயிரோடேயிருக்கிற[illegible] அற்புதமே. நீர் எனக்கு விரோதமாய்த் தீவிரசாட்[illegible]யாக எழும்பி, உமது கோபாக்கினையாகிய இடியை என்மே[illegible] விழச்செய்யாதது பேரற்புதமே. மா பாதகனை [illegible]ன்னை ந[illegible]த்திலே தள்ளி, உம்முடைய நீதியைச் சரிக்கட்டாமலிரு[illegible]தும் அற்புதமே.

தேவனே உம்முடைய நீடிய சாந்தம் [illegible]வளவு ஆச்சரியமாயிருக்கிறது. ஆனால் உம்மண்டைக்கு ந[illegible]படி என்னை வரவழைத்திருவது உமது அருளே அதி[illegible] ம[illegible]ரிது. நான் உயிரோடே இருக்கவும், நித்திய நரகத்துக்குப் ப[illegible]த்திரனாயிருக்கிறேன் என்று நான் உணர்வோடே உம்மிடத்தில் [illegible]அறிக்கையிடவும் தக்கத[illegible], சீர்கெட்ட என்னை உம்மண்டை வரவழைத்திருக்கிறது [illegible]ய கிருபையே. உம்முடைய திருவாக்கைக் கேட்டு, உம்மிடத்துக்கு வரும்படி தைரியம் கொண்டிருக்கிறேன். என் பாதகங்கள் உயர வானமட்டும் எட்டினாலும், உம்முடைய இரக்கங்கள் வானங்களுக்கு மேலாக இருப்பதால், தேவரீர் அவைகளைக் கிருபையாய்ப் பொறுத்தருளும். பரமபிதாவே! உமது இரக்கத்தின் ஐசுவரியத்தையும், உமது குமாரன் சிந்தின இரத்தத்தின் மேன்மையையும், என்மேல் விளக்கியருளும். பாவிகளில் பிரதான பாவியாகிய என் பாவங்கள் உறைந்த மழையைப்போலவும் பஞ்சைப்போலவும் வெண்மையாக்கப்பட்டு நித்திய மோட்சமகிமையைப் பெறுவேனாகில், அந்தச் செய்தியை அறிந்த மண்ணோர் ஆச்சரியப்படுவார்கள்; விண்ணோர் அதைக்குறித்து உம்மைப் போற்றுவார்கள். உமது பாதத்தண்டையிலிருந்து பிரலாபிக்கிற அடியேன் ஆத்துமா சீர்ப்பட, சாம்பலுக்குப் பதிலாக சிங்காரத்தையும், துயரத்துக்குப் பதிலாக ஆனந்த தைலத்தையும், அநுக்கிரகம் பண்ணியருளும். உமது இரட்சணியத்தின் சந்தோஷத்தைத் திரும்பவும் எனக்குத் தந்து நான் சந்தோஷமும் மகிழ்ச்சியும் கேட்கும்படி செய்யும்; அப்போது நீர் நொறுக்கின எலும்புகள் களிகூறும். இப்படி என் பாவத்தை மன்னிக்கும் உமது நேசம் என் இருதயத்தில் ஊற்றப்படச்செய்தால், நான் மனமகிழ்ச்சியடைந்து, பாதகருக்கு உமது வழியை உபதேசிப்பேன். பாவிகள் உம்மண்டைக்குத் திரும்புவார்கள். உம்



மைவிட்டுப் பின்வாங்கிப்போனவர்கள் நான் பெற்ற இரக்கத்தைக் கண்டு தைரியமடைந்து, உம்மிடத்துக்கு வருவார்கள். நான் வெட்கத்துக்குள்ளாகி முகவாட்டம் உள்ளவனாயிருந்தும், நீர் என்னில் வைத்திருக்கிற இரக்கங்கள் மட்டற்றன வென்று உமது மகிமையை மற்றவர்களுக்குப் பிரஸ்தாபப்படுத்துவேன். தேவரீர் என்னில் வைத்த மகிழ்ச்சியினால் பெலனடைந்து, மு[illegible]ன்னிலும் அதிகமாய்ப் பக்திவைராக்கியத்துடன் சேவிக்க அரு[illegible] செய்யும்.

என் தேவனே! நான் மிகுந்த மனத்தாழ்மையோடே உமது சித்தத்துக்கு இசைந்து, இந்த நன்மைகளைத் தரும்படிக் கேட்டாலும், நீர் அவைகளைத் தரக் கடமைப்பட்டவர் என்று நான் துணிகரமாய்ச் சொல்லுகிறதில்லை. மற்றவர்கள் என்னைக் கண்டு எச்சரிப்படையும்படி நீர் சித்தங்கொண்டவராய் நான், என் ஜீவகாலம் எல்லாம் மேகமந்தாரத்தால் மூடப்பட்டு, கடைசியில் அந்த நிலைமையிலே என் ஜீவனை எடுத்துக்கொள்ளப் பிரியப்பட்டீராகில், உம்முடைய சித்தத்தின்படியே செய்தருளும். ஆனாலும் உமது குமாரன் நிமித்தம் என்பேரில் கிருபைவைத்து, மோட்சமகிமையிலே தங்கும் உமது அடியாருடைய பாதத்திலாவது உட்காரத்தக்க இடத்தை அடியேனுக்குக் கட்டளையிட்டருளும். ஆனந்தம் பொருந்திய அந்த லோகத்திலே, நான் ஒருக்காலும் உம்மைவிட்டுப் பிரியாமல், நித்தம் நித்தம் உம்மைப் போற்றிப் புகழ்ந்துகொண்டிருக்கத்தக்கதாக இருண்ட பள்ளத்தாக்கிலும் என்னை நடத்தியருளும். அப்போது என் நாவு கட்டவிழ்க்கப்பட்டு உமக்குமுன்பாக ராஜாக்களும் ஆசாரியர்களுமாயிருக்கிற பரிசுத்தவான்களின் மேன்மைக்குப் பங்குள்ளவனாகும் நீசனாகிய என்னை மீட்டு இரட்சித்த விலைமதியாத திருரத்தத்தை அநவரதகாலமும் போற்றிப் புகழுவேன். ஆமென்.

## 18-ம் அதிகாரம்.

### தேவன் தம்முடைய முகத்தை மறைத்துக்கொண்ட கிறிஸ்தவனுடைய காரியம்.

தெய்வதியானம் பண்ணும் கிறிஸ்தவர்களுக்கு சிலவேளை தேவசமுக மறைவு காணப்படுவதுண்டு. அப்படி உனக்கு

நேரிடும்போது, உனக்கு உபயோகமாகச் சில புத்திபோதனைகளைக் காட்டும்படி யோசனையாயிருக்கிறேன்.

தேவசமுக மறைவு என்பது, "தேவன் ஒருவன்மேல் தம்முடைய முகத்தைப் பிரகாசிக்கப்பண்ணுகிறார்" என்ற வசனத்துக்கு மாறாக விளங்கும். ஒரு சிநேகிதன் தன் சிநேகிதனோடே பேசும்போது, அவன் மனப்பிரியமெல்லாம் அவன் முகமலர்ச்சியில் காணப்படும் என்பதை அறிவோம். தாவீது தேவன் தமது தயவை அவனுக்கு விளக்கும்படி அபேட்சித்த வேளையில் "கர்த்தாவே! உமது முகத்தின் ஒளியை எங்கள்மேல் பிரகாசிக்கப்பண்ணும்; அவர்களுக்குத் தானியமும் திராட்சரசமும் பெருகியிருக்கிறகாலத்தின் சந்தோஷத்தைப் பார்க்கிலும் அதிக சந்தோஷத்தை என்னிருதயத்தில் தந்திருக்கிறீர் என்று விளம்பியிருக்கிறான் (சங். 4. 6, 7.). ஏசாயா உங்கள் அக்கிரமங்களே உங்களுக்கும் உங்கள் தேவனுக்கும் நடுவாகப் பிரிவினை உண்டாக்கியிருக்கிறது. உங்கள் பாவங்களே அவர் உங்களுக்குச் செவிகொடாதபடிக்கு அவருடைய முகத்தை உங்களுக்கு மறைக்கிறது (ஏசா. 59. 2.). தேவரீர் உம்முடைய முகத்தை எங்களைவிட்டு மறைத்து எங்கள் அக்கிரமங்களினிமித்தம் எங்களைக் கரையப்பண்ணுகிறீரென்று (ஏசா. 64. 7.) எழுதியிருக்கிறதைப் பார்க்கையில்; பாவிகள் பேரில் தேவன் தமது தயவை விளக்காமல், தமது விசனத்துக்குக் குறிப்பைக் காட்டுகிறார் என்றும் அறியலாம்.

என் பாவங்களைப் பாராதபடிக்கு நீர் உமது முகத்தை மறைத்தருளும் (சங். 51. 9.) என்று சொல்வதில், தேவன் தம்முடையவர்களின் பாவங்களை எண்ணாமல், அவைகளை மன்னிக்கச் சுபாவம் மிகுந்தவராய் இருக்கிறாரென்று தேற்றுக்கொள்ளலாம். ஆனால் தமக்குப் பிரியமில்லாதவர்கள் செய்யும் விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளப் பிரியமில்லாதவராயிருக்கையில், அவர் அவர்களை நோக்கிப் பார்ப்பதுமில்லை.

தேவதயவுக்கு நாம் அநுபவிக்கும் உலக நன்மைகள் குறிப்பு என்று சொல்லக்கூடாது. ஆத்துமாவுக்குரிய வரப்பிரசாதங்களே சிறந்த குறிப்பாயிருக்கிறது. தேவதயவைப் பெற்றவர்கள் தரித்திரராயிருந்தாலும், மனப்பாக்கியமுள்ளவர்களாயிருக்கிறார்கள். அந்தத் தயவைப் பெறாதவர்களோ எவ்வளவு வாழ்வுடையவர்களாயிருந்தாலும், நிர்ப்பாக்கியராயிருக்கிறார்கள்.

என் பிரிய சிநேகிதனே! இப்போது தேவதயவு உன்னில் தீபம்போல விளங்குவதினாலும், திவ்விய ஒளி மத்தியான



வெளிச்சத்தைப்போல உன் இருதயத்திலே பிரகாசித்திருப்பதினாலும் உன் மனம் பூரித்து மகிழ்ந்தாலும், நீ இனி தெய்வீக நேசத்தின் உணர்வை இழந்துபோகவும் கூடும். தெய்வீக ஞானம், வல்லமை, இரக்கம், உண்மை, பரிசுத்தம் என்பவைகளை நீ சிந்தித்தாலும், உன்னில் மனப்பாக்கியம் உண்டாகாதிருக்கலாம். அவைகளைக்குறித்து நீ சாதாரணமான எண்ணங்கொள்ளவும் கூடும். அல்லவென்றால் அவைகளைப்பற்றி அற்பச் சிந்தனையுமில்லாமலிருக்கவும் கூடும். தேவதயவைப்பற்றிய இன்பமான எண்ணத்தை நீ இழந்துபோகையில், நீ தேவனுடைய பிள்ளையோ அல்லவோ என்பதைப்பற்றி சமுசயப்பட்டுத் திகைத்து அஞ்சுவாய். மேலும், பரிசுத்தஆவியானவர் உன் ஆத்துமாவில் நடப்பித்த கிரியை உனக்கு மந்தாரம்போல் காணப்படுவதால், நீ முன் அநுபவித்த மனப்பாக்கியம் விருதாவென்றும் உன்னைத்தான் வஞ்சித்துக்கொண்டாயென்றும் கருதிக்கொள்ளவும் கூடும். ஆகவே நீ இப்போது தெய்வ நியமங்களினால் அநுபவிக்கும் சந்தோஷம், அப்போது உன் மனதுக்கு இரம்மியமில்லாமலிருக்கும். சுவிசேஷ சத்தாங்கப் போதனைகளை மகா இனிமையாய்ப் பிரசங்கிக்கக் கேட்டாலும், தேவனுடைய பிள்ளைகள் அநுபவிக்கத்தகும் திவ்விய வரப்பிரசாதங்கள் இன்னதென்பதை வர்ணிக்கக் கேட்டாலும், அவைகளில் உனக்குப் பங்கில்லை என்பதுபோல் எண்ணி, அந்த மேலானகாரியங்களை அவமதிப்பாய். அன்றியும், நீ முன் மிகவும் பிரியமாய் அநுபவித்த இன்பங்களை முன்போல அநுபவிக்க மனமற்றவனாவாய். மேலும், ஆவிக்குரிய காரியங்களை ஒருபோதும் தேடி அநுபவியாதவர்கள் உன்னைப்பார்க்கிலும் அதிகப் பாக்கியவான்களாயிருக்கிறார்கள் என்றும் நினைப்பதற்கும் ஏதுவுண்டாகும். இப்படி நீ வியாகுலப்படுங்காலத்தில் நீ முன்செய்த செபங்கள் முதலான தேவாராதனைகள் உண்மையானவைகள் அல்லவென்றும்; நீ முன் பெற்றநுபவித்த மனபாக்கியம், ஆத்தும சத்துரு உன்னைக் கெடுக்கும்படி உன் மனதிலே விளைவித்த பொய் உணர்ச்சியேயன்றி தெய்வ அருளால் வந்ததல்ல என்றும் நினைப்பாய்.

இவ்விதமாக, நீ சிலகாலம் பிரலாபித்துக்கொண்டிருக்கலாம். நீ தேவநியமங்களை அநுசரித்தாலும், தேவன் உனக்குப் பிரசன்னமாகும்படி வாஞ்சையோடே அவரை வேண்டிக்கொண்டாலும், ஒரு நன்மையையும் பெறாமற் போகலாம். தனித்தியானம் செய்து உன் இருதயத்தைக் கர்த்தருக்கு நேராக ஊற்றினபின்பு, சனங்களோடேகூடி, ஆராதனை செய்யும்படி

தேவாலயத்துக்குச் சென்றாலும், தாவீது இராசன் "என் தேவனே நான் பகலிலே கூப்பிடுகிறேன், உத்தரவுகொடீர்; இரவிலே கூப்பிடுகிறேன், எனக்கு அமைதலில்லை" (சங். 22. 2.) என்றும்; யோபு என்பவன் "இதோ நான் முன்னாகப்போனாலும், அவர் இல்லை; பின்னாலே அவரைக் காணேன், இடதுபுறத்தில் அவர் கிரியைசெய்தாலும், அவரைக் காணேன்; வலதுபுறத்திலும் நான் அவரைக் காணாதபடிக்கு ஒளித்திருக்கிறார்" (யோபு. 23. 8, 9.) என்றும் சொன்னதுபோல், நீயும் சொல்லுவாய். அதினால் உன் மனதிலே மெய்த்தேவபக்தி போல் காணப்பட்டவைகள் எல்லாம் வியர்த்தம் என்று எண்ணுவாய். அதினிமித்தம் நீ தேவனுடைய சமுகத்தில் உன் கண்களை ஏறெடுக்கத் துணியாமலும், தேவதாசருடைய கூட்டத்தைச் சேராமலும் இருப்பாய்.

இவ்வண்ணமாக நீ அநுபவிக்கிற துக்கம் தேவபக்திக்கடுத்த காரணத்தால் வந்ததோ, சரீரதுன்பத்தால் விளைந்ததோ என்று ஆராயும்படி புத்திசொல்லுகிறேன். உனக்கு நேரிடும் துக்கமும் மனமுறிவும் உன் லௌகீககாரியங்களினால் வரவுங்கூடியது. நாம் தேவாராதனை செய்து ஆத்தும ஆனந்தத்தை அநுபவியாதபடி லௌகீககாரியங்கள் நம்முடைய மனதை மயக்கி, நமது சிந்தனைகளைக் கலக்கி, நமது உள்ளத்தைக் கசப்பாக்கக்கூடும். அப்படியாகில், நாம் தேவபரிபாலனத்துக்கு அமைந்து, இயன்றமட்டும் லௌகீககவலைகளை அகற்றி, நமது செலவை மட்டுப்படுத்தி, நமது கடமைகளைச் சாக்கிரதையாய்ச் செய்து, மனத்தாழ்மையுடன் தேவனுடைய ஆசீர்வாதத்தை விசுவாசத்தோடே எதிர்நோக்கிக்கொண்டிருக்கவேண்டும். சிலவேளைகளில் தேவன் தம்முடைய பிள்ளைகளைச் சிறந்தபிரகாரம் ஆபத்தினின்று விடுவிப்பதைத் திறந்தவண்ணமாய் விளங்கக்காட்டுவதற்காக அவர்களை வருத்தமான ஸ்திதியில் வைப்பதுண்டு.

சரீரசுகமும் லௌகீகவாழ்வும் அடைந்து இம்மைக்குரிய சந்தோஷங்களை அநுபவித்துப் பரமகாரியங்களை நாடாமலும் ஆத்துமாவுக்குரிய நன்மைகளை அற்பமேனும் விரும்பாமலுமிருக்கிற உனக்கு நான் சொல்லுகிற ஆலோசனை என்னவென்றால்; இந்தப் பெரியதீங்கு இன்ன காரணத்தினாலே வந்ததென்பதை நுட்பமாய் ஆராய்ந்துபார்ப்பதே, உனக்கு உத்தமம். அது மற்றவர்கள் அறியாத ஏதேனும் ஒரு இரகசிய பாவத்தினால் உண்டாயிருக்கலாம். இப்படி மற்றவர்களுக்குத் தெரியாமல் மறைந்திருக்கிற உன் பாவதோஷங்கள் சர்வஞானமுள்ள கர்த்தருக்கு நன்றாய்த் தெரியும். உன் பாவங்களினாலே



அவரைக் கனவீனப்படுத்தினதினால், நீதியின்படி அவர் உன்மேல் விசனமாயிருப்பார். "உங்கள் அக்கிரமங்களே உங்களுக்கும் உங்கள் தேவனுக்கும் நடுவாகப் பிரிவினையை உண்டாக்குகிறது. உங்கள் பாவங்களே அவர் உங்களுக்குச் செவிகொடாதபடிக்கு அவருடைய முகத்தை உங்களுக்கு மறைக்கிறது" (ஏசா. 59. 2.) என்று தெளிவாய் எவர்களும் அறியும்படி எச்சரிப்பாகச் சொல்லப்பட்டிருக்கும்; பயங்கரமான இந்த திவ்வியவசனம், உன் மனதைவிட்டு நீங்காதிருப்பதாக. தேவன் தம்முடைய சமுகத்தை மறைப்பதைக் கடினமான தண்டனையென்று நீ எண்ணாமல், உன் நன்மைக்கேதுவான ஒரு எத்தனம் என்று மதிப்பாயாக. நீ தேவசித்தத்துக்கு இணங்கி உன் துயரத்தை அகற்றி, உன் கண்ணீரைத் துடைத்து, யோசுவாவைப்போல் எழுந்து சாபத்தீடானதை உன்னைவிட்டு நீக்கிவிடு. உன் பெருமையை அடக்கி, சாக்கிரதையுடன் விழித்து, உலகத்துக்கு மரித்தவனாகவிருந்து, மோட்சத்துக்கு யோக்கியனாகும்பொருட்டு முயற்சிசெய்.

மேலும், மெதுவாய் உன்னைத் தட்டி உணர்த்தி ஏவும் உன் மனச்சாட்சி உனக்குச் சொல்லியதைக் கவனமாய்ச் சிந்தித்துக்கொள். அது மிகவும் அவசியமானது. கர்த்தருடைய பந்தியில் நீ சேரும்போது, நீ செய்த ஏதாவது ஒரு காரியம் தகாதது என்று உன் மனதில் கண்டால், அப்படிப்பட்ட குறைவுகளை நீ ஆராய்ந்து அறிந்து, சீர்திருந்தும்படி வகைதேடு. மற்றப்படி அவ்வகையான குற்றம் குறைவுகள் மரணநேரத்தில் உனக்குத் திகிலை உண்டுபண்ணி, நித்திய நரகத்தில் உன்னை அமிழ்த்திப்போடும். நீ பரீட்சித்து அறிந்த தோஷங்களெல்லாம் நீங்கும்படி, கர்த்தருடைய வல்லமையைச் சார்ந்து, அவர் கட்டளைகளை அநுசரித்து வருவாயாக. அவரண்டைக்குத் திரும்பினால், நீ திரும்பவும் ஏறக் கட்டப்படுவாய். "நீர் சர்வவல்லவரிடத்தில் மனந்திரும்பினால் திரும்பக் கட்டப்படுவீர், அக்கிரமத்தை உமது கூடாரத்துக்குத் தூரமாக்குவீர்; அப்போது சர்வவல்லவர்மேல் மனமகிழ்ச்சியாயிருந்து தேவனுக்கு நேராக உம்முடைய முகத்தை ஏறெடுப்பீர். நீர் அவரை நோக்கி விண்ணப்பம்பண்ண, அவர் உமக்குச் செவிகொடுப்பார்; அப்பொழுது நீர் உம்முடைய பொருத்தனைகளைச் செலுத்துவீர், உம்முடைய பாதையில் வெளிச்சம் பிரகாசிக்கும். (யோபு. 22. 23, 26–28.)

இப்படிக் கர்த்தரைத் தேடி, அவர் மகா நீதியுள்ளவர் என்று உணர்ந்து, பிதாவடைவான அவர் சிட்சைக்குக் கீழமைந்து,

அவருடைய இரக்கத்தைச் சார்ந்து, அவரை ஆவலோடே நோக்கிக்கொண்டு, தேவனுடைய ஜனங்களிடத்தில் காணப்படும் குறைவுகளிலும் உன்பேரில் அதிகக் குறைவில்லையென்று உன் மனச்சாட்சி சொன்னாலும், நீ முந்திய காலங்களில் செய்த முதல்தரமான பணிவிடைகளில் காணப்பட்ட குறைவுகளையும், சென்ற நாட்களில் உன்னில் விளங்கின தீங்குகளையும் நினைத்து, அவருக்கு முன்பாக உன்னைத் தாழ்த்திக்கொள். அவர் உன்பேரில் கிருபாகடாட்சம் வைப்பார் என்று உறுதியாய் நம்பி, அவர் குறித்தகாலம் வருமளவும் பொறுமையாயிருப்பாயானால், ஆண்டவர் நித்தியகாலமாய் உன்னைத் தள்ளிவிடார் (சங். 77. 7.). அவர் திரும்பவும் உனக்கு இரங்குவார் (எரே. 12. 15.). அவர் இமைப்பொழுது உன்னைக் கைவிட்டாலும், உருக்கமான இரக்கங்களால் உன்னைச் சேர்த்துக்கொள்ளுவார். அற்பக்காலம் மூண்ட கோபத்தினால் தமது முகத்தை இமைப்பொழுது உனக்கு மறைத்தாலும் நித்திய கிருபையுடன் உனக்கு இறங்குவார் (ஏசா. 54. 7, 8.). இது தேவவாக்காய் இருக்கிறது; ஆதலால் தேவசமுகமறைவு உனக்கு நேரிட்டாலும், என்றும் நீங்காத தயவால் உன்னை அணைத்து, நித்திய பேரின்ப வீட்டில் சேர்க்க தேவனும் பிதாவுமானவர் பிரிய சித்தமுள்ளவராயிருக்கிறார்.

அன்றியும், தேவசமுகமறைவு உனக்கு உண்டாகும் காலத்திலும் நீ செய்யவேண்டிய கடமைகளை ஜாக்கிரதையோடே நிறைவேற்றிக்கொள். நீ மனக்கிலேசமுள்ளவனாயிருந்தாலும், வாசித்துத் தியானம்பண்ணி, தேவஸ்துதிகளைக் கீர்த்தனம் பண்ணி, கிருபையின் எத்தனங்களைக் கையாடி வரவேண்டியது. நீ மந்தையின் காலடிகளைத் தொடர்ந்துபோ (உன். 1. 8.). அப்போது உன் ஆத்தும மேய்ப்பனைக் கண்டுகொள்ளலாம். அவர் வழிகளில் செல்லு; அப்படிச் செய்தால், அவர் உன்மேல் கடாட்சம் வைப்பார். உன் ஆத்துமா ஒரு நிமிஷத்தில் பரமசவுக்கியம் கொள்ளும். கர்த்தருடைய பந்தியைச் சேர்வாயாக. நீ அதில் சந்தோஷமாய்ச் சேர ஏதுவில்லாதிருந்தால், பிரலாபத்தோடேயாகிலும் சேரும்படி பார். அந்த இடத்திலே உன் பாவத்தினால் குத்துண்ணப்பட்ட [illegible]ரட்சகரை நோக்கித் துக்கித்துப் புலம்பு. அப்பம் பிட்கும் இடத்தில் கிறிஸ்து தம்மைத்தாமே உனக்கு வெளிப்படுத்துவார். அவர் [illegible] விலகித் தூரமாயிருக்கிறாரென்று நீ எண்ணங்கொண்டிருக்கும் அவ்வேளையில், உனக்குச் சமீபித்திருக்கிறார் என்று நீ உணர்ந்தறியலாம். இவ்வகைக் கிருபையின் எத்தனங்களினால் அன்றி,



உலக கொண்டாட்டங்களையும் சிற்றின்பங்களையும் அநுபவிப்பதினால் உனக்குத் திருப்தியுண்டாகமாட்டாது.

மேலும் இயேசுவின் இரத்தத்தினாலொழிய வேறெதினாலும் தேவனுடன் நீ ஒப்புரவாகக்கூடாது என்று நிச்சயித்து, அந்த இரத்தத்தையே, சார்ந்து, உன் உடம்படிக்கையை அவருடன் புதுப்பிப்பாயாக. அவரே நம்முடைய சமாதானத்துக்குக் காரணர். அவருடைய இரத்தத்தினாலே நாம் சமீபமாகியிருக்கிறோம் (எபே. 2. 13.). கிறிஸ்துவின்பேரில் தேவன் பிரியமாயிருப்பதால், அவர்மூலமாய் உன்னில் அன்புகூருகிறார். அவர்மூலமாக நாம் அவருடைய கிருபையின் மகிமைக்குப் புகழ்ச்சியாக அங்கீகரிக்கப்படுகிறோம். ஆதலால் கிறிஸ்தவனே, உனக்காகச் சிலுவையில் அறையப்பட்ட இரட்சகர் மகா காருண்ணிய ஆசாரியராயிருப்பதால், அவரண்டைக்குப் போய் உன் சஞ்சலத்தை அவருக்கு முன்பாக ஊற்றி, உன் நெருக்கத்தை அறிக்கையிட்டு, என் தேவனே! என் தேவனே! ஏன் என்னைக் கைவிட்டீர் என்று உன் வியாகுலத்தைத் தெரியக்காட்டு. ஏனென்றால் அவர்தாமே சோதிக்கப்பட்டுப் பாடுபட்டதினாலே, சோதிக்கப்படுகிறவர்களுக்கு உதவிசெய்ய வல்லவராயிருக்கிறார் (எபி. 2. 18.). தேவன் நம்மோடே இருக்கிறாரென்று அர்த்தம் கொள்ளும் இம்மானுவேலாகிய அவர்மூலமாய் பிதாவானவர் நமதுமேல் இரக்கம் அன்பு ஆகிய இர[illegible]ணங்களை விளக்கியருளுகிறார். ஆதலால் காலதாமதமின்றி அவருடன் ஐக்கியமாகும்படி வகைதேடு. அவருடைய ஜீவியம் மரணம் முதலிய விருத்தாந்தத்தை வாசித்து, அவர் திருவாய் மலர்ந்தருளிய வாக்குகளைச் சிந்தித்து, அவர் செய்கைகளைக் கவனித்துப்பார்க்கையில், மிகவும் இனிய பரமானந்தம் உன் ஆத்துமாவில் பெருகிக்கொண்டிருக்கும். இப்படிச் செய்தால் விசுவாசமும் அன்பும் பலமாய் உன்னிலே கிரியைசெய்யும். சாந்தம், சமாதானம், அமைதி என்ற லட்சணங்களை ஆத்துமாவில் ஆள பரிசுத்தஆவியானவர் உன்னை ஆற்றித் தேற்றவே, நீ வரவரத் தேர்ச்சியடைவாய். அப்போது உன்னைச் சிறுமைப்படுத்தின நாட்களுக்கும், நீ துன்பத்தைக் கண்ட வருஷங்களுக்கும் சரியா[illegible]னக்கு மகிழ்ச்சியைத் தந்து, பின்பு பொன்னுலகில் நீ பிரவேசம் அடைந்து கர்த்தரைத் துதிக்கும் பொற்கீதங்களைப் பாடும்படி அநுக்கிரகஞ்செய்வார்.

## தேவமுக மறைவு என்னும் இடையூறில் அகப்பட்ட ஆத்துமா பண்ணும் விண்ணப்பம்.

துதிக்கப்படத்தக்க தேவனே! உம்மிடத்திலே ஜீவனுக்கும் பாக்கியத்துக்கும் ஊற்றிருக்கிறது. அதிலிருந்து ஊறும் நீரைப் பானம்பண்ணி, உமது திருமுகப் பிரகாசத்தின் இன்பத்தையும் என் ஆத்துமாவில் ஊற்றப்பட்ட உமது அன்பையும் சந்தோஷத்தோடே அநுபவிக்கச் செய்தீரே, உமக்கே ஸ்தோத்திரம். ஆனால் ஐயோ அந்த நற்காலம் போய்விட்டதே; அதை நினைத்து, என் உள்ளம் எனக்குள்ளே உருகுகிறது. நான் முன்போலவே உம்மிடத்திற்குப் பிள்ளைபோல் வந்து, அன்பு பாராட்டி, என் பிதாவே! என் தேவனே என்று உம்மை நோக்கிக் கூப்பிட விரும்பியும், தூரமாய் நின்று திகைக்கிறேன். என் தோஷமும் அச்சமுமே அந்த இனிய வார்த்தைகளை வசனியாதபடி என்னைத் தடுக்குகின்றன. கர்த்தாவே நான் உம்மைத் தேடியும், காணாதபடி அலைகிறேன். நான் உம்மைப் பிரார்த்திக்க விரும்பியும், என் நாவு எழும்புகிறதில்லை. உமது வேதத்தை வாசிக்க எண்ணியும், அதில் அடங்கிய வாக்குத்தத்தங்கள் எல்லாம் என் கண்களுக்கு மறைதிரையாயிருக்கின்றன. முந்தின நாட்களில் என் ஆத்துமாவை ஸ்திரப்படுத்தின திவ்விய நியமங்களை நான் அநுசரித்தும், அவைகள் நிழலாட்டம் போல் இருக்கிறதேயொழிய பலன் இல்லாதிருக்கின்றன. அவைகளைக்கொண்டு என்னை உயிர்ப்பிக்கும் ஆவி பறந்துபோயிற்று.

ஆண்டவரே, நித்தியகாலமாய்த் தள்ளிவிடுவீரோ? இனி ஒருபோதும் தயைசெய்யாதிருப்பீரோ? நீர் நீதியின்படி என் ஆத்துமாவை நித்திய நாசமோசத்துக்கு ஏதுவாகப் புறக்கணிப்பீரோ? அப்படி நீர் செய்தாலும், அது நீதிவழுவல்ல. ஏனென்றால் அவைகளுக்கெல்லாம் நான் பாத்திரனாயிருக்கிறேன். நான் உமது சந்நிதியில் நிற்க யோக்கியனல்ல; தேவரீர் என்னை வெறுத்து, அதிக பயங்கரமான மோசத்திலே என்னை அமிழ்த்தினாலும், அது நீதியேயொழிய அநீதியல்ல. மரணநிழல் என் கண்ணிமையின்மேல் விழ, நரகக்குழியின் காரிருள் என்னைச் சூழ்ந்தாலும், அது அதர்மமல்ல. ஆயினும், கர்த்தாவே, என்னைப்போல அந்தகாரச் சங்கிலியால் கட்டப்பட்ட [illegible]க கணக்கானபேர்களை என்றும் ஒழியாத மோட்சதரிசன மகிமை அடையும்படி கிருபைசெய்திருக்கிறீரே. என் தேவனே, அது



போல் என்பேரிலும் இரக்கம் காட்டி, உமது கிருபையை எனக்கு விளக்கியருளும்; என் அக்கிரமங்களினிமித்தம் தேவரீர் நீதிப்படி உமது முகத்தை எனக்கு மறைத்தீர். அதுபோல தேவரீர் அருளிய வாக்கின்படி என் பாவங்களைப் பாராதபடி, நீர் உமது முகத்தை மறைத்து, என் அக்கிரமங்களையெல்லாம் நீக்கியருளும். திரும்பவும் உமது அன்பினால் என் ஆத்துமாவைச் சந்தோஷிப்பித்து, நான் உன் இரட்சிப்பு என்று என் ஆத்துமாவுக்குச் சொல்லும்.

கர்த்தராகிய தேவனே! உமது பிரியகுமாரனாகிய இயேசு என் பாவங்களை நிவிர்த்திசெய்யும்பொருட்டு, கொடிய வேதனைகளை அநுபவித்த பயங்கரமான நாளை நினைத்தருளும். அவர் இருதயம் உருகி, என் தேவனே! என் தேவனே ஏன் என்னைக் கைவிட்டீர் என்று பிரலாபிக்கப்பண்ணின வேதனையை நினைத்தருளும். மனத்தாழ்மையுடன் தங்கள் பாவங்களைக் குறித்து பச்சாதாபப்பட்டோர், உமக்குச் சமீபித்து, உம்மைச் சந்தோஷத்துடன் நோக்கும்படி அவர் அவ்வளவு வேதனைப்பட்டாரே; அவ்வண்ணமே நானும் உம்மைச்சேர விரும்புகிறேன். காருண்ய இரட்சகரே! சீயோனிலே துயரப்பட்டவர்களைச் சீர்ப்படுத்தவும் அவர்களுக்குச் சாம்பலுக்குப் பதிலாகச் சிங்காரத்தையும், துயரத்துக்குப் பதிலாக ஆனந்த தைலத்தையும், ஒடுங்கின ஆவிக்குப் பதிலாகத் துதியின் உடையைக் கொடுக்கவும் ஏற்படுத்தப்பட்டீரே. காருண்யரே! என் கண்ணீரைத் துடைத்து, என் தலையை மகிழ்ச்சி என்னும் எண்ணெயால் அபிஷேகம்பண்ணி, இரட்சிப்பின் வஸ்திரங்களை எனக்கு உடுத்தியருளும்.

கர்த்தாவே, நான் எங்கே உம்மைக் கண்டு சந்திக்கலாம் என்பதை அறிந்தால் நலமாயிருக்கும். நீர் என்னைவிட்டு நீங்கின காரணம் இன்னதென்று அறிய விரும்புகிறேன்; என் வழிகள் எல்லாவற்றையும் சோதித்து, ஆராய்கிறேன். தேவனே என்னை ஆராய்ந்து, என் இருதயத்தை அறிந்துகொள்ளும்; என்னைச் சோதித்து என் சிந்தனைகளை அறிந்துகொள்ளும்; வேதனையுண்டாக்கும் வழி என்னிடத்தில் உண்டோ என்று பார்த்து, என்னை நித்தியவழியிலே நடத்தும்.

இருளிலிருந்து ஒளியைப் பிரகாசிக்கச்செய்த தேவனே! நீர் பேசும், அப்போது வெளிச்சம் என்னிருதயத்தில் பிரகாசிக்கும். என் உதடுகளைத் திறந்தருளும், அப்பொழுது என் வாய் உம்முடைய புகழை அறிவிக்கும். நான் பட்ட சஞ்ச

லத்தைக் கண்டு துயரமடைந்தவர்கள் அறிய, நான் இருதயக் களிப்புடன் உமக்குத் தோத்திரகீதம் பாடி, மெய்த்தேவபக்தி தரும் இன்பமும் பலனும் இன்னதென்று தெரியக்காட்ட அருள்தாரும்.

கர்த்தாவே, நான் முழுவதுமாய் உமது திருவுள சித்தத்துக்கு அமைந்திருக்கிறேன்; என் விசுவாசம் சோதிக்கப்பட நான் இருளில் நடக்கும்படி நாட்கள் மாதங்கள் வருஷங்கள் சென்றாலும், நான் உமது சித்தத்துக்கு இணங்கி, அமைந்திருப்பேன். தேவரீர் நீர் உம்மை மறைத்துக்கொள்ளும் தேவனாயிருந்தும், உம்மை இரட்சகராக நான் வணங்கி, உமது திருநாமத்தை நம்பி, உம்மைச் சார்ந்துகொள்வேன். நீர் என்னைக் கொன்று போட்டாலும், உம்முடைய பேரில் நம்பிக்கையாயிருப்பேன். எப்பொழுது விடியுமென்று விடியற்காலத்துக்குக் காத்திருக்கிற சாமக்காரரைப் பார்க்கிலும், அதிகமாய் என் ஆத்துமா உமக்குக் காத்திருக்கிறது. ஒருவேளை சாயங்காலத்திலே வெளிச்சமுண்டாகும். உமது பக்தரில் சிலர் மரணம் அடையும் வேளையில், அவர்களுக்கு ஆத்மானந்தம் பெருகும்படி செய்து, அவர்களுடைய இருளை ஒளியாக மாற்றி, அவர்கள் பேரில் கடாட்சம்வைத்து, அவர்கள் மகா சந்தோஷமாய் மரணமடையச் செய்தீரே. அப்படியே நான் மரணநிழலாகிய பள்ளத்தாக்கிலே நடக்கும்காலத்தில், பரம ஒளியால் பிரகாசிப்பித்து, என் பயங்கள் நீங்க உமது கோலும் உமது தடியும் என்னைத் தேற்றும்படி செய்தருளும். எனக்கு மரணநாடி அடித்துக் கடைசி மூச்சு பிரியுமளவும், என் வியாகுலமும் கிலேசமும் நிற்க உமக்குச் சித்தமாகில் என் கடைசி இக்கட்டிலே என் துக்கம் நீங்கவும், நீதிமான்களுக்கு அருளப்படும் வெளிச்சத்தை நான் அநுபவிக்கவும், உமது ஆவியினாலே என்னை அபிஷேகம்பண்ணி, உமது சமுகப்பிரகாசம் ஒருபோதும் மறைக்கப்படாதிருக்கிற பேரின்ப உலகத்திலே என்னைச் சேரப்பண்ணியருளும். கர்த்தாவே! நான் உம்முடைய இரட்சிப்புக்குக் காத்திருக்கிறேன். என் ஆத்துமா அதின்பேரில் வாஞ்சையாயிருக்கிறது. என் மனவாஞ்சை பெருகி வளரவும், கடைசியாக அது திருப்தியடையவும், கிறிஸ்துயேசுவின் மூலமாய் உமது கிருபையின் ஐசுவரியத்தினிமித்தம் எனக்கு அருள்செய்யும். ஆமென்.



# 19-ம் அதிகாரம்.

## பாரியான துக்கத்தில் அமிழ்ந்திய கிறிஸ்தவனின் காரியம்.

"அக்கினிப்பொறிகள் மேலே பறக்கிறதுபோல, மனுஷனும் வருத்தம் அநுபவிக்கப் பிறந்திருக்கிறான்" (யோபு. 5. 7.) ஆதாம் தன் பின்சந்ததியார் எல்லாருக்கும் பற்பல துக்கங்களை வருவித்துக்கொண்டதால், நாம் கிலேசங்களுக்கும் வருத்தங்களுக்கும் உள்ளாயிருக்கிறோம். விவேகியானவன் தனக்கு நேரிடும் ஆபத்து இன்னதென்று ஆலோசிப்பது உத்தமம். நீ உனக்கு உண்டாகும் சோதனைகளுக்கு எதிர்த்து நிற்கும்படி கிறிஸ்தவனாக உன் சர்வாயுதவர்க்கத்தைத் தரித்துக்கொண்டு, உனக்கு வரும் துன்பங்களை விவேகத்துடன் சகிக்க ஆயத்தமாயிருப்பாயாக. மற்றவர்கள் துன்பங்களில் அகப்பட்டு, அவைகளைப் பொறுமையுடன் சகிப்பதை நீ பார்க்கையில், நீயும் அப்படிப்பட்டவைகளை அநுபவிக்கும்படி நேரிடும் என்று எண்ணி, அவர்கள் படுகிற துன்பத்தை நீ படுகிற துன்பமாகப் பாவித்து, அவர்களை ஆற்றித் தேற்றப் பிரயாசப்படுவதுமன்றி, உன் இருதயத்தையும் ஸ்திரப்படுத்திக்கொண்டு, அவர்களையும் உன்னையும் தேவன் பெலப்படுத்தும்படி வேண்டுதல் செய்வாயாக. இவ்வுலகவாழ்வு துக்கத்தை வருவிப்பதால், அதையிட்டு உனக்கு உண்டாகும் அவாவை அடக்கி, இகத்திலுள்ளவைகளை வெறுத்து, பரத்திலுள்ளவைகளின்மேல் நாட்டம் வைப்பாயாகில், உன் நம்பிக்கை வீணாய்ப்போகமாட்டாது. இப்படி நீ செய்கையில் தேவன் இம்மட்டும் நீ க்ஷேமமாய் வாழும்படி அநுக்கிரகம் செய்ததற்காக அவருக்கு நன்றியறிதல் செலுத்தி, உன் வலது இடதுபுறங்களில் அநேகர் பட்டு விழுந்தாலும், நீ சுகத்தோடிருப்பது தேவாநுக்கிரகம் என்று எண்ணி அவரைத் துதித்து வணங்குவாயாக.

நீயும் துன்பத்தை அநுபவிக்கும்காலம் வரும். அப்போது உனக்கு நேரிட்ட துன்பம் தற்செயலாய் அல்லது மனிதருடைய செய்கையினால் வந்ததென்று கருதாமல், தேவனுடைய திருவுள சித்தத்தால் வந்ததென்று நிச்சயித்து, அவருடைய திருவுளத்துக்கு அமைந்திருப்பாயாக. "ஏற்றகாலத்திலே தேவன் உன்னை உயர்த்தும்படிக்கு, அவருடைய பலத்த கைக்குள் அடங்கு

வதே நன்மை." உனக்கு நேரிட்ட எல்லாக்காரியங்களிலேயும், உன் ஆக்கிரமத்துக்குத் தக்கதாக ஆக்கினையை அவர் உனக்குக் கொடுக்கவில்லையென்று நினைத்துக்கொள். உனக்குச் சம்பவித்திருக்கிற காரியம் என்னமாய் முடியுமென்று நீ அறியாதிருந்தாலும், தேவனுடைய திருவுளத்துக்கு இணங்கி, அவர் திருநாமத்தைப் புகழ்ந்து, அவருடைய கிருபையுள்ள கைக்குள் அடங்கி பொறுமையோடே காத்திருப்பாயாக.

மேலும் பொறுமையானது உன்னிலே பூரணகிரியை செய்யும்படி, நீ அடிக்கடி உன் நீச நிலைமையை உணர்ந்துகொள். நீ அநுபவிக்கிற ஒவ்வொரு நன்மையையும் இழந்துவிடுவதற்கும், நியாயப்படி நீ தண்டனையை அநுபவிப்பதற்கும் ஏதுவாக எத்தனையோ கொடிய தீமையைச் செய்தாய் என்று சிந்தித்துப்பார். தேவன் உன்னோடே எவ்வளவுகாலம் பொறுமையாயிருந்திருக்கிறார் என்பதையும், அவர் உனக்கு எவ்வளவு திரளான நன்மைகளை அநுக்கிரகஞ் செய்திருக்கிறாரென்பதையும் எண்ணுவாயாக. நீ படும் துன்பம் அதிகமாயிருந்தாலும், அவர் உனக்கு எத்தனையோ நன்மைகளைச் செய்திருக்கிறார் என்பதை நினைக்கையில்; நீ நன்றி செலுத்த அதிகமான நியாயங்களைக் காண்பாய். கர்த்தர் அந்த நன்மைகளை உன்னைவிட்டு நீக்குகிறதாயிருந்தால், உன் துன்பம் எவ்வளவாய் அதிகரித்துவிடும். நீ படும் துன்பத்திலே தரித்திரத்தை உனக்குக் கொடுத்திருக்கிறாரா? அல்லது உனக்கு இருக்கிற தரித்திரத்திலே துன்பத்தைக் கூட்டியிருக்கிறாரா? துன்பம் தரித்திரத்தோடே, உன் சிநேகிதரை உன்னை விட்டு நீக்கிப்போட்டிருக்கிறாரா? அப்படிச் செய்திருந்தால், உன் துன்பம் எவ்வளவோ அதிகரிக்கும். இம்மட்டும் அப்படிப்பட்ட துன்பத்தில் அகப்படாதிருப்பதற்காகத் தேவனைத் துதித்துப் போற்றுவாயாக. அன்றியும் தெய்வீக சிட்சை உனக்கு மிகவும் அவசியமாயிருக்கும் என்று நினைத்துக்கொள். அது உனக்கு ஆத்துமசுகம் உண்டாவதற்கு அநுகூலமாயிருக்கிறது. பரமபிதா தமது பிள்ளைகளைச் சிட்சிக்கையில், அது அவர்களுக்கு நன்மையாக முடியும்படி செய்கிறார் என்பது நிச்சயம். முன் சொல்லப்பட்டிருக்கிற நியாயங்களை நீ நன்றாய் ஆலோசிக்கையில் இன்றியமையாத துன்பங்களை நீ பொறுமையுடன் சகித்து, அவைகள் நன்மையாக முடியும் என்று எண்ணி, அவைகளை அனுப்பினவர் நீதியுள்ளவர் என்று உணர்ந்து, உன் வாக்கினாலும் இருதயத்தினாலும் அவருக்குத் துதி செய்வாயாக. துன்பத்தை அநுபவிக்கையில் கர்த்தரைத் துதிப்பதுடன், அந்தத் துன்பத்துக்காகவும் அவருக்கு நன்றி செலுத்தவேண்டும்.



எல்லாவற்றிலேயும் தோத்திரம் செய்யுங்கள் என்று கர்த்தர் கட்டளையிட்டிருக்கிறதுமன்றி, உபத்திரவங்களிலேயும் மேன்மை பாராட்டுகிறோமென்று சொல்லும்படி, அவர் தமது தொண்டர்களுக்குக் கற்பித்திருக்கிறார். உத்தம விசுவாசிகளுக்கு உண்டாகும் துன்பங்கள், தெய்வீக இரக்கங்களுக்கு அத்தாட்சியான வரப்பிரசாதங்கள்போலிருக்கின்றன. ஏனென்றால் கர்த்தர் எவனிடத்தில் அன்புகூருகிறாரோ, அவனை அவர் சிட்சித்துத் தாம் சேர்த்துக்கொள்ளுகிற எந்த மகனையும் தண்டிக்கிறார் (எபி. 12. 6.). நீ படும் துன்பங்கள் தெய்வீக அன்பினால் உண்டாயிருக்கிறது என்று எண்ணினால், அதற்காகத் துதி செலுத்துவாய் அல்லவா? அவர் தம்முடைய குமாரனின் சாயலுக்கு நீ ஒப்பாகும்படி உன்னைத் தண்டித்துப் பூரண மோட்ச மகிமையைச் சுதந்தரித்துக்கொள்ள உன்னை வளர்க்கத்தக்கதாய் இப்படிச் செய்துவருகிறார் என்று நீ அறிந்து உணர்வாய். அவர் உன் இருதயத்தின், சீர்கேடுகளை நிர்மூலம்பண்ணி, கிருபையில் உன்னை ஸ்திரப்படுத்தி, தமது ஞானத்தின்படி உன்னைத் தமக்குச் சமீபமாக்கித் தமது பரம இராச்சியத்துள்ள மேன்மைகளைப் பெற்று அநுவிப்பதற்கேதுவாக உன்னைப் பக்குவப்படுத்த இவ்வண்ணமாய் நடத்திவருகிறார் என்று அறிந்துகொள்வாய். நீ அறிவதைப்பார்க்கிலும், உனக்கு வேண்டியது இன்னதென்று அவர் நன்றாய் அறிவார். நீ அநுபவிக்கும் துன்பம் நன்மையாக முடியும் என்று அவர் தெளிவாய் அறிந்திருக்கிறார். இந்த உபத்திரவம் பொறுமையையும் பொறுமை நிச்சயத்தையும், நிச்சயம் நம்பிக்கையையும் உண்டாக்கும். தேவஅன்பு உன் இருதயத்தில் ஊற்றப்பட்டிருக்கிறபடியால், அந்த நம்பிக்கை உன்னை வெட்கப்படுத்தமாட்டாது.

இப்படித் துன்பமானது தேவனுடைய கரத்திலிருந்து உனக்கு வந்திருக்கிறது என்று நீ அறிந்திருக்கிறபடியால் அத்துன்பம் அனுப்பப்பட்ட நோக்கம் இன்னதென்பதை அறிந்து அதைப் பிரயோஜனப்படுத்திக்கொள்ளும்படி *பிரயாசப்படு. முதலாவது அந்த நோக்கம் இன்னதென்பதை அறியும்படி முயற்சி செய்வாயாக. நீ முழுமனதோடே மிலாற்றிற்கும் அதை நியமித்தவருக்கும் செவிகொடுத்து (மீகா. 6. 9.), அவருடைய சத்தம் உனக்கு விளங்கும்படி ஊக்கமாய் ஜெபஞ்செய்வாயாக. உன் மனம் வாக்குக் காயங்களை நன்றாய்ச் சோதித்து, நீ கர்த்தரண்டைக்குத் திரும்பும்படி அவர் உன்னை நடத்தியருள வேண்டிக்கொள். உனக்கு வேண்டிய உதவி செய்யும்படி தேவ

பக்தியுள்ள உன் சிநேகிதரையும், விசேஷமாய் குருமாரையும் வருந்திக் கேட்டுக்கொள். தெய்வீக செயலிலே உனக்கு உண்டாயிருக்கிற துன்பம் இன்ன நோக்கத்துக்காக அனுப்பப்பட்டதென்று அவர்கள் உனக்குச் சொல்லக்கூடியதாயிருந்தால், அதை அவர்கள் உனக்குத் தாராளமாய்ச் சொல்லவும், உனக்குவேண்டிய புத்திபோதனைகளைத் தெரியக்காட்டவும், உனக்காகச் செபம் செய்யவும், அவர்களை வேண்டிக்கொள். அவர்கள் உன்னிடத்திலே காணும் குறைகுணங்களை அறிந்து, உன் குறைகளை உனக்குச் சொல்லிக்காட்டினால், அது அவர்களுடைய அன்புக்குத் திருஷ்டாந்தமென்று பொறுமையோடே அவர்கள் கண்டிப்பான வார்த்தைகளை ஏற்றுக்கொண்டு, அதற்கு நன்றியறிதலைக் காட்டு. கிறிஸ்தவன் தன்னைக் கண்டிக்கிறவரைப் பார்த்துக் கோபம்கொள்வது தகாதது. விசேஷமாக அவன் பரம பிதாவினால் சிட்சிக்கப்படுகையில், அவன் அமைந்திருப்பதே உத்தமமாயிருக்கும்.

உனக்கு நேரிட்டிருக்கிற உபத்திரவம் இன்ன நோக்கத்துக்காக அனுப்பப்பட்டதென்பதைச் சற்றேனும் அறிந்தாயானால், நீ தேவனுக்கு விரோதமாய் உன் இருதயத்தைக் கடினப்படுத்தாதபடி எச்சரிக்கையாயிரு. தேவன் உன்னைச் சிட்சிக்கும் நோக்கத்துக்கு விரோதமாய் நீ நடந்தால், அது கீழடங்காத துரோகக் குணத்தை விளக்குவதாயிருக்கிறது. அப்பேர்ப்பட்டவர்கள்பேரில் அவர் கோபம்கொள்ளுகிறவராயிருக்கிறார். ஆதலால் நீ நற்சீர்பொருந்தும்பொருட்டு, செய்யவேண்டிய காரியங்களை மனோற்சாகத்தோடே செய்து, எல்லாவற்றிலேயும் தேவசித்தத்துக்கு அமைந்து நடக்கக் கற்றுக்கொண்டு, இவ்வுலக காரியங்களைச் சிரேஷ்டமாய் மதியாமல், தெய்வீக காரியங்களை அதிகப் பிரியத்தோடே நாடி, மறுமையின் நன்மைகளை எதிர்பார்த்து நடக்கும்படி பிரயாசப்படு. நீ அநுபவிக்கும் துன்பங்களில் ஏதேனும் நீ முன்செய்த பாவத்தினால் விளைந்ததென்று கண்டால், அப்பேர்ப்பட்ட பாவத்தை வெறுத்துத் தள்ளி, அதில் இனிமேல் விழாதபடிக்கு வெகு எச்சரிக்கையோடே நடப்பாயாக. அப்போது "நான் உபத்திரவப்பட்டது எனக்கு நல்லது" (சங். 119. 71.) என்று அநேக மகாத்துமாக்கள் சொல்லியபடி, நீயும் உன் உபத்திரவ நாட்களானது உன் ஆயுசுநாட்களுக்குள்ளே மகா இனிமையும் அருமையுமான நாட்களென்று நீ சொல்லக்கூடியவனாயிருப்பாய்.



## பலத்த துன்பங்களில் அகப்பட்டு நெருக்கப்படுகிறவன் செய்யத்தகும் ஜெபம்.

சர்வ உலகங்களுக்கும் மேலான அதிபதியே! நீர் நீதிபரரும் காருணியருமாயிருக்கிறீர். நான் இருக்கிற பூவுலகம் சர்வ உலகங்களிலும் அற்பமாயிருந்தும், தேவரீர் அதிலுள்ள ஜனங்களை நீர் புறக்கணியாமல், உமது காருணியத்தினாலே பாதுகாத்துக்கொண்டுவருகிறீர். நீர் ராஜரீகம் செய்கிறீர் என்பதை நினைத்து, யாவரும் மகிழ்வது நியாயம்; நானும் மகிழுகிறேன். தேவரீர் எல்லாவற்றையும் பரிபாலித்துக்கொண்டுவருகிறீர். நான் இங்கே சஞ்சரிக்கையில் என் காரியங்களை உமது ஞானத்தின்படியே உமது காருணியத்தினால் நடத்துகிறீர். நீர் ஒளியைப் படைத்து, இருளை உண்டாக்கி, சமாதானத்தைப் படைத்து, தீங்கை உண்டாக்கி (ஏசா. 45. 7.), உம்முடைய சித்தத்தின்படி எங்கள் நிலைமையை மாறச்செய்து, பிரகாசமுள்ள மத்தியான ஒளியை இருளாக்கி, நிச்சாம இருளை ஒளியாக்கி, வல்லமையான காரியங்களை நடப்பிக்கிறவராயிருக்கிறீர். ஆதலால் உம்மையன்றித் துணைக்காரணங்களின்மேல் நான் சார்வதில்லை.

ஞானமுள்ள காருண்ய லோகாதிபதியே! உம்முடைய சித்தம் செய்யப்படுவதாக என்று அடிக்கடி செபித்தேன்; இப்பொழுதோ நான் உம்முடைய சித்தத்துக்கு அமைந்து நடப்பது வருத்தமாயிருக்கிறது; உமது சித்தம் தகாதது என்று சொல்வேனோ, அப்படியல்ல. நான் உமது பாதத்தை அண்டி, உமது பரிசுத்த சித்தத்துக்கு இணங்கி, அதின்படி செய்வேன் என்று அறிவிக்கவந்தேன். கர்த்தாவே! நீர் எல்லாவற்றிலேயும் நீதி நியாயம் தவறாதவர், அநீதியுள்ளவனோ நானே; இப்படிப்பட்ட துன்பத்துக்கும், இன்னம் ஆயிரமடங்கான துன்பத்துக்கும் பாத்திரனாயிருக்கிறேன் என்பதை உமது பரிசுத்த சந்நிதானத்துக்குமுன் அறிக்கையிடுகிறேன். நான் இதுவரைக்கும் நிர்மூலமாகாதிருப்பது உமது அளவில்லாத இரக்கத்தினாலன்றி, மற்றப்படியல்ல. இப்பொழுது நான் படும் துன்பம் ஒருநாள் செய்த பாவத்துக்கு முதலாய் ஏற்ற தண்டனையல்ல. நான் என் ஆயுசுமுழுதும் பாவஞ்செய்திருந்தும், நான் இப்போது அநுபவிக்கிற துன்பம் அற்பமே. நீதியுள்ள நியாயாதிபதியே, நீர் என்னைத் தண்டித்தாலும் உம்முடைய கட்கமானது நீதியின்படி உமக்குமுன் என் இரத்தத்தைச் சிந்தி, அதின் பயங்கரமான செய்கையை என்னில் நிறைவேற்றவிடாமல்

என்மேல் தயை வைத்தீரே; அதினிமித்தம் உம்மைத் துதிக்கிறேன்.

நியாயாதிபதி என்று எண்ணிமாத்திரம் உம்மைப் பிரார்த்தித்திருப்பேனோ? கர்த்தாவே! நீர் அருமையான பிதாவாயிருக்கிறீர். நான் படும் துன்பம் நீர் என்மேல் வைத்த அன்புக்கு அத்தாட்சியென்று உணருகிறேன். அது பிதாவின் நேசத்துக்கும், புத்திர சுவிகாரத்துக்கும் அடையாளமாயிருக்கிறது. எனக்குச் செய்யவேண்டிய சிட்சை யின்னதென்பதை நீர் அறிவீர். தன் மூப்பாய் யோசனையின்றி, நடந்து திரிகின்ற உமது பிள்ளையாகிய என் இருதயத்திலிருக்கிற மதியீனத்தை நீக்கும்படி, எம்மட்டுக்கும் பிரம்பைக் கையாடவேண்டியது என்பதை நீர் நன்றாய் அறிவீர். ஆதலால் எனக்கு நன்மையுண்டாக என்னைத் தண்டிக்கும்படி சித்தம்கொண்ட பிதாவானவருக்கு நான் கீழடங்கியிருக்கவேண்டியது நியாயமே. கர்த்தாவே, நீர் அனுப்பிய தண்டனையை நான் சகிப்பது, அந்தத் தண்டனைக்கு நான் நீங்கலாயிருப்பது கூடாமையானதால் அல்ல; உம்மைப்பற்றிய நேசத்தினாலும், உம்முடையபேரிலுள்ள நம்பிக்கையினாலும் அதைச் சகிக்கிறேன். முழு உள்ளத்தோடே உமக்கு அடங்கிப் பொறுமையோடிருக்கிறேன். என் ஆத்தும நோய்களை நீக்கி, நான் மோட்சமகிமையைச் சுதந்தரிக்க என்னைப் பக்குவப்படுத்தும்பொருட்டு, என்மேல் கடாக்ஷம் வைத்து, இந்த உபயோகமான எத்தனங்களைப் பிரயோகித்துவந்த உமது கிருபைக்காக உம்மை ஸ்தோத்திரிக்கிறேன். இவ்விதமாகத் துன்பப்படுவது, துன்பமல்ல; *என் பிதா என் கையில் தந்த பாத்திரத்தைப் பானம் பண்ணாதிருப்பேனோ? நீர் எனக்குச் சகாயஞ்செய்தால், நான் அதைப் பானம் பண்ணுவேன். ஆனால் கர்த்தாவே, தேவரீர் எனக்குத் துணைநின்று, நான் துன்பத்தை அநுபவிக்கையில் என்மேல் கடாக்ஷம் வைத்து, என் ஆத்துமாவைத் தாங்கி, நான் படும் உபத்திரவங்களில் ஆறுதலடையும்படி அநுக்கிரகஞ்செய்தால், உபத்திரவங்களிலேயும் மேன்மைபாராட்டுவேன். உபத்திரவங்களை அநுபவித்த அநேகர் தங்களுக்கு நேரிட்ட உபத்திரவங்களிலே மேன்மேலும் ஆறுதலைப் பெற்று, அந்த உபத்திரவங்களை மறந்ததுண்டே. என்பேரில் உமது உருக்க இரக்கங்களைக் காட்டாதபடி அடைத்துக்கொண்டீரோ? நீர் என்னை இரட்சிக்கக் கூடாதபடி உமது கரம் குறுகிப்போயிற்றோ? அப்படியல்லவே. மற்றவர்களுக்கு நீர் செய்த தயவுகளை எனக்கும் ஏற்றவேளையிலே செய்யவே செய்வீர் என்று நம்பிக்கையோடிருக்கிறேன்.



என் இருதயம் உருகவில்லையென்றால், நான் இப்போது படும் துன்பத்திலே என் மனதை நீர் மாற்றலாமே. தேவரீர் சித்தங்கொள்ளுங்காலத்தில், உமக்குப் பிரியமான எத்தனங்களைக்கொண்டு என்னை விடுவித்து, என்னைச் சூழ்ந்திருக்கும் °இருள் அகோரமாயிருந்தாலும் ஒளி உண்டாகக்கடவது என்று நீர் சொன்னால் ஒளியுண்டாகும். என் துன்பம் எல்லாம் என் ஆத்துமாவைச் சுத்திகரிப்பதற்கேதுவாய் முடியும்படி நான் வாஞ்சிக்கிறேன். என் தேவனே, நீர் சிட்சித்து, உமது பிரமாணத்தைக்கொண்டு போதிக்கிற பாக்கியவான்களுக்குள்ளே என்னையும் சேர்த்துக்கொள்ளும். எதினிமித்தம் நீர் என்னோடே வழக்காடுகிறீர் என்பதைத் தெரியக்காட்டி, நான் அக்கினியைக் கடந்து செல்லுகையில் என் குற்றம் நீங்க என்னைச் சுத்திகரித்தருளும். உம்முடைய பிள்ளைகள் உம்முடைய பரிசுத்தத்துக்குப் பங்காளிகளாவதற்கு அவர்களைச் சிட்சிக்கிறீரல்லவோ. இதற்காக நான் ஆவலுடன் உம்மை நோக்கி வேண்டிக்கொள்ளுகிறேன். ஒவ்வொருநாளும், ஒவ்வொரு நிமிஷமும், நான் உம்முடைய நன்மைகளை அநுபவித்துவருகிறேன். நான் உம்முடைய சுவிசேஷத்துக்கும் என் இருதயத்தில் கிரியை செய்கிற உம்முடைய கிருபைக்கும் பங்காளனாயிருக்கிறேன். சகல சம்பூரணத்துக்கு மாதிரியாயிருக்கிற உம்மைப்போல நான் பரிசுத்தமுள்ளவனாகும்படி உம்முடைய கிருபை வரங்கள் என்னிலே கிரியையை நடப்பிப்பதாக. அக்கினியினால் என் உள்ளம் உருகி, சுவிசேஷமாகிய கருவியிலே வார்க்கப்பட்டு, உம்முடைய சாயலுக்கொப்பாகும்படி அருள் செய்யும்.

என் ஆத்துமா உம்முடையபேரில் தாகமாயிருந்து, ஜீவனுள்ள தேவனாகிய உம்மை நோக்கிக் கெம்பீர சத்தமிடுகிறது. உமக்குப் பிரியமுள்ளவனாய் உமது ராஜ்யத்தைச் சுதந்தரித்துக்கொள்ள, உமது சந்நிதியிலே உமது அன்பினால் என்னைத் தாங்குவீரானால், நான் எதையும் சகித்துக்கொள்வேன். என் துக்கநாட்கள் முடிவடையும் காலமுண்டு. என் கண்ணீரைத் துடைக்கும் காலமும் கடைசியாக வரவேவரும். அது வரத் தாமதித்தாலும் அதற்காகக் காத்திருப்பேன். என் துன்பத்தின் மத்தியிலும் என் இருதயம் இவ்வுலகத்தை நேசிப்பதை நான் பார்க்கையில், ஆச்சரியப்படுகிறேன். என் தேவனே உலக நாட்டத்தின்பேரிலுள்ள மனோவாஞ்சையை என்னை விட்டு நீக்கியருளும். என் ஆத்துமா துக்கம் தடை முதலியவை நீங்கி, தன் அரையைக் கட்டிக்கொண்டு, சுயாதீனம் சமாதானம் சந்தோஷம் முதலியவைகளைச் சொரியும் பேரின்பத்தை

அடையும்பொருட்டு, தன் சிறகை விரித்து, ஆகாயமாய்ப் பறந்துசெல்லும் சமையத்தை ஆசிக்கும்படி கிருபை செய்தருளும். ஆமென்.

## 20-ம் அதிகாரம்.

### கிறிஸ்தவன் தன் உள்ளத்தில் மெய்த்தேவபக்தி வளர்ந்துவருகிறதென்பதைப் பரிசோதிக்கும் முறைமை.

நீ தேவகிருபையினால், அழிவுள்ள வித்தினாலே அல்ல என்றென்றைக்கும் நிற்கிறதும் ஜீவனுள்ளதுமான தேவவசனமாகிய அழிவில்லாத வித்தினாலே, மறுபடியும் ஜெநிப்பிக்கப்பட்டிருந்தாயானால், புதிதாய்ப்பிறந்த குழந்தைகளைப்போல திருவசனமாகிய களங்கமில்லாத பாலின்மேல் வாஞ்சையாயிருப்பாய். பரலோகத்திலே கிறிஸ்துவினுடைய நிறைவான வளர்ச்சியின் அன்புக்குத் தக்கதாக பூரணபுருஷராயிருக்க நாம் அபேட்சிக்கும் சம்பூரண நிலைமையைப் பார்த்தால், இவ்வுலகத்தில் நாம் எவ்வளவு தேவபக்தியுள்ளவர்களாயிருந்தாலும், தேவபக்தியில் சிறுபிள்ளைகளுக் கொப்பாகமாத்திரம் இருப்போம். ஆயினும் விவேகிகளாய்க் குழந்தைகளை வளர்ப்பது போல நாமும் வளர அபேட்சையோடிருப்போம். கர்த்தர் தயவுள்ளவர் என்று நீ ருசிபார்த்ததுண்டானால், அப்படியே நீயும் வளர விரும்புவாய். ஆனால் மெய்த்தேவபக்தி உன் உள்ளத்தில் விர்த்தியாகிற்றோ, அல்லவோ என்பதை நீ அறியும்படி உனக்குச் சகாயம் செய்ய விரும்புகிறேன். சிலர் தங்களைச் சோதிக்கும்படி எடுக்கும் அளவுப்பிரமாணம் தப்பென்று உனக்குக் காட்டுவதுமல்லாமல், நீ ஏற்றுக்கொள்ளத்தகும் சில பிரமாணங்களையும் தெரியக் காட்டுகிறேன். நீ உன்னைச் சோதிக்கும்போது, உன் அறிவு தேர்ச்சியையும், வைராக்கியத்தையும், மனவுணர்ச்சியையும், தியான அனலையும்மாத்திரம் பார்ப்பது போதாது. நீ இடைவிடாமல் தேவனுடைய திருவுளத்துக்கு அமைவதற்கேதுவான தீர்மானத்தையும், அவருடைய கட்டளைகளுக்குக் கீழ்ப்படிந்து, அவருடைய ஆளுகைக்கு அமைந்து, உலகத்தில் அவர் நிறைவேற்றுகிற காரியங்களுக்கும் அடங்



கும் அபேட்சையையுமுன்னிவனாய் உன் ஆத்துமநிலை யின்னதென்று சோதித்துப்பார்ப்பதே முறைமை. ஆதலால் நீ தேவசந்நிதியில் நிற்கிறவனாக எண்ணி, உன் இருதயத்தைச் சோதிக்கும்படி நான் கேட்கப்போகிற கேள்விகளுக்கு மறுமொழிகளை சொல்லநிதானித்துக்கொள்.

எல்லாவற்றிற்கும் மேலாகத் தெய்வீகமான அன்பு உன் இருதயத்திலே வரவர பெருகி வளருகின்றதா? தேவன் எங்கும் நிறைந்தவராய் எல்லாவற்றைப் பார்த்துக்கொண்டிருக்கிறார் என்கிற உணர்ச்சி வரவர உன்னில் விளங்கிவருகிறதா? அப்படிப்பட்ட உணர்ச்சியினால் உன் மனப்பாக்கியம் முன்னைவிட பெருகிக்கொண்டுவருகிறதா? திவ்விய ஆராதனை செய்வதற்கு உன் மனம் சோர்பு அடையும்போது, தேவ அருள் உனக்குக் கிடையாததுபோல காணப்படுகையில், அவர் உன் அந்தரங்கங்கள் எல்லாவற்றையும் பார்க்கிறார் என்ற எண்ணத்தினால் உன் இருதயத்தில் சாந்தகுணம் விளைகின்றதா? உன் இருதயத்தை மறையாமல் அவருக்குத் திறந்தமுகமாய்க் காட்டி "கர்த்தாவே உமது அடியேனை அறிவீர்" என்று தாவீது சொன்னது போல நீயும் சொல்வதற்கு மனமுடையவனாயிருக்கிறாயா? தேவனுடைய இலட்சணங்களுக்குப் பிரதிவிம்பமாயிருக்கிற அவருடைய பரிசுத்த பிரமாணங்களை அங்கீகரித்து, அவைகளின் மேன்மையைப் பாராட்டிக்கொண்டு வருகிறாயா? எல்லாவற்றையும்பற்றி அவர் அருளின எல்லாக் கட்டளைகளும் செம்மையென்று உன் உள்ளத்திலே எண்ணிவருகிறாயா? (சங். 119. 128.) கர்த்தருக்குக் கீழ்ப்படிந்து நடப்பது அவசியமானதென்றும், அப்படிக் கீழ்ப்படிந்து நடப்பது நியாயமும் சிறப்பும் இன்பமுமானதென்றும் நீ உணருகிறாயா? தேவதயவை இழந்துபோவதற்கு ஏதுவான எல்லாக்காரியங்களையும் அரோசிக்கிற குணம் உனக்குள் அதிகரித்துவருகிறதா? தேவனைப் பிரியப்படுத்த உனக்கு ஆசையிருக்கிறதா? அவருடைய தன்மை இலட்சணங்களைப்பற்றி உனக்கு மதிப்புண்டா? எப்போதும் அவருக்கு அமைந்து, அவர் கட்டளைகள் செம்மையென்று எண்ணி, அவருடைய நடத்துதல் உத்தமம் என்று சிந்திக்கிறாயா? அவர் நுகத்தடிக்கு இணங்கி நடப்பதற்கு உன் மனம் வரவர வளைந்து வருகின்றதா? பொறுமையினால் உன் ஆத்துமாவைக் காத்துக்கொள்ளக்கூடுமா? தேவன் இவ்வுலக நன்மைகளை உன்னைவிட்டு விலக்கி, உன் ஆசைக்கு மாறாக உன்னை அவர் நடத்துகையில் நீ சஞ்சலப்படாமல் சாந்தத்துடன் அவருக்கு அமைந்திருக்கிறாயா? அப்படியானால் மெய்த்தேவபக்தி உன

னிலே தலைப்பட்டதென்பதற்கு அது நல்ல அத்தாட்சியாய் இருக்கிறது.

மேலும், உன் அயலகத்தாரையும் மற்றவர்களையும் பற்றி நீ கொண்டிருக்கிற ஆசை விருப்பம் இன்னபடியென்று நீ உன்னை பரீட்சிப்பாயாக. உன் இருதயம் பூரிக்கும்படி யாவர் மேலும் நீ பூரண அன்பு வைத்திருக்கிறாயா? சகல மனிதரும் விசேஷமாக சகல கிறிஸ்தவர்களும் சகோதரரும் ஒரே நகரத்தாருமாக ஐக்கிய சம்பந்தமாயிருப்பது அருமையான காரியம் என்று எண்ணிவருகிறாயா? இப்படி அன்புமுதலிய நற்குணங்கள் உன்னில் விர்த்தியடைய, பகைமுதலிய துற்குணங்கள் உன்னில் நாளுக்குநாள் நீங்கிவருகிறதா? நீ உத்தம கிறிஸ்தவனான பின்பு, சுயஇச்சை உன்னை மேற்கொள்ளாதிருந்தும், அது திடீரென உன்னை ஆளும்படி பார்க்கும். அந்த இச்சை இப்போது உன்னில் குறைந்துவருகிறதா? நீ அதை மேற்கொள்ளுகிறாயா? சுய நயத்தைப்பார்க்கிலும் [illegible] ஜனக்கூட்டத்தாருடைய நயம் பெரிதாக எண்ணி, தேருணத்தில் பொது நன்மையை விரும்பி உன் நயத்தை விட்டுவிட உனக்குப் பிரியமிருக்கிறதா.

மேலும் சிலர் அயோக்கியராயிருக்கிறதினால், அவர்களை அவமதித்துப் புறக்கணித்து வெறுப்பது நியாயம் என்று சொல்வதுண்டு. அப்படிப்பட்ட அயோக்கியரைப்பற்றி நீ கொண்டிருக்கும் எண்ணம் என்ன? நீ அநுசரித்துவருகிற மார்க்கத்துக்கும் ஆராதனை முறைமைகளுக்கும் விகற்பமாய் நடக்கிறவர்களைப்பற்றி நீ கொண்டிருக்கிற எண்ணம் என்ன? சிலரிடத்தில் காணப்படும் குறைவுகளைக் கண்சாடையாய்ப் பார்த்து, அவர்களில் விளங்கிய உத்தம குணங்களை வியந்து, அவர்களை நேசித்துவருகிறாயா? குருட்டுபக்தி யுடையவர்களாய் உன்னை அவமதித்து, நிந்திக்கிறவர்களை நீ நேசிக்கிறாயா? உன்பேருக்குக் குறைவுண்டாகத் தகாத வைராக்கியத்துடன் உன்னை அவதூறு பண்ணி, நீ சதிமோசம் செய்கிறவன் என்று உன் நாமத்தைத் தூற்றுகிறவர்களை கிறிஸ்துவின் சீஷரும் அடியாருமாக நேசிக்கக்கூடுமா? உன்னில் அன்பானது இவ்விதமாய்ச் செழித்தோங்குமானால், தேவபக்தி உன்னில் வளர்ந்து வந்திருக்கின்றது என்பதற்கு ஏற்ற அத்தாட்சியாகும்.

அன்றியும் மற்றவர்கள் உனக்கு நஷ்டத்தை உண்டாக்குகையில், நீ அதைச் சகிக்கும் விதம் எப்படி என்று சோதித்துப் பார். சன்மார்க்கத்திலும் தேவபக்தியிலும் தேறினவர்கள் பிறர்



செய்யும் நஷ்டத்தை எளிதாய்ச் சகித்துக்கொள்ளுவார்கள். உனக்கு விரோதமாய் ஒருவன் குற்றம் செய்கையில், அவனுக்குப் பழிசெய்யவும், அவனுக்கு அவகீர்த்தியுண்டாக்க அவன் செய்த தீங்கை யாவருக்கும் அறிவிக்கவும் வழிவகை தேடிவருகிறாயா? நீ அப்படிச் செய்யாமல் உனக்குத் தீமை செய்தவனுக்காகப் பரிதபித்துச் செபஞ்செய்து, அவன் செய்த தீமைகளை சாந்தத்தோடே சகித்துவருகிறாயா? இதே கிறிஸ்தவனுக்குரிய சிறந்த சற்குணம். நீ தீமையினால் ஜெயிக்கப்படாமல், தீமையை நன்மையினாலே ஜெயிப்பாயாக. அப்போது நீ கிறிஸ்துவின் வீரவான்களில் ஒருவனாக எண்ணப்படுவாய். உனக்கு யாராவது தீங்கு செய்கையில் உன் குணத்தையும் நாவையும் அடக்கிக்கொள். அவன் உனக்குச் செய்த தீமைகளை மற்றவர்களிடத்தில் கொடியதாகக் காட்டி, உன்னால் கூடிய அளவு அவன்பேரில் குற்றம்பாரிக்க விரும்புகிறாயா? அப்படிச் செய்யாமல் அவன் குற்றம் அருவருப்பாயிருந்தும், நியாயத்துக்கு ஏற்கும்வண்ணம் அது குறைவாகத் தோணும்படி பார்த்து, அவன் உன்னிடத்தில் மன்னிப்பு கேட்கையில், மனப்பூருவமாய் அவனுக்கு மன்னித்து நன்மைசெய்யும்படி உன் நற்குணத்தை விளங்கப்பண்ணு.

மேலும் நீ உலகத்திலிருக்கையில் உனக்கு நேரிடும் தீமைகளையும் ஆபத்துக்களையும் சகிப்பது உனக்கு அரிதோ எளிதோ என்பதைச் சோதித்துப்பார். உனக்கு விரோதமாய் நேரிடும் விக்கினங்களைப் பொறுத்துக்கொள்ள உனக்குள் மனப்பெலன் விரைந்து வளருகிறதா? இனிவரும்காலத்தில் சம்பவிக்கும் காரியங்களைப்பற்றி முன்போல மனக்கலக்கத்துடன் பயப்படுகிறாயா? மனக்கலக்கமில்லாமல் அமைதலான மனதுடையவனாயிருக்கிறாயா? தேவன் ஞானமாய்த் தமது கிருபையினாலே உன் காரியங்கள் எல்லாவற்றையும் சரியாய் நடத்திவருவார் என்னும் நம்பிக்கை உன்னில் அதிகப்படுகிறதா? இனிவருங் காலத்தில் நீ செய்யும்படி தேவன் உனக்குக் கற்பிப்பது இன்னதென்று அறியாதிருந்தும், வருத்தமான விஷயங்களிலும் இப்போது நீ செய்யத்தகும் கடமைகளைச் செய்ய உன்மனம் ஒத்திருக்கிறதா? நீ துன்பத்தை அநுபவிக்கையில் அதை எப்படி எண்ணுகிறாய்? நீ படும் துன்பம், நீ கர்த்தருடன் ஐக்கியமாகி, மோட்ச சுதந்தரத்தைப் பெற்றுக்கொள்ள பக்குவப்படுத்தத் தக்கதென்று எண்ணுகிறாயா.

அன்றியும் மனத்தாழ்மை உன்னில் வளர்ந்துவருகின்றதோ என்று சோதித்துப்பார். இந்தக் குண[illegible] திவ்வியமான சற்

குணங்களிலும் உத்தமமானது. அது யாரிடத்தில் விளங்குகொண்டுவருகிறதோ, அவர்களுக்குந் தேவன் பிரசன்னமாகி அவர்களை ஆசீர்வதிப்பார். அகங்காரமும் இறுமாப்புமுள்ள சிந்தனைகளை முழுவதுமாய் நீக்கி, நீ செய்த நற்கருமங்களைக்குறித்து மேன்மைபாராட்டாமல், உன்னிலுள்ள குறைகள் இன்னதென்று உற்றாராய்ந்து அறிந்து அவைகளைத் திருத்தவும், நீ செய்ய வேண்டிய கடமைகளை நிறைவேற்றவும், ஆவல்கொள்ளுகிறாயா? நாடோறும் உன்னில் காணப்படும் தவறுகளை அற்பமாக எண்ணாமல், அவைகள் கர்த்தருக்கு முன்பாக பெரிதான குற்றமுள்ளவைகள் என்று எண்ணி, அவைகளுக்காக மனஸ்தாபப்படுகிறாயா? கர்த்தர் அளவில்லாத மகத்துவமுள்ளவராயிருக்கிறார் என்று உணர்ந்து, அதிக பயபக்தியோடே அவருடைய தெய்வீக இலட்சணங்களைச் சிந்தித்து, அவர் சந்நிதியில் உன்னைத் தாழ்த்தி அவருக்குமுன் நீ சூனியமாயிருக்கிறாய் என்று நினைக்கிறாயா? இப்படிப்பட்ட குணம் உன்னிடத்திலிருக்குமாகில், தேவன் மிகுந்த தயையுடன் உன்மேல் கடாட்சம் வைத்து, அதிகமதிகமாய்த் தமது அருளை உன்மேல் பொழிந்து உனக்குப் பிரசன்னமாயிருப்பார்.

இன்னும் கிறிஸ்தவனுக்குரிய மனத்தாழ்மைக்கு இன்னொரு பெரிய பலிதமுண்டு; அதை எடுத்துக்காட்டுவது நன்மை. கிறிஸ்துவின் புண்ணியபலனாலன்றி வேறே எந்தவிதத்திலும் தேவனுக்குமுன்பாக நீ நிற்கக்கூடாதென்று உணர்ந்து, இடைவிடாமல் கிறிஸ்துவின் இரத்தத்தையும் நீதியையும் சார்ந்து, அவர்நிமித்தம் கர்த்தர் உன்மேல் கிருபாகடாட்சம் வைக்கவேண்டுமென்று விண்ணப்பம்செய்து, அடிக்கடி அவரை சமீபித்துவருகிறாயா? உன் நற்குணங்களையிட்டு கர்த்தர்முன் உன்னைத் தாழ்த்திவருகிறாயா? பரிசுத்த ஆவியானவரின் கிருபை வரங்களைப் பெறும்படி கெஞ்சி, உன் கடமைகளை நிறைவேற்றுவதற்குப் பெலனைத் தரும்படி அவருடைய அருளைத் தேடிவருகிறாயா? பிறர் கண்டு புகழத்தக்கதாக நீ உன்னால் இயன்றமாத்திரம் தெய்வீக கடமைகளை நிறைவேற்றினாலும், அந்தக் கடமைகளைச் செய்கையிலே உன்னில் காணப்பட்ட குறைவுகளுக்காகத் தேவனுக்கு முன்பாக வெட்கப்படுகிறாயா? நீ அவருடைய பிரியப்படி செய்ததெல்லாம் தேவஅருளால் செய்ததென்று உணர்ந்து, அவருடைய நாமத்தைத் துதித்து, உன் சிரேஷ்ட கிரியைகளிலே காணப்பட்ட களங்கம் நிவாரணமாகும்பொருட்டுத் தெளிக்கப்பட்ட இரத்தத்தை சார்ந்துகொண்டிருக்கிறாயா? தேவன் அருளும் நன்மைகளை நன்றியறிதலோடே அநுபவிக்கையில், அந்த



நன்மையைப் பெற்றுக்கொள்ள நீ பாத்திரனல்ல என்று எண்ணுகிறாயா? அந்த நன்மைகள் உன்னைவிட்டு எடுபட்டாலும் அது நீதித்தவறல் அல்லவென்று உணரும் சிந்தையுள்ளவனாயிருக்கிறாயா? பாவதோஷங்களைச் செய்யும் சிலர் லௌகீக நன்மைகளைப் பூரணமாய்ப் பெற்று வாழ்கையில் நீ குறைவடைந்து வருத்தப்பட்டாலும் முறுமுறுக்காமல் தேவன் நீதியுள்ள தயாபரர் என்று அவரைத் துதித்துவருகிறாயா?

அல்லாமலும் உன் வாஞ்சை இகபர காரியங்களிலே எவ்வகையாயிருக்கிறது என்பதையும் சிந்தித்துப்பார். காணப்படுகிறவைகள் எல்லாம் அநித்தியமும் மாய்கையுமானதென்று எண்ணுகிறாயா? இவ்வுலகக் காரியங்களின்பேரில் உனக்கு இருக்கிற பற்றாசைகள் நாளுக்குநாள் குறைந்துவருகிறதா? உன் பரமபிதா நீ உலகத்தில் இருக்கும்படி நியமித்திருக்கிற நாட்கள் எவ்வளவோ, அவ்வளவுகாலம் பூமியில் வாசம்பண்ணி, அவர் தம்மிடத்தில் வரும்படி உன்னைச் சடுதியாய் அழைத்தால் உடனே போகப் பிரியசித்தமாயிருக்கிறாயா? அல்லவென்றால், நான் இன்னம் கொஞ்சக்காலம் இவ்விடத்திலிருந்து, நான் விரும்புகிற நன்மைகளை அநுபவித்துப் பின்பு வருவேன் என்று சொல்லப்போகிறாயா? நீ நித்திரை செய்யப்போகையில் இனிமேல் விழித்தெழும்பமாட்டேன் என்று நினைக்கும்போது மனக்கலக்கமில்லாமல், தெய்வசித்தம்போலாகக்கடவது என்று சொல்லிக்கொள்ளக்கூடுமோ? நீ வீடுவிட்டு வெளியே பிரயாணம்போகையில், இனிமேல் இவ்விடம் திரும்பிவரேன் என்ற எண்ணம் வருகையில் கர்த்தருடைய சித்தம் நல்லது என்று சொல்லக்கூடுமா? நீ இதற்குமுன் பட்ட உபத்திரவங்களிலும் அதிகமான உபத்திரவங்களை வெகு வருஷம்மட்டும் அநுபவிக்கவும், இன்னும் வெகுகாலத்துக்கு உன்மேல் ஏற்றப்படும் சுமைகளைச் சுமக்கவும் சம்பவிக்கிறதாயிருந்தால் உன் பரமபிதாவின் சித்தத்துக்கு அமைந்து, மனப்பூர்வமாய் உனக்கு நேரிடும் தீமைகளைச் சகிப்பாயா? கர்த்தரை நோக்கி உமது அடியானும் பிள்ளையுமாகிய நான் இதோ இருக்கிறேன்; உம்முடைய பார்வைக்கு நலமானபடி எனக்குச் செய்வீராக என்று பூரண நேசத்தோடும் அமைந்த குணத்தோடும் சொல்லக்கூடுமா? இப்படிப்பட்ட இலட்சணங்கள் உன்னில் உண்டு என்று நீ கண்டால், அவைகளுக்காகக் கர்த்தருக்கு ஸ்தோத்திரம் செலுத்தி; நீ பெற்றுக்கொண்ட நன்மைகளை உன்னில் அநுதினமும் விர்த்தியாகும்படி தேவஅருளை நாடித் தேடுவாயாக.

## கிருபாவிர்த்தி பெறும்படி கிறிஸ்தவன் ஆவலாய்ப் பண்ணும் விண்ணப்பம்.

நரஜீவ காருண்ய காரண கர்த்தாவே! நான் இதுவரைக்கும் உயிரோடே இருந்து தேவபக்தியினால் உண்டாகும் இன்பங்களை அநுபவிக்கும்படி கிருபை செய்தீரே, அதற்காக உமக்கே துதி செலுத்துகிறேன். அக்கிரமங்களினாலும், பாவங்களினாலும் செத்தவனாயிருந்த நான், ஜீவாத்துமாவான உம்முடைய பிள்ளையாக இருக்கும்படி, உயிர்ப்பிக்கும் உமது ஆவியானவரைக்கொண்டு என் உள்ளத்தில் கிரியையை நடப்பித்ததற்காக உமக்குத் தோத்திரம் செலுத்துகிறேன். நான் உமக்கென்று ஜீவிக்கவும், என் கர்த்தரும் இரட்சகருமாகிய இயேசுகிறிஸ்துவைப்பற்றிய அறிவிலும் அவருடைய கிருபையிலும் வளரும்படிக்கும் ஆவல்கொண்டிருக்கிறேன். மெய்த்தேவ பக்தியைக்குறித்து [illegible]ாதவண்ணம் நிதானித்துக்கொள்ளாமல் அபிவிர்த்தி இன்னபடியென்று பகுத்தறியும் அறிவை அடியேனுக்கு அநுக்கிரகம் செய்தருளும்.

கிறிஸ்துவுக்குள் என் தேவனும் என் பிதாவுமாயிருக்கிற உம்மிடத்தில் நான் வைக்கும் அன்பு விருத்தியடைவதற்கும், ஞானமும் பரிசுத்தமுமுள்ள உமது சித்தத்துக்கு அமைந்து, என்னால் இயன்றமட்டும் சகல மனிதருக்கும் நன்மை செய்வதற்கும், நான் முயற்சிசெய்ய எனக்கு உதவிசெய்யும். பொறுமை, உற்சாகம், மனத்தாழ்மை, வைராக்கியம், மெய்ஞ்ஞானம், பரமானந்தம் இவைகளைப்பற்றிய விருப்பம் முதலியவற்றில் நான் வளரவும், சரீரத்தில் குடியிருந்தாலும் குடியிராமற்போனாலும் உமக்குப் பிரியமானவனாயிருக்கவும், ஜீவித்தாலும் மரித்தாலும் உம்முடைய மகிமைக்கென்று நாள்கழிக்கவும் அருள் செய்யும். நான் நீதியின்மேல் பசிதாகம் உடையவனாயிருக்கிறபடியால், உமது சித்தத்துக்குப் பிரியமானபடி என்னை நடத்தியருளும். பரமபிதாவே! தேவரீர் என்மேல் பிரியமாயிருக்கும்படி உமது கிருபையுள்ள ஆவியால் என் ஆத்துமாவிலே உமது சாயலின் வடிவைப் பூரணமாக உண்டுபண்ணியருளும்.

கர்த்தாவே நான் இன்னமும் பூரணனாகவில்லை என்பதை உணருகிறேன். நான் இன்னும் பூரண சற்குணத்துக்கு வந்தெட்டாததினால் மனக்கலக்கமுள்ளவனாய் வெட்கப்படுகிறேன். உம்முடைய அப்போஸ்தலன் போதிக்கிறபடி நான்



பின்னானவைகளை மறந்து, முன்னானவைகளை நாடி, கிறிஸ்துவைப் பின்தொடர விரும்புகிறேன். கர்த்தாவே உமது வசனத்தினாலும் உமது ஆவியினாலும் என்னைப் போதித்தருளும். அழிவுள்ள வித்தினாலேயல்ல, என்றென்றைக்கும் நிற்கிறதும் ஜீவனுள்ளதுமான தேவ வசனமாகிய அழிவில்லாத வித்தினாலே மறுபடியும் ஜெநிப்பிக்கப்பட்டிருக்கிற நான் வளரும்படி புதிதாய்ப்பிறந்த குழந்தையைப்போல திருவசனமாகிய களங்கமில்லாத ஞானப்பாலின்மேல் வாஞ்சையாயிருக்கிறேன். நான் கிறிஸ்துவின் நிறைவான வளர்ச்சியின் அளவுக்குத்தக்க பூரணபுருஷனாகித்தேறிவருகிறது யாவர்க்கும் விளங்கும்படி அருள் செய்யும். இவ்வுலகில் உமது ஆலயப்பிராகாரங்களில் செழித்தோங்கியபின்பு பரலோகத்தில் சென்று பரதீசில் சதாகாலமும் வாழும்படி கிருபைபுரியும். நான் பெற்றுக்கொண்டிருக்கிற நன்மைகளுக்குப் பூரண காரணராயிருக்கிற இயேசுமீட்பரின் நாமத்தினாலே இவைகளைக் கேட்கிறேன். அவருக்கே இப்பொழுதும் எப்பொழுதும் மகிமை உண்டாவதாக. ஆமென்.

# 21-ம் அதிகாரம்.

## தேர்ச்சியடைந்த கிறிஸ்தவன் தனக்கு தேவன் அருளிய கிருபைகளை நினைத்து அனுதினமும் அவர்மேல் அன்புவைத்து, அவரில் ஆனந்தம் கொள்ளும்படி சொல்லப்படுகிற போதனை.

நீ உன் ஆத்தும நிலைமையை சோதித்துப் பார்த்தபோது அது தேவபக்தியில் வளர்ந்துவந்திருக்கிறதென்று அறிந்திருக்கிறாய் என்று எண்ணுகிறேன். தேவபக்தி உன்னிலே வளர்ந்துவந்திருக்கிறதற்காக நீ கர்த்தருக்கு ஸ்தோத்திரம் செலுத்தி, வரவர அது உன்னிலே விர்த்தியாகவேண்டுமாகில் உத்தம கிறிஸ்தவனுக்குரிய நடக்கை ஸ்திரமடையும்பொருட்டு தேவன்பேரில் அன்புவைத்து, அவரில் ஆனந்தமடைவது உனக்குரிய சலாக்கியமாயும் கடமையாயுமிருக்கிறது. தேவனுக்குப் பிரியமான சகல நற்செய்கைகளையும் செய்வதற்கு அன்பே முக்கியமானது. கர்த்தரிடத்தில் நீ வைக்கும் அன்புக்குத் தக்கதாய் உன் ஆத்துமா அவரிடத்தில் ஆனந்தத்தைப் பெற்றனுபவிக்கும்.

கிறிஸ்தமார்க்கத்தின் நன்மையை அறிந்தவன், இவ்விஷயத்தில் உத்தம கிறிஸ்தவர்கள் முதலாய் சாதாரணமாய் அநுபவிக்கும் ஆனந்தம் எவ்வளவு அற்பமாயிருக்கிறது என்று கண்டு துக்கப்படுவான். நீதிமான்களே கர்த்தருக்குள் மகிழ்ந்து, அவருடைய பரிசுத்தத்தையும் (சங். 97. 12.) அவருடைய பரிபூரண மகிமைகளையும் மாட்சிமைதங்கிய அவருடைய அற்புதமான அதிசய ஆனந்த நாமத்தையும் கொண்டாடுங்கள். நீ நாடோறும் கர்த்தருக்கு முன்பாக வரும்போது, உன் குறைகளை அறிக்கை பண்ணி, விண்ணப்பங்களைச் செய்துவருவதுமல்லாமல், பரலோக தூதரைப்போல அவருக்கு துதி தோத்திரங்களைச் செலுத்துவாயாக. உன் இருதயம் எப்போதும் பூரிக்கும்படி திவ்விய அன்பின் சுவாலை உன்னில் வளர்ந்தோங்கும்படி பிரயாசப்படு.

ஒளிக்கும் அன்புக்கும் காரணராகிய பிதாவினின்று வீசப்படும் கிரணங்கள் நமது இருதயத்தில் அன்பின் சுவாலையாய்ப் பற்றி எரியப் போதாதோ? என் சிநேகிதனே, என் சகோதரனே என்னோடே சேர்ந்து பரமபிதாவின் தயை எவ்வளவென்று சிந்தித்துப் பார். நான் தியானிக்கையில் அக்கினி நெஞ்சில் பற்றி எரிவதாக. அதை உன்னில் பற்றுவிக்கும்படி நான் இந்த திவ்விய காரியத்தை உனக்கு உபயோகமாக தெரிவிக்கும்பொருட்டு, கர்த்தர் என்பேரில் தமது அருளைப் பொழிவாராக. நான் சொல்லுகிற ஒவ்வொரு வார்த்தையும் மகிமைக்குச் சுதந்தரரான தேவனுடைய பிள்ளைகளின் இருதயத்தில் பதிந்து விருத்தியடைந்து, தெய்வ அன்பில் செழித்தோங்க அருள்பொழியப்படுவதாக.

தேவனே உமது ஆலோசனைகள் எனக்கு எத்தனை அருமையானவைகள், அவைகளின் தொகை எவ்வளவு அதிகம். அவைகளை நான் எண்ணப்போனால் மணலைப்பார்க்கிலும் அதிகமாம் என்று தாவீது சொன்னதுபோல (சங். 139. 17, 18.) நீயும் சொல்லத்தகும். நீ பிறந்தநாள்முதல் தேவன் உனக்குச் செய்திருக்கிற நன்மைகள் எட்டில் அடங்குமா? நீ ஒளிப்பிடத்திலே உண்டாக்கப்பட்டு, பூமியின் தாழ்விடங்களிலே விசித்திரவிநோதமாய் உருவாக்கப்பட்டபோது உன் கருவைக் கண்ட கண்கள் அக்காலம்தொடுத்து இந்நாள்வரைக்கும் உன்னை அன்பாய்ப் பார்த்து உன் எலும்புகளில் ஒன்றாவது முறிக்கப்படாதபடி காப்பாற்றிவந்ததினால், நீ பிழைத்திருக்கிறாய் என்று நினைத்து, நன்றியறிதலுள்ளவனாய்க் கர்த்தருக்கு ஸ்தோத்திரம்செய். நீ கர்ப்பத்திலிருந்து வெளியேறினதுமுதல் நீ சென்ற



பாதைகளில் அவர் உனக்கு பாராட்டியிருக்கிற அனந்த நன்மைகளைக் கண்டிருக்கிறாயே. நீ வாசம்பண்ணின இடங்களில் உன்னோடே சகவாசமாயிருந்த சனங்களைக்கொண்டு தேவன் எத்தனையான உதவிகளை உனக்கு செய்திருக்கிறார் என்று நினைத்துப்பார். உன்னை நெருக்கின வருத்தங்களையும் மோசங்களையும் நீ நினைத்து, அவைகளைச் சகிக்கவும், அவைகளினின்று உன்னை விடுவிக்கவும், கர்த்தர் என்ன செய்தார் என்பதை நினைத்துக்கொள்.

உனக்கும் மரணத்துக்கும் ஒருஅடித் தூரம்மாத்திரம் இருந்த காலங்களில் நீ நினையாதவண்ணம் உன்னை மோசத்துக்குத் தப்புவித்து, உன்னை இரட்சிக்கும்படி செய்த உபகாரங்களை உணர்ந்துகொள். நான் இனி வெளியேறேன் என்று வியாதியாய்ப் படுத்திருந்ததைச் சிந்தித்துப்பார். நீ சுகம் அடைந்தபின்பு, தேவன் அநேக வருஷங்களாய் உன்னைத் தற்காத்து, நீ நன்மைகளை அநுபவிக்கவும், மற்றவர்களுக்கு பிரயோஜனமுள்ளவனாயிருக்கவும், அநுக்கிரகம் செய்திருப்பதை யோசித்துப்பார். உனக்குக் கிடைத்திருக்கிற இல்லற நன்மைகளையும் நினைத்துப் பார். உன்னைச் சூழவிருக்கும் இனத்தார் நாடோறும் உனக்கு நன்மைசெய்யும்படி பிரயாசப்பட்டுவருவதைக் கவனித்துப் பார். உன் இனத்தாரில் உனக்கு அருமையானவர்கள் சாவுக்கேதுவாயிருந்தகாலத்தில், தேவன் அவர்களைச் சுகப்படுத்தி, எல்லா நாசமோசத்திலும் இருந்து, அவர்களை விடுவித்து, நீ அவர்களோடே இன்ப சம்பாஷணைகளைச் செய்வதற்குக் கட்டளையிட்டிருக்கிறாரே, அதற்காக நன்றியறிந்தவனாயிரு. அன்றியும், உன் இனத்தாரில் சிலர் மரித்துப்போனபோது, உனக்கு உண்டாயிருந்த துக்கம் மாறத்தக்கதாய் தேவன் தமது கரத்தால் சாகும் மஞ்சத்தில் அவர்களைத் தாங்கி, அவர்கள் தேவபக்தி சுகந்தவர்க்கம்போல இன்பவாசனையாயிருக்கும்படி செய்ததை மறவாதே.

இப்போது, தேவன் உனக்குப் பாராட்டியிருக்கிற ஆவிக்குரிய நன்மைகளை உனக்குத் தெரியக்காட்டுகிறேன். தேவன் உனக்குக் கிருபையை அநுக்கிரகித்தவேளையில் நீ இருந்தநிலைமை என்ன? நீ எவ்வளவு பாதகனும் அசுத்தனுமாயிருந்து மோசத்தில் அகப்பட, நித்திய அழிவுக்கு ஏதுவாயிருந்தாயே. ஆ உன் நிலைமை பயங்கரமுள்ளதாயிருந்தது; நீ இவ்வுலக காரியங்களையே நாடினாய்; பரம காரியங்களையோ வெறுத்துத்தள்ளி, சிற்றின்ப ஆசைகளில் அமிழ்ந்திக்கிடந்தாய். நீ நரகத்தின் ஓரத்திலே நடந்து, தேவதண்டனையை அநுபவிக்க ஏதுவாயிரு

தாய். இதைத் தேவன் பார்த்து உன்மேல் மனதுருகி உன்னை மீட்கும்பொருட்டு, தமது நித்திய ஆலோசனையின்படி மீட்பனை ஏற்படுத்தினார். உன்னை மீட்கும்பொருள் எவ்வளவோ அருமையானதென்று நீ நினைக்கையிலே, தேவனுக்கு முன்பாக ஆச்சரியமும் வெட்கமும் நிறைந்தவனாய் சாஷ்டாங்கமாய் விழுந்து, அதற்கு நீ எவ்வளவும் பாத்திரமுள்ளவனல்ல என்று சொல்லுவாய். இப்படிப்பட்ட தெய்வீக உணர்ச்சியை உன்னில் உண்டுபண்ணும் பொருட்டு, உன் உள்ளத்திலே தமது அருளை ஊற்றியிருப்பதினால், அந்தகாரமுள்ளவனாயிருந்த நீ இப்போது கர்த்தருக்குள் வெளிச்சமாயிருக்கிறாய் (எபே. [illegible]). நீ இப்போது அநுபவித்துவருகிற அந்தப் பெரிய மாறுதலை அவர் தமது பரிசுத்தஆவியினால் உன்னில் சித்தியாகும்படி செய்து, தேவஅன்பை உன் இருதயத்தில் ஊற்றியிருக்கிறார் (ரோ. 5. 5.). இப்படி அவரால் ஆதரிக்கப்பட்டவனாய் அவருடைய அநுக்கிரகம் பெற்று இந்நாள்வரைக்கும் நிற்கிறாய். அவர் உன்னை ஆசீர்வதித்திருக்கிறதுமல்லாமல், நீ மற்றவர்களுக்கு ஆசீர்வாதமாயிருக்கவும் அநுக்கிரகம் செய்திருக்கிறார். அவர் உனக்கு அருளின உதாரகுணத்துக்குத் தக்கதாய், நீ அதிகமான நன்மைசெய்யாதிருந்தாலும், கொஞ்சமாயாவது நன்மை செய்திருக்கிறாய். உன் பிரயத்தனத்தினால் சிலர் உலக நன்மையைப் பெற்றதுண்டு. வேறுசிலர் மதியீனமாய் அலைந்த தீயவழியை விட்டு நீங்கி, நல்வழியில் ஒழுகி மனப்பாக்கியமுள்ளவர்களாயிருக்கிறார்கள். உன்னால் நன்மை பெற்று மோட்சவழியில் நடக்கிற சிலர் உன்னையிட்டு கர்த்தாவுக்கு ஸ்தோத்திரம் செலுத்துகிறார்கள். மோட்சலோகம் சேர்ந்த வேறுசிலர் தாங்கள் போயிருக்கிற இடத்துக்கு நீயும் போய்ச் சேர எதிர்பார்த்து தாங்கள் உன்மூலமாய்ப்பெற்ற நன்மைகளுக்கு நன்றிசெலுத்த அவாவோடே காத்திருக்கிறார்கள்.

கிறிஸ்தவனே! இப்படி உனக்குக் கிடைத்திருக்கிற ஆசீர்வாதங்கள் எத்தனைத் திரளாயிருக்கிறதென்பதைச் சிந்தித்துப் பார். மேலும் விசுவாசத்தினாலே, திரைக்குள்ளிருக்கிற ஆசீர்வாதங்கள் எவ்வளவு முக்கியமானவை என்று நிதானித்துப் பார். நீ தேகத்தைவிட்டு நீங்கும்போது உன் பாரச்சுமைகள் எல்லாம் நீங்க, உன் ஆத்துமா பாக்கியமுள்ளதாய்ப் பரிசுத்த ஆனந்தத்துக்கு மூலமாகிய தேவனிடத்துக்கும் இந்த ஆசீர்வாதங்கள் எல்லாவற்றையும் உனக்காகச் சம்பாதித்து, நீ அவர் சமுகப் பிரகாசத்தைச் சதாகாலங்களிலும் தரிசிக்கும்பொருட்டு, தமக்குச் சமீபத்தில் உனக்கு ஒரு சிங்காசனத்தை அருளும்



இயேசுவண்டைக்கும் சேரும்போது, உனக்கு உண்டாகும் ஆனந்தம் எவ்வளவாயிருக்கும் என்று சிந்தித்துக்கொள். உயிர்த்தெழும்புநாளிலே அழிவுக்குரித்தான உன் தேகம், இயேசுவின் திருமேனி வடிவுபெற்று சிறந்து இலங்குகையில் எவ்வளவு உன்னதமகிழ்ச்சி உனக்கு உண்டாகும். அப்படியே கோடாகோடி ஆத்துமாக்களும் மகா மகிமைப்பிரகாசத்தை அடைந்து மோட்சவாழ்வை அநுபவிப்பார்கள் என்பதை நினைத்துக்கொள். இவ்வுலகத்திலே என் சிநேகிதரில் அநேகர் மோட்சானந்தம் பெறுவோம் என்ற நம்பிக்கைகொண்டு முகமலர்ச்சியுள்ளவர்களாய் ஆனந்தக்கண்ணீர் சொரிவதை மிக சந்தோஷத்தோடே பார்த்திருக்கிறேன். அவர்களுடைய அந்த மகிழ்ச்சியை வர்ணிப்பது அரிதாயிருக்கிறது. அவர்கள் இன்பமான வசனங்களைப் பொழிந்ததையும் கேட்டிருக்கிறேன். மேலும் அவர்களைப்போல எனக்கு அருமையாயிருந்தவர்களில் அநேகருடைய சரீரத்தை நான் கண்ணீரோடே கல்லறைகளில் அடக்கம்செய்தாலும், அவர்கள் ஆத்துமா பரலோகம் சேர்ந்து, வாக்குக்கெட்டாத இன்பங்களை அநுபவித்து, தேவனுடைய வலதுபாரிசத்திலிருந்து என்றும் ஓடிக்கொண்டிருக்கிற ஜீவதண்ணீரைப் பானம்பண்ணி வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள்.

கிறிஸ்தவனே, நீயும் மோட்சவீட்டிலிருக்கிற அவர்களோடே சம்பந்தமாகி ஐக்கியப்பட்டிருக்கிறாய். மரணமானது, அப்பேர்ப்பட்ட சிநேகசம்பந்தத்தைக் கெடுக்கமாட்டாது; ஆதலால் மரணமடைந்திருக்கும் உன் அன்பர்கள் அநுபவிக்குஞ் சந்தோஷத்தைக்குறித்தும் மகிழ்வதே நியாயம். அவர்கள் தேவனுடைய தொண்டர்களாய் அவருக்கென்று பிழைத்து, அவருடைய சமுகத்தை தரிசித்து, அவரைச் சேவித்துவருகிறார்கள் (வெளி. 22. 3, 4.). அவர்கள் மகிமைபொருந்திய கூட்டத்தில் ஓர் பங்காசமாத்திரம் இருக்கிறார்கள். அவர்களைப்போல இன்னும் கோடாகோடிப்பேர் தேவனுடைய பிரதான நகரியாகிய மோட்சத்திலே வாழ்கிறார்கள் என்பதை நினைக்கையில் அவர்களோடேகூட நீயும் மகிழ்கொண்டாடாயோ? இவ்விதமாய் அவர்களுக்கு ஆனந்தங்கொடுக்கிற காருண்ய காரணரை நீ துதிக்கமாட்டாயோ? கிறிஸ்தவனே! வானவாசர்களாகிய தேவதூதர்கள் உன்னை நேசித்து, உனக்குப் பணிவிடைசெய்து, இரட்சிப்புக்குச் சுதந்தரவாளியான உன்னைத் தங்கள் கைகளில் ஏந்திக்கொள்ளுகிறார்களே; அவர்களுடைய ஆனந்தத்தைக்குறித்து நீ மகிழ்ந்திருக்கமாட்டாயோ? அந்தத் தூதர்களுடைய மேலான தன்மைக்குத் தக்கதாய் அவர்களுக்குச் சிறந்த மகிமையான

மோட்சத்தை அருளிய தேவனுக்கு நீ ஸ்தோத்திரம் செலுத்துவது உனக்கு மிகவும் தகுதியாயிருக்கிறது. அந்தத் தூதர்கள் இன்பஸ்தலத்தை விட்டு நீசனாகிய உனக்குப் பணிவிடைசெய்யும்படி வருவது ஆச்சரியமல்லவா?

தேவன் நமக்கு அநுக்கிரகஞ்செய்யும் இன்பசந்தோஷங்களை நாவால் உரைக்கவும், கையால் எழுதவும் முடியாததாயிருக்கின்றன. அப்படியானால் இருக்கிறவரும் இருந்தவரும் இருப்பவருமான ஜீவகாருணிய கடவுள் எவ்வளவு அதிகமாய் அதிசயமானவராயிருப்பார். அவருடைய அதிசயங்களை அறிவிக்க நித்தியமும் போதாது. அவருடைய சிங்காசனத்தைச் சூழ்ந்திருக்கும் தூதர்களின் பேரின்பமும் கிறிஸ்தவனாகிய நீ அநுபவிக்கப்போகிற ஆனந்தமகிழ்ச்சியும் அழிவின்றி என்றென்றைக்கும் நிலைநிற்கும். சூரியசந்திர நட்சத்திரங்கள் அழிந்துபோன பின்பும், நீ தேவலோகத்தில் சுடரொளியாய் என்றும் குறையாத ஜோதியுடன் பிரகாசித்துக்கொண்டிருப்பாய். ஜோதிகளின் பிதாவானவர் நித்தமும் சொரியும் கிரணங்கள் உன்னில் பிரதிவிம்பிக்க நீ சதாகாலமும் பரமானந்தத்தில் மூழ்குவாய். தேவபுத்திரனே! மோட்சமகிமைக்குச் சுதந்தரனே! உன் இருதயத்தைக் குவித்து நித்திய ஆனந்தத்தால் பரவசப்பட்டவனாய் தேவனுக்கு முன்பாக சாஷ்டாங்கமாய் விழுந்து நன்றியுள்ள மனதோடே அவரை ஆராதித்து இவ்வுலகத்திலும் அவருக்கு மகிமையுண்டாக ஜீவனம் பண்ணிவருவாயாக.

---

## இகபர நன்மைகளைப் பெற்றனுபவித்து நன்றிசெலுத்தும் ஆத்துமாவானது பக்திவைராக்கிய நேசத்துடன் தேவனுக்குச் செய்யும் துதி தோத்திரம்.

என் தேவனே! நான் தியானஞ்செய்கையில் என் இருதயம் எனக்குள்ளே அனல்கொண்டது, அக்கினி மூண்டது; அதினிமித்தம் உம்மைத் துதிக்கிறேன். ஆனால் உமது நாமத்தைச் சரியானபடி புகழ்ந்து போற்றுவதற்கு வார்த்தைகள் இல்லை. உமது மகத்துவத்தை நினைத்து, அதிசயித்து என் இருதய பூரிப்பினால் உம்மை வணங்குகிறேன். உம்முடைய அன்பை அதிகமதிகமாய்ப் பெற்றுக்கொள்ளும்படி என் இருதயத்தை உமக்கு முன்பாக ஊற்றுகிறேன். நீரே என் நம்பிக்கையும் துணையும் மகிமையுமாயிருக்கிறீர்; என் தலையை உயர்த்துகிறவரும் நீரே. உம்முடைய இரட்சிப்பினால் என் இருதயம் களிகூருகிறது. உமது ஆவியைக்கொண்டு நான் தியானிக்கும் வேளையில், என் ஆத்துமாவை மகிழ்ச்சியாக்கும். நீர் எனக்குக் கொடுத்த ஆயிரமாயிரமான நன்மைகள் என் முன்பாகத் தோன்றி என் மனதைக் குளிரப்பண்ணுகிறது.



என் சிருஷ்டிகர்த்தாவாகிய தேவனே, உம்மை அறிவதற்கேதுவாக, பகுத்தறிவுள்ள ஆத்துமாவாக என்னைப் படைத்தீர்; இதினிமித்தம் உம்மைத் துதிக்கிறேன். என் ஆத்துமாவைச் சிங்காரிப்பதற்கு, ஞானஒளியைத் தந்ததற்காக உம்மைத் தோத்திரிக்கிறேன். தேவரீர் என்னிடத்தில் நாட்டிய கிருபை விருக்ஷம் பாழ்நிலத்தில் நிற்பதினால், நான் விரும்பியபடி கனிகொடாதிருந்தும், என்னைச் சகித்திருக்கிற அருளுக்காக உம்மைத் துதிக்கிறேன்.

என் பரமபிதாவே! ஐம்புலன்களைக்கொண்டு பற்பல நன்மைகளை அநுபவிப்பதற்கும், உற்சாகத்துடன் உமக்கு ஊழியம் செய்வதற்கும், எனக்குத் தேகத்தைத் தந்ததுடன் இந்நாள்வரைக்கும் அதைச் சுகத்தோடும் பெலத்தோடும் காப்பாற்றினதினிமித்தம் உம்மைத் துதிக்கிறேன். வீட்டுக்காவலாளிகள் தள்ளாடாமலும், பெலசாலிகள் கூனிப்போகாமலும், பலகணிவழியாய்ப் பார்க்கிறவர்கள் இருண்டுபோகாமலும் கீதவாத்தியக் கன்னிகைகளெல்லாம் அடங்கிப்போகாமலும் இருக்கிறதற்காக உம்மைத் தோத்திரிக்கிறேன். என் ஜீவாதிபதியே என் வெள்ளிக்கயிறு கட்டுவிடாமலும், பொற்கிண்ணி நசுங்கிப்போகாமலும் பாதுகாத்து, உமது அளவற்ற சாமர்த்தியத்தினால் என் உயிரை இடைவிடாதபடி புதுப்பித்துவருகிறதினிமித்தம் உம்மைத் துதிக்கிறேன்.

என் தேவனே! உமது இராசரீக தயாளத்தினாலே மனிதஜாதியார் யாவர்க்கும் அன்றன்றுள்ள போசனத்தைக் கட்டளையிட்டுவருகிற நன்மைக்காக உம்மைத் துதிப்பதுமல்லாமல், விசேஷமாகத் தேவரீர் அடியேனாகிய எனக்கு ஒரு பந்தியை ஆயத்தப்படுத்தி, என் பாத்திரம் நிரம்பி வழியும்படி செய்திருக்கிற தயவுக்காக உம்மைத் துதிக்கிறேன். நீர் தருகிற பதார்த்தங்களை நான் அநுபவிப்பதற்குரிய சரீரசுகத்தை அருளினதற்காக உம்மை மகிமைப்படுத்துகிறேன். எனக்குத் தரும் ஆகாரத்தை நான் தனிமையாய்ப் புசியாமல், அநேக அன்புள்ள சிநேகிதரோடே புசிப்பதினால், நான் தேகசுகம் பெறுவதுமன்றி, சிநேக சம்பந்தத்தையும் பெற்றுக்கொள்வதற்காக உம்மைப் புகழுகிறேன். என்னை ஆற்றித் தேற்றிவருகிற என் இனத்

தாருக்காகவும், எனக்குப் பலவிதமாய்ச் சகாயம்செய்யும் சிநேகிதருக்காகவும் உமக்கு நன்றியறிதலைச் செலுத்துகிறேன்.

தயாபர பிதாவே! வாங்குகிறதிலும் கொடுக்கிறதே பாக்கியம் என்பதின்படி நான் மற்றவர்களுக்கு உபகாரம் செய்வது பாக்கியம் என்றறிய தேவரீர் எனக்கு அருளிய வரப்பிரசாதங்களுக்காக உம்மை ஸ்தோத்திரிக்கிறேன். ஆதரவற்றவர்களுக்கு உபகாரம் செய்யத்தக்க உதாரகுணம் உம்மால் உண்டாகிறதால், என்னால் இயன்றமாத்திரம் அப்பேர்ப்பட்டவர்களுக்கு நன்மை செய்ய எனக்கு நீர் தந்தருளின மனஉற்சாகத்தினிமித்தம் உம்மைப் புகழுகிறேன்.

காருண்ய தேவனே! துக்கப்படுகிறவர்களுடன் துக்கப்படுவது நன்மையின் சாராம்சமென்றுணர்ந்து, மோட்சானந்தத்தை அநுபவிக்கும் பாக்கியவான்களுடைய வாழ்வில் பங்கு அடைவதற்காக உம்மைத் துதிக்கத் தகும். பரதீசை நீர்ப்பாய்ச்சி, அதை என்றும் செழிப்பாக்குகிற பேரின்ப நதிக்காக உம்மைப் புகழுகிறேன். என் அருமையான சிநேகிதரில் சிலர் மோட்சவாழ்வில் சென்று, உம்மிலே ஆறுதலையும் சந்தோஷப்பேரின்பத்தையும் அநுபவித்துக்கொண்டிருக்கிறதற்காக உம்மைப் போற்றுகிறேன். உமது சிங்காசனத்தைச் சுற்றிநிற்கும் தூதர்கள் பரிசுத்தவான்கள் அநுபவிக்கும் ஆனந்தத்துக்காக உம்மைப் புகழுகிறேன். இப்போது நான் தூரமாயிருந்தும், விசுவாசக் கண்ணாடியைக்கொண்டு நான் பார்க்கிறபடி அவர்கள் அநுபவிக்கிற ஆனந்தத்தை நானும் சீக்கிரத்தில், பிரத்தியட்சமாய் அநுபவிப்பேன் என்று உணர்ந்து உம்மைத் துதிக்கிறேன். இப்போதும் என்னைத் தாங்கும் உமது திருக்கரத்தினால் நான் அந்தப் பரம தேசத்துக்குச் சமீபித்துவருகிறேன் என்று உணருகிறேன். உம்முடைய வாக்குத்தத்தங்களை நம்பித் தேவரீர் அருளும் இரட்சிப்புக்காக நான் எதிர்நோக்கிக் காத்திருக்கிறேன்.

ஜீவதயாபர கடவுளே! நான் இனி என்னத்தை வசனிப்பேன். சொல்லமுடியாத நேசத்துடன் நான் உம்மைப் பற்றிக்கொள்ளுகிறேன். என் புத்திக்கெட்டாதவிதமாக நிமிஷந்தோறும், உமது சிருஷ்டிகள் ஜீவனையும், அறிவையும் பாக்கியத்தையும் அடைவதற்குக் காரணராகிய உம்மை நான் நேசிக்கிறேன். சிருஷ்டிகளை ஆதரிக்கும்படி நன்மைகளைச் சொரிந்து என்றும் பரிபூரணமாய் நிலைத்திருக்கிற நித்திய சுயம்புவாயிருக்கிற உம்மையே நான் நேசித்துத் துதிக்கிறேன்.

முந்தினவரும் மகா பெரியவரும் சௌந்தரிய முள்ளவருமான என் தேவனே! என் ஆத்துமாவை வசப்படுத்தியருளும்.



நீர் அதைச் சுதந்தரித்துக்கொண்டும் இருக்கிறீர். நான் ஜீவப்பிராணியாயிருக்கிறேன் என்பது எவ்வளவு நிச்சயமோ, அவ்வளவாய் பரிசுத்தஆவி என்னில் நடப்பித்துவருகிற கிரியையினால் நான் பரமஜீவியாயிருக்கிறேன் என்று நிச்சயித்திருக்கிறேன். நான் பசியாயிருக்கையில் போசனத்தைப் புசிக்க ஆவலாயிருக்கிறதுபோல, என் ஆத்துமா உம்முடைய சுபாவத்துக்கும் சித்தத்துக்கும் ஒப்பாகும்படி நீதியின்மேல் பசிதாகமுள்ளவனாயிருக்கிறேன். என் ஆத்துமா தேவதயவைப் பெறும்படி கதறி தேவன்மேல் ஜீவனுள்ள தேவன் மேலேயே தாகமாயிருக்கிறது. பரமபிதாவே, பிரயாசத்தினாலும் பிரயாணத்தினாலும் இளைத்துப்போகும் என் சரீரம் படுத்து இளைப்பாற விரும்புகிறதுபோல, என் ஆத்துமாவானது தனக்கு நன்மைகளைச் செய்த உம்மையே சார்ந்துகொள்ள அபேட்சித்திருக்கிறது. சிநேகிதருடைய முகமலர்ச்சியைக் கண்டு நான் மகிழுகிறதுபோல, என் தேவனாகிய உமது திருமுகத்தைக் கண்டு மகிழுகிறேன். நீரே கிறிஸ்துவுக்குள் என் பிதாவாயிருக்கிறீர். இக்காலத்திலும் எக்காலத்திலும் அப்படியே பிதாவாயிருக்கிறீர். நான் இன்னம் அதிகமாய் என்னசெய்யலாம், என்னை உமக்கே ஒப்புக்கொடுக்கிறேன். நான் உமக்கு ஊழியம் செய்து, உம்மிலே மகிழ்ந்திருக்கும்படி, தேவரீர் என் சுதந்தரத்தைத் தெரிந்தளித்து, என் காரியங்களையெல்லாம் நடத்தியருளும். உமது வலதுகரம் என்னைத் தாங்குகிறதால், என் ஆத்துமா உம்மைத் தொடர்ந்து பற்றிக்கொண்டிருக்கிறது. நான் நித்தியமாய் உம்மில் சந்தோஷிக்கத்தக்கதாய் என் வாஞ்சை திர்ப்தியாகும்படி இன்னம் உமது கரம் தாங்குவதாக. ஆமென்.

## 22-ம் அதிகாரம்.

### பக்குவப்பட்டு ஸ்திரமடைந்த கிறிஸ்தவன் பிறருக்கு நன்மை செய்ய முயற்சியாயிருக்கும்படி அவனுக்கு உணர்த்தும் போதனை.

முந்தின அதிகாரத்தில் சொல்லியிருக்கிறபடி, உன் ஆத்துமா வேதத்தை வாசித்துச் சிந்தித்துத் தியானம்பண்ணி, தேவனை நோக்கி விண்ணப்பஞ் செய்துவருகிறதென்று எண்ணும்

றேன். அப்படியானால், நீ நன்றியறிந்தவனாக கர்த்தரை நேசித்து பிரார்த்திப்பாய், நீதியஸ்தராகிய இயேசுவின் மூலமாய் தூபவர்க்கம்போல அது சந்நிதிக்கு எழும்பி இனிய வாசனையைக் கொடுக்கும். இதுவுமல்லாமல், நீ அன்புள்ளவனாயிருந்தால் எல்லா மனிதரிடத்திலும் மாறாத அன்புவைத்துத் தளர்ச்சியின்றி இடைவிடாமல் அவர்களுக்கு நன்மை செய்ய முயற்சியாயிருப்பாய்.

தயாபரரான மகத்துவ பிதா என்மேல் கடாட்சம் வைத்து, ஆயிரக்கணக்கான என் பாவகுற்றங்களை மன்னித்துப் பற்பல நன்மைகளால் என்னை முடிசூட்டியிருக்கிறார் அல்லவா? இப்படி அவர் செய்திருக்கிற நன்மைகளுக்காக என்ன ஈட்டைச் செலுத்துவேன். ஜீவ வாக்கியங்களே, நித்திய சத்தியத்தை எனக்கு உணர்த்துங்கள். என் பரமபிதாவின் குடும்பத்தைச்சேர்ந்த மூத்த சகோதரரே, எனக்கு உணர்த்துவீர்களாக. எல்லாவற்றிற்கும் மேலாக ஞானம் அன்பு இவைகளுக்குக் காரணராகிய பரிசுத்தஆவியே! நான் காருண்ய கர்த்தரிடத்தில் அன்புவைத்து, விசுவாசியாய் நடக்கும்பொருட்டு, நான் செய்யவேண்டியதற்குப் போதனை செய்தருளும்.

கிறிஸ்தவனே! தேவனிடத்தில் அன்புகூருகிறவன் தன் சகோதரனிடத்திலும் அன்புகூரவேண்டும் (1 யோ. 4. 21.) என்ற இந்த கற்பனை ஆதியிலிருந்தவர்களுக்கு மாத்திரமல்ல, எக்காலத்திலுமுள்ள கிறிஸ்தவர்களுக்கு விதிக்கப்பட்டதென்று எண்ணி, வசனத்தினாலும் நாவினாலுமல்ல; கிரியையினாலும் உண்மையினாலும் அன்புகூருவாயாக (1 யோ. 3. 18.). நீ உன்னில் அன்புகூருவதுபோல, பிறரிடத்திலும் அன்புவைத்து, உன்னால் இயன்றஅளவு அவர்களுக்கு உபகாரம் செய்வது உன் கடமை.

அப்படியே எல்லாரையும் நேசிக்கிறேன், திவ்விய அன்பாகிய பொற்சங்கிலி யாவரையும் ஒருமைப்பாட்டிலே சட்டி, எல்லாருக்குள்ளும் ஒரேஆவி நிலைப்படும்படி ஏவிவிடுகிறதென்று உணருகிறேன். வானத்திலும் பூமியிலுமுள்ள ஜீவிகளுக்குள்ளே மேலான மனோபாக்கியம் செழித்தோங்கி வாழும்படி தேவன் அநுக்கிரகம் செய்வாராக. சீர்கெட்டுப் போனவர்கள் யாவரும் மீட்பைப் பெற்றுக் கர்த்தருக்கு அமைந்து நடக்கும்படி, அவர் அருள்புரிவாராக. மீட்பைப் பெறாதவர்களுக்கு உண்டாகும் தண்டனையினால், பொதுவாய் நன்மையுண்டாகும்படி கர்த்தர் கிருபை செய்வாராக, என்று விண்ணப்பம் செய்துவருகிறேன்என்று சொல்லுவாய்.



இப்படிப்பட்ட எண்ணங்கள் இருதயத்திலிருந்து உண்டாகிறதானால், கிரியைகள் நன்மையாக இருக்கும். அப்போது நீ தேவனுடைய நடத்துதலுக்கு அமைந்து, உன்னால் இயன்ற மட்டும் யாருக்கும் உபகாரம் செய்ய வகைபார்ப்பாய். இதற்காக நீ உன் ஸ்திதியை அறிந்து, பிறருக்கு நன்மை செய்ய நாடுவாயாக. நீ பெற்றநுபவிக்கிற நன்மைகள், நீ பெருமையடைவதற்கல்ல, தேவனுடைய உக்கிராணக்காரனாக, அவைகளை நல்லவகையாய்ச் செலவிடப் பெற்றிருக்கிறாய் என்று சிந்தித்துக்கொள். நமக்கு அருளப்பட்ட கிருபையின்படியே, நாம் வெவ்வேறான வரங்களுள்ளவர்களானபடியினால், நாம் செய்யும்படி கர்த்தர் ஏதேதைக் கற்பித்திருக்கிறார் என்று அறிய முயற்சியாயிருந்து, நாம் நம்மால் இயன்ற அளவு எவர்களுக்கும் நன்மை செய்ய ஆலோசித்து வகைதேடிக்கொள்ளவேண்டியது. பரோபகாரம் செய்ய தங்களுக்குண்டான சாவகாசம் இன்னதென்று உண்மையாய் நிதானித்துக்கொள்ளுகிறவர்கள் மிகவும் சொற்பம். அதிகமானபேர்கள் அப்படிச் செய்யாமல் விட்டுவிடுவதினால், நம்மைச் சூழ்ந்திருக்கும் அநேகருக்கும் நமக்கும் வரத்தக்க நன்மை வராமற்போகிறது.

தேவன் உனக்கு விவேகத்தையும் கல்வியையும் அருளியிருக்கிறாரா? உன் சாமர்த்தியத்தை மற்றவர்களுக்குக் காட்டி, அதைக் கண்டவர்கள் வியந்து, பிரமிக்கவல்ல, அவர்களையும் உன்னையும் சோதிகளின் பிதாவண்டைக்கு நடத்தும்படிக்கு உனக்கு அவைகள் அருளப்பட்டதென்று நீ எண்ணிக்கொள்ளவேண்டும். நீ பெற்றுக்கொண்ட வரங்கள் சித்தியாகும்பொருட்டு, மனிதர் தேறி தங்கள் நடக்கைகளை அலங்கரிக்கும்படி தெய்வீககாரியங்களை அவர்களுக்குப் போதித்து வரவேண்டும். மேலும் சன்மார்க்கமாய் நடப்பதினால் உண்டாகும் பலன், இன்னதென்று அவர்களுக்குக் காட்டி, தேவனுக்கு விரோதமாய் நடப்பவர்களுக்கு நாசமோசம் தப்பாமல் வரும் என்று தைரியமாய் அறிவித்துத் துன்மார்க்கமாய் நடப்பவர்கள் தீமையினின்று விலகும்படி உருக்கத்தோடே புத்தி சொல்லி அவர்களுக்கு நல்வழி காட்டவேண்டும்.

நீ ஒரு குடும்பத்துக்கு தலையாயிருக்கிறாயா? அப்படியானால், தேவனுக்கென்று அதை ஆண்டுகொள். உன் குடும்பத்தை ஒரு சிறு இராச்சியமாகப் பாவித்து, அதிகாரிகள் பெரியோர்கள் தங்கள் அதிகாரத்தைச் செலுத்துவதுபோல, நீயும் அதை நடத்திவருவாயாக. உன் பிள்ளைகளும் வேலைக்காரரும் உனக்குப் பிரஜைகளாயிருக்கிறார்கள். அவர்களுக்குச்

சட்டங்களை ஏற்படுத்தி, அவைகளுக்கு இசைவாய் நடக்கும்படி பார்த்துக்கொள். அவர்கள் அப்படி நடப்பது நியாயமானது என்று உணரும்படி, அவர்களுக்கு வேதமார்க்கத்துக்குரியவைகளை எடுத்துப் போதிப்பாயாக. நீ அவர்களுடைய இருதயத்தை மாற்றக்கூடாதிருந்தாலும், அவர்களுடைய நடக்கையைச் சீர்திருத்தலாமே. அதினால் அவர்கள் பற்பல கண்ணிகளுக்குத் தப்பி, தேவனுடைய வழிகளில் யோக்கியமாய் நடந்து, அவருடைய இரக்கத்தினால் ஆசீர்வாதம் பெறலாம். ஆத்தும நன்மைகள் மற்ற எல்லாச் செல்வங்களிலும் மேலானவைகள் என்று அவர்கள் உணர்ந்து, அவைகளின் அருமையை அறியும்பொருட்டு முயற்சிசெய்.

மனுஷர்களுக்குள்ளே நீ சங்கையுள்ளவனாயிருக்கும்படிக்காகவா கர்த்தர் உன்னை எழுப்பியிருக்கிறார்? உனக்குக் கிடைத்திருக்கிற ஸ்திதி கர்த்தருடைய கிருபையினால் உண்டாயிருக்கிறது என்று எண்ணி, நீ செய்யவேண்டிய பற்பல கடமைகளை அதிக மனச்சந்தோஷத்தோடே நிறைவேற்றவேண்டியது. உனக்கிருக்கிற செல்வாக்கை நன்மைக்கென்று பிரயோகப்படுத்துவாயாக: சன்மார்க்கமும் சற்குணமும் நிலைநிறுத்தப்படும்படி வகைதேடு. உத்தம குணமுடையவர்கள் வருத்தங்களை அநுபவிக்கையில், அவர்களுக்கு உதவிசெய்யப் பிரயாசப்படு. ஏனெனில் உன்னிலும் பக்தியுள்ளவர்களான சிலருக்கு சில வேளைகளில் ஆபத்துக்கள் நேரிடுவதுண்டு. சத்தியத்தை பரிபாலிக்கிறவனாகவும், சமாதானத்தை உண்டுபண்ணும் ஆலோசனைக்காரனாகவும், உண்மைக்கு மாதிரியைக் காட்டுகிறவனாகவும், பல காரணங்களினால் ஒருவருக்கொருவர் விகற்பப்படும் நல்லோரை அந்நியோந்நியப்படுத்துகிறவனாகவும் விளங்குவாயாக.

தேவன் உன்னை உலகப்பொருளால் ஆசீர்வதித்திருக்கிறாரா? உன்னையும் உன் குடும்பத்தையும் ஆதரிப்பதற்கு மிஞ்ச உனக்குத் திரவியமுண்டோ? உண்டாயிருந்தால், நீ அதற்குக் கணக்கு ஒப்புக்கொடுக்கவேண்டும் என்பதை நினைத்துக்கொள். செல்வவான்கள் அநேகர், தங்கள் பொருளினாலே நாசமோசத்தையும் வெட்கத்தையும் அடைவதுபோல, நீயும் அடையாதபடி எச்சரிக்கையோடே நடந்துகொள்ள தேவசகாயத்துக்காக விண்ணப்பம் பண்ணுவாயாக. நீ உதாரகுணமுள்ளவனாக சிறந்த காரியங்களுக்கென்று உபகாரம்செய்யும் முறைமை இன்னபடியென்று உனக்குத் தெரியக்காட்டுகிறேன். எத்தனையோ உத்தம சன்மார்க்கர் குறைவுபட்டுத் தரித்திரத்தினாலே



தத்தளிக்கிறார்கள் என்பதை நீ பார்த்திருக்கிறாயே. தேவன் உனக்குத் தந்திருக்கிற பரிபூரண வாழ்விலிருந்து, நீ அவர்களுக்குக் கொஞ்சம் உதவிசெய்தால் அது அவர்களுக்கு எவ்வளவு ஆறுதலைக் கொடுக்கும் என்பதைச் சிந்தித்துப்பார். அறிவில்லாமல் பாவத்துக்கும் நிர்ப்பந்தத்துக்கும் ஏதுவாய் எத்தனையோ எளிய பிள்ளைகள், தெருவழியாய் நிருவாணிகளாய்த் திரிகிறார்கள். அவர்களுக்கு உடுக்க வஸ்திரம் கொடுத்து, தெய்வீகமார்க்க போதனைகளைப் போதித்துவந்தால் எத்தனை நன்மையாயிருக்கும். ஒரு நகரத்திலே செழித்து வாழ்கிறவர்கள் ஒவ்வொருவரும் தங்களுக்குச் சமீபத்து வாசஞ்செய்கிற ஓரோர் குடும்பத்தாருக்காகப் பரிந்து, அவர்களுக்கு அன்னவஸ்திரம் கொடுத்து, அவர்கள் பிள்ளைகளைப் படிப்பித்து, உபத்திரவகாலத்தில் அவர்களை அரவணைத்து, அவர்களுக்கு அநியாயம் செய்யப்படுகையில் அவர்களுக்காக ஏற்பட்டு ஆதரித்து வருவார்களாகில், அப்படிப்பட்ட நகரம் எவ்வளவாய்ச் சீர்திருந்தி, ஆசீர்வாதம் பெறும். நோயாளிகளைக் கவனித்துக்கொண்டு, அவர்களுக்கு மருந்துகொடுத்துச் சம்ரட்சணை செய்துவரும்படி பார்த்துக்கொள். இப்படி உலகத்துக்குரிய நன்மைகளை மற்றவர்களுக்குச் செய்வதுமல்லாமல், ஆத்தும நன்மைகளையும் செய்துவரும்படி முயலவேண்டும். அதற்கு உபயோகமாக விவேகமும் புத்தியுமுள்ள வாலிபர் குருப்பட்டம் பெறுவதற்கு ஏதுவாகப் படித்துத் தேறும்படி செலவுகொடுத்து, இந்த மேலான தர்மத்தைச் செய்வாயாக. மேலும் உங்கள் நிமித்தமும், கர்த்தராகிய இயேசுவின் நிமித்தமும், ஆத்தும நன்மைகளைச் செய்துவரும் குருமாரை ஆதரிப்பதற்குத் தேவன் உங்களுக்குத் தந்திருக்கிற பொருளில் ஓர் பங்கை அவர்களுக்குக் கொடுப்பது நியாயமாயிருக்கிறது. அல்லாமலும் தேவனுடைய பரிசுத்த ஆலயமாகிய அவர் வீட்டின் நன்மையால் திர்ப்தியடைந்திருக்கிற நீங்கள், வனாந்தரம்போன்ற தூரமான அஞ்ஞானதேசத்தில் குடியிருக்கிற திரள் சனங்களுக்குச் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கவும், அவர்கள் நித்தியஜீவனை அடைவதற்கும் ஏதுவாக நீங்கள் உதவிசெய்யவும் வேண்டியது உங்கள் கடமை.

சிநேகிதனே! உன் பரமபிதா உனக்குத் தந்திருக்கிற நன்மைகளில் உன் பங்கு எவ்வளவென்றும் உன் சகோதரராகிய மற்றவர்களுக்குரிய பங்கு எவ்வளவென்றும் நீ அறிந்துகொண்டால் நன்மையாயிருக்கும். நீ சிற்றின்பங்களை அநுபவிப்பதற்குப் பிறந்திருப்பதாக எண்ணி, உன் முழு ஆஸ்தியையும் அதற்கென்று செலவழிப்பது தேவசித்தமல்ல. இக்காலத்திலிருக்

கிற அநேகர் பிறருக்கு நன்மைசெய்ய கருதாமல், தங்களுக்கென்று ஜீவிக்கிறார்கள். ஆனபடியால் உன் வரவையும் செலவையும் ஒப்பிட்டுப்பார். உன்னிலும் அதிக வரத்துள்ளவர்கள் தங்கள் வருமானத்துக்குத் தக்கதாகச் செலவழித்தால், நீயும் அவர்களைப்போல செலவழிக்கவேண்டும் என்று எண்ணி அந்தப்படி செய்வாயாகில், அது குற்றமென்று சிந்தித்துக்கொள். நீ கடன்படாதபடி மட்டாய்ச் செலவிட்டு, பின்னாக நேரிடும் குடும்ப சம்ரக்ஷணைக்கு மிச்சம் பிடித்துவைப்பாயாக. நீ டம்பமாய்ச் செலவுசெய்து, ஏழைகளுக்குத் தர்மஞ்செய்ய இயலாதிருப்பாயாகில், தேவனுக்கு முன்பாக குற்றவாளியாயிருப்பாய். நீ அவருக்கு உத்தரவாதியாயிருப்பதால், மட்டாக உன் செலவைச் சரிக்கட்டு. கிறிஸ்து இரட்சகர்பேரில் விசுவாசம்வைத்துத் தேவனையும் மனுஷரையும் உண்மையாய் நேசிக்கிறவர்களில் சிலர் தர்மம் செய்யாதிருந்தும் ஆக்கினைத்தீர்ப்புக்குட்படமாட்டார்கள் என்பது நிச்சயம். ஆயினும் தேவன் அவரவருடைய கிரியைகளுக்குத் தக்கதான பலனைக் கடைசியில் அளிப்பது உண்மை. ஆதலால் தர்மவிஷயத்திலே குறைவுசெய்கிறவர்கள் நித்திய உலகத்தில் பெருக அறுக்கமாட்டார்கள். மேலும் தர்மம் செய்ய மனம் குன்றும்போது வரவர அப்படிப்பட்ட மனம் பெலவீனப்பட்டு, முற்றும் வேறுபட்டுப்போம். இப்படிப்பட்ட போதனை மிகக் கடினமானதென்று நீ எண்ணாதே; நான் உனக்கு ஆலோசனையாகச் சொல்லுகிறபடி நீ தர்மம் செய்வாயாகில், அதிகமான பாக்கியமடைவாய். உன் செலவை மட்டாக்கிக்கொள்வதை மற்றவர்கள் கண்டு, உன்னை இகழுவார்கள் என்று நினைக்கிறாயா? அப்படி எண்ணாதே. விவேகமும் பக்தியுமுள்ளவர்கள் அதினிமித்தம் உன்னைப் புகழுவார்கள். அப்படிப்பட்ட புகழ்ச்சியைப் பெறுவதற்காக நீ தர்மம் செய்வது நலம் என்று நான் சொல்லுகிறதில்லை. நீ தேவனுடைய பிள்ளையும் கிறிஸ்துவுக்கு அவயவமுமாயிருப்பதினால், கிறிஸ்துவில் விசுவாசம் வைத்திருக்கிற பக்தர்கள் தரித்திரராயிருக்கில், நீ அவர்களுடன் அந்நியோந்நியமாயிருந்து, அவர்களுக்கு நன்மை செய்வாய்! நீ நித்திய மோட்சமகிமைக்குச் சுதந்தரவாளியாயிருக்கிறபடியால், அதற்கேற்ற சிறந்தகுணம் உன்னில் வர்த்தனையாகும்படி பார்த்துக்கொள். ஆனபடியால், நன்மைக்கேதுவானவைகளைச் செய்யும்படித் தேவனை முன்னிட்டுப் பிரயாசப்படு. கர்த்தர் அதற்கு வேண்டிய ஞானத்தை உனக்குத் தருவார். அவருடைய கிருபாசனத்தண்டையிலே சேர்ந்து, அவருடைய மகிமை பிரதாபத்துக்கும், கிறிஸ்துமார்க்க



புகழ்ச்சிக்கும் ஏதுவாய்ப் பரிசுத்தமான கனிகளைக் கொடுக்கும்பொருட்டு உன்னை நடத்தும்படி, அவர் அருளைத் தேடிக்கொள்ளக்கடவாய்.

## பக்குவப்பட்ட கிறிஸ்தவன் தான் அதிகப் பிரயோசனமுள்ளவனாயிருப்பதற்கு திவ்விய அருளை அபேட்சிக்கும் விண்ணப்பம்.

இகபர நன்மைகளுக்குக் காரணரும், அதிபதியுமான உதாரமுள்ள பிதாவே! அபாத்திர சிருஷ்டியாகிய எனக்குத் தேவரீர் அருளின வெவ்வேறான அநேகப்பிரசாதங்களினிமித்தம் உம்மைத் துதிக்கிறேன். நான் அவைகளை மிகவும் சொற்பமாய் உபயோகித்துவந்ததினிமித்தம் மனக்கலக்கமுள்ளவனாயிருக்கிறேன். எனக்குக் கிடைத்த ஜீவன் சாவகாசம் பொருள் அதிகாரம் முதலியவைகளைக்கொண்டு, நான் நன்மைகளைச் செய்ய வேண்டும் என்பது தேவசித்தமாயிருந்தும், நான் சரியானபடி அவைகளை உபயோகியாததற்காக மிகவும் துக்கப்படுகிறேன். ஐயோ நான் பின்னிட்டு பார்க்கும் இடத்தில், நல்விளைச்சலான அறுப்புக்குப் பதிலாக பலனில்லாத பாலைவனத்தை மாத்திரம் கண்டிருக்கிறேன். நான் தேவரீருக்கும் உலகத்தாருக்கும் என் சுய ஆத்துமாவுக்கும் உண்மையற்றவனாய் நடந்தபடியால், எனக்குண்டான சகலத்தையும் இழந்து, நித்திய அகோர நரகத்திலே தள்ளப்படப் பாத்திரனாயிருக்கிறேன். ஆனால் கர்த்தாவே பதினாயிரம் தாலந்து கடன்பட்ட மனிதனுக்கும் உதாரமாய் மன்னித்திருக்கிறீரே. அதற்காக உமது திருநாமத்துக்கு ஸ்தோத்திரம். இப்போதும் கர்த்தாவே என்னையும் எனக்குண்டான யாவையும் உமக்குத் தொண்டுசெய்ய ஒப்புவிக்கிறேன். நீர் எனக்குத் தந்ததையே, உமக்கு ஒப்புவிக்கிறேன்; மகத்துவரான உமக்கு நான் உண்மையுள்ள உக்கிராணக்காரனாய் உமக்குத் தொண்டுசெய்து, உமது மகிமையைப் பிரஸ்தாபிக்கும்பொருட்டு எனக்கு அருள்செய்யும்.

சர்வகாருண்ய கடவுளே, உமது சிருஷ்டிகளைப்பற்றிய அன்பு என்னில் உதயமாகியிருப்பதை உணர்ந்து உம்மைத் துதிக்கிறேன். தேவரீர் எனக்குத் தந்ததை விரிந்த கையோடு அவசியமுள்ளவர்களுக்குக் கொடுத்து, உதவும்படி அருள் செய்யும். எனக்கும் அவர்களுக்கும் வேண்டியதை நான்

சரியானபடி பங்கிடும்படி என்னை உணர்த்தியருளும். எனக்கும் என் குடும்பத்துக்கும் நீர் தந்தவைகளை நான் நன்றியறிதலோடே அங்கீகரிக்கும்படி செய்தருளும். நீதியை நான் உண்மையாயும் விவேகமாயும் உற்சாகமாயும் பங்கிட பெலன் அருளும். தயவுள்ள பிதாவே! நீர் எனக்குத் தந்த நன்மைகளில் சிலவற்றை அவசியம் வேண்டியவர்களுக்குக் கொடுக்கவும், நன்மையான காரியங்களுக்காகச் செலவிடவும் என்னை நடத்தியருளும். உமக்கு [illegible] விதைக்கப்பட்டதை பெருகப்பண்ணியருளும். நான் [illegible]க்குக் கொடுக்கும்படி உலக நன்மைகளை எனக்குப் பெருகச்செய்தருளும். நான் பேரின்ப நேசத்தைச் சேரும்படி, இவ்வுலகில் நான் உதாரமான கிரியைகளைச் செய்யும்படி என்னை ஏவியருளும். இம்மையில் என்னிடத்தில் சரீர ஆத்தும நன்மையைப் பெற்றவர்களை நான் பரத்தில் கண்டு மகிழவும், அவர்களும் என்னை நேசத்துடன் அவ்வின்பலோகத்தில் கண்டு தரிசித்து வாழவும் அநுக்கிரகம் செய்யும். என் ஜீவகாலம் முழுவதும் நன்மைகளைச் செய்து, உமது சித்தத்தை நிறைவேற்றி, ஜீவனின் முடிவிலே உமது சந்தோஷத்துக்குட் பிரவேசிக்கும்படி தயை புரியும். இயேசுவின் புண்ணியங்களினிமித்தம் இதைச் செய்தருளும். ஆமென்.

# 23-ம் அதிகாரம்.

## கிறிஸ்தவன் மரணத்தையும், நடுத்தீர்வை தினத்தையும் எதிர்பார்த்து ஆனந்தங்கொள்ளுதல்.

பத்மு என்னப்பட்ட தீவிலே யோவானுக்கு வெளிப்படுத்தல் அருளப்பட்டபோது, உண்மையும் சத்தியமுமுள்ள சாட்சியாகிய இயேசு, "இவைகளை அறிவிக்கிறவர் மெய்யாகவே நான் சீக்கிரமாய் வருகிறேன்" என்று சொல்ல, அதற்கு யோவான் ஆயத்தத்தோடே அகமகிழ்ந்து "ஆமென் கர்த்தராகிய இயேசுவே வாரும்" என்று மாறுத்தரம் கொடுத்தான். இதை வாசிக்கிற கிறிஸ்தவனே, உன் ஆண்டவர் உன்னையும் நோக்கி இதோ சீக்கிரமாய் வருகிறேன் என்று உரைக்கிறார். கல்லறையைத் திறந்து நீ அதில் பிரவேசிக்கவும் அதின்வழியாய் அதரிசன லோகத்துக்குப் போகவும் செய்வார். வாசற்படியிலே நிற்கும் நியாயாதிபதியானவர் சர்வலோகத்தாரையும் நியாயந்



தீர்க்கும்படி அதிசீக்கிரம் வருவார். அவர் வர அநேக நூற்றாண்டுகள் சென்றாலும், மூன்று காலங்களையும் துலாம்பரமாய் அறியும் அவருக்கு அத்தனை காலமும் ஓர் நிமிஷம்போலாகும். "கர்த்தருக்கு ஒருநாள் ஆயிரம் வருஷம்போலவும், ஆயிரம் வருஷம் ஒருநாள்போலவும் இருக்கிறது." 2 பேது. 3. 8. மரணத்தைப் பற்றிச் சொன்னாலும் நடுத்தீர்வை தினத்தைப்பற்றிச் சொன்னாலுஞ்சரி, கர்த்தர் அதிசீக்கிரம் வருவார் என்பது உண்மையே. அவர் சீக்கிரமாய் வருவாரென்று எதிர்பார்த்திருக்கிற நீ பயமின்றி மனமகிழ்ச்சியோடே இருப்பாய் என்று எண்ணுகிறேன்.

அப்படி எண்ணுவது நியாயமாயினும் நீ நெடுநாள் சஞ்சரித்த உலகத்தைவிட்டுப் பிரிந்து, நீ அறியாத பரலோகத்தில் செல்லும்படி மரணத்துக் குட்படவேண்டியதைப்பற்றி மனம் வெறுப்புக்கொள்ளுவதுண்டு.

ஆகையால் என் அன்புள்ள சகோதரனே இந்தக் காரியத்தை உற்றுப்பார்க்கும் காலத்தில் நீ அச்சமின்றி அதைக்குறித்துச் சிந்திக்கும்படி உனக்குச் சில நியாயங்களைச் சொல்லுகிறேன்.

கிறிஸ்தவனே! கிறிஸ்துவானவர் உன்னை மரணத்தினால் வரவழைக்கையில் உனக்கு இப்போதிருக்கும் துக்கங்களிலிருந்து உன்னை விடுவித்து உனக்குச் சுயாதீனத்தையும், உன்னில் மீந்திருக்கும் சீர்கேட்டுக்கு விரோதமாய் நீ செய்யும் போராட்டத்தினின்று உனக்கு விடுதலையையும், நீ பூரண பரிசுத்தனாய் ஆனந்தத்தோடே வாசம்பண்ணும் சலாக்கியத்தையும் அருளுவார். அப்போது நீ தேகத்தைவிட்டு குடிபோய்க் கர்த்தரிடத்தில் குடியிருப்பாய். 2 கொரி. 5. 8.

கர்த்தர் இவ்வுலகத்திலிருந்து உன்னை அழைத்துக்கொள்வார் என்பது நிச்சயம். நீ இவ்வுலகத்தின்மேல் வாஞ்சைவைத்து, அதின்பேரில் நாட்டம் வைப்பதற்கு அது எம்மாத்திரம்? நீ கிறிஸ்தவனல்லவா? மனுஷர் துன்மார்க்க உளையிலும் அவமானத்திலும் அமிழ்ந்திருப்பதை நீ பார்க்கையில், அது உன் மனதை எவ்வளவோ ஊடுருவக் குத்துகிறதாயிருக்கிறது. சிலர் வெளியரங்கமாய் வெட்கமில்லாமல் நீசத்தனமாய் நடக்கிறதையும், தங்களைக் கிறிஸ்தவர்கள் என்று சொல்லிக்கொள்ளுகிறவர்களில் அநேகர் கிறிஸ்துவின் நாமத்துக்கு கனக்குறைவாய் நடந்துவருகிறதையும், அவபக்தியாய் ஜீவனம் [illegible]கிறவர்கள் அவலட்சணமானவிதமாய் நடக்கிறதையும், நல்லவர்களிடத்திலும் பெலவீனங்களும் குறைவுகளும் காணப்படுகிறதையும் பார்க்கையில், உன் மனம் துக்கித்துப் புலம்புகிறதில்லையா? நீ

யும் இரக்கமுமுள்ள ஆத்துமாவானது, பாவமும் நிற்பந்தமு முள்ள காட்சிகளை அநுதினமும் கண்டு சஞ்சலப்படும்படி துக்கத்தை வருவிக்கும் இவ்வுலகத்தை விட்டுவிட அதற்குப் பிரியமிராதா? 2 பேது. 2. 8.

உன்னில் அந்தரங்க பாவவேர் இருக்கிறது என்பதையும், இன்னம் சீர்கேடு உண்டென்பதையும், வைதீகக்காரியங்களில் அடிக்கடி உன் மனம் தளர்ந்து சோர்ந்து [illegible]ப்படுகிறதையும், தெய்வீக அன்பின் [illegible] [illegible]ங்களில் உணர்ந் திருப்பதையும் நீ கண்டு ஆ என் [illegible]வைப்போல சிறகுக ளிருந்தால் நலமாயிருக்கும்; அப்போது நான் பறந்துபோய் எங்கேயாகிலும் தங்கியிருப்பேனே என்று முறையிட்ட [illegible] யுண்டு அல்லவா? சங். 55. 6.

இவ்விதக் கிலேசங்களிலிருந்து இயேசு உன்னை விடுவிக்க வருவதைப் பார்க்கையில் நீ சந்தோஷப்படவேண்டியதல்ல வோ. உன் விருப்பங்களை நிறைவேற்றவும், பரிசுத்தமும் ஆனந்தமுமுள்ள உலகத்திலே நீ தேவனுக்கு ஊழியம் செய்ய வும் தக்கதாக உன்னை அழைப்பது எவ்வளவோ விரும்பப்படத் தக்கது.

கிறிஸ்தவனே! தூரத்திலிருக்கும் இன்பமான கரையைச் சேர வாஞ்சையோடே எட்டிப்பார்த்த கண்ணையிருந்து, உனக் கும் அதற்கும் ஊடே இருக்கிற கொந்தளிப்பான கடலைக் கடந்துபோக அடிக்கடி அபேட்சித்தாயல்லவா? கர்த்தரை ஆரா திக்கும் இடங்களிலே சிலவேளை அவர் உனக்குத் தரிசனம் தந்த போது, இது வானத்தின் வாசல் என்று நீ வசனித்ததுண்டே. ஆதி. 28. 17. அந்த வாசலைக் காண்பது அவ்வளவு இன்பமான தென்றால், அதற்குட் பிரவேசிப்பது எத்தனைக்கதிகமான இன் பமாயிருக்கும். கொஞ்சநேரம் இயேசுவின் தரிசனையைக் காண்பது ஆனந்தமானால், அவரோடே என்றைக்கும் வாசமா யிருப்பது அளவிடப்படாத சந்தோஷமாயிருக்குமே. கர்த்தா வே நீர் பரிசுத்தரானதால் நான் உம்முடன் வாசம்பண்ணும் வேளையில் பரிசுத்தனாவேன், நீர் அன்பாயிருக்கிறபடியால், உம்முடன் நான் வாசம்பண்ணும்போது அன்பிலே வாழ்ந்தி ருப்பேன். நீர் பிதாவிலேயும், பிதா உம்மிலேயும் இருப்பது போல, நானும் உம்மிலே களிகூர்ந்து மகிழ்ச்சியாயிருப்பேன் என்று [illegible] சொல்வாயல்லவா? ஆதலால், அவர் வரு கையை நாடித் தேடிக்கொள். அப்போது பிதா அவருக்குக் கொடுத்த மகிமையை நீ காணும்படியாக அவர் இருக்கிற இடத் திலே நீயும் இருப்பாய்.



கிறிஸ்தவனே அந்த நாளை நினைத்து உன் மனம் கலங்கின லும் அது கர்த்தருடைய நாள் என்று நிச்சயித்து, உன் ஆவி களிகூருமே. அவர் வெற்றிசிறந்த ஜெயவீரராய் காணப்படும் காட்சியை நீ கண்டு உணர்ந்து மேலான எண்ணம் கொள்ளும் படி உன்னை விரும்புகிறார். அந்த நாளின் பாக்கியத்துக்கும் மகிமைக்கும் நீ பங்குள்ளவனாயிருப்பாய். அவர் அப்போது பாதாளக்குழியின் தாழ்ப்பாள்களை முறித்து உன் சரீரத்தை உயிரோடே எழுப்புவார். இப்போது உன் தேகம் பாவத்தி னிமித்தம் மண்ணோடே தங்கவேண்டியதுதான். ஆதிமனிதன் பாவத்தினால் வந்த இந்தக் கேட்டுக்குத் தேவனுடைய அருமை யான பிள்ளைகளும் தப்புவதில்லை. ஓர் மணவாளன் தன் அறையிலிருந்து மகிழ்ச்சியோடு வெளிப்படும் பிரகாரம் தேவ குமாரன் வெளிப்படுகையில் அவர் இடும் சத்தத்தைக் கேட் பாய்; அவர் பிரசன்னத்தையும் காண்பாய். அவர் உன் அற்ப மான சரீரத்தைத் தமது மகிமையுள்ள சரீரத்துக்கு ஒப்பாக மறு ரூபப்படுத்துவார். உன் ஆத்துமா சாவுக்குரிய கந்தையைக் களைந்து, மகிமையான அங்கியைத் தரித்து, அந்த நாளில் மகத் துவமாயிருக்கும். நீ இப்படி இராஜ அங்கி தரித்தவனாய் நிற்கை யில், அந்த நாளில் கூட்டிச் சேர்க்கப்பட்ட உலகத்தார் முன் பாக, அவர் உன்னையும் தமது சனங்கள் யாவரையும் மகிமைப் படுத்துவார். இப்போது நீ நிந்தையடையலாம்; குப்பையைப் போல எண்ணப்படலாம்; உன் உண்மை வெறுக்கும் பாவங் களைச் செய்தவனாக தூற்றப்படலாம்; அந்நாளிலே உன் நீதி பட்டப்பகலைப்போல வெளிச்சமாகும். சங். 37. 6. இப்போது மனிதர் உன்னை கனவீனமாய் மதிக்கலாம், அப்போது தேவன் உன்னை தம்முடையவனாக அங்கிகரித்துக்கொள்வார். இப் போது நீ எல்லாரும் துடைத்துப்போடுகிற அழுக்கைப்போல மதிக்கப்படலாம்; ஆனால் அவர் தமது சம்பத்தை சேர்க்கும் அந்நாளிலே, உன்னைத் தம்முடையவனாக ஏற்றுக்கொள்வார். அவர் பூமியிலுள்ள துன்மார்க்கர் யாவரையும் களிம்பைப் போல அகற்றிவிடுகையில் (சங். 119. 119.), அந்தத் திரள் கூட்டத்திற்கு முன்பாக உன்னை நீதிமானாக அங்கிகரிப்பார். நீ தேவனுடைய பிரமாணத்தை மீறி நீதிப்படி ஆக்கினைக்குள் ளாகத் தீர்க்கப்பட பாத்திரனாயிருந்தும், கிறிஸ்துவைப்பற்றும் விசுவாசத்தினால் வருகிறதும், விசுவாசமூலமாய் தேவனால் உண்டாகிறதுமான நீதியை உடையவனாய் எண்ணப்பட்டு, ஜீவகிரீடத்தைப் பெறுவாய். கிறிஸ்து உன்னைத் தேவதூதருக் கும் மனிதருக்கும் முன்பாக அறிக்கைபண்ணுவார். உன்

மையும் உத்தமுமான ஊழியக்காரனாக உன்னை எஜமானுடைய சந்தோஷத்துக்குட் பிரவேசிக்கச்செய்வார். அவர் உன்னைச் சகோதரனாக எண்ணி உன்னோடே அன்பாய்ப் பேசுவார். கிறிஸ்தவனே! நீ இவ்வுலகில் சஞ்சரிக்கையில், சங்கத்திலே நீ அற்பமாக எண்ணப்படலாம். பெரியோர் உன்னுடன் பேச முதலாய் இசியமில்லாமல் உன்னைப் புறக்கணிக்கலாம். ஆனால் நியாயத்தீர்ப்புநாளில் நீ நியாயாசனத்தின்மேல் கிறிஸ்துவுடனிருந்து பாவிகளான மனிதருக்கும், துரோகிகளான தூதருக்கும் சொல்லும் நியாயத்தீர்ப்பைக் கொடுப்பதற்குப் பங்காளியாயிருப்பாய்.

அந்த மகத்துவமும் மகிமையும் ஒரேநாள்மாத்திரம் இருக்குமோ? அப்படியல்ல. நியாயாதிபதியானவர் எழுந்தருளி தமது அரமனைக்கு ஏகும்போது ஆசீர்வதிக்கப்பட்டவர்களுடன் நீயும் அவரோடே சென்று, அவர் பிதாவண்டைக்கும் உன் பிதாவண்டைக்கும், அவர் தேவனண்டைக்கும் உன் தேவனண்டைக்கும் வந்து சேருவாய். நீ மகிமையான மேனியையுடையவனாய், மனத்தெளிவுள்ளவனாக புதிய எருசலேமில் பிரவேசித்துத் தேவனுடைய சன்னிதானத்திலிருக்கும் பரிபூரண சந்தோஷத்தையும் அவர் வலதுபாரிசத்திலிருக்கும் பேரின்பத்தையும் அநுபவிப்பாய். மேலும் நீ வெந்து அழிந்துபோகும் உலகத்தை விட்டு, நீதி நித்தமும் வாசம்பண்ணும் புது வானத்திற்கும் புது பூமிக்கும் செல்லுவாய். அங்கே தேவன் தெரிந்துகொண்ட பரிசுத்தவான்கள் நிறைவடைந்து, சம்பூரண ஆனந்தத்தை அநுபவிப்பார்கள். அங்கே சர்வ சபையாரும் கறைதிரையின்றி ஏகமாய்த் தேவனுடைய சந்நிதியிலே தேவாட்டுக்குட்டியின் மனையாட்டியாய் நிறுத்தப்படுவார்கள். அப்போது அவர் பரிசுத்தமும் பிழையற்றதுமான அந்தச் சபையில் ஆனந்தங்கொண்டு, அதின்மேல் கிருபாகடாக்ஷம் வைப்பார். நீ எப்போதும் கர்த்தரிடம் தங்குவாய், அனந்தங்கோடி வருஷங்கள் சென்றாலும் நீ மாறுதலின்றி வாழுவாய்.

கிறிஸ்தவனே, உலகத்திலே இருக்கிற காரியங்களைப் பார்த்து ஏதாவது ஒரு நன்மையைச் சுட்டி இனி நான் இன்னும் அநுபவிக்க இடமுண்டாகும்பொருட்டு, கர்த்தாவே தாமதித்து வாரும் என்று நீ சொல்லுவதற்கு காரணமுண்டோ? கர்த்தராகிய இயேசுவே சீக்கிரமாய் வாரும் என்று வாஞ்சையோடே சொல்வதற்கு இடையூறாக ஏதாவது நன்மை உனக்கு உலகத்தில் உண்டோ என்று சோதித்துப்பார்.



## மோட்சவாஞ்சையால் இழுப்புண்டு அதின் ஆனந்தத்தை அபேட்சிக்கும் கிறிஸ்தவன் செய்யும் பிரார்த்தனையும் ஜெபமும்.

காருண்ய தேவனே! நான் இப்பொழுது கருதிக்கொண்ட காட்சிகளினாலே என்னாத்துமா உமக்கு நேரே அக்கினிச் சுவாலைபோல் எழும்புகிறது இதோ சீக்கிரமாய் வருகிறேன் என்று சாட்சி பகர்ந்திருக்கிறீரே. கர்த்தராகிய இயேசுவே வாரும். ஆமென் என்று என் ஆவி சந்தோஷத்தோடே சொல்லுகிறது. தாழ்வான என் ஜீவியத்தையும் அதின் சுமைகள் துக்கங்கள் கண்ணீர்கள் முதலியவைகளையும் விட்டு நீங்க நான் வாஞ்சையாயிருக்கிறேன். இயேசுவே வாரும்; நான் உமது சமுகத்தண்டைக்கு எழுந்தருளவும், மேலுலகத்தில் உமது மகிமையிலே உம்மைக் காணவும் எவ்வளவாய் விரும்புகிறேன்.

காருண்ய இயேசுவே! இவ்வகையாய் நான் தியானிக்கையிலே மரணமுங்கூட வேற்று ரூபமாய் காணப்படுகிறது. கிருபைக்கும், மகிமைக்கும் இராசாவாகிய உமக்கு நான் சமீபமாயிருக்கையில் பயங்கரங்களின் இராசனாகிய மரணம் எனக்குப் பயங்கரமாய்க் காணப்படுகிறதில்லையே. என் கர்த்தாவே, உமது பாதத்தொனி வரவர எனக்குச் சமீபித்துவருவதைக் கேட்டு மகிழுகிறேன். உமக்குச் சித்தமாகும் வேளையிலே திரைச்சீலையை நீக்கி என் சிறைச்சாலையின் தாழ்ப்பாள்களைத் திறந்தருளும். அப்போது என் ஆத்துமா விடுதலையடைந்து, இயேசுவே உமது பாதத்தண்டையிலே சாஷ்டாங்கமாய் விழுந்து வணங்கும். இப்போது அது உம்மைக் காணாமலிருந்தும் உம்மிடத்தில் அன்புவைத்து, உம்மைத் தரிசியாமலிருந்தும் உம்மிடத்தில் விசுவாசம் வைத்து, சொல்லிமுடியாததும் மகிமையினால் நிறைந்ததுமாயிருக்கிற சந்தோஷத்தினால் நிறைந்திருக்கிறதென்பதை நீர் அறிந்திருக்கிறீர்.

கர்த்தாவே தேவரீர் ஜீவமார்க்கத்தை எனக்குத் தெரியப்படுத்தி பரிபூரண சந்தோஷமும் பேரின்பநதியும் இருக்கிற ஆனந்தமுள்ள ஸ்தலத்திற்கு என்னை நடத்தியருளும். இப்போது உம்மோடே வாழ்கிற பரிசுத்தவான்களுடைய ஆவியோடே அடியேனும் வந்து சேர அநுக்கிரகம் செய்யும். அவர்களில் அநேகர் பூமியிலே உம்முடைய பணிவிடையில் என் கூட்

டாளிகளும், கிறிஸ்துவினிமித்தம் வருகிற உபத்திரவத்துக்கும் அவருடைய இராச்சியத்துக்கும், அவருடைய பொறுமைக்கும் உடன் பங்காளருமாயிருந்தார்கள். துதிக்குப் பாத்திரரான இயேசுவே! அவர்களுக்கு தேவரீர் அருளிய மகிமையும் சந்தோஷமும் எவ்வளவென்று எனக்குக் காட்டியருளும். மரித்தோர் என்று பேர்பெற்ற அவர்கள் அநுபவிக்கும் ஆனந்தம் இன்னதென்று எனக்கு அறிவியும். அவர்கள் உமக்குச் செய்யும் உத்தம ஆராதனையும் பணிவிடையும் இன்னதென்று நான் கருதிக்கொள்ள எனக்கு உணர்த்தியருளும். அவர்கள் உமது சமுகத்தில் அன்புள்ள சிந்தையுடன் ஆராதிக்கும் வண்ணம் நானும் உம்மைத் துதிக்கும்படி அருள்செய்யும்.

காருண்ணிய இரட்சகரே! நான் அந்த மேலான மோட்ச மகிமையை அநுபவிக்கையிலும், நீர் கடைசியாகப் பிரசன்னமாகும் அதிக மகிமையானநாளை எதிர்நோக்கிக்கொண்டிருப்பேன். அந்நாளில் மரணம் பரிகரிக்கப்படும்; உம்முடைய பிள்ளைகள் உயிர்த்தெழும்புவார்கள்; மரணம் ஜெயமாக விழுங்கப்படும். எனக்கும் உமது சபைகள் யாவர்க்கும் மேலான ஆனந்தம் அருளப்படும். கர்த்தராகிய இயேசுவே சீக்கிரமாய் வாரும்.

பரம எஜமானே! தேவரீர் அநுக்கிரகிக்கும் மோட்ச நம்பிக்கையை அடைந்திருக்கிற என் உள்ளம் உமக்கு செலுத்துகிற நன்றியை ஏற்றுக்கொள்ளும். என் ஆத்துமா மேலானவைகளை வாஞ்சிக்க, நீர் எனக்கு அருள் தராவிடில் இவ்வுலகத்திலிருக்கிற வீணானவைகளை நான் நாடி அதில் அமிழ்ந்தி நடுத்தீர்வைத்தினத்தை மிக பயங்கரத்துடனே எதிர்பார்த்திருப்பேன்.

என் தேவனே! என் முடிவுபரியந்தம் என்னோடுகூட இரும். நான் உமது இரட்சிப்புக்காக எதிர்நோக்கிக்கொண்டு உமது கட்டளைகளின்படி நடக்க அருள்தாரும். நான் உமது மகிமையைக்கண்டு பரவசமடைந்து என் ஆத்துமா பூரிக்க உம்மண்டைக்கு வரும்படி எப்பொழுதும் என் அரைகள் கட்டப்பட்டவைகளாயும், என் விளக்கு எரிகிறதாகவும் இருந்து கர்த்தர் வருகிறார் என்கிற சத்தத்தைக் கேட்க என் செவியைச் சாய்த்துக்கொண்டிருக்கும்படி அருள்செய்யும். ஆமென்.



# 24-ம் அதிகாரம்.

## கிறிஸ்தவன் தன் மரணத்தில் தேவனை மகிமைப்படுத்துவது.

ஒரு கிறிஸ்தவனுக்கு உண்டாகும் பற்பல சங்கதிகள் இன்னதென்று உனக்கு இதற்குமுன் காட்டியிருக்கிறேன். நான் சொல்லியிருக்கிறவைகளை வீணாக எண்ணாமல், கிறிஸ்தவன் கண்டு அநுசரிக்கவேண்டிய பொருளாக நீ ஏற்றுக்கொள்ளவேண்டும். நான் உனக்கு காட்டிய வழியிலே நான் நடந்துவந்திருக்கிறதுமன்றி இன்னமும் அதிகமாய் நடக்க வாஞ்சையாயிருக்கிறேன். என்னுடைய சத்தியாலாபத்தை பெறும்படி நான் கண்டுபிடித்த நிலைமையை உனக்கும் காட்டியிருக்கிறேன். என் ஜீவியகாலத்தில் நான் நிறைவேற்றும்படி அபேட்சித்த அவசியமானவைகளையே நீயும் செய்யும்படி உனக்கு உணர்த்தியிருக்கிறேன். இவ்வுலகத்திலே பண்ணும் பிரயாணத்தில் அநுபவிக்க நான் விரும்புகிற ஆத்தும சௌக்கியத்தை நீயும் அநுபவிக்கும்பொருட்டு அது இன்னதென்று உனக்கு அறிவித்திருக்கிறேன். தேவனிடத்தில் அன்புகூரவும், அவருக்கு ஆராதனை செய்யவும், மரணத்துக்குப்பின் உண்டாகும் பரமானந்தத்தை அபேட்சிப்பதுமாகிய இப்படிப்பட்ட சுகிர்தமான காரியங்கள் இவ்வுலக சிற்றின்பங்கள் எல்லாவற்றையும் பார்க்க, அதிக உத்தமமாயிருக்கின்றன. ஆதலால் இவ்வுலகத்தில் நான் இருக்குமளவும், அவைகளைவிட்டு நீங்கவும், அதினால் எனக்குண்டாகும் பாக்கியத்துக்குப் பதிலாகப் பதினாயிரம் உலகங்களையாவது எனக்குக் கொடுக்கக்கூடியதாயிருந்தாலும், நான் சம்மதிக்கமாட்டேன்.

முந்தின அதிகாரங்களில் காட்டப்பட்டிருக்கிற காரியங்களை நீ சிந்தித்துப்பார்ப்பதினால் சமாதான சௌக்கியம் தரும் ஜீவியமார்க்கத்தில் உட்பட்டு, அதில் நீ நடந்துவரும்படி ஏவப்பட்டிருக்கிறாய் என்று நான் நம்புகிறேன். கடைசிமட்டுக்கும் உனக்கு உதவிசெய்ய நான் விரும்புகிறபடியால், நீ மரண நிழலின் பள்ளத்தாக்கில் நடக்கவேண்டிய காலம் சீக்கிரம் நேரிடுமாகையால், நீ பயமின்றி அதைக் கடந்துபோகும்படி அதைப்பற்றி சில காரியங்களை உனக்குத் தெரியக்காட்டுவேன். நீ அநுசரிக்கிற கிறிஸ்துமார்க்கத்தின் புகழ்ச்சிக்காகவும், உன் சுய ஆத்தும ஆறுதலுக்காகவும், நீ விட்டுவிடப்போகிற உன் சிநேகிதரின் மனத்தேறுதலுக்காகவும், நீ பயமின்றி மரணத்தைக்

கடக்கும்பொருட்டு; உனக்குச் சில ஆலோசனைகளை அறிவிக்கும்படி அவாவாயிருக்கிறேன். தேவசெயலால் நீ சடுதியில் மரணமடைய நேரிடுமாகில், நான் சொல்லப்போகிற புத்திபோதனைகளுக்கு இணங்கி நடப்பதற்கு இடமில்லாதிருக்கும். அப்படிப்பட்ட செயலினால், நீ திடீரென மோட்சத்தில் போய்ச் சேருகையில் சாகாமல் தேவலோகபதவியை கண்டடைந்தது போல தோன்றும்; அல்லது உனக்குண்டான அகோரவியாதியினால் உன் புத்தி மயங்கி இருக்குமாகில், நீ அறியாவண்ணம் உன் உயிர்போய், மோட்சம் சேருவதால் வியாதியின்றி மரணம் அடைந்தேன் என்று எண்ணிக்கொள்ளலாம்.

நீ தெளிவான மனதோடே இம்மையைவிட்டு மறுமைக்குப் போகக்கூடியதாயிருக்குமாதலால் நான் உனக்குச் சொல்லும் போதனைகளைக் கேட்பாயாக. அந்தக் கடைஇக்கட்டானகாலத்தில் நீ கூடியமட்டும் தேவசமுகத்துக்கு முன்பாக நிற்கும்படி ஆயத்தமாயிருப்பாயாக. ஏனென்றால் நீ சரீரத்தைவிட்டுப் பிரிகையில் கிருபாசனத்துக்கு முன்பாக விண்ணப்பம் பண்ணப் போகிறவனாகை அல்ல, உன் நித்திய நிலைமையைப் பெறுவதற்கு ஏதுவாக நீதியின் ஆசனத்துக்கு முன்பாக நிற்கவேண்டியதாகும். ஆகையால் நீ தேவனுக்கு ஊழியம்செய்ய உன்னை முழுவதுமாய் ஒப்புக்கொடுத்தவனாயிருந்தாலும், உன்னிடத்தில் இன்னமும் குறைவுண்டு. அவைகளுக்காக நீ உன்னை அவருக்கு முன்பாகத் தாழ்த்தி உன் குறைகளை உணர்ந்து, அறிக்கைசெய். கிருபை உடம்படிக்கையில் தேவன் உனக்கு வாக்குத்தத்தம் செய்திருக்கிறவைகளைப் பெற்றுக்கொள்ள அவருடைய குமாரனுடைய இரத்தத்தின்பேரில் நம்பிக்கைவை. தேவனுக்குள் அமைந்தவனாய் அவருடைய சித்தத்தைப் பரலோகத்திலேயாவது பூலோகத்திலாவது நிறைவேற்றிவரும்படி அவருக்கு உன்னை முழுவதுமாய் ஒப்புவி. உன்னுடைய குற்றங்கள் இன்னதென்று உணர்ந்தவனாய்க் கர்த்தர் சகலஞானமும் கிருபையுமுள்ளவர் என்று நிச்சயித்து, அவர் உனக்குக் கடைசியாக அனுப்பும் துன்பத்தைத் தைரியம்விடாமல் சகித்துக்கொள்.

மேலும் துன்பத்தைப் பொறுமையோடே சகிக்கவேண்டும். உன் வாயிலிருந்து மொறுமொறுப்பான ஒரு வார்த்தையும் புறப்படாதபடி விசனத்தை வருவிக்கின்ற சிந்தனைகளை அடக்கிக்கொள். அப்படிப்பட்ட சிந்தனை ஏதேனும் உன் மனதிலே தோன்றினால், உனக்காக மரணவேதனையை அநுபவித்த இரட்சகரை நோக்கிப்பார். உன் படுக்கையில் நீ அநுபவிக்கிற வேதனையைப்பார்க்கிலும், அவர் சிலுவையில் கொடியவேதனை



களை அநுபவித்தாரே. நீ படும்துன்பத்தில் அன்புள்ள சிநேகிதரால் சூழப்பட்டவனாயிருக்கிறாய். அவர் அடைந்த வேதனைகளில் கொடும் பாதகரான சத்துருக்கள் சூழ்ந்திருந்தார்கள். நீ சரீரதுன்பத்தினால் வருத்தப்படுகிறாய், அவரோ பாவச்சுமையினால் அதிகமாக நசுக்கப்பட்டார். அப்படியிருந்தபோதிலும், அவர் அவைகளை ஒரு ஆட்டுக்குட்டியைப்போல பொறுமையாய்ச் சகித்தார்; அவர் பட்ட வேதனையை நீ தியானித்து உன் துன்பத்தை அதால் ஆற்றிக்கொள். நீ கிரீடத்தைத் தரிக்குமுன் கொஞ்சக்காலம் சிலுவையையும் சந்தோஷத்தோடே சுமக்க வேண்டும். உன் துன்பத்தை நீ பொறுமையோடே சகித்துக் கர்த்தரின் நாமத்தை மகிமைப்படுத்து. இன்னம் சில நாழிகைக்குள்ளாக நீ சம்பூரண நித்திய ஆனந்தத்துக்குட் பிரவேசிப்பாய். அன்றியும் கர்த்தரைத் துதித்துப் பேசி, உன்னைச் சூழ்ந்திருக்கும் சிநேகிதரோடே அவருடைய நீதியையும் தயவையும்குறித்துப் பேசு. உள்ளான உன் ஆத்தும ஆனந்தம் மற்றவர்களுக்கு பிரயோசனமாயிருக்கும்படி தெரியக்காட்டுவதினால் உபத்திரவம் பொறுமையையும், பொறுமை பரீட்சையையும், பரீட்சை நம்பிக்கையையும் உண்டாக்கிறது என்றும் நமக்கு அருளப்பட்ட பரிசுத்த ஆவியினால் தேவஅன்பு நம்முடைய இருதயங்களில் உணர்த்தப்பட்டிருக்கிறபடியால், அந்த நம்பிக்கை நம்மை வெட்கப்படுத்தாது என்றும் ரூபித்துக் காட்டுகிறவனாயிருப்பாய்.

மேலும் நீ மரணம் அடையும் காலத்திலும் மெய்த்தேவபக்தியின் மேன்மையைக்குறித்து நல்ல சாட்சிகொடுப்பது உத்தமமாயிருக்கும். அதினால் உனக்கு உண்டாயிருக்கிற ஆறுதல் [illegible]த்திலும் எவ்வளவென்பதை உன்னைச் சூழ்ந்திருக்கும் உன் சிநேகிதர் அறியக்காட்டு. உனக்கு உண்டான பெரிய ஆபத்திலும் உனக்கு அருளப்பட்ட ஆறுதல் இன்னபிரகாரம் என்று அறிவித்து, மரணம் சமீபிக்கையில் அது உன்னை எவ்விதமாகத் தாங்கிக்கொள்ளுகிறதென்று விளங்கச்சொல்லும். அப்போது உன் பெலவீனத்தில் நீ சொல்லும் போதனை சாதாரியவானுடைய போதனையைப்பார்க்கிலும் அதிகமாய் பலிதப்படும். உலகம் எவ்வளவு மாய்கை என்பதை அவர்களுக்கு உணர்த்து; சுவிசேஷம் எவ்வளவாய்த் தேற்றரவு பண்ணுகிறதென்பதை அவர்களுக்குத் தெரிய விளக்கு.

அன்றியும் உன் சிநேகிதர் கர்த்தருக்கு அமைந்து அவருக்கு ஊழியஞ்செய்து அவருடைய மார்க்கத்தில் மெய்த்தேவபக்தியுள்ளவர்களாய் நடக்கும்படி அவர்களுக்குப் புத்தி சொல்லு.

யோசுவா, தாவீதுமுதலிய பக்தர்கள் தங்கள் மரணகாலம் சமீபித்திருக்கிறது என்று அறிந்தபோது அப்படியே செய்தார்கள் என்பதை நீ அறிவாயே. நீ முந்தியகாலங்களில் மற்றவர்களுக்குச் சொன்ன போதனைகளை அவர்கள் கேளாதிருந்தாலும், மரணவேளையில் நீ சொல்லும் புத்திமதிகளை அவர்கள் கேட்பார்கள். சாகப்போகிறவர்கள் சொல்லும் புத்தி போதனைகள் சித்திபெறுவதுண்டு.

மேலும் உன் மரணத்தறுவாயில் கர்த்தர் உன்னை ஏற்றுக்கொள்ளும்படி உன்சுய புண்ணியத்தில் நம்பிக்கைவைக்காமல், உன்னிமித்தம் கோரமான வேதனையடைந்த உன் இரட்சகர்மேல் விசுவாசியாயிருக்கவேண்டும். நீ சிலுவைமாத்தடியில் மரணம் அடைவதாக உன் சிநேகிதர் உணரும்பொருட்டு பார்த்துக்கொள். அப்பொழுது உனக்கு ஆறுதலும் அவர்களுக்கு நல்ல உணர்ச்சியையும் உண்டுபண்ணும். நீ பேசக்கூடியவரைக்கும் இயேசுவின் நாமம் உன் வாயிலிருப்பதாக. நீ பேசக்கூடாதபட்சத்தில் அந்த நாமத்தை உன் இருதயத்தில் பதித்துவைத்து உன் ஆத்துமா தேகத்தைவிட்டு நீங்குகையில் இயேசுவின்பேரில் அது விசுவாசமுள்ளதாய் நீங்கும்படி முயற்சியாயிரு. அவர்மூலமாய் நீ தேவனிடத்திற்கு வந்து அவருடைய திரு ரத்தத்தின்பேரில் நம்பிக்கைவைத்து மோட்சஞ்சேர ஆயத்தமாயிரு.

மேலும் உன் ஜீவனின் முடிவிலே மரண நிழலாகிய பள்ளத்தில் நடக்க உன்னைப் பெலப்படுத்துவதற்குத் தேவன் அருளிய வேதத்தை கோலாகப் பிடித்துக்கொள். மனிதருடைய நூல்களும், உன் சிநேகிதருடைய நேசமும் இனி உனக்கு உதவாதென்று அவைகளை நீக்கிவைத்துத் தன் இருதயத்தின் [illegible] சனத்தின் வல்லமையை அநுபோகத்தால் அறிந்த உத்தம கிறிஸ்தவனை அழைத்து, அவனுக்குப் பிரியமுள்ள போஜனமாயிருந்த அருமையான வாக்குத்தத்தங்களை உனக்கு வாசித்துக்காட்டும்படி கேள். இப்போது நான் என்னால் இயன்றமட்டும் உனக்கு ஆறுதலைக் கொடுக்கும்படி ஆயிரமாயிரமான வெள்ளி பொன்னைப்பார்க்கிலும் அருமையான வேதவாக்கியங்களை உனக்கு எடுத்துக்காட்டுவேன். அந்த வாக்கியங்களை வாசிக்கையில் ஒவ்வொரு வாக்கியத்துக்குமிடையே கொஞ்சநேரம் நிறுத்துவேன். அப்போது நீ வாசிக்கக்கேட்ட [illegible] உனக்கு நன்மையுண்டாகத் தியானித்துக்கொள்ளலாம்.

உனக்கு தைரியமுண்டாக எழுதப்பட்டிருக்கிற வேதவாக்கியங்களைக் கேள். "பயப்படாதே நான் உன்னுடனே இருக்கி



றேன், திகையாதே நான் உன் தேவன்; நான் உன்னைப் பலப்படுத்தி, உனக்குச் சகாயம் பண்ணுவேன்; என் நீதியின் வலதுகரத்தினால் உன்னைத் தாங்குவேன்." எசா 41. 10. "பொய் சொல்ல தேவன் ஒரு மனிதனல்ல; மனம்மாற அவர் ஒரு மனுப்புத்திரனுமல்ல; அவர் சொல்லியும் செய்யாதிருப்பாரா? அவர் வாக்களித்தும் நிறைவேற்றாதிருப்பாரா?" எண். 23. 19. "கர்த்தர் என் வெளிச்சமும் என் இரட்சிப்புமானவர், யாருக்குப் பயப்படுவேன்? கர்த்தர் என் ஜீவனின் பெலனானவர். யாருக்கு அஞ்சுவேன்?" சங். 27. 1. "இந்த தேவன் என்றென்றைக்குமுள்ள சதாகாலங்களிலும் நம்முடைய தேவன் மரணபரியந்தம் நம்மை நடத்துவார்." சங். 48. 14. "நான் மரண இருளின் பள்ளத்தாக்கிலே நடந்தாலும் பொல்லாப்புக்குப் பயப்படேன். தேவரீர் என்னோடேகூட இருக்கிறீர், உமது கோலும் உமது தடியும் என்னைத் தேற்றும்." சங். 23. 4. "கர்த்தாவே உமது இரட்சிப்புக்குக் காத்திருக்கிறேன்." ஆதி. 49. 18. "உம்மை அறிந்தவர்கள்மேல் உமது கிருபையையும் செம்மையான இருதயமுள்ளவர்கள்மேல் உமது நீதியையும் பாராட்டியருளும்."

"ஜீவஊற்று உம்மிடத்திலிருக்கிறது உம்முடைய வெளிச்சத்திலே வெளிச்சம் காண்கிறோம்." சங். 36. 9, 10. "ஜீவமார்க்கத்தை எனக்குத் தெரியப்படுத்துவீர்; உம்முடைய சமுகத்தில் பரிபூரண ஆனந்தமும், உம்முடைய வலதுபாரிசத்தில் நித்திய பேரின்பமுமுண்டு." சங். 16. 11 "நானோ நீதியில் உம்முடைய முகத்தைத் தரிசிப்பேன்; நான் விழிக்கும்போது உமது சாயலால் திருப்தியாவேன்." சங். 17. 15. "நான் விசுவாசித்திருக்கிறவர் இன்னாரென்று அறிவேன். நான் அவரிடத்தில் ஒப்புக்கொடுத்ததை அவர் அந்நாள்வரைக்கும் காத்துக்கொள்ள வல்லவராயிருக்கிறார் என்று நிச்சயித்துமிருக்கிறேன்." 2 தீமோ. 1. 12. "ஆகையால் என் இருதயம் பூரித்தது, என் மகிமை களிகூர்ந்தது; என் மாம்சமும் நம்பிக்கையோடே தங்கியிருக்கும்." சங். 16. 9. "இயேசுவானவர் மரித்துப் பின்பு எழுந்திருந்தாரென்று விசுவாசிக்கிறோம்; அப்படியே இயேசுவுக்குள் நித்திரையடைந்தவர்களையும் தேவன் அவரோடேகூட கொண்டுவருவார்." 1 தெச 4. 14. "நான் என் ஆடுகளுக்கு நித்திய ஜீவனைக் கொடுக்கிறேன். அவைகள் ஒருக்காலும் கெட்டுப்போவதில்லை. ஒருவனும் அவைகளை என் கையிலிருந்து பறித்துக்கொள்வதுமில்லை" என்று நல்ல மேய்ப்பனாகிய இயேசு சொல்லியிருக்கிறார். யோவா. 10. 18. "குமாரனைக் கண்டு, அவரிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் எவனோ அவன் நித்

தியஜீவனை அடைவதும், நான் அவனைக் கடைசிநாளில் எழுப்புவதும், என்னை அனுப்பினவருடைய சித்தமாயிருக்கிறது. யோவா. 6. 40. "உங்கள் இருதயம் கலங்காதிருப்பதாக; தேவனிடத்தில் விசுவாசமாயிருங்கள், என்னிடத்திலும் விசுவாசமாயிருங்கள். என் பிதாவின் வீட்டில் அநேக வாசஸ்தலங்கள் உண்டு, அப்படியில்லாதிருந்தால், நான் உங்களுக்குச் சொல்லியிருப்பேன்; ஒரு ஸ்தலத்தை உங்களுக்காக ஆயத்தம்பண்ணப்போகிறேன். நான் போய் உங்களுக்காக ஸ்தலத்தை ஆயத்தம் பண்ணின்பின்பு, நான் இருக்கிற இடத்திலே நீங்களும் இருக்கும்படி, நான் மறுபடியும் வந்து உங்களை என்னிடத்தில் சேர்த்துக்கொள்ளுவேன்." யோவா. 14. 1, 3.

"நீ என் சகோதரரிடத்திற்குப் போய், நான் என் பிதாவினிடத்திற்கும், உங்கள் பிதாவினிடத்திற்கும், என் தேவனிடத்திற்கும் உங்கள் தேவனிடத்திற்கும் ஏறிப்போகிறேன் என்று அவர்களுக்குச் சொல்லு." யோவா. 20. 17. "பிதாவே நீர் எனக்குத் தந்த மகிமையை நீர் எனக்குத் தந்தவர்கள் காணும்படியாக, நான் எங்கே இருக்கிறேனோ, அங்கே அவர்களும் என்னுடனேகூட இருக்க விரும்புகிறேன். நீர் என்னிடத்தில் வைத்த அன்பு அவர்களிடத்திலிருக்கும்படி, நானும் அவர்களிலிருக்கும்படிக்கும் விரும்புகிறேன்." யோவா. 17. 24, 26. "இவைகளைச் சாட்சியாக அறிவிக்கிறவர், மெய்யாகவே நான் சீக்கிரமாய் வருகிறேன். ஆமென். கர்த்தராகிய இயேசுவே வாரும்." வெளி. 22. 20. "மரணமே உன் கூர் எங்கே? பாதாளமே உன் ஜெயம் எங்கே? நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினாலே நமக்கு ஜெயங்கொடுக்கிற தேவனுக்கு ஸ்தோத்திரம்." 1 கொரி. 15. 55, 57.

தமது பிள்ளைகளின் உபத்திரவத்தைப்பார்த்து, அவர்களுடைய ஆத்தும இடுக்கண்களை அறிகிற தேவனுடைய பார்வையில், அவருடைய பரிசுத்தவான்களின் மரணம் அருமையாயிருக்கிறது. சங். 31. 7. கடைஇக்கட்டில் அவர் உன்னையும் என்னையும் தாங்குவாராக. மரணத்தை ஜெயித்து வெற்றி சிறந்தவர்களுடைய கூட்டத்தில் நம்மையும் சேர்ப்பாராக. கடைசியான இக்கட்டிலே பேசக்கூடாமலும், வாசித்ததை கேட்க ஏலாமலும் இருக்கும்போது, தேகத்தைவிட்டு நீங்கிப்போகிற ஆத்துமாவுக்குத் திர்ப்தியுண்டாகக் கிருபையைப் பெறும்படி பின்வருகிற விண்ணப்பத்தைச் செய்ய அருள்புரிவாராக. இந்த ஜெபமும் இதற்குமுன் நாம் செய்த ஒவ்வொரு விண்ணப்பமும் தேவனுடைய திருவுள்ளத்தில் ஏறுவதாக. ஆமென்.



## மரணவஸ்தையில் கிறிஸ்தவன் செய்யும் தியானமும் செபமும்.

காணப்படுகிறதும் காணப்படாததுமான உலகங்களுக்கு மேலான அதிபதியே! தேவரீர் நீர் ஜீவனுக்கும் மரணத்துக்கும், வானத்திற்கும் பூமிக்கும் கர்த்தாவாயிருக்கிறீர். நான் உம்மை நாடித் தேடும்படி நான் அடிக்கடி போதிக்கப்பட்டதின் நிமித்தம் உமது நாமத்தைத் துதிக்கிறேன். இப்போது நான், ஆத்துமா பிரியும் இவ்வேளையிலே கடைசியாக உம்மை நோக்கி பிரார்த்திக்கிறேன். ஜீவகாருண்யரே உமது செவியைச் சாய்த்து என் விண்ணப்பத்தை அங்கீகரித்தருளும்.

நான் அறியும் இவ்வுலகத்தை விட்டு நான் அறியாத உலகத்தில் பிரவேசிக்கும் காலம் வந்திருக்கிறது. பிதாவாகிய தேவரீர் என்னை உமது பிள்ளையாக எண்ணி உமது இராச்சியத்தை எனக்குத் தரப் பிரியமாயிருக்கிறீர் என்று நான் அறிந்து, இவ்வுலகத்தைவிட்டு அங்கே சேர எனக்கு அருள்செய்யும்.

கிருபையுள்ள பிதாவே! நான் தேகத்தைவிட்டு நீங்குமுன், இம்மையில் பெற்றனுபவித்த நன்மைகளுக்காக நான் உமக்கு தோத்திரம் செலுத்துகிறேன். நன்மையான யாதொன்றிலும் நான் குறைவுபடவில்லையென்று அறிக்கையிடுகிறேன். என் தேவனே நான் ஆக்கினைக்கேதுவானவனாயிருந்தும், பற்பல நன்மைகளால் என்னை ஆசீர்வதித்ததற்காக உம்மைத் துதிக்கிறேன். இவ்வுலகத்தைவிட்டுப் புறப்படும் இவ்வேளையில் நான் துக்கப்படுகிறதுமில்லை, முறுமுறுக்கிறதுமில்லை. உமது குமாரனாகிய இயேசுவின்மூலமாய் நித்தியானந்தம் மரணத்திற்குப்பின் உண்டாகும் என்று அறியவும், அதை வாஞ்சிக்கவும், தேவரீர் என்னை உணர்த்தினபடியால் உமக்கே ஸ்தோத்திரம். அவருடைய அருமையான நாமத்தையும், மரணத்தையும் கேட்டறிந்ததின் நிமித்தம், இந்தப் பெலவீன நேரத்திலும் உம்மைத் துதிக்கிறேன். அவர்மூலமாய்த் தேவரீர் பாராட்டிய கிருபையின் ஐசுவரியத்துக்காகவும், போதித்த போதனைக்காகவும், காட்டிய மாதிரிக்காகவும், உம்மைப் புகழுகிறதுமல்லாமல் பாவமுள்ள என் ஆத்துமாவை உம்மண்டைக்குத் திருப்பும்படி நீர் அநுக்கிரகித்த உம்முடைய பரிசுத்த ஆவிக்காகவும் உம்மைத் துதிக்கிறேன்.

கர்த்தாவே நான் குணப்படாமலும் மறுபிறப்படையாமலும் சாகாதபடி, எனக்கு அருள் தந்து என்னை எவி எழுப்பி, உமது பரிசுத்த ஆவியைக்கொண்டு என்னில் குணப்படுதலை உண்டு

பண்ணி, உண்மையான விசுவாசத்தை அநுக்கிரகித்து, நித்திய
ஜீவனுக்கேதுவான மெய்த்தேவபக்தியை என்னுள்ளத்தில்
தந்த தயவுக்காக உம்மை மகிமைப்படுத்துகிறேன். நீர் அருளிய
குருமாருக்காகவும், திவ்விய நியமங்களுக்காகவும், ஓய்வுநாட்
களுக்காகவும், இராப்போசனத்திற்காகவும் உமக்கு நன்றியறி
தலைச் செலுத்துகிறேன். நான் வனத்தில் தங்கினபோது, நீர்
அனுப்பின கானானின் கனிகளுக்காகவும், விசேஷமாய் யோர்
தான் நதியோரத்தில் நான் நிற்கும் இவ்வேளையில் அவைகளைத்
தந்ததற்காகவும் உம்மைப் புகழுகிறேன். மரணநேரத்தில்
என் ஆத்துமாவைக் குளிரப்பண்ணி, என்னைத் தாங்குவதற்கும்,
மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுந்து பின்பு நித்திய மகிமை
யுண்டென்று விளக்குவதுமான அருமையுள்ள வாக்குத்தத்தங்
கள் அடங்கிய திவ்விய வசனத்திற்காக உம்மைத் துதிக்கிறேன்.
தேவரீர் நான் நம்பும்படி கொடுத்த வாக்கை, அடியேனுக்காக
நினைத்தருளும். சத்தியபரனாகிய கர்த்தாவே தேவரீர் என்னை
மீட்டுக்கொண்டீர். ஆனபடியால் உமது கையிலே என் ஆத்து
மாவை ஒப்புவிக்க உத்தரவருளும், என்னை இரட்சித்தருளும்
நான் உம்முடையவன்.

என் தேவனே! ஏழையேன் அடியேனை உமது காத்தில்
தாங்கியருளும், என்னை நான் சோதித்துப்பார்க்கையில், தூத
ரோடும் பரிசுத்தவான்களோடும் வாசம்பண்ண அயோக்கியன்
என்று உணருகிறேன். என் முந்தின ஜீவநாட்களை பார்க்கை
யில், நான் நரகத்தில் தள்ளப்பட பாத்திரனாயிருந்தேன். ஆயி
னும் கிறிஸ்துவின் சிலுவையே புகலிடம் என்று அதற்கு
ஓடிப்போனேன். இப்பொழுதும் அதையே சார்ந்து நிற்கி
றேன். என் சுய புண்ணியத்தை நம்பி, தேவனுக்கு முன்பாக
வரத் துணிந்தால், பதினாயிரம் மரணங்களிலும் அது அதிக
பயங்கரமாயிருக்குமே. கர்த்தாவே நான் பாவியாக உம்மண்
டைக்கு வருகிறேன். பாவமன்னிப்புக்காகவும், நித்தியஜீவ
னுக்காகவும், உமது குமாரனிடத்தில் விசுவாசம் வைத்திருக்
கிற பாவியாகவே உம்மண்டைக்கு வருகிறேன். நான் அசுத்
தன், ஆகிலும் கிறிஸ்து தமது ஜனங்களுக்கு தேவஞானமும்
பரிசுத்தமும் மீட்புமாயிருக்கிறார். இயேசுவின் சீஷரோடே
நானும் பங்கடைய கிருபைசெய்யும். அவருடைய சிநேகி
தனைப்போலவும், சகோதரனைப்போலவும் என்னை நடத்தியரு
ளும். என் ஆத்துமா அவரிடத்தில் அன்புகூர்ந்து, அவரையே
நம்பி, அவர்பேரில் சார்ந்திருக்கிறது என்பதை நீர் அறிவீர்.
நான் இன்னாரை விசுவாசித்திருக்கிறேன் என்பதை அறிவேன்.



நான் நல்லமேய்ப்பனுடைய கரத்திலிருப்பதற்காகச் சந்தோஷ
ப்படுகிறேன்; அவரே என் தஞ்சம், நான் அவரைச் சார்ந்திருப்ப
தால் என் ஆத்தும சத்துருக்கள் என்னைக் கிட்டிச் சேரார்கள்.
மரித்தும், சதாகாலங்களிலும் உயிரோடே இருந்து மரணத்
திற்கும் பாதாளத்துக்குமுரிய திறவுகோல்களை உடையவரா
யிருக்கிறவரை நான் நோக்கிப்பார்க்கிறேன். காருண்ய இயே
சுவே! உமது கரத்தில் நான் மரணமடைவேன், என் இரட்சக
ரால் எனக்குத் தீங்குவராது, அன்புள்ள இயேசுகர்த்தரே மர
ணம் எனக்குத் தீமையாய் முடியாதபடி நீரே மரணவேத
னையை அநுபவித்து, அதின் கொடுமையை முறித்துப்போட்டீர்.
நீர் நியமித்த மரணம் எனக்குச் சம்பவிக்கையில், நான் பயப்
படேன். கர்த்தாவே மனப்பூர்வமாய் இருதயம் பூரிக்க உம்மி
டத்தில் வருகிறேன். தேவரீர் என்னில் சிந்தைவைத்து என்
கட்டுகளை அறுத்துத் தேவனுடைய புத்திரர் அடையும் மகிமை
யுள்ள சுயாதீனத்தை பெறும்படி, என்னை வரவழைப்பதற்காக
உமக்கு ஸ்தோத்திரம் செலுத்துகிறேன். உம்மிடத்தில் நான்
சேர்ந்தபின், உமக்குத் தூரமாகாமல் எப்பொழுதும் உமது சந்நி
தானத்தில் வாழ்ந்திருப்பேனே. இதற்காக முழுமனதோடே
உம்மைப் போற்றிப் புகழுகிறேன்.

நான் விடப்போகிற இவ்வுலகத்தைத் திரும்ப ஒருமுறை
நினைத்து, அதுவும் அதிலிருக்கிற சபையும் வாழ்வடையும்படி
விண்ணப்பஞ்செய்கிறேன். கர்த்தாவே அந்தச் சபையிலே
ஜீவனுள்ள அவயவமாகிய நான் அதை நேசிக்கிறேன். முடிவு
பரியந்தம் அதை நேசிப்பேன். நீர் அதைக் காத்துச் சுத்தி
கரித்து ஐக்கியப்படுத்தும்படி உண்மைத் தாழ்மையோடே வேண்
டிக்கொள்ளுகிறேன். அதின்மூலமாய் வனாந்தரமானது, கர்த்த
ருடைய தோட்டமாகவும், சிருஷ்டிக்கப்பட்ட சகலரும் உம்
முடைய இரட்சிப்பைக் காணவும் தக்கதாக ஞானத்தையும்
பரிசுத்தத்தையும் அன்பையும் தரும் பரிசுத்தஆவியை அதற்கு
அநுக்கிரகித்தருளும்.

என் பரமபிதாவே! என் மீட்பர் தமது இரத்தத்தினால் சம்
பாதித்ததும், நீர் உமது இரக்கத்தினால் ஆயத்தப்படுத்தியிருக்கிற
துமான பரிசுத்தமும் இன்பமுமுள்ள ஸ்தலத்துக்கு இப்போது
நான் நித்திய அன்பென்னும் சிறகுகளால் பறந்துவந்து சேரும்
படி அநுக்கிரகித்தருளும். "முதற்பேறானவர்களின் சர்வசங்க
மாகிய சபையினிடத்திற்கும், ஆயிரம் பதினாயிரமான தேவ
தூதர்களினிடத்திற்கும், பூரணராக்கப்பட்ட நீதிமான்களு
டைய ஆவிகளினிடத்திற்கும் என்னைக் கொண்டுசேர்ய்விடும்."

293
79



எபி. 1. 28. என் தேகம் என்ன வருத்தத்தை அநுபவித்தாலும் என் ஆத்துமா சஞ்சலமின்றி அந்த இன்பமுள்ள இடத்தை நாடும்படி செய்யும். விசுவாசமானது தன் கடைசியான கிரியையை மாட்சிமையாக நிறைவேற்றுவதாக. நான் இன்னும் இவ்வுலகிலிருக்கும் சொற்பமானகாலத்தை உமது மகிமைக்கென்று செலவிடுவேனாக. தெய்வீக அன்பினால் என் இருதயம் பூரிக்கவும், தடுமாறிக்கொள்ளும் என் நாவு உம்மைத் துதித்துக்கொண்டிருக்கவும், அன்பும் துதியும் பூரணமாயிருக்கிற பேரின்ப ஸ்தலத்தில் நான் வந்து சேரவும் கிருபைசெய்யும். ஆசனத்தின்மேலிருப்பவருக்கும் ஆட்டுக்குட்டியானவருக்கும் கனமும் மகிமையும் வல்லமையும் என்றென்றைக்கும் உண்டாவதாக என்று வாழ்த்தி வணங்கவும், வானோர் செய்யும் துதியை நான் பூலோகத்தில் கீர்த்தனம்பண்ணும் பாட்டாயிருக்கவும், அப்பால் நான் பரத்தில் அதைப் பாடிக்கொண்டிருக்கவும் அநுக்கிரகஞ் செய்தருளும். ஆமென்.

1. மண்ணில் தாயரோ, விண்ணின் [illegible]
   விந்தையோடு மோட்சமேன்மை விரைந்து கூறுவோம்.
2. நீதியின் முடி நித்தமுஞ் சூடி
   நீதியின் ராஜனவனை நிலையாய் கீர்த்திப்போம்.
3. ஜீவ தண்ணீரைத் தினம் பருகுவோம்
   சிந்தையுடன் தேவசுதனைச் சீராட்டிக் கொள்ளுவோம்.
4. ஜீவ கனியைத் தின்று சுகிப்போம்
   திருவருள் பெற்றுப் பரத்தில் தினமும் வாழ்வோம்.
5. பாவத் தொல்லையும் பிசாசின் சினமும்
   பரத்திலே எட்டாதென்றும் பரவசமாவோம்.
6. பளிங்கொளியான பரலோகத்தில்
   பகலோன் கதிரொளிபோல் முகம் இலங்குவோம்.
7. இயேசுவைக் காண்போம் இந்தக் கண்ணினால்
   இகபரமாளும் அவனை என்றும் பாடுவோம்.
8. ஆதரவோடு நாம் துதிகள் செய்குவோம்
   அதிக்குப் பார்த்திபனை என்றும் துத்தியம் செய்வோம்.
9. மங்களச் சுத்தோத்திரமாதேவன் முன்புக்கு
   மகிமையோடு இயேசுவுக்கு மங்களம் சொல்வோம்.
10. இ[illegible]டைவாக எக்காலத்திலும்
   இ[illegible]தர் தீர்க்கரோடு இருப்போம் நிச்சயமாய்.

S. C. K. Press, Vepery, Madras. - 1893.